பராரி கூத்துகள்

இ. தியாகலிங்கம்

20/2, ஜக்கரியா காலனி, முதல் தெரு,
சூளைமேடு, சென்னை - 94,
தமிழ்நாடு, இந்தியா.

Paraari Kooththugal

(Novel)

By

R. Thiayagalingam

First Edition
14th January 2014

Mithra : 239
ISBN : 978-93-813-22-27-7

Publication Editor
Espo

Pages : 230
Price :

Printed & Published by
Mithra Arts & Crations Pvt. Ltd.,
20 / 2, Zackria Colony, 1st Street,
Choolaimedu, Chennai - 600 094.
Ph : +91 44 2372 3182 / 2473 5314
Email : mithraart@gmail.com
Web : www.mithra.co.in

என்னுரை

ஆணுக்கும் பெண்ணுக்குமான உறவில் விழும் சிக்கல்கள் ஆண்டவனுக்கும் சவால்விடும் புதிர். மனப்பொருத்தங்கள் இல்லாத வாழ்விற்குள் அகப்பட்டு, கணங்களை யுகங்களாக அநுபவித்து உழலும் ஆயிரம் ஆயிரம் உள்ளங்கள். இனப்பெருக்கம் மாத்திரமே வாழ்வு என்றால் எமக்கெதற்கு குடும்பங்கள்? உடலுறவு இல்லாத காதல் இருக்கலாம். காதலே இல்லாத உடலுறவை எப்படி அழைப்பது? ஐரோப்பாவின் பொருளாதார அமைப்பு, சுதந்திரத்தையும் போராடும் துணிவையும் தந்தாலும், காதலால் பிணைந் திராத ஆணுக்கும் பெண்ணுக்குமான உறவை எப்படி எதிர்கொள்ளுகிறது?

ஐரோப்பிய வாழ்க்கையைச் சுகிக்க வேண்டும் என்பதை உயிமூச்சாக்கி வாழுகின்ற இட்சக்கணக்கானவர்களின் கனவுகளிலே சில கீறல்கள். பொருளாதார வளத்தின் பிடரியில் உதைக்கும் நிழலுலகின் அவலங்கள்... அலறல் கள். மனிதநேயம் பேசும் நாடுகளில்கூட இரகசியமாக அதற்கு குழிதோன்டப்படும் நிஜங்கள். தாய்லாந்து நாட்டுப்பெண்கள், ஜிப்சிகள், போலந்து நாட்டவர் என அந்தப் பட்டியல் நீண்டு செல்லும். பொருளாதர அலங்கோலத்தில் மனிதர்களின் குருதி உறுஞ்சும் சில சமுதாய அட்டைகளின் பெருக்கம். புரிந்தும் புரியாத நிழல்களின் ஆயிரம் யுத்தங்கள்.

அபலைகளும் பலவீனர்களும் பலியாவது இயற்கையின் விதியா?

பணம் மட்டுமல்ல வாழ்வு என்பதை புரிந்துகொள்ள பல அநுபவங்கள் தேவைப்படுகின்றன. கனவுக்கும் நிஜத்துக்குமான யுத்தத்தில் கரைந்து சூனியமாகும் ஆயிரம் ஆயிரம் வாழ்கைகள். இந்த நிழல் யுத்தங்கள் அக்கரைக்குப் புலனாகாத காட்சிகள். ஐரோப்பிய வாழ்க்கை பொருளாதார நிறைவை தரலாம். அதற்கு உண்மையான உடல் உழைப்பு இருக்க வேண்டும். பொருளாதார நிறைவே மனநிறைவை தந்துவிடாது. நிறைவில்லா மனங்களின் ஏக்கங்களோடு புலம்பும் முகமூடிதாரிகளான சாமானிய மனிதர்கள்.

சொந்த பிள்ளைகளையே பாலியில் துஷ்பிரயோகம் செய்யும் புதிய கலாசாரம் உலகெங்கும் பரவி மானிடத்தை நாணச்செய்கிறது. இந்தக் கொடூரங்கள் வெளியே வருவதற்கு இன்றைய தகவல் தொழில்நுட்பம் வசதி செய்தாலும், அதே தொழில்நுட்பமே இச்சீரழிவுகளை பன்மடங்கு பரவச் செய்வதாகவுந் தோன்றுகிறது.

நவீனகாலத்து அடிமைகளாக நோர்வேக்கு வெளிநாட்டில் இருந்து பெண்கள் கொண்டுவரப்படுகிறார்கள். திருமணம் என்றால் ஆயிரம் பொருத்தம் பார்ப்பார்கள். இவர்கள் என்ன பொருத்தம் பார்க்கிறார்கள்? மனப் பொருத்தமா அல்லது பணப்பொருத்தமா? அடிமையானாலும் ஐரோப்பா சென்றுவிடவேண்டும் என்கின்ற ஆசையில் அனைத்தையும் இந்தப் புதிய அடிமைகள ஆண்களின் வக்கிரத்திற்கு பலியாகி, விபச்சாரிகளாகி, பின்பு அரசால் நாடு கடத்தப்பட்டு...

ஐரோப்பா சுவர்க்க பூமிதான். வெளிச்சத்தில் எல்லாமே அழகாகத் தெரிகின்றன. இருட்டுக்குள் இருக்கும் பயங்கரங்கள் எம்மை ஏமாற்றி விடுகின்றன. பொருளாதார ஏற்றம் காண வந்தவர்கள் சிலுவையில் அறையப்படுவதும் நடக்கிறது.

மதங்களும், அவை ஓதும் கலாசாரங்களும் மனிதனை கூறுபோடுகின்றன. இந்த முரண்பாட்டைப் பசளையாக உறிஞ்சி வளரும் மதப்பயங்கரவாதம் உலகின் சமாதானத்தையே நிலைகுலைக்கிறது. இனவெறியைத் தூண்டி ஆதாயம் தேடும், அரசில்வாதிகளும் தீவிரவாதிகளும் அதனை விரைவுபடுத்துகிறார்கள்.

குமுறல்களுக்கும் கொதிப்புகளுக்கும் இடையே சிலசில ஆறுதல்கள். முக்கியமாக ஒஸ்லோ என்னும் மாநகரத்தின் பகட்டுத் திரைகளுக்கு பின்னால் நடக்கும் ஒன்பது அவலங்களை ஒரு மனிதனின் அன்றாட வாழ்வினுடாக, அவன் பார்வையினுடாக, சொல்லவிளைகிறது இந்த நாவல்.

எனது இலக்கியப் பயணத்தில் அழிவின்அழைப்பிதழ் என்கின்ற எனது முதலாவது நாவலை வெளியிடுவதோடு எனக்கு அறிமுகமானவர் ஈழத்து இலக்கிய மேதை எஸ்பொ அவர்கள். அவருடைய ஊழியம் என்றும் இலக்கியத்திற்கும் தமிழிற்குமானது. அந்த மேதையோடு எனக்கு உள்ள நட்பு பரிசுத்தமானது, பரிபூரணமானது. அவர் முதுமை தமிழுக்கு தளம்பல் தந்துவிடுமா என்கின்ற தவிப்பு எனக்கு. அவர் எனது இலக்கியப்பயணத்திற்கு தரும் ஊக்கத்திற்கு நன்றி சொல்ல தமிழில் வார்த்தையில்லை என்கின்ற தேடல் என்னிடம். அவர் சேமம் செந்தமிழுக்குச் சேமம் எஸ்.பொ. தமிழின் சொத்து.

என் இலக்கியப்பயணத்திற்கு உலகம் எங்கும் இருந்து ஆதரவுதரும் வாசகர்கள் ஆகிய உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

அன்புடன்
இ. தியாகலிங்கம்

Tyristubbveien 77
0687 Oslo, Norway
(47) 22269049
http://www.facebook.com/karai.nakaran

முன்னீடு

'புலம்பெயர்ந்தோர்' என்கிற பந்தாவுடன் தமிழ்நாட்டுக்கு வருகை தந்து, 'புகழ்' என்னும் வண்ணத்துப்பூச்சி வேட்டையாடலிலே ஈடுபடும் எழுத்தாளர்களைப் பார்த்து அழுவதா, சிரிப்பதா என்று எனக்குத் தெரியவில்லை. வாழும் நாட்டிலே ஈட்டிய பணத்தின் 'விசுக்'கலினால் இலக்கிய மகுடம் சூட்டலாம் எனக் கனவு காணும் உரிமை அவர்களுக்கு உண்டு. இன்று சொந்த ஈழமண்ணிலே, இனவெறி இராக்கதனின் ராணுவச் சப்பாத்துகளின் கீழ் குற்றுயிராய் தவிக்கும் தமிழ் ஈழனுக்குக்கூடக் கனவு காணும் சுதந்திரம் உண்டு. ஆனால், முகமூடி அணிந்து, புலம்பெயர்ந்த தமிழ் ஈழரின் இலக்கிய உலகத்திலே தங்கச்சுரங்கம் வெட்டியவன் என்றெல் லாம் 'பிலிம்' காட்டுதல் சகிக்க ஒண்ணா. இதன் மூலம் பிறந்த மண்ணின் பெருமையை மசுவாதம் செய்வதை உணராது வாழ்தல் உச்சக்கொடுமை.

தான் புலம்பெயர்ந்துள்ள நாடு சொர்க்கத்தின் அசல் என்கிற மயலிலே, அந்த சுவர்ணபூமியின் தனித்தீவிலே தமிழர் வாழ்வதான பாவனையில், கதைகளை இயற்றாது 'இணக்கி' எடுத்து, தமிழ்நாட்டின் இலக்கியச் சந்தையிலே 'உலா' வரச் செய்யும் ஒரு வகை இலக்கிய ஊழிலிலே அவர்கள் ஈடுபட்டிருப்பதைப் பார்த்து அறச்சினம் கொள்ளுதல் என் வசமாகின்றது.

இந்த 'திருகு தாளப்' போக்குகளுக்கு முற்றிலும் மாறாக, ஒரு படைப்பினை 'பராரிக் கூத்துக்கள்' என்கிற தலைப்பில் நோர்வே நாட்டில் வாழும் தமிழ் எழுத்தாளர் இ. தியாகலிங்கம் தந்துள்ளார்.

இரு மாமாங்கங்களுக்கு மேலாக, தியாகலிங்கம் நோர்வே நாட்டில், குடியுரிமை பெற்று குடும்பத்துடன் வாழ்கின்றார். புத்தாயிரத்திலே நான் நோர்வே நாட்டுக்குச் சென்று அவருடைய இல்லச் சிறப்பினைக் கண்டு, அவருடன் விருந்துண்டு மகிழ்ந்தமை இன்றும் என் நெஞ்சில் பசுமை.

நோர்வே நாட்டுக்குப் பல பெருமைகள் உள. அதிக தனிநபர் வருவாய் உள்ள முதல் ஐந்து நாடுகளுள் ஒன்று, மத்திய கிழக்கு (அரேபிய) நாடுகளுக்கு வெளியே அதிக எண்ணெய் வளமுள்ள நாடு. சமத்துவ வசதிகள், சமூக நல வசதிகள் கொண்ட Egalitarian Society நிர்மாணிப்பதிலே முதன்மையான நாடு. உலக சமாதானத்துக்குக் குரல் கொடுப்பதில் முந்திரிக்கொட்டை! கடல்சூழ் வளம் மலிந்த இந்நாட்டிலே, ஜனச்செறிவு குறைவு. சுமார் அரைக்கோடி மக்களே வாழ்கிறார்கள். இந்த விபரங்களின் பின்னணியிலே பார்க்கும் பொழுது, புலம்பெயர்ந்தோர் பாதுகாப்பாக வாழும் 'பூலோக சொர்க்கம்' என்கிற மருட்சியே ஏற்படும். அது எவ்வளவு தூரம் போலியான பிம்பம் என்பதை நான் தியாகலிங்கத்தின் 'பராரிக் கூத்துகள்' என்னும் இந்த நாவலை வாசிக்கும் வரையிலும் உணர்ந்ததே இல்லை. நோர்வேயிலே தமிழ் ஈழர் மட்டுமல்ல, பாகிஸ்தான், போலந்து, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், ஆபிரிக்காவின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் புலம் பெயர்ந்து வாழ்கிறார்கள். இவர்கள் புலம்பெயர்ந்தோரா அல்லது பராரிகளா என்கிற கேள்விக்கே இந்நாவல் விடை காண விழைகின்றது. இதன் மூலம் வெளியுலகிறகுத் தெரியாத இன்னோர் உலகமும் நோர்வேயில் உண்டு என்பதைப் பிரசார தொனிகள் எதுவுமின்றி மிக இயல்பாகச் சித்திரிக்கின்றார். வாசிக்கும்பொழுது மலைப்பும், அதே சமயம் விசாரமும் ஏற்படுகின்றது.

'புலம்பெயர்ந்தோர் இலக்கியம்' என்று, அந்நிய மண்ணைக் கதைக்களமாகக் கொண்டு கதைகள் ஜோடித்து ஜாம்பவன்களாக, தமிழ்நாட்டின் இலக்கிய வணிக உலகில் 'ராஜாபார்ட்' வேஷம் கட்டுபவர்கள் மத்தியிலே, தியாகலிங்கம் தனித்துவமானவர். அடிப்படையில் அவர் ஒரு கதை சொல்லி. அவர் அறிந்த தமிழை இயல்பாகவே ஊடகமாகத் தேர்ந்துள்ளார். வார்த்தை வித்தை அவருக்கு அந்நியமானது. தன்னைச் சுற்றி நடப்பவற்றை, ஆனாலும் பாரிய அநுபவங்களை, அவர் இக்கதைக்கான வஸ்துகளாக இணைத்துள்ளார். பராரிகள் பயன்படுத்தும் சுரங்கரதத்தையும், அதன் தரிப்பிடங்களையும் குறியீடுகளாகக் கையாள்வதில் வெற்றி சாதித்துள்ளார். இன்னுமொன்று. ஒவ்வொரு அத்தியாயமும் தனியே

சிறுகதைக்குரிய கோலங்காட்டினாலும், அவற்றை இணைத்து இந்த நாவலை உருவாக்கியதில், முன்னர் நமது சுவைப்புக்குத் தந்துள்ள நாவல்களிலும் பார்க்க, தமது அநுபவ முதிர்ச்சியை பதித்துள்ளார். எத்தனையோ நாடுகளைச் சேர்ந்த கதைமாந்தர் இதிலே உலாவந்தபோதிலும், ஈழமண்ணின் உறவுகளைத் துறக்காது வாழும் ஒரு தவிப்பினை கதையின் ஊடுபாவாக இணைத்துள்ளார். இந்தச் சாமர்த்தியத்தினால், பிறந்த மண்ணின் அவலங்கள் என்கிற படுதாவிலே, அதிதி நாட்டின் அவலங்களை விளங்கிக் கொள்ளச் செய்கிறார்.

தமிழ்நாட்டிலே வாழும் மனித உரிமைகளுக்காக உரத்த குரல் கொடுக்கும் ஒருவர், 'என் மனித உரிமைகளைச் சுகித்து வாழ்வதற்கு நான் முதலாவதாக நோர்வே நாட்டையே தேர்ந்தெடுப்பேன்' என்று கூறியது இப்பொழுது என் நினைவுக்கு வருகின்றது. 'பராரிக் கூத்துகள்' என்னும் இந்த நாவலை வாசித்த பின்னரும், அத்தகைய ஒரு கவலைத்தனமான மனோபாவத்தை வெளிப்படுத்துவாரா என்பதுதான் என் கேள்வி.

போலி நம்பிக்கைகளின் தகர்வு. அதுதான் இந்நாவலின் உயிர்ப்பான சங்கதி. அதிலே தியாகலிங்கம் பூரணவெற்றி பெற்றுள்ளார். அவருடைய இந்த நாவலின் சுவைப்பு, நமது அனுபவத்தினை அகலித்துக் கொண்டதான நிறைவினைத் தருகின்றது. தியாகலிங்கத்தின் இலக்கியப்பயணம் மேன்மேலும் சிறப்பாகத் தொடர வாழ்த்துதும்.

எஸ்.பொ

2A, Hakea Place
Epping 2121,
Australia
612-98685090

பராரிக் கூத்துகள்

1

இரும்புத்தடத்தில் வழுக்கிய சுரங்கரதம் இரைச்சலோடு மின்னல் வேகத்தில் பாய்ந்தது. மனப்புழுக்கத்தோடு தோல்விகளின் மடியில் கசங்கிய பாலன் இருட்டுக் குகையை வெறித்தான். சுரங்கரதம் அனுங்குவதான ஒரு பிரமை. பிரச்சனைகள் அவனைப் புரட்டியெடுப்பதே வாழ்க்கை என்றாகிவிட்டது. மனித அவஸ்தைகளை மனசில் வாங்காத மனிதனாக இருப்பது சுகமா, ஜடமா? அதற்கு விடைகள் காணப் புறப்பட்டது விபரீதமாயிற்று. தன் புண்ணைச் சொறிந்து இன்பம் காணும் மனிதப்பிறவிகள் உண்டு. பிறர் புண்ணைச் சொறிந்து இன்பம் காணும் மனிதப்பிறவிகளும் உண்டு. பாலனின் புண் கூரிய நகங்கள் கொண்டு கொடூரமாகச் சொறியப்படுகிறது. வேதனையைத் தொடர்ந்து கோபம் அனலாகக் கக்கி எழுகிறது. கோபத்தில் எரிபவனை வன்முறை எண்ணம் வரித்துக் கொள்கிறது. வீட்டிற்குச் சென்று அவளின் குடுமியைப் பிடித்து... மனசின் புண்களுக்கு மருந்தாக அவளின் உடலில் குங்கும நிறத்தில் கண்டல்களை உருவாக்கி... ஆணென்று அகங்கரித்து... சே... என்ன எண்ணமிது? அவன் சலித்துக் கொண்டான். “சட்டமும் மனசும் இடம் கொடுக்காத...” பாலன் தன்னை எண்ணி வெட்கித்தான்.

அவள் அநியாயத்தில் நியாயம் காண்கிறாள். தப்புக்குத் தப்பிய மனித வாழ்க்கை கிடையாது. தப்புக்குப் போகிறான் என்பதற்காகவே ஆயிரம் தடைபோட்டாள். உதவவேண்டும் என்பதான தியாகம், வாழ்வில் தீப்பற்றிக் கொண்டதான யதார்த்தம். உறுதிமாத்திரம் அசையாத மலை! இடையறாத போராட்ட வாழ்க்கை. பகைத்துக் கொண்டால் பிரிந்து போவது

மேன்மை. பிரிந்து போனால் தூரமாக இருப்பது அமைதி. அமைதி காணப் பாலன் ஒதுங்கிக் கொண்டான். புயலாக உருக்கொண்டு அவள் தேடிவருகிறாள். வேதனை. சோதனை. இத்தனை சோகத்திலும் சிறு சாதனை செய்ததான ஒரு திருப்தி பாலனுக்கு.

கலியாணம் செய்த புதுசில் அவள் அமைதிப் பசுவாய் வலம்வந்தாள். காமக் களிப்பிலே அவள் குணமே இதுவெனக் கிறங்கிக் கிடந்தான். எங்கள் குடும்பமெனப் பறப்பதைப் பார்த்து தங்கமான பெண்ணெனத் தலையிலே தாங்கினான். அங்கங்களின் பொலிவுகளில் சொற்களின் அர்த்தம் தேய்ந்து போயிற்று. காம மயக்கம் வடிந்து, உலக நினைப்பு உலுக்கிய போது... காமத்துக்கனி வயிற்றிலே முற்றி அவள் வாந்தியெடுத்தபோது காலாகாலமும் இனி இவளோடெனப் பாலன் முடிவு செய்தான். இடறி இடறி வந்த வாழ்க்கையில் புரியாத ஒரு இடைவெளி நிழலாகத் தொடர்ந்தது...

நிம்மதி வேண்டும் என்கின்ற அவன் கற்பனை, அடிக்கடி சிதைந்தது. மனசிலே குழப்பங்கள் குதியாட்டமிட்டபொழுது, வேலைத்தளம் சரணாலயமாகிறது. அவள் எப்பொழுது குழப்பத்திலே எண்ணெய் ஊற்றக் காத்திருக்கிறாள். பின்னர், எரியும் நெருப்பில் வக்கிரக் கூத்தாடுகிறாள். அந்த ஆட்டங்கள் அவமானத்தைப் பெருக்கின. தடுமாற்றம் இருந்தாலும் முன்வைத்த காலைத் தடம்மாற்றிக் கொள்ளும் எண்ணம் பாலனுக்கு இல்லை.

பத்துமணி இருக்கும். பாலனுக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. முதலில் இவளின் குரலைக் கேட்க, இவளை மீண்டும் ஸ்பரிசிப்பதான மெல்லிய இன்பம் உடலில் பாய்ந்தது. அந்த இன்பம் இவள் கூறிய செய்தியில், அடுத்தகணமே வடிந்து போயிற்று. இவள் வசனங்கள் கோபத்தை வேரறுக்கும். சாந்தத்தை வரவழைத்து மகிழ்வினை ஏற்படுத்தும். வலிகள் தரும் செய்தியை இவள் வாய்விட்டுச் சொல்ல விரும்புவதில்லை.

அப்பொழுதும்கூட போன் செய்தபோது குறைசொல்ல வியலாத குணத்தோடேயே கதைத்தாள். அடிவேண்டினாலும் அவள் வலிக்கு ஆறுதலாக இருக்கட்டுமே என்றாள். ஒன்பது மணிபோல அவள், இவள் வீட்டிற்குச் சென்றிருக்கிறாள். இளிச்சவாயாகக் கதவைத் திறக்க, இவள் குடுமியைப் பிடித்துக் கொண்டாள். கன்னத்தில் கைகளை இறக்கி மதம் கொண்டவளாய் இவளைத் தாக்கியிருக்கிறாள். கத்திக் கூத்தாடி அயலட்டை பார்க்க நாறடித்து இருக்கிறாள். அவள், இவளை நாறடிப்பதாக நினைத்துக் கொண்டு கூத்தாடினாள். இவள், அவளின் வேதனை தணியட்டும் எனச் சாந்தம் காத்தாள். அயல்வீட்டில் இருந்தவர்கள் சட்டத்தைக் காக்க பொலீசுக்கு தகவல் கொடுத்திருக்கிறார்கள்.

சுரங்கரதம் மத்தியநிலையத்தில் கதவுகளைத் திறந்து மூச்சு விட்டது. தயாராக எழுந்து கதவருகே நின்றவர்கள் அவசரத்தில் வெளியே சென்றார்கள். வெளியே காத்து நின்றவர்கள் இருக்கை பிடிக்கும் பரபரப்போடு உள்ளே வந்தார்கள். அவர்களில் சிலர் செஞ்சிலுவைச் சங்கத்தின் உண்டியலைக் கையில் வைத்திருந்தனர். எதற்காக இந்த மனிதர்கள் முகந்தெரியாத மனிதருக்கு உபகாரம் செய்ய வேண்டும்? அன்னியர்முன் பல்லிளித்து... யாருக்காகவோ இரங்க வேண்டும்? மற்றவருக்காய் இரங்கும் இவர்கள், தங்களுக்காக இரங்க மனம் ஒப்புவார்களா? இந்த உள்ளங்களில் இருக்கும் கசிவு, எந்த உபகாரத்தையும் எதிர்பார்க்காத பரோபகராம் அல்லவா? தனக்காகவே மட்டும் வாழாத மனிதர்கள் இறைவனின் வடிவம் அல்லவா! பாலன் நூறு குரோணர்கள் எடுத்தான். உண்டியல் குலுக்கிய அந்த மனிதரைக் கும்பிட்டான். பணத்தை உண்டியலில் போட்டான். அவன் கண்கள் திரையிட்டன. ஆண்டவனைக் கண்டதாக மீண்டும் கைகூப்பினான்.

2

கொத்துக் கொத்தாக மொட்டுக்கள் கோடையில் அவிழ்வதில் விசித்திரம் இல்லை. நள்ளிரவில் ஞாயிறு விழித்திருப்பதும் விநோதம் இல்லை. குளிரிடம் சோரம் போன மரங்கள் சோகம் வடிப்பது புதுமை இல்லை. பளிங்குப் பனியில் வழுக்கி விழுவதில் கலக்கம் இல்லை. இலங்கையில் இருந்து அவனுக்குக் கடிதம் வந்தது அதிர்ச்சி தந்தது.

இப்போது யாரும் கடிதம் எழுதுவதற்கு மினக்கெடுவ தில்லை. கடிதத்தில் இருந்து தொலைபேசிக்கு மாறியவர் களுக்கு மீண்டும் கடிதத்திற்குத் திரும்பிவர மனம்வருவதில்லை. கடிதம் வருவது வரலாறாகிப்போன உண்மையிலே தூசு படிகிறது.

கையெழுத்தில் கடிதம் வந்த அதிசயம் இன்று பாலனைத் துள்ள வைத்தது. கால்கள் நிலத்தில் நிற்காது பறக்கின்றனவா? முத்துமுத்தான அவள் கையெழுத்தைப் பார்த்தபொழுது யாரும் அறியாமல் அதற்கு முத்தமிடவேண்டும் போல் ஆசை மனதில் கள்ளமாகப் பொங்கிற்று. யாரும் பார்த்துவிடுவார்களோ என்கின்ற பயம் அவனைப் பின்னுக்கிழுத்தது.

செல்வியைத் தான் திருமணம் செய்திருந்தால், அவள் இன்றும் சந்தோசமாய் வாழ்ந்திருப்பாள் என்கின்ற குற்றவுணர்வு அவன் அடிமனதில் நெருஞ்சி முள்ளாய் உறுத்திற்று. செல்வியுடனான வாழ்வைச் சிறுவயதிலிருந்து அதிகம் கற்பனை செய்து வைத்திருந்தான். அவளும் அப்படியான ஒரு கற்பனையில்தான் அவனோடு உரசிக் கொண்டு திரிந்தாள். செல்வி பாலனுக்கு மச்சாள் முறை. இருவரையும் சேர்த்து வைத்துப் பேசுவதில் எல்லோரும் மகிழ்ந்தார்கள். கோவிலைச் சுற்றித் திரிந்த காலமது. கோகுலத்து கண்ணனான நினைப்பு அவன் மனதெங்கும் நிறைந்திருந்த சுகம், செல்வியை ராதையாக்கி அவளையும் குதூகலம் கொள்ள வைத்தான்.

பாலன் அவளைத் தான் போகும் இடங்களுக்கு எல்லாம் கூட்டிச்செல்வான். அவ்வப்பொழுது அவன் அதிக

உரிமை எடுத்துக் கொள்வான். வெளிகளிலே வயலில் அவள் கையைப் பிடித்துக் கொண்டு நடக்கும் பொழுது, காதல் உலகின் சிகரத்தில் நிற்பதான மமதை கொண்டிருக்கிறான். யாரும் இல்லை என்பது உறுதியாகும் பொழுது அங்கங்கே அவளுக்கு முத்தமிடுவான். கொய்யாப்பற்றைக்குள் கூட்டிச் சென்று கட்டிப்பிடித்து ஆலிங்கணம் செய்வான். செல்வி அந்த மென்சூட்டில் கிறங்கிப் போவாள். அது என்ன சுகம் என்று புரியாத ஒரு நிலையில் இருவரும் சுகம் கண்ட கணங்கள் பல. மனசில் உறைந்துள்ள அந்தக் கணங்கள் இன்றும் இனிக்கிறது.

செல்வி வயசுக்கு வந்தபின்பு பாலனின் முத்தமிடும் அனுமதி பறிபோயிற்று. கொய்யாப்பற்றையை நினைத்துப் பார்க்க முடியவில்லை. கோகுலவாசம் கொஞ்சம் கொஞ்சமாய்த் தேய்பிறை ஆகிற்று.

பாலனின் கண்களைப் பார்த்து தொடர்ந்தும் அவள் சொக்கிப்போய் நிற்பதை அவன் இரசித்திருக்கிறான். பருவம் முற்ற முற்ற, முன்பு இருந்த உரசும் அந்தரங்கத்தில் மேலும் கோடு விழுந்தது. பட்டப்படிப்பிற்கு பெரதெனியா போன பின்பு ஆயிரம் முகங்களில் அவளின் முகமும் ஒன்றாகிப் போயிற்று. எட்டாக்கனிக்காய் கனவு காண்பதிலும், கைக்கு எட்டிய கனியைச் சுவைக்கும் சுயநலமும் கண்ணை மூடிற்று. அவனுடைய காதல் உள்ளம் புனிதம் இழந்து வேசியாகச் சோரம் போயிற்று.

பாலன் கடிதத்தை எடுத்துக்கொண்டான். சுமித்திரா என்னும் சுமிக்கு முன்பு அல்லது மாமிக்கு முன்பு இருந்து கடிதத்தை வாசிப்பதற்குச் சங்கடமாக இருந்தது. கடிதத் தோடு தனது சிறிய அலுவலக அறைக்குச் சென்றான். அங்கே ஒரு கணினியும், அதை வைப்பதற்கான மேசை யும் இருந்தன. இருப்பதற்கு ஒரு கதிரையும் உண்டு. ஒரு சிறிய அலமாரியில் சில புத்தகங்களும், சில கோப்புகளும், தூசு முதுகில் படரும் சுகத்தில் உறங்கின.

பாலனுக்குச் செல்வியின் கடிதத்தை வாசிக்கும் ஆசை பரபரப்படைத்தது. இடையில் யாராவது சிவபூசையில் கரடி நுழைவதுபோல் நுழைந்துவிடக்கூடாது என்கின்ற பரிதவிப்பும் வேறு, செல்வியின் முத்து முத்தான எழுத்தில் இருந்த தனது விலாசத்தை மீண்டும் ஒருமுறை பார்த்தான். கையெழுத்து நல்லாய் இருப்பவருக்குத் தலையெழுத்து நல்லாய் இருக்காது என்பது யாருக்குப் பொருந்தாவிட்டாலும் செல்விக்கு நன்றாகத்தான் பொருந்திற்று.

அதை நினைத்தபொழுது பாலனை அறியாமலே பெருமூச்சும், கேவலும் ஒன்று சேர்ந்து வந்து போயிற்று. இதயச் சுவர்கள் வெடித்து, அவன் கண்கள் அவனையும் கேளாது பனித்துக் கொண்டன. நெஞ்சுக்குள் ஏதேதோ செய்தது.

பாலன் மெதுவாக அந்தக் கடிதத்தைப் பிரித்து வாசிக்கத் தொடங்கினான்.

சிவமயம்

01-08-2011
காரைநகர்

அன்புள்ள அத்தான்! சுமித்திராக்கா, சுருதி, சுபனி யாவரும் அறிவது: நாங்கள் நலமாக உள்ளோம். அதுபோல் நீங்கள் யாவரும் நலமுடன் வாழ எல்லாம் வல்ல ஆண்டவனை வேண்டிக் கொள்கிறேன்.

நீங்கள் கடைசியாகத் தொலைபேசியில் கதைக்கும் பொழுது சுருதிக்கு மூக்கடைப்பு இருப்பதாகக் கூறினீர்களே, அது தற்போது எப்படி உள்ளது? அவளைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளவும்.

உங்கள் நாட்டில் ஒஸ்லோவிலும், ஊத்தொய்யா என்னும் இடத்திலும் நடந்த அவலத்தை அறிந்து பதறிப் போய்விட்டேன். ஒருகணம் எனக்கு, எங்கள் நாட்டில் 1983ஆம் ஆண்டு நடந்த கறுப்பு யூலை அநர்த்தங்கள் நினைவுக்கு வந்து போயின. இரத்த வெடிலும், துப்பாக்கி

ரவைகள் துளைத்துச் சிதைத்த மாணவர்களின் உடல்களும் என் கண்முன்னே மீண்டும் வந்து போயின. அன்று நாங்கள் அனுபவிக்கத் தொடங்கியதை இனியாவது எங்கள் பிள்ளைகள் அனுபவிக்கக்கூடாது என்பதே மனதின் இடைவிடாத பிரார்த்தனையும், அவாவுமாக உள்ளது.

அமைதி தவழும் உங்கள் நாட்டில் இப்படியொரு பெரிய அனர்த்தம் நடைபெறும் என்று யாராலும் கற்பனை செய்திருக்க முடியாது. முதலில் அந்தச் சம்பவம் உங்கள் நாட்டில்தான் நடந்தது என்பதை என்னால் சிலகணங்கள் நம்பமுடியாது போயிற்று. பொருளாதாரம் மட்டும் மனிதர்களுக்குள் இருக்கும் எல்லா பிரச்சனைகளையும் தீர்த்து விடாது என்று நீங்கள் கூறுவதின் அர்த்தம் அன்று எனக்குப் புரிந்தது. உலகத்தின் மனிதம் நிறைந்த, செல்வந்த நாடான... நோர்வேயில் இருக்கும் ஒருசிலரும் பயங்கரவாதிகளாகலாம் என்பது என்னை அதிர்ச்சியூட்டியது. இஸ்லாமியத் தீவிரவாதம் பற்றிய அக்கறையில் உள்ளூர் தீவிரவாதத்தைக் குறைத்து மதிப்பிட்டு விட்டார்களா? மனிதர்களில் சிலர் இன்னும் மூப்பு எய்தவில்லை என்பதை உலகத்தில் நடக்கும் அழிவுகள் காட்டி நிற்கின்றனவா? அப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது. இன்றும் சிலமனிதர்கள் மற்றைய மனிதர்கள் மேல், மற்றைய இனத்தின்மேல், மற்றைய கலாசாரத்தின்மேல், மற்றைய மதத்தின்மேல் மதிப்பு இன்றி, கற்கால மனிதனைப்போல் வெறுப்பில் உழன்று... நவீனமுறையில் பேரழிவைக் கொண்டு வருகிறார்கள். மனிதமூளைகள் விசித்திரமானவை. சுயநலம் பிடித்தவை. தமது சுயநலத்திற்காக எதையும் பலியிடக் கூடியவை. கண்டங்கள் மாறினாலும் மனிதனில் கருணையைக் காணமுடியவில்லை. பயங்கரவாதிகள் பேரழிவைக் கொண்டு வந்தாலும் நிதானமிழக்காது அன்பைப் பொழிந்த உங்கள் நாட்டு அரசியல்வாதிகள் மேன்மையானவர்கள்.

எங்கள் நாட்டு வரலாறு உங்களுக்கு நன்கு தெரியும். இனங்களுக்குள் இருக்கும் ஒற்றுமைக்குக் குழி பறிப்பதே எங்கள் நாட்டு அரசியலாய் மாறிப்போனது பெரும் சாபந்தான். பௌத்தத்தின் பெயராலும்... மொழியின் பெயராலும்.. பேரினவாத

அடக்குமுறை அது இன்றும் தொடர்ந்து அரங்கேறுகிறது. சாதாரண மக்களாகிய நாங்கள் கைகட்டி, வாய்பொத்தி அடிமையாய்ச் சீவியம் நடத்துகிறோம். அப்படித்தான் எங்களால் உணரமுடிகிறது. வன்முறையில் இருந்த பற்று அற்றுப் போனாலும், சுதந்திரத்தில் இருக்கும் மோகம் என்றும் தணியாது என்பதே இங்குள்ள நிலை. அந்த ஆத்ம தீயை யாரும் குண்டுபோட்டு அல்லது துவக்கைக் காட்டி அணைத்து விட முடியாது என்பதே நிதர்சனம். நாங்கள் எங்கள் ஆதங்கங்களை மனதிற்குள் இறுக்கிப் பூட்டிவைத்திருக்க வேண்டியது உயிர்வாழும் யுத்தியாக இந்நாட்டில் தொடருகிறது. சிறைவைத்துக் கற்பழிக்கும் வக்கிரத்தோடு சிங்களத் தேசியமூர்க்கம் கொண்டவர்கள் எங்களை ஆளுகிறார்கள் என்பதான உணர்வு எப்போதும் எம்மீது படருகிறது. அதையும் மீறி வடக்குக் கிழக்கு மக்கள் எங்களுக்குச் சலுகைகள் அல்லச் சுதந்திரம்தான் வேண்டும் என்பதை நிரூபித்துவிட்டார்கள். இருந்தும் பெரும்பான்மையினரின் ஆதிக்க ஜனநாயகம், பிழையை உணராத வரையிலும், பேரினவாதத்தைத் தடுக்க முடியாது. இன்னும் நாங்கள் நம்பிக்கையை இழந்துவிடவில்லை. ஆனால், அவர்களுக்கு எப்பொழுதுதான் ஞானம் பிறக்கும்?

அத்தான், இங்கு பேரழிவுகள் குறைந்து விட்டாலும் சீரழிவுகள் பெருகிப் போயுள்ளன. விதவைகளும், முடங்களும், மனநோயாளர்களும், பிச்சைக்காரர்களும் பல்கிப்போய் உள்ள இந்த நாட்டில், அந்தப் பாவப்பட்டவர்களைக்கூட நிம்மதி யாக இருக்க விடுகிறார்கள் இல்லை. ஆண் துணையின்றிப் பெண்கள் வாழ்வது என்பது இங்கு பெரும் போராட்டமாகி விட்டது. கள்ளர்களும், காமுகர்களும், வேட்டையாட வீடு வீடாய் வருகிறார்கள். எனக்கு நேர்ந்த துரதிர்ஷ்டங்களுக்குப் பின்பு, நான் பிள்ளைகளுடன் தனித்து வாழ்வது பெரும் பாடாகிப் போய் உள்ளது. இராணுவமும், இராணுவத்தோடு சேர்ந்துள்ள 'மாஜி'க்களும் எங்கள் மானத்தைக் களவாக விலை பேசித்திரிகிறார்கள். இரையாகாமல் இருக்க நாங்கள் போராடுகிறோம். ஆயுதமுனையில் எங்கள் போராட்டங்கள் அடக்கப்படலாம். எங்கள் தேகங்கள் வலுவில் அபகரிக்கப்

படலாம். அப்படி ஒரு விடயம் நடந்தால் நல்லதங்காள் போல நாங்கள் எங்கள் கதையை முடித்துக் கொள்ள வேண்டியதுதான். இரவு வந்தால் எங்களுக்கு இப்பொழுது கனவும் வருவதில்லை. கண்ணயர்வதற்குத் துணிவும் வருவதில்லை. எங்கள் நிலையைச் சொல்லி நான் உங்களை மேலும் குழப்ப விரும்பவில்லை. என்றாலும் நடந்த ஒரு சம்பவத்தை உங்களிமிருந்து மறைப்பது நியாயம் இல்லையெனத் தோன்றுகிறது.

மாமி பார்த்துப் பார்த்து நாச்சார் வீடு கட்டிவைத்தா. அதன் முற்றத்தில் மண்கொட்டித் தென்னையும், மாவும் நட்டு வைத்தா. வீட்டைச் சுற்றிய வேம்புகள் விருத்தியாகச் செழித்து ஓங்கின. உங்கள் வீடு ஒரு சோலைக்குள் ஒளிந்திருக்கும் சிவந்த வயிரம் அல்லவா? அத்தனை மரங்களையும் தழுவிவரும் தென்றல் உங்களை நினைவுபடுத்தத் தவறுவதில்லை. சுற்றி இருந்த வீடுகளுக்குள் ‘எங்கள்வீடே பெரியவீடு’ என மாமி பெருமைப்பட்டார். இருந்தும் நீங்கள் குடியிருக்கக் கொடுத்துவைக்கவில்லை என்பதை எண்ணினால் இதயம் குமுறுகிறது. உங்கள் வீட்டில் நாங்கள் தற்போது வசதியாக இருக்கிறோம் என்பதாவது தங்களுக்கு ஆறுதலாய் இருக்குமென எண்ணுகிறேன். இந்த வீட்டில் குடியில்லாது அடங்கிப் போவதை என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. அதற்கும் இப்பொழுது வில்லங்கம் உண்டா கிறதோ என்கின்ற கவலை என்னை அரிக்கிறது. இந்த வீட்டைத் தேடி கடலலையின் நடனவோசை வருகிறது. தென்னை தழுவி வரும் உப்புக்காற்று தீண்டிச் செல்கிறது. அணில், குயில், கிளி, மைனா, காகம், செண்பகம் எங்களோடு தங்கள் மொழியில் கதை பேசுகின்றன. உங்கள் வீட்டின் அருகில் கோவில் உண்டு. அதன் மணியோசையில் நேரம் உண்டு. நாதம் உண்டு. தூய்மை உண்டு. செய்தி உண்டு. அதைக் கேட்கும் பொதெல்லாம் கற்பகத்தான் ஞாபகம் வருவதுண்டு.

இத்தனையிருந்தும் வீட்டின் பின்பக்கம் குடிகள் இல்லாது வயலும் வெட்டையுமாக இருப்பது எங்களைப் பயமுறுத்துகிறது. அந்த வீடுகளில் இருந்து குடிபெயர்ந்து

சென்றவர்கள் நிரந்தரமாக முகவரிகளைத் தொலைத்தவர்கள் ஆகிவிட்டனர். வீட்டைப் பிடுங்கி, கல்லையும் மரம் தடிகளையும் யாழ்ப்பாணம் ஏற்றிச் செல்லும் அவலம் மனசைப் பிசைகிறது. சொந்தங்களால் சூறையாடப்பட்டபின், அவை நிரந்தர வெளிகளாகிவிட்டன. அந்த வெளி கடற் காற்றைக் கூட்டிவருவது போலக் கயவரையும் கூட்டிவரப் பார்க்கிறது. அந்த வெளியின் பயங்கரம் இருபதாம் திகதி வரையும் எங்களுக்குப் புரியவில்லை.

கடந்த இருபதாம் திகதி நானும் யமுனாவும், கங்காவும் வீட்டில் இருந்தோம். இரவு ஏழுமணி போல வீட்டின் பின்பக்கமாக நாய்கள் பேயைக் கண்டதாகப் பாய்ந்து பாய்ந்து குரைத்தன. ஏன் அப்படிக் குரைக்கிறன என்பது எங்களுக்கு முதலில் புரியவில்லை. யமுனாவும் கங்காவும் தொடர்ந்தும் படிப்பில் கவனம் செலுத்தினர். நான், நாய் குரைப்பதற்கான காரணத்தை அறிய லாந்தரோடு கோடிப்பக்கம் சென்றேன். என்னை ஒருவன் திடீரெனப் பாய்ந்து பிடித்துக் கொண்டான். என் இதயம் ஒருகணம் பொசுங்கிப் போயிற்று. தேகம் அனல் பற்றி எரிந்தது. அந்த நிலையிலும் எனக்குச் சமோ யோசிதமான எண்ணம் ஒன்று தோன்றியது. துணிவாக லாந்த ரால் அவனை அடித்தேன். அவன் என்னை விட்டு விட்டான். நான் உடனேயே கத்தியவண்ணம் முன்படலைக்கு ஓடவும் அதைக்கேட்டு இராசம்மா மாமியும், குஞ்சுமாமியும், சின்னக் கண்ணனும் ஓடிவந்தார்கள். என்னால் சில கணங்கள் பதற் றத்தை அடக்க முடியவில்லை. சிறிது நேரத்தின் பின்புதான் என்ன நடந்தது என்பதை அவர்களுக்குக் கூறமுடிந்தது. அதன் பின்பு அங்கு செல்வராசனும், ஈசனும் வந்துவிட்டனர். ஆண்கள் மூன்று பேரும் 'டோச் லைட்'டோடு சென்று யாரும் நிற்கிறார்களா என்று பார்த்து வந்தார்கள். அவர்கள் போன பொழுது அங்கு யாரும் இல்லை. பின்வேலியில் யாரோ புதிதாகப் பொட்டுப் போட்டு உள்ளார்கள் என்பதும், நிறைய சாப்பாத்து அடையாளங்கள் இருப்பதாயும் வந்து கூறினார்கள். அன்று இரவு தொடக்கம் இராசம்மா மாமி வீட்டிற்குத்தான் நாங்கள் படுக்கப் போகிறோம். எங்கள் பின்வேலி தற்போது முட்கம்பி கொண்டு அடைக்கப்பட்டுள்ளது. அது

அவர்களுக்குப் பெரும் தடையில்லை என்பது உண்மை. என்றாலும், எங்களுக்குச் சற்று ஆறுதலை அளிக்கிறது. பகல்களிலும் நாங்கள் மூவரும் ஒரு வித பயத்தோடேயே வீட்டில் தங்குகிறோம். மற்றபடி பாதுகாப்புத்தேடி அயல் வீடுகளுக்குச் செல்ல வேண்டியதாக உள்ளது.

அத்தான் காரைநகர் தொடர்ந்தும் காடாகவே இருக்கிறது. கோவில்களில் திருவிழாக்கள் முடியக் கூட்டமும் கலைந்து சென்றுவிடுகிறது. கோவில் இல்லாதவூரில் குடியிருக்க கூடாது என்று சொன்னார்கள். இன்று குடியில்லாத ஊரில் கோயில் இருந்து என்ன செய்கிறது என்பது எனக்கு விளங்கவில்லை. 'நன்னீர் கண்டுவிட்டவர்கள் நம்நிலம் மீண்டும் வரோம்' என்று அடம்பிடிக்கிறார்கள்.

நான் இரண்டு பெண்பிள்ளைகளை வைத்துக் கொண்டு பதறவேண்டியதாக உள்ளது. ஒருகாலத்தில் பலருக்கும் எதிராக அநியாயம் இழைக்கப்பட்டது உண்மைதான். அதற்குப் பதிலாகத் தற்போது அவர்கள் எங்களுக்கு அநியாயம் செய்வதில் என்ன நியாயம் இருக்கிறது?. இலங்கையில் என்றும், எங்கும், எப்போதும் பல்லுக்குப் பல்லு என்கின்ற நிலையில் மாற்றம் வராது என்பதாகவே தோன்றுகிறது. காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் பேருந்தில் போவதற்கு இடையிலேயே பெண்களுக்குத் தொல்லை கொடுப்பதற் காகவே சிலர் அதில் பயணம் செய்கிறார்கள். அதற்காகவே சட்டைப்பின் தயாராக வைத்திருக்க வேண்டியுள்ளது.

சிறுபிள்ளைகளும் படிப்பில் காட்டும் அக்கறையைவிட கசரீனா பீச்சிற்குப் போவதும், இன்ரநெற் தேடியலைந்து ஏதோ முகப்புத்தகத்தில் மினக்கெடுவதுமாக உள்ளார்கள். விதவைகள் சிலர் வேசியாகின்றனர். பாலகரைக் காமுகர்கள் பலியெடுக்கின்றனர்.

சவுக்கு மரங்கள் அழகு நடனமாடும் அற்புதமான கடற்கரைதான் கசரீனாபீச். அதை அனுபவிக்க வேண்டியதும் நியாயம்தான். அந்த அனுபவிப்பின் பெயரில் அங்கு கலாசாரச் சீர்கேடுகளும், சுற்றாடல் மாசடைதலுமே நடந்தேறுகிறது.

யாழ்ப்பாணம் படிக்கப் போகும் பிள்ளைகளின் காதல் சேட்டைகளும், முத்தக் காட்சிகளும் பலரையும் அதிர்ச்சிக் குள்ளாக்குகின்றன. இளம் மாணவிகள் கற்பமாகும் தொகை தமிழ் கலாசாரத்தினை விழிபிதுங்க வைக்கிறது. இதற் கெல்லாம் சிகரம் வைத்ததுபோல அவர்கள் கையில் கைத் தொலைபேசிகள் தாராளமாகப் புழங்குகின்றன.

உங்கள் உதவிகள் இல்லாது போய் இருந்தால் அவர் இறந்த சிலகாலத்தில் நாங்களும் இறந்து போயிருப்போம். உங்கள் ஆறுதலும் அன்பும் அதைத் தடுத்து விட்டது. எங்களுக்காக இன்னொரு ஜீவன் உலகில் இருக்கிறது என்கின்ற தைரியத்தையும், வாழவேண்டும் என்கின்ற துணிவையும் தந்திருக்கிறது.

யுத்தமும் யுத்தத்தால் வந்த மாற்றங்களும் தொடர்ந்தும் கோணலாகவே இருக்கின்றன. யுத்தத்திற்கு முன்பு இருந்த பாதுகாப்பும், ஊர் கட்டமைப்பும் தற்போது சிதைந்து போய்விட்டன. என்றாலும் யுத்தம் நடந்தபோது இருந்த அவலம் தணிந்து இருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையில் மானமும் உயிரும் இரு கண்களே. எதற்குப் பங்கம் வந்தாலும் எங்களுக்கு அவலமான தேர்வைத்தவிர வேறு எதுவும் கிடையாது.

உங்கள் வயல்களை நாங்கள் செய்வதால் நெல்லுக்குப் பஞ்சமில்லை. வயல் செய்வதென்றால் தற்போது நாங்களே இறங்கி வேலை செய்ய வேண்டியது கட்டாயமாகிவிட்டது. கூலி கொடுத்தாலும் வேலைக்கு ஆட்களைப் பிடிக்கமுடியாது என்பது இங்குள்ள நிலைமையாகிவிட்டது. வெளிநாட்டுக்காசும்... வயலில் வேலைசெய்வது கௌரவக் குறைவு என்கின்ற நினைப்பும் அவர்களை வயலில் இறங்கச் சங்கடப்படுத்துகிறது.

எங்கள் தாயகத்தில் போராட்டம் வந்துபோனாலும் சமுதாயத்தில் சில அழுகுணி மாற்றத்தைத்தவிரப் பெரிதாக ஒன்றும் நடந்துவிடவில்லை. பெண் தனித்து வாழ்கை நடத்துவது என்பது அன்று போலவே இன்றும் உள்ளது. என்றும் பயந்து கொண்டு வாழ்வது ஒருவித நரக

வேதனையாகிறது. மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டு நிற்கமுடியாது அவஸ்தைப்படுவது எங்கள் கதையாகிறது. சாதி, சமயம், சம்பிரதாயம் போன்றவற்றை ஆயுதமுனையில் மாற்றிவிட முடியாது என்பது இப்போது நிரூபணமாகிவிட்டது.

விதி என்கின்ற ஒன்று உண்டு என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. அது என் வாழ்வில் மூர்க்கமாக விளையாடிவிட்டது. வாழும் வரைக்கும் தன்பாதையில் அது இழுத்துக் கொண்டுதான் செல்லப் போகிறது. அதன் இழுப்பில் எங்கள் வாழ்க்கை எப்படி அமையப் போகிறது என்பதை இருந்துதான் பார்க்கவேண்டும். ஒருபுறம் வேடன்; மறுபுறம் கொடிய புலி... இரண்டுக்கும் இடையே எங்கள் வாழ்க்கை நகருகிறது என்பதுதான் உண்மை. உடன்கட்டையேறுவது அநியாயம் என்றுதான் எண்ணியிருந்தேன். ஆனால் அதுகூடச் சுகம் என்பது இப்போதுதான் புரிகிறது. ஆணுக்கும், சமுதாயத்திற்கும் அஞ்சுவதிலும் தீக்கஞ்சாமை விடுதலை தந்துவிடுகிறது. நான் அப்படிச் செய்துவிடமுடியாது. எனக்கு இரண்டு குஞ்சுகள் உள்ளன. அவர்களுக்குள் நிறைய ஆசைகள் வளர்ந்துள்ளன.

அத்தான் மகாபாரதத்தில் நான் வாசித்த ஒரு விடயத்தைக்கூறி இக்கடிதத்தை முடிக்கிறேன்.

வேடன் ஒருவன் நச்சு அம்பொன்றை காய்த்துக் குலுங்கும் மரத்தின்மீது ஏவினான். அந்த அம்பு பாய்ந்ததால் அம்மரம் வற்றல் மரமாகியது. அம்மரப்பொந்தில் நீண்ட காலமாக வாழ்ந்திருந்த கிளியொன்று மரம், வற்றல் மர மாகியும், அம்மரத்தைவிட்டுப் போகாது இருந்தது. அதனால் அது உணவின்றிப் பெரும் துன்பத்தை அனுபவித்தது.

அப்பொழுது அந்தண வடிவத்தில் அங்கு வந்த இந்திரன், அக்கிளியிடம் வந்து, "கிளியே! பழுத்த மரங்களை விரும்பி அவற்றின்பால் தாவிச் செல்லும் பறவைகள் நீங்கள். அப்படியிருக்க, பழுத்த வேறோர் மரத்திற்குப் போகாமல், இந்த உலர்ந்த மரத்தையே விடாமல் ஏன் இங்கேயே

இருக்கிறாய்? சொல்" என்றார். அதற்கு அந்தக் கிளி, இந்த மரத்திலுள்ள பழங்களையும், காய்களையும் அன்போடு அளவற்ற நாட்கள் உண்டேன். இப்பொழுது இந்த மரம் உலர்ந்துவிட்டது. இத்தகைய துன்பம் இந்த மரத்திற்கு வந்துவிட்டதைப் பார்த்தும் இன்பம் தேடி வேறுமரத்திற்குச் செல்வது சிறந்ததோ? நீயே கூறுவாயாக" என்றது.

அதன் பின்பு இந்திரன் தனது சுயரூபத்தைக் காட்டி கிளிக்கு வரம்கொடுத்தான். அந்த வரத்தின்படி கிளி மீண்டும் காய்த்துக் குலுங்கும் அம்மரத்தைப் பெற்றது எனப் பாரதக் கதையில் வருகிறது.

நாங்கள் கிளிபோல என்றும் காரைநகரில் இருப்போமா என்பது எனக்கு முதலில் புரியவில்லை? இருந்தாலும் இந்திரன் வந்து வரம் தருவானா? அப்படி தந்தால் காரை நகரை எண்பதிற்கு முன்பு இருந்த காரைநகராக்க வேண்டும் என்று அவனிடம் கேட்க வேண்டும்.

அத்தான் இந்திரன் வராவிட்டாலும் நாங்கள் சமாளித்து கொள்வோம். நீங்கள் கவலைப்படவேண்டாம். உங்களிடம் தொலைபேசியில் எல்லாவற்றையும் கூறமுடியவில்லை. அதனாலேயே இந்தக் கடிதத்தை எழுதவேண்டியதாகிற்று. தவறு இருந்தால் நீங்கள் எல்லோரும் என்னை மன்னிக்க வேண்டும்.

இப்படிக்கு
என்றும் அன்புடன்
செல்வி.

கடிதத்தை வாசித்து முடித்தபோது சுமி திடீரெனத் தேநீரோடு அலுவலக அறைக்குள் வந்தாள். பாலன் ஒருகணம் என்ன செய்வது என்பது புரியாது தவித்தான். சுமியின் பார்வை கடித்தில் விழுந்தது. பாலன் அதை அவளிடம் தந்தான். சுமி கடிதத்தோடு கீழே சென்றாள்.

அடுத்தநாள் காலை சுரங்கரதத்தைப் பிடிப்பதற்காகப் பாலன் "கெல்ஸ்பியூர்" என்னும் இடத்திற்குச் சென்றான். அங்கு பேருந்திலிருந்து இறங்கி அவசரமாக சுரங்கரத நிலையத்திற் குள் செல்ல எத்தனித்தான். சுரங்கரத நிலையத்திற்கு முன்பு ஒரு பெட்டிக்கடை. அதில் இருந்து வந்த சுடுகாப்பியின் வாசமும் புதிய பணிஸ்சின் வாசமும் அவன் மோப்பத்தையும், மூச்சையும் தன்பக்கம் இழுத்தன. பாலன் அந்தச் சாப்பாட்டுச் சபலத்தைப் புறம் தள்ளி மேற்கொண்டு நடந்தான்.

அவன் முன்பாக ஒரு கண்தெரியாத மனிதர் அலுமினியத்தில் செய்யப்பட்ட குச்சி ஒன்றால் தட்டித் தட்டி நடந்து சென்றார். பாலன் ஒருகணம் தனது நடையின் வேகத்தைக் குறைத்தான். முதலில் அவனுக்கு அந்த மனிதனைப் பார்க்க இரக்கமாயிற்று. அந்த மனிதனின் பின்னே இடைவெளி விட்டு பாலன் நடக்கத் தொடங்கினான். "இந்த மனிதன் தனக்கு கண்தெரியாது என்று கூறிவிட்டு வீட்டில் இருந்து இருக்கலாம். அரசு அவனை நிச்சயம் பார்த்துக் கொள்ளும். பாதை காட்டுவதற்கு நாய் ஒன்றை வாங்கிக் கொடுக்கும். அவன் அப்படி இருக்க விரும்பவில்லை. சிலவேளை நாங்கள் என்றால் பஞ்சியில் வீட்டில் இருந் திருப்போம். சுயவிமர்சனம் செய்யாத மனிதவினம் முன்னேற முடியாது. நாங்கள் சுயவிமர்சனம் செய்து கொள்வதில்லை.

அந்த மனிதன் நடந்தான். தடியால் நீட்டி நீட்டித் தட்டித் தட்டிப் பார்த்து தடைகளை அறிந்து கொண்டான். அவன் தடி அங்குமிங்குமாக... கட்புலனாக... புகைப்படக் கருவியாக வழிகாட்டியது. இடைக்கிடையே நிலத்தின் மேடு பள்ளங்களை குத்திக் குத்தி அளவெடுத்தான். படிகள் வந்ததும் அதையறிந்து சுவரோரமாக நடந்து இறங்கினான். பின்பு அமைதியாகச் சுரங்கரதத்திற்காய் காத்திருந்தான். சுரங்கரதம் வந்தது. யாரும் அவனுக்கு உதவி செய்யவில்லை. மனிதன் சுயமாகச் செயல்பட முடியும்பொழுது அவனைத் தடுக்க கூடாது என்பது இங்குள்ள நடைமுறை. அவனும்

அப்படிப் பச்சாதபப்படுவதை வெறுப்போடு நோக்குவான் எனப் பாலன் எண்ணிக் கொண்டான். குச்சியைச் சுருக்கிக் கொண்டு சுரங்கரதத்திற்காய் அந்த மனிதன் காத்திருந்தான்.

சுரங்கரதம் வந்தது. அதன் கதவு அவனைவிட்டுச் சற்று முன்பாகப் போய் விட்டது. அவன் கைகளால் தடவிக் கதவைக் கண்டுபிடித்தான். அதற்காகச் சிறிது தூரம் இரதத்தின் சுவரை உரசியவண்ணம் அவன் சென்றான்.

கண்தெரியாது இருப்பது தனக்கு ஒரு குறையில்லை என்பதான துணிவே அவனை உயிர்ப்புள்ள மனிதனாக்கி விட்டது. கண்தெரிந்தும் பல மனிதர்கள் ஜடங்களாக அலைகின்றனர். ஊனம் இருப்பதாகக் கூறிப் பிச்சை எடுக்கின்றனர். கண்தெரியாது இருந்தாலும் சுயமாக வாழவேண்டும் என்கின்ற அந்த மனிதனின் துணிவு மகத்தானது. சமுதாயத்தையும் வளப்படுத்தி தன்னையும் வளப்படுத்தும் அவனது உழைப்பிற்குத் தலை வணங்க வேண்டும் என்று பாலன் நினைத்துக்கொண்டான்.

உள்ளே வந்த அந்த மனிதன் மிகவும் பண்பாகத் தனது இருக்கையில் இருந்து கொண்டான். முன்பு இருந்தவருக்கு வணக்கம் கூறினான். அவனும் பதிலுக்கு வணக்கம் கூறினான். அந்த மனிதன் சிரித்த முகத்தோடு செவியைக் கூர்மையாக்கிக் கொண்டான். தரிப்புகள் சில கடந்தன. பின்பு தனது தரிப்பைக் கேட்டு அறிந்துகொண்டு சுரங்கரதத்தைவிட்டு இறங்கிச் சென்றான். இறங்கிப் போகும் அந்த மனிதனை பாலன் வியப்போடு பார்த்துக் கொண்டே இருந்தான்.

3

முக்கிய வண்ணம் ஏற்றத்தில் போராடிய பேருந்து “கிவி” கடைக்கு முன்பு மூச்சுவிட்டு நின்றது. பாலன் குலுக்கி அடிக்கப்பட்ட “சம்பெயின்” துளியைப் போலப் பேரூந்தில்

இருந்து பாய்ந்து இறங்கினான். வெளிக்காற்றின் மென்னுரசல் அவனோடு சல்லாபம் ஆடியது. அவன் அதை இரசித்தவண்ணம் சிலகணங்கள் அங்கேயே நின்றான். அவளைக் கைபிடித்துக் கூட்டிச் செல்லும் காதல் அவனுள் பிறந்தது. அவளோ கைகாட்டி கடைதாண்டிச் சென்று விட்டாள். இளம் தென்றலின் படையெடுப்பு ஓய்வதாக இல்லை. அடுத்தவளும் அங்கு வந்தாள். அவளையும் நுகர்ந்தபடி அவன் அந்தக் கடையைப் பார்த்தான்.

அவசரகதியில் வேலைக்குச் செல்வதும்... அதைவிட அவசரகதியில் வீட்டிற்கு வருவதும்... நாளாந்த சம்பிரதாயம் ஆயிற்று. சுமித்திரா காலையில் பழைய பாணுக்கு ஏதாவது வைத்துக் கட்டுவாள். அந்த உண்மை அவன் ஓட்டத்திற்குத் தடைபோட்டது. புதிதாகப் பாண் வாங்கிச் சென்றாலும் அதை உறைய வைத்துவிட்டு, பழைய பாணைக் கட்டுவது அவள் வழக்கம். அதைப் பார்க்கும் போதெல்லாம் முதலையின் குணமெனப் பாலன் சலித்துக் கொள்வான்.

சேர்ந்த புதுசில் இருந்த அக்கறை இப்பொழுது தேய்ந்த பிறையாயிற்று. அதை எண்ணும்பொழுது கவலை பக்கத்தில் வந்து எப்பொழுதும் சுரண்டுகிறது. காதல், அன்பு, கவர்ச்சி எல்லாம் காலத்தோடு இழைத்து போகின்றது என்கின்ற ஆதங்கம் அவனிடம் உண்டு.

பின்பும் ஆதங்கம் தணியாதவனாக தலையை ஆட்டியவண்ணம் "கிவி" கடைக்குள் புகுந்தான். "கிவி" என நோர்வே மொழியில் எழுதப்பட்ட இந்தக் கடையின் தேசிய நிறம் பசுமையானது. பச்சை மரக்கறி, பழங்கள் போன்ற உடலுக்கு தீங்கு விளைவிக்காத உணவுப் பொருள்களுக்கு வரியைக் குறைக்க வேண்டும் என்று இவர்கள் பரப்புரை செய்து வருகிறார்கள். வரிகுறைந்தாலும் விலைகுறைந்ததான வழக்கம் இங்கு இல்லை. வரியைக் குறைத்தால் விலையைக் குறைப்போம் என்கின்ற பரப்புரைக்கும் இங்குக் குறைவில்லை. விலை குறையும் என்கின்ற நம்பிக்கைகள் சிலகாலத்தில் நலிந்து போகச் சம்பளத்தைக் கூட்டித்தருமாறு மக்கள்

போராடுவார்கள்; விலையேறுவது மட்டும் விலைபோகாத வரலாறாக நிலைத்துவிட்டது. பாலன் நோர்வேக்கு வந்த தொடக்கத்தில் நாற்பத்தியேழு குரோணருக்கு வேலை செய்தான். இப்பொழுது நுற்றியறுபது குரோணர்கள் தருகிறார்கள். சம்பளம் மூன்றால் பெருக்கப்படும்போது பொருள்கள் நாலாய் பெருக்கப்படுகிறது.

பாலன் இரைதேடும் சிங்கமாகப் புதுப்பாணைத் தேடிச் சென்றான். புதுப்பாணின் மணம் நாசிக்குள் நுழைந்து மூளையில் அடிக்க, வயிற்றில் அமிலம் சுரந்தோடும். இங்கும் பசியைத் தட்டியெழுப்பிக் கவலைகொள்ள வைக்கும். சாப்பாட்டின் மேலிருக்கும் அவாவின் கைகளைக் கட்டிய நாடு இது. கலோரி களின் அளவிற்கும், அவாவின் பெருக்கத்திற்கும் இடைவிடாத போராட்டம். கலோரிகளின் அளவு கூடினால் இதயமும், இரத்தோட்டமும் கலகம் செய்கிறது. சலரோகமும் மாரடைப்பும் சமபந்தி கேட்கிறன. கலோரிகளின் அளவு குறைவதால் ஆப்பிரிக்காவில் நோயும், சாவும் அவர்களை நோண்டிப் பார்க்கிறது. இங்கு கலோரிகளின் அளவு கூடுவதினாலேதான் பிரச்சினை எழுகின்றது.

மெத்தையில் புரளும் பணக்காரனையும் நோய் சீண்டுகிறது. ஏழை மனிதனையும் நோய் காவுகொள்கிறது. நோய்கள் மாத்திரம் சிவப்புச் சட்டைக்காரர்களின் தோழராய் இருக்க வேண்டுமெனப் பாலன் எண்ணிக்கொண்டான்.

பாலன் ஆவலோடு புதுப் பாண்களைப் பார்த்தான். தவிட்டுப் பாண்தான் அவனுக்கு இஷ்டமானது. அதற்குள் முழுது முழுதாகத் தானியங்கள் முழித்துக் கொண்டு இருப்பது அவனுக்குப் பிடிக்கும். தேடல் செய்து தேர்வு செய்வது அவனது வாடிக்கை. அவன் மும்முரமாகத் தேடினான். அப்பொழுதுதான், அவளைத் திடீரெனக் கண்டான். என்ன பெயர் அவளுக்கு? லீஸா? ஹாரி, கன்ன? நினா? அஸ்திரி?..., முகம் தெரிந்தாலும் முகவரி தெரியாத மனிதர்களாய் அவர்களும் நாங்களும். அவளைக் காணும்போதெல்லாம் வணக்கத்தோடேயே அறிமுகமும் உரையாடலும் செத்துவிடுகின்ற பரிதாபம்.

அவளுக்கு தகதகக்கும் தங்கக் கம்பிகளான நீண்ட கேசங்கள். அவை முதுகில் பொன்னலைகளாகத் தவழ்ந்து விளையாடும். அலைக்கேது சிறையென்று அவை அலட்சியம் காட்டுவதாய்ப் பாலன் கற்பனை செய்வான். கடலின் நீலத்தை உறிஞ்சியதான விழிகள். அதன் கரை யோரம் படிந்திருக்கும் கருமை. பார்வையில் உதிர்ந்து கொட்டும் மின்னல். ஒட்டகச்சிவிங்கி போல உயரம். குதியுயர்ந்த சப்பாத்தும், குதிரை நடையும் அவள் எப்பொழுது பாலனைக் கடந்து சென்றாலும் தாளம் தப்பாது லயம் எழுப்பும் பாதசுரங்கள். தென்றல் வீசினாலே முறிந்துவிடும் இடுப்பு. தெவிட்டாத மேனியின் வழுவழுப்பு. அங்கங்களின் திரட்சிக்கும் பஞ்சமில்லை. அவளிலே பாலனுக்குச் சிறிய மயல் உடற்காந்தத்தால் இழுத்துச் செல்லப்படுவதாகக் கற்பனை செய்வதிலே ஒரு சுகம்.

பாலன் பெண்களின் திரட்சிகளை, மேடுபள்ளங்களைப் பண்பு கருதிப் பார்ப்பதில்லை. கண்களைத் தவிரக் கண்ட விடயங்களையும் பார்க்கக்கூடாதெனச் நெஞ்சாரச் சபதம் எடுத்திருந்தான். ஒருநாள் நேரே அவள் வந்தபொழுது அவன் சபதத்தை மறந்து போனான். விசுவாமித்திரரே மறந்து போனாரே என்பதாக மனதிற்குச் சமாதானம் சொல்லிக் கொண்டான். அவள் மேட்டில் விழுந்த கண்களை சுமிக்குப் பயந்தே பின்பு விலக்கிக் கொண்டான். அவள் மேடு புடலங்காய்க்குக் கல்லுக்கட்டியதுபோல அவளை இழுப்பதாக அவனுக்குப் பரிவு தோன்றிற்று. இப்போழுது அவளைப் பார்த்தபொழுது பாலன் தன் சபதத்தைக் காப்பாற்றிக் கொண்டான். அவள் வதனம் விசுவாமித்திரரையும் மீண்டும் மீண்டும் ஆசைகொள்ள வைத்து அலைக்கழிக்கும். மெல்லிய உதட்டிற்கு சாயத்தால் ஒத்தடம் கொடுத்து, மேனிக்கு கவர்ச்சியான உடையணிவதில் அவள் வித்தகி.

சில பெண்களைப் பார்த்தால் மரியாதைவரும். சில பெண்களைப் பார்த்தால் அன்புவரும். சில பெண்களைப் பார்த்தால் மோகம் பிறக்கும். பாலனுக்கு அவளைப் பார்க்கும் பொழுது காமனின் கணைகள் இதயத்தில் பாய்ந்ததாக மோக

வலியெடுக்கும். அது வேதனையா? சுகமா? என்பது, புரியாத துடிப்பாகும். அவளின் வசீகரத்தைப் பார்க்கும் போது சுமியின் பட்டிக்காட்டுப் பாரம்பரியத் தொடரல் அவனுக்கு வயிற்றைப் புரட்டும். முதலில் கண்தானே பார்க்கிறது? கண்ணுக்கு விருந்து கொடாதது பற்றி நா அதிகம் அக்கறைப்படுவதில்லை. ஏனோ தானோ என்று இருட்டுக்குள்... அதுதான் தனது வாழ்க்கை யாகிப் போனதாக... அடிமனதில் சில நெருஞ்சி முள்களுடன்... மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல்...

அவள் கடையைவிட்டு பாலனுக்கு முன்பே குளிர்காலத்து வெப்பமாக நழுவிச் சென்றாள். அவள் சென்றுவிட்டாலும் அவளின் வாசம் கடையில் இன்னமும் சுகந்தம் பரப்பி மிதந்து வந்ததைப் பாலன் நுகர்ந்தான். பின்பு அவசரமாகத் தனது பொருள்களுக்குப் பணத்தைச் செலுத்தி கடைக்கு வெளியே வந்தான். வேலைமுடிந்து கூட்டை நோக்கிப் புறப்பட்ட மனிதர்கள். அவர்களின் சவாரிக் குதிரைகளான வாகனங்கள். அடுக்கி வைத்ததாகத் தெருவை அடைத்துக் கொண்டு நெரிசலாக விரிந்திருந்தன.

“கிவி” கடை இருக்கும் பக்கத்துக்கு எதிர்ப்பக்கமாகத் தான் பாலனின் வீடு. ஒரு பக்கம் வாகனம் அடைந்து போய் அசையாது திணறினாலும், எதிர்ப்பக்கம் வாகனங்கள் பாய்ந்து சென்றன. தெருவைக் கடப்பதற்கான கோடுகள் போடப்பட்டிருக்கும் கோட்டிற்குச் சந்திக்குப் போகவேண்டும். அவள் அதை நோக்கியே சென்றாள். பாலன் பின்தொடர்ந்தான்.

சந்தியில் சிவப்பு மாறிப் பச்சை வரவும் அவள் முன்னே சென்றாள். பாலனும் விடாது அவளைத் தொடர்ந்தான். சந்தியைக் கடந்தவுடன் முதியோர் இல்லம் ஒன்று வருகிறது. அங்குச் சிலர் பகல்வேளைகளில் வந்து மற்றவர்களோடு பொழுதுபோக்கி... உணவருந்தி... பின்பு வீட்டிற்குச் செல்வார்கள். அவர்களை வீட்டில் இருந்து ஏற்றி வருவதற்கும், பின்பு அவர்களை வீட்டிற்கு கொண்டு சென்று விடுவதற்கும் பிரத்தியேக வாகனம் உண்டு. அப்படிச் சிலரைக் கொண்டு சென்று வீட்டில் விட்டுவிட்டு வந்த சாரதி, வாகனத்தை

விட்டு இறங்கி, வெளியே நின்று, கைகளை நீட்டி, அலுப்பு முறித்தார்.

பாலன் குடியிருக்கும் பகுதியில் வீடுகள் பனம்பாத்தி போல இருக்கும். வீடுகள் இருக்கும் தொகைக்கு ஏற்ப வாகனங்கள்விட அங்கு இடம் கிடைப்பதில்லை. அதுவும் பனிக்காலத்தில் ஒரு வாகனம் மட்டுமே அந்தப் பாதையால் செல்ல முடியும். வாகனத் தரிப்பிடத்திற்கான போட்டியில் வாகனத்தைத் தரிப்பிடம் விட்டு வெளியே பலர் எடுப்பதில்லை. குந்திய இடத்தை விட்டால்தானே மற்றவர்கள் வந்து குந்த முடியும் என்கின்ற மனப்பாண்மை.

பாலன் "வள்ளகோவின்" என்கின்ற இந்த இடத்திற்கு மாறிப் பத்துவருடம் இருக்கும். நகரின் மத்திக்கு அருகில் இருந்தாலும், நகரின் மத்தியில் புதைந்துவிடாத ஒருபகுதி. இந்தக் குடியிருப்புகளுக்குப் பின்புறமாகப் பச்சை வாசப் பைகள் சில விரிந்து கிடந்தன. காலப் போக்கில் அவை சுருங்கிப் போயின. வாகனங்கள் தள்ளும் கரியமிலவாயுவில் ஒரு பகுதியை அவை இன்றும் உணவாக்கி, நன்றிக்கடனாய் உயிர்வாயுவை வெளியேற்றும். இந்தக் குடியிருப்புகளுக்கு மறுபுறம் உயந்த மரங்கள் பச்சை வேலிபோடுகிறது. அதற்கு அப்பால் பனியில் சறுக்கி விளையாடும் மைதானமும் உண்டு. ஒஸ்லோவில் உள்ள பெரிய மைதானம் அது. "வள்ளகோவின் அறேனா" என்று அதற்குப் பெயர். அதன் முன்பாகக் குளிர்காலங்களில் பனியில் சறுக்கி விளையாடும் மைதானம் விரிந்து கிடக்கிறது. அப்பாலே உதைபந்தாட்ட மைதானம் தொடர்ந்து விரிகிறது. அதையும் தாண்டிச் சென்றால் பெரிய தொரு வாகனத் தரிப்பிடம் வருகிறது. அதன் பக்கமாக ஆகாயத்தின் நிறத்தில் பெரியதொரு குழந்தைகள் காப்பகம் இருக்கிறது. அந்த மைதானங்களைச் சுற்றி அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆண்களும், பெண்களும் நடந்து செல்கிறார்கள்.

அதற்கும் அப்பால் "றிக்கா" விடுதி வருகிறது. றிக்காவுக்கு வலப்புறமாகப் பெரியதொரு கட்டடம் கண்ணாடி மலையாக

உயர்ந்து நிற்கிறது. றிக்காவிற்கு இடப்பக்கமாகச் சென்றால் அலுவலகச் சீமெந்துக் காடுகளின் தொடர்ச்சி நீளுகிறது. அண்ணார்ந்து பார்க்க வேண்டிய சில கட்டடங்கள். அதி வேகமாச் செல்லும் வாகனங்களின் இரைச்சல். பரபரப்பாக இடம் மாறும் மனிதர்கள். சுரங்கரத நிலையம் ஒன்று... பேருந்து நிலையம் ஒன்று...

பாலன் அவள் பின்னால் அனுமானின் வாலானான். தனது வீடுவரையும் அவளின் அடியளப்பது அவன் வழமை தான். அவள் வீட்டில் இரண்டு பெண்குழந்தைகளும் ஒரு பையனும் குடியிருக்கிறார்கள். அதில் ஒரு பெண்குழந்தையும், ஓர் ஆண்குழந்தையும் அவளது கணவனுக்கும், அவனது மாஜி மனைவிக்கும் பிறந்தவர்கள். ஒரு பெண்குழந்தை மட்டும் இவர்களுக்குப் பிறந்தது. இந்தத் தகவல்களை அன்றொரு நாள் எதிர்வீட்டுக்காரன் சிரமதானம் செய்யும் போது கூறினான். அந்த சிரமதானத்திற்கு அவள் கணவன் வந்தான். ஒரு தொங்கலில் நின்று சிறிதுநேரம் துப்பரவு செய்துவிட்டு புதையலைப் பாதுகாக்க வேண்டிய பூதத்தின் அக்கறையில் ஓடிவிட்டான். சிரமதானம் முடிந்த பின்பு வகை வகையாக இறைச்சி வாட்டினார்கள். பாலன் மாமிசப் பிரியன். அவர்களுடன் இருந்து சாப்பிட்ட பின்பு ஆறுதலாக வீட்டிற்குச் சென்றான்.

அந்தப் பிள்ளைகள் தனது வீட்டைக் கடந்து போகும் போது பாலன் பார்த்திருக்கிறான். அவர்களின் முகத்தில் இருந்த சிரிப்பை யாரோ களவெடுத்துப் போக, வெளிறிய விறைத்த முகங்களில் இருந்த கண்களில் மனிதனின் சூனியத்தை நோக்குவதான ஒரு கூர்மை. அவர்கள் பாலனைக் காணும் பொழுது தெருவின் மறுகரைக்கு மாறித்தான் செல்வார்கள். பாலன் சிலவேளை சிரித்துப் பார்ப்பான். சூனியங்களின் சிரிப்புக்கு மறுமொழி ஏது? ஏமாற்றமே அவனுக்குப் பதிலாகக் கிடைக்கும். என்ன சோகம் அவர்கள் மனதில் ஒளிந்திருக்கிறது என்பது அவனுக்குப் புரியவில்லை. அதற்கு மேல் அவர்களை அவன் தொந்தரவு செய்யவில்லை.

பாலன் கிட்டத்தட்ட வீட்டை நெருங்கிவிட்டான். திடீரென அயல்வீட்டுக்காரனின் முதல் தாரப் பிள்ளைகள் இருவரும் விட்டை விட்டுத் தப்பி ஓடுவது போல ஓடினார்கள். அவர்களின் தந்தை விட்டுக் கலைத்துக் கொண்டு பின்னால் ஓடினான். அவர்களை மறிக்க அவள் குறுக்கே பாய்ந்தாள். அவளது குதியுயரச் சப்பாத்தோடு அவள் விரும்பியது போன்று நகரமுடியவில்லை. அந்தப் பிள்ளைகள் உச்சிக் கொண்டு மேற்கொண்டு ஓடினார்கள். அவர்கள் பாலனுக்கு கிட்டே ஓடி வந்தார்கள். ஒருகணம் மறிப்போமா என்று பாலன் எண்ணினான். அது தப்பு என்பதை உடனே உணர்ந்து கொண்டான். ஒரு மனிதனைக் கண்டு இன்னொரு மனிதன் பயந்து ஓடுவதற்குப் பின்னால் நிறைய காரணங்கள் சடைத்துக் கிடக்கும். அவசரக்குடுக்கையாகத் தலையை நீட்டுவது அழகற்ற செயலென முடிவு செய்தான்.

அவர்கள் பாலனைக் கடந்து ஓடினார்கள். அவர்களது தந்தையும் பாலனைக் கடந்து ஓடினார். அப்படி அவர்களின் தந்தை ஓடும்போழுது பாலனைப் பார்த்து அவர் முறைப்பது போல இருந்தது. பிடிக்க உதவி செய்து இருக்கலாமே என்கின்ற கேள்வியும் அதில் தொக்கி நிற்பதாய் பாலனுக்கு தோன்றிற்று.

4

மாதம் சித்திரையைப் பின்தள்ளி வைகாசியை எட்டிப் பிடித்தது. சூரியனின் வருகையால் கையைச் சுட்டுக் கொண்டதாக குளிர் தனது பிடியை மெல்ல நழுவவிட்டு, சுவடு தெரியாது நழுவியோடியது. ஆடைகள் துறந்து... ஆகாயத்தைப் பார்த்து... நிர்வாணமாகக் கைகளை உயர்த்திய மரங்கள்... மீண்டும் பச்சைப் பட்டணிந்து... பூத்துக் குலுங்கும் பருவக் கன்னிகளாய்த் தலைகுனிந்து நின்றன. வெண் வைரங்களை அணிந்து கொண்ட பூமித்தாய் அதை உதறித்தள்ளிப் பச்சை

உடுத்திக் கொண்டாள். பனியின் குளிரில் பரிதியின் சுகமிழந்து தவித்த மனிதன் இப்பொழுது பரிதி வட்டத்தின்கீழ் படுக்கை தேடிக் கொண்டான்.

சுருதியின் உயர்தரப் பரீட்சைகள் முற்றுப்புள்ளி காணும் தறுவாயில் ஊசலாடின. சுருதி பொருளாதாரப் படிப்பை இலக்கு வைத்தே உயர்தரப்பாடசாலையில் பாடங்களைத் தெரிவு செய்து, கண்ணுக்குள் எண்ணெயூற்றினாள். பாடங்கள் அவளுக்குப் படிந்து கொடுத்தன. அது கொடுத்த பவுசில் அவளுக்கெனச் சில தோழிகள் - தோழர்கள் ஒட்டிக் கொண்டனர்.

சுமிக்கு மீண்டும் ஒருமுறை சோதனை காலம் துவங்கி விட்டது. சலனமற்று ஓடிய வாழ்க்கை பிள்ளைகளின் வயது ஏற ஏறச் சச்சரவுகளின் மையத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டது. ஐஸ்லாந்து எரிமலையாக அவள் மனது அடிக்கடி குமுறி எழுகிறது. கோபம் அக்கினிப் பிழம்பாகக் கொதித்து ஓடுகிறது. கலாசார வேர்கள் கந்தகமாக அதில் புகைகிறது. அதன் நாற்றம் நிம்மதியைத் தின்கிறது.

மாமி இப்பொழுதும் புராணக்கதைகளில் இருந்து புரிந்துகொண்ட பெண்ணின் இலக்கணத்தைச் சுமிக்குச் சொல்லிக் கொடுப்பது பாலனுக்குப் புரிகிறது. தாயின் அறிவுரையையும் மீறிச் சுமி நவீன காலத்தில் ஒருகால் வைத்திருந்தாள். இருந்தும் பிள்ளைகள் ஐரோப்பிய கலாசாரத்தில் மூழ்குவதை அவளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சுயம். சுயத்தைப் பாதுகாத்துக் கொள்வதே மனிதனின் நோக்கு, கவனம், அக்கறை. அந்தச் சுயம் அழிந்துவிடும் என்கிற பதற்றத்தில் அவள் அலறுகிறாள். மற்றவர்களையும் அலற அடிக்கிறாள். விதைகளாய் விழுந்து... மரங்களாய் வளர்ந்து... பிணங்களாய் அழிந்து... ஒன்றின் அழிவில் இன்னொன்றின் விதை ஊன்றப்படுகிறது. கொண்டு வந்த தமிழ்க் கலாசாரம் உரமாவதை ஏற்றுக்கொள்ள முடியாத தவிப்பு. தோலில் இருந்து பிரியமுடியாத நிறத்தைத்தவிர மற்றவை பாம்புச் செட்டையாக நம்மைவிட்டு கழன்று போகும் யதார்த்தம் கண்டு பரிதவிப்பு.

பிள்ளைகள் பிறந்த உலகம் வேறு. அவர்கள் வளர்ந்த உலகம் வேறு, அவர்கள் வாழும் உலகம் வேறு. பயத்தோடு பிறந்து... பயத்தோட வளர்ந்து... அங்கும் பயந்து... இங்கும் பயந்து... என்றும் பயந்து... பலதளைகளிடம் அடிமைப்பட்டுக் கிடக்கும் எங்களுக்கு எது சுதந்திரம்? எது கௌரவம்? பாலனுக்குள் ஆயிரம் கேள்விகள் நெளிந்தன.

ஒரு முறை நண்பர்களுடன் கப்பல் பயணம் போகப் போகிறேன் என்று அம்மாவின் தொண்டைக்குழியைப் பிடித்துக் கொண்டாள் சுருதி. சுமி அந்த ஆக்கினைக்கும் அசந்து விடவில்லை. ஒரு காதால் வாங்கி மறு காதால் விட்டாள். பதில் கிணற்றில் போட்ட கல். அவள் கலாசாரத் தராசில் கப்பல் பயணம் அன்று பாலன் வரவும் பாலனையும் சுருதி பிடித்துக் கொண்டாள். நோர்வேயில் பிறந்த பிள்ளைகள் அந்தநாட்டுப் பிள்ளைகள்போல வாழ நினைப்பது அவர்கள் உரிமை என்பது பாலனின் எண்ணம். அதைத் தடுப்பது தார்மீக முரண் என்பதான எண்ணம் நரசிம்ம அவதாரம் கொண்ட நாராயணனாய் எழுந்து நின்றது.

இரணியனாய் இருந்தாலும் தோத்துப் போகும் உண்மை... நெஞ்சு கிழிபட்டு குருதி சிந்தும் பாரிதாபம் அவனைக் கவலை கொள்ள வைத்தது. சுருதியின் குழைவு அவனை மூச்சுவிடவிடாது குழையடித்தது.

வாழ்க்கை என்பது விபத்துக்களின் கோர்வை. நேற்று என்பது கனவாகி விட்டது. அது மீண்டும் வரமுடியாத வரலாறு. இந்தக் கணங்கள் நிஜமானவை. அதுவும் செத்துக் கொண்டிருக்கிறது. எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு ஒவ்வொரு கணத்தையும் சுவைக்கத் தெரியாதவன் உலகில் வாழத் தெரியாதவன் ஆகிறான். நாளை என்பது வானிலை அறிக்கை போன்றது. நிச்சயம் என எதிர்வுகூற முடியாது.

சுமி தடுக்கவும் அவள் நண்பர்களுடன் பயணம் செய்யப் பாலன் அனுமதி கொடுத்தான். கலாசார இரணியனின் நெஞ்சு பிளக்கப்பட்டது. சுமி கீழுதட்டைக் கடித்தவண்ணம் பாலனைக் கோபமாகப் பார்த்தாள்.

அந்தக் கப்பல் கடலில் மிதக்கும் குட்டித் தீவு. ஒஸ்லோவில் இருந்து வெள்ளிக்கிழமை புறப்பட்டு "கீல்" என்கின்ற ஜெர்மனிய நகரத்துக்கு கடல்வழியாகச் செல்லும். பின்பு ஞாயிற்றுக்கிழமை மீண்டும் ஒஸ்லோவை வந்தடையும். அது ஐரோப்பியரின் மிதக்கும் சொர்க்கங்களில் ஒன்று. மது, மாது, உணவு, விளையாட்டு, நடனம் போன்றவற்றை மனதில் வைத்துக் கொண்டு புறப்படும் பயணமது. சுங்கவரி இல்லாது மது, வாசனைத் திரவியங்கள், இனிப்புவகைகள், உணவுப் பொருட்கள் என்பன கொள்முதல் செய்வதில் பலருக்கும் நாட்டம் இருக்கும்.

சுருதி கப்பலுக்குச் சென்றால் அங்கு விளையாட்டுகளில் அல்லது நடனத்தில் பொழுது போக்குவாள் என்கின்ற நம்பிக்கை பாலனுக்கு. இதையும் தடுத்தால் மகளுக்கும் அப்பாவுக்கமான உறவு பரிதாபமாகப் பலவீனப்படும்.

ஞாயிறுக்கிழமை கப்பலால் வந்து சுருதி புயலாக தனது அறைக்குச் சென்று குப்புறப் படுத்துக் கொண்டாள். என்ன என்று பாலன் கேட்டபோழுது பயணக் களைப்பு என்றாள். நல்ல பயணக் களைப்பு... கள்ளி ஏதோ சாலம் விடுகிறாள் என்று சுமிதா கோபமானாள். பாலன் சுமிதாவைச் சமாளித்து கீழே அழைத்து வந்தான்.

சுமிதா சும்மா இருக்கமாட்டாள். பிள்ளைகள் இல்லாத நேரம் பார்த்து அவர்கள் அறைகளைத் துப்பரவு செய்வதாகத் துப்புத் துலக்குவாள். சுமிதாவின் இந்த வேலை தெரிந்தாலும் பிள்ளைகள் அசட்டையீனமாகப் பொல்லுக் கொடுத்து அடிவேண்டுவது வழமை. அன்றும் அதுதான் நடந்தது.

கைத்தொலைபேசியில் படம் எடுத்தால் தெளிவாக இருக்காது என்பது அவள் எண்ணம். பாலனின் கமராவை எங்கும் எடுத்துச் செல்வாள். கப்பலுக்கும் அதை எடுத்துச் சென்றாள். கப்பல் பயணம் சென்று ஆடிய கூத்தையெல்லாம் படமாக்கியவள், அதை அப்படியே கமராவில் விட்டுவிட்டாள்.

சுமி கமராவை எடுத்துப் படத்தை ஒவ்வொன்றாகப் பார்த்தாள் அவள் நம்பமுடியாமல் வெலவெலத்துப் போனாள். சுருதி இன்றைய வாழ்வைச் சுகமாக எடுத்துக் கொள்கிறாள். சுமிதா நாளைய வாழ்வை எண்ணி நடுங்குகிறாள்.

கமராவின் சேமிப்பில் மதுவை அருந்தி மங்கை அந்த வெறியில் ஆடும் காட்சிகள். ஆணோடு முத்தமிடுகின்ற அத்துமீறிய செயல்கள். எடுத்த படங்களை மறந்து போனது இமாலயப் பிழையானது.

சுருதி பாடசாலையால் வரவும் அம்மாவுக்கும் மகளுக்கு மான யுத்தகாண்டம் தொடங்கிவிட்டது. முடிவில் சுமியின் கோபத்தில் தேர்த் திருவிழாவில் தேர்ந்து எடுக்கப்பட்ட சிதறுதேங்காயின் முடிவு கமறாவுக்குக் கிடைத்தது. உடைந்த கமறாவின் பாகங்கள் ஹோலில் அங்குமிங்குமாகப் பரிதாப மாய்க் கிடந்தன. “நீ உடைச்சா எனக்கென்ன? உன்ர காசுதான் நட்டம். நான் புதிசா வரப்போற கமரா வாங்குவன்” எனக் கத்திய சுருதி படிகளில் தாவினாள். விரைவாகத் தனது அறைக்குள் அடைக்கலம் புகுந்தாள். அவள் இராச்சியத்தின் கீழ் இருக்கும் இடம் அது. அனுமதியில்லாத ஆக்கிரமிப்பு களுக்கு அங்கு இடமில்லை. அப்பா என்றாலும் அனுமதி கேட்டுத்தான் அங்கு செல்ல வேண்டும். அன்று வீட்டில் ஒருவருக்கும் சமைத்த சாப்பாடு இல்லை. பாலன் வந்தவுடன் தாயும் மகளும் அவனிடம் முறையிட்டனர். பாலன் சொற்களை இழந்து தவித்தான். யாருக்காவும் தாளம்போட அவன் ஒப்பவில்லை. சிறிது நேரத்தில் அவன் வெளியே புறப்பட்டுச் சென்றான்.

சுமி மலையாக நினைத்து சாமியாடுவது இங்கு குண்டூசி விடயங்கள். அதைக் கண்டு கொள்வது பண்பற்றதாய் கணிக்கப்படும். கண்டும் காணாமலும் பலதும் நடக்கிறது. காலத்திற்கும் இடத்திற்கும் கௌரவம் கொடுப்பதுதான் நமக்கு கௌரவம் தரும் என்கின்ற நினைப்பு பாலனிடம் உண்டு. நாட்டை மாற்ற வேண்டும் அல்லது எங்கள் நடப்பை மாற்ற வேண்டும் என்பதில் அவன் மிகத்தெளிவு.

இன்று நீலநிற அங்கியில் பாடசாலையில் இருந்து வீட்டுக்கு வந்த சுருதி, தாய்க்கு நீலமாகப்படும் செய்திகளைக் கக்கிவிட்டு தனது அறைக்குச் சென்றுவிட்டாள். நீலமாகப் படுவதும், பச்சையாகப்படுவதும் அவரவர் கலாசார, சமுதாய காரணிகளைப் பொறுத்தது. இலங்கையில் இருந்து வந்த தமிழருக்கும் இங்கு பிறந்த தமிழருக்கும் ஆகாயத்துக்கும், பூமிக்குமான வித்தியாசமிருக்கிறது. புதிய சமுதாயம், உரிமை என்று எண்ணுவதைப் பழைய சமுதாயம் சீர்கேடாகப் பார்க்கிறது. இயக்கம் இல்லா சமுதாயம் இல்லை. கச்சையில்லாமல் சேலை சுற்றும் பெண்கள் இன்று யாழில் இல்லை. இனி வரும் காலத்தில் கச்சையோடு மட்டும் பெண்கள் யாழில் சுற்றினாலும் வீணீர் வடிப்பது பண்பல்ல. வளர்ச்சியும் மாற்றமும் உலக இயக்கத்தின் இரு சக்கரங்கள். யாழ்ப்பாணத்தை விட்டு வெகுதூரம் வந்தாலும் உறைந்து போன நிழற்படமான யாழ்ப்பாண நினைவு களுடன் வாழ்பவர் பலர். அவர்களுடைய உறைந்துவிட்ட நினைவுகள் பிரச்சனைகளை மேலும் இடியப்பச் சிக்கலாக்கு கிறது. வேலைக்குப் போன பாலனுக்காய் சுமிதா தவம் கிடந்தாள்.

பாலன் வேலையால் களைத்துப் பிழைத்து சோற்றுக்குள் கை வைக்கும் ஆசையோடு வீட்டிற்கு வந்தான். வாசலில் வந்த போதே சகுனம் சரியில்லை என்பது புரிந்தது. சுமியின் மூஞ்சை ஏழு முழத்தில் நீண்டிருந்தது. மாமி வேறு நாடியில் கைகொடுத்த வண்ணம் இழவு விழுந்ததான சோகத்தில் இருந்தா. என்ன பிரச்சனையென்றாலும் தாய்க்கு தப்பாது சொல்லிவிடும் செல்லமகள் சுமி. என்ன நடந்தது என்று பாலனுக்குக் கேட்க விருப்பமில்லை. கேட்டால் வந்த கையோடு தேளைப்பிடித்து மடியிலே கட்டிக்கொண்ட கதையாகும். அது கொட்டும் போது கொட்டட்டும் என்பதாக அமைதியாகக் குசினிக்குச் சென்று கையைக் கழுவினான். பாலன் நினைத்தது சரியாகப் போயிற்று. வந்த உடனேயே என்ன நடந்தது என்று பாலன் கேட்காதது குறையாகிற்று. பாலனுக்கு அப்படித் துடித்துப் பதைப்பதாக ஒரு நாடகமாட

விருப்பமில்லை. அதைச் சுமியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவள் கட்டுடைந்து விசும்பி வெடித்தாள். வயிற்றுப்பசி பாலனின் நிதானத்தைப் புசித்தது.

"இப்ப என்ன இழவே விழுந்து போச்சு? மனிசருக்கு வாலும் புரியாமல் தலையும் புரியாமல் சும்மா ஏன் ஒப்பாரி வைச்சுக் கொண்டு நிக்கிறாய்? ஏதும் ஒப்பாரி வைக்கிறது எண்டா என்ன நடந்தது எண்டு சொல்லிப்போட்டு ஒப்பாரிவை." மாமி இருப்பதையும் மறந்து பாலன் உரக்கக் கத்தினான். கத்திய பின்புதான் அவனுக்கு அந்த உண்மை உறைத்தது. சோர்வோடு அவன் கையைக் கழுவினான்.

"ஓ நான் நெடுகச் சும்மா ஒப்பாரி வைச்சுக் கொண்டுதான் திரியிறன். உங்களுக்கு வீட்டில என்ன நடக்குது எண்டு எல்லாம் தெரியும். ஆரும் ஏதும் சொல்ல வந்தா நிதானமாகக் கேட்பியள். கண்டவையில இருக்கிற அக்கறை மாதிரி வீட்டிலும் கொஞ்சம் அக்கறை இருக்க வேணும்."

பாலனுக்குச் சுள்ளென உறைத்தது. ஓங்கி ஒரு அறை கன்னத்தில் விட்டால் பொங்கி வரும் கோபம் தண்ணிபட்ட பாலாய் அடங்குமெனத் தோன்றியது. கைபட்டால் சுமி ஊரைக் கூட்டுவாள். மாமி வேறு பார்த்துக் கொண்டு இருக்கிறா. பொங்க முடியாது பாலன் தணிந்து போனான்.

பின்பு மேசையில் இருந்த வண்ணம், "சரி இப்ப என்ன நடந்தது எண்டு சொல்லு சுமி. மனிசர் பசியில வரேக்க ஒப்பாரி வைச்சு ஆர்ப்பாட்டம் செய்யாமல், சாப்பிட்ட பிறகு சொல்லலாம்தானே? பசிக்களையில மனுசருக்கு விசரா இருக்குது" என்றான்.

"றோம் பத்தி எரியேக்க பிடில் கேட்குதே உங்களுக்கு? சுருதி நாளைக்கு "றுஸ்"க்குப் போகப் போறாளாம். ஒரு குமரப்பிள்ளை அதுக்குப் போய்வந்தால் எங்கட சனம் எப்பிடி நாக்க வளைக்குங்கள் எண்டு தெரியும் தானே? ஏற்கனவே கப்பலுக்குப் போன கதை அடங்கேல்ல? இவளோட சேர்ந்து போற வப்புகளோ தண்ணியப் பருக்கிப் போட்டு, படத்தை எடுத்துக்கொண்டு வந்து, எங்களை வெருட்டப் போறாங்கள்.

இந்த வெருளிப் பெட்டைக்கு நான் சொன்னா விளங்காது. அது துள்ளிக்கொண்டு மேல றூமுக்குப் போய் இருக்குது. அவளப் போகவிடாமல் நிப்பாட்டுறது உங்கட பொறுப்பு. இல்லாட்டி எங்கட மானம் கப்பலேறிப் போகும். அப்பிடி அவள் போனால் அம்மாவும் வெளிக்கிட்டு ஊருக்குப் போயிடுவாவாம். அம்மா இல்லாட்டி எனக்கும் நிச்சயம் விசர் பிடிச்சிடும்' என்றாள் சுமி. 'பிறகேன் இஞ்ச வந்தவள் இவள்? பெரிய பாசமலர் வேஷம் போடுகிறாள்' எனப் பாலன் மனதிற்குள் எண்ணிக் கொண்டான்.

பாலனையும் சுமியையும் உறைநிலையில் வைத்துவிட்டு இந்த "றுஸ்" என்றால் என்ன என்பது பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும்.

"றுஸ்" எனப்படுவது டென்மார்க்கில் உயர்தரப்பாட சாலை முடிவடைவதை மகிழ்ச்சியாகக் கூத்தாடிக், குதுாகலித்து, மதுவில் மிதந்து, இசையில் கலந்து, இஷ்டம் போல் கலவி புரிந்து, குழந்தைப் பருவம் நீக்கி, பெரியவர்களாகும் திருவிழா. நோர்வே, டென்மார்க்கிற்கு தலைசாய்த்து வாழ்ந்த காலம் அதிகம். அந்த மேலாதிக்கத்தில் அவர்களின் பல கலாசாரங்கள், கொண்டாட்டங்கள் இங்கு தூக்கி வரப் பட்டன. அப்படி இறக்குமதி செய்யப்பட்ட சரக்கில் இது முக்கியமான ஒன்று. 1700களில் கனவில் மட்டுமே நோர்வே மக்கள் பல்கலைக்கழகங்களைக் காண முடிந்தது. அதை நிஜமாக்குவது என்றால் டென்மார்க் பயணப்பட வேண்டிய தாயிற்று. பல்கலைக்கழகத்திற்குச் செல்வதென்றால் கடுமை யாக உயர்தரம் படித்து, அதில் சித்தி எய்த வேண்டும். அப்படிக் கடுமையாகப் படித்து பரீட்சை எழுதியவர்களைப் பழைய மாணவர்கள் எரிச்சலூட்டும் விதமாகக் நெற்றியில் கொம்பு கட்டி விடுவார்களாம். பின்பு பரீட்சையின் பெறுபேறுகள் வந்ததும் சித்தி எய்தியவர்களின் கொம்பு பரீட்சித்தவர்களின் முன்பு வைத்து அகற்றப்பட்டும். அது அவர்களுக்கு நல்லகாலம் பிறந்துவிட்டதான ஆசியைத் தரும். றுஸ் என்பது 'cornua edpepositurus' எனப்படும் லத்தின் சொல்லின் சுருக்கமாகும். அதற்கு கொம்பை இறக்கி வைத்தல் எனப் பொருள்படும்.

1979 பின்பு வைகாசி 17த் தாண்டியே நோர்வேயில் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன அது அவர்களின் கொண்டாட் டத்தின் கொடூரத்தை குறைக்கவும், மாணவர்களுக்குப் படிப்பதற்கு கூடுதலான நேரத்தை ஒதுக்கவும் ஏதுவாயிற்று.

இறக்குமதி செய்யப்பட்ட நாடான நோர்வேயில் இந்த விழாவைத் தலையில் வைத்துக் கூத்தாடுகின்றனர். இங்கு உயர்தரப்பாடசாலை முடிவடையும் காலத்தோடு சுதந்திரதினக் கொண்டாட்டம் வருகிறது. நோர்வேயின் சுதந்திரதினக் கொண்டாட்டம் பரவசம் ஊட்டும். ஆண்களும் பெண்களும் "பூநாட்" எனப்படும் அரச கம்பீரமான உடையொன்றை அணிந்து கொள்வார்கள். வாத்திய முழக்கங்களோடு பாட சாலைப் பிள்ளைகள், மற்றைய அமைப்புகள், பெரியவர்கள் எனக் கடலாக மக்கள் அரசமாளிகைக்கு ஊர்வலமாகச் செல்வார்கள். மாடத்தில் நிற்கும் அரச குடும்பத்திற்கு கையசைத்து மரியாதை செலுத்துவார்கள். அதில் இந்த றுஸ் முக்கிய இடம் பிடிக்கும். றுஸ் கொண்டாட்டம் சுதந்திர தினத்தோடு முடிவடையும்.

றுஸ்சின் போது பல இடங்களுக்குப் பிரயாணம் செய்வார்கள். அதற்கான ஏற்பாடுகள் பல ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கிவிடும். வாகனங்கள் வாங்கி, அவை தேவலோகத்து இரதங்களாக மாற்றப்படும். வண்ணங்களும் வருங்கால ஓவியங்களும் பேருந்தைப் புதுமையாக்கும். அரச சுகம் கொண்ட உள்ளமைப்பு, அதிரவைக்கும் ஒலிப் பெருக்கிகள், கொறிக்க உணவு, அருந்த மது, இருக்கைகள், படுக்கை என வசதிகள் அதற்குள் நிறைந்திருக்கும். குழுக் குழுவாய் அந்த கொண்டாட்டத்திற்குப் புறப்படும் இளைஞர்கள், மதுவில் மிதந்து உறவில் சுகித்து ஒப்பந்தம் இல்லாத இல்லற சுகங்கள் உள்ளே நிகழ்ந்தேறும். மதுவின் உச்சத் தில் நிதான நரம்புகள் உறைந்து போனால் கற்பழிப்புகள், சண்டை சச்சரவுகள் ஆகியனவும் நிகழும்.

இறுதியாகப் பயணம் செய்பவர்கள் எல்லோரும் ஓர் இடத்திலே வந்து கூடுவார்கள். அங்கே கொண்டாட்டத் தின் உச்சக்கட்டம் அரங்கேறும் இந்தக் கொண்டாட்டத்தை

ஒட்டி பத்திரிகை பிரசுரிப்பு, பாட்டுக்குழு அமைத்து பாடித்திரிதல், அட்டைகள் அடித்து விநியோகித்தல் எனப் பல செயற்ப்பாடுகள் நடைபெறும். றுஸ் அட்டைகளைச் சிறிய பிள்ளைகள் சேர்ப்பதில் மிகவும் உற்சாகமாய் இருப்பார்கள். றுஸ்சில் பலவகையான நிறங்கள் உண்டு. அவை அவர்கள் எவ்வகையான படிப்பை மேற்கொள்கிறார்கள் என்பதற்கு ஏற்ப மாறுபடும்.

சுருதிக்கு வாழ்வில் ஒருமுறை மலரும் அற்புதம் இது. இம்முறை தவறவிட்டால் மறுமுறை திரும்பிவராத பேரூந்து. அவள் எத்தனை யுத்தகளம் கண்டாலும் அந்த யாகத்திற்குப் பிரசன்னமாகச் திடசங்கற்பம் பூண்டாள். அம்மாவிற்கும் மகளுக்குமான உக்கிரப் போரில் அம்மாவின் காலைவாரி விடும் நோர்வேச் சட்டமும், பதினெட்டை எட்டும் அவளைப் பாசத்தால் பணிய வைக்க முடியாத யதார்த்தமும்.

"சரி சரி இப்ப எனக்குச் சாப்பாட்டைத் தாரும்... அவள் போறதை தடுக்கேலாது. ஆனா அவள் கவனமா நடந்து கொள்ளுறதுக்குப் புத்திமதி சொல்லலாம். தோளுக்கு மேல வளந்திட்டினம். நாங்கள் யாழ்ப்பாணத்தில இருக்கிற மாதிரி இங்க குதிக்கேலாது. இப்ப அங்கயே கதை மாறிக் கொண்டு போகுது. இதுகளை சகிச்சுக் கொள்ளுற மனப்பக்குவத்தை நாங்கள்தான் அடைய வேணும். குத்துதே குடையுதே என்பதிலை ஒரு பிரயோசனமும் இல்ல. இனி நீ அவங்களை ஊருக்குகூட கூட்டிக் கொண்டு போகேலாது."

"நீங்கள் என்ன அப்பா மாதிரியே கதைக்கிறியள்?"

"ஓமடி. நான் இப்பிடிக் கதைக்காட்டி அவள் உனக்கு மகளா இல்லாமல் போயிடுவாளடி. இப்ப சாப்பாட்ட போடு. வாயிருக்கிற அளவுக்கு மேல மூளை சுருண்டு கிடக்குது."

அவன் அப்படிச் சொன்னது சுமிக்குப் பிடிக்கவில்லை. தனது சுய கௌரவத்தைப் பிடுங்கி குப்பையில் எறிந்ததான உணர்வில் அவள் பொசுங்கினாள். பின்பு முறைத்துப் பார்த்து விட்டுச் சாப்பாட்டைப் ஏனோ தானோ என்பதாகப் போட்டுக் கொடுத்தாள். பேசாது ஹோலுக்குச் சென்றாள். அங்கு

அம்மாவை சோகமாகப் பார்த்த வண்ணம் அமைதியாக இருந்தாள். வீட்டை நிசப்பதம் நெடுநேரமாகச் சூறையாடிற்று. சாப்பிட்டு முடித்த பின்னர் பாலன் தனது அலுவலக அறைக்குள் சென்று அடைக்கலமாகிக் கொண்டான். மனித முரண்பாடுகளை விட்டு எங்காவது ஓடவேண்டும் என்கின்ற ஏக்கம் அவனிடம்.

5

பசுமையைப் பறிகொடுத்து பொன்னாகத் தகதகத்த இலைகள், காற்றின் அசைவில்... முதுமை அழகெனத் தங்களுக்குள் முணுமுணுத்தன. அந்த அழகே அழிவின் முகவுரை. இரும்புக்கரம் கொண்டு இயற்கை ஆயுள் பறிக்க, கூட்டுத் தற்கொலை செய்து நிலத்தில் மீண்டும் ஆகாயத்தை நோக்கி தவத்தை இயற்றத் தயாராகும் நிர்வாணமான மரங்கள். ஒளிக்கும் இருளுக்குமான ஓயாத போராட்டம். இனி இருள் ஒளியை வெற்றி கொள்ளும். புறத்தின் இருள் அகத்திலும் சோர்வை ஊட்டும். விழுந்து தெருக்களிலே குவிந்து ஆதவனின் திசை திரும்பல் அகத்தை யும் அலைக்கழிக்கும் காலமாகும்.

குளிர்காலம் சிலருக்குச் சந்தோசத்தின் உறைகாலம்... சிலருக்குச் சந்தோசத்தின் துளிர்காலம்... பனிக்கான தவமும்... பரிதிக்கான தவமும்... இடை விடாது போராடிக் கொள்ளும் நாடு இது. பரிதியின் பார்வை குறைந்ததில் பகைவனான குளிரின் கொண்டாட்டம்.

கோடைகாலத்தில் பயன்படுவனவுக்கு இனி வேலை யில்லை என்பதான அவற்றின் முடக்கம். பனியின் ஆதிக்கம் தொடங்கிவிடும். கைகளை இறுக்கி... காதலியை இறுக்கி... சூட்டை அடைகாக்கும் சூத்திரத்தை நாடும் மனிதர்கள்...

பாலன் வேலைக்குப் போகப் புறப்பட்டு வெளியே வந்தான். காண்டியில், கதவின் வெளிப்புறத்தில் முத்து

முத்தாக நீர்திவலைகள் உருண்டு உடைந்து வடிந்தன. சாய்ந்த ஒளி பட்டுத்தெறித்து வைரக்கற்களாய் மின்னும் சில நீர்த்துளிகள். சூரியன் தமதமானாலும், வேலைக்குத் தாமதமாக முடியாது என்கின்ற யாதார்த்தம் அறிந்த பாலனின் அவசரம். வெளியே வந்த பாலன் அந்த அவசரத்தைச் சற்று மறந்து, ஈரலிப்பான காற்றை இழுத்து...

பாலன் சுரங்கரத நிலையத்தை நோக்கி நடந்தான். பழுத்த இலைகள் வில்வார்ச்சனை செய்வதுபோல அவன்மேல் விழுந்தன. காற்று குளிரோடு ஊடல் செய்த திமிரில் முரட்டுத்தனமாய் உரசிச் சென்றது. வேலைக்குச் செல்பவர்கள் வசதி கருதி தங்களது வாகனங்களோடு புறப்பட்டனர். பனி விழும் வரையும் தரிப்பிடத்திற்கான தவண்டையில் இருந்து விடுதலை. சிலர் பிள்ளைகளைக் குழந்தைகள் காப்பகத்திற்கு நடந்தே கூட்டிச் சென்றனர். சிலர் தங்களது வாகனத்தில் அவர்களை அழைத்துச் சென்றனர். பல மாணவர்கள் நடைபயின்றனர்.

மனிதன் எறும்பு போன்றவன். அவன் உயிர்நாடி உழைப்பு. இடையிடையே அலுப்பு அவனை உலுக்கினாலும், மீண்டும் உழைப்பு என்னும் சக்கரத்திற்குள் வீழ்கிறான். பணம் வாழ்வின் உயிர் நாடியாகிப்போன நவீன உலகில் மீண்டும் மீண்டும் வீழ்ந்து எழமுடியாதே வாழ்கிறான். வாழ்வின் கரு உழைப்பு என்பதாகப் புரிகிறான். உற்பத்தி அற்ற மனிதனைப் பாரமாகப் பார்க்கும் சமுதாயம். சமுதாயத்திற்குப் பாரமாகி... வறுமைக்கு இரையாகி... வெறுப்பில் தவிக்க முடியாத மனிதன் மீண்டும் மீண்டும் உற்பத்தி, உழைப்பு என்னும் சக்கரத்தினுள் அகப்பட்டு... அழுந்தி... வாழ்ந்து... மடிந்து... எத்தனை கோடிமனிதர்கள் தோன்றினார்கள்... அழிந்தார்கள்? நாமும் விட்டில்பூச்சிகளாய்... அதன் தொடராய்...

பாலனுக்கு ஆண்டி ஆகிவிட்டால் என்ன என்கின்ற எண்ணம் மெல்ல மனதில் எட்டிப் பார்த்தது. ஆசைகள் அறுத்து... உடல் உழைப்பு ஒளித்து... காமம் தீய்ந்து... கருணை நிறைந்து... ஞானம் பெருகி... பாலனுக்கு அது

இஷ்டம் போல் வாழும் வாழ்வென்பதாய் தோன்றிற்று. அந்த துறவைக்கூட இந்த நாடுகள் வெகுதூரம் துரத்தி விட்டன. இரப்பதற்கோ, எங்கென்றாலும் படுத்து விழிப்பதற்கோ, ஏற்ற தேசம் இதுவல்ல என்பது அவனுக்குப் புரிந்தது. குளிரில் விறைத்து சாவது ஒன்றும் சுவையான அநுபவமாகாது. கால்விரல்கள், கைவிரல்கள், காதுமடல்கள் எனத் தொடங்கும் குளிர் ஒவ்வொரு அங்கங்களாய் இறுகப்பற்றி முறுக்கும் போது நரக வேதனை பிறக்கும். குண்டூசி பாய்வதாக குளிர் தேகமெங்கும் மெல்ல மெல்லத் தின்னும். தோல் குளிரில் மரத்து, அதன் கலங்கள் சாகும் வேதனை நரம்பால் மூளை யில் பாயும். நரம்புகள்கூட விறைத்துப் போக, உணர்ச்சிகள் மரத்துப் போகும். சித்திரவதைகளின் சிகரமே குளிரில் விறைப்பது. அந்தச் சித்திரவதையிலும் பார்க்க உற்பத்திச் சக்கரத்திற்குள் இழுவை மாடாக...

பாலன் மேற்கொண்டும் அதைப்பற்றி எண்ண விரும்பாதவனாய் நடந்தான். முதியோர் இல்லத்தில் இருந்து வயோதிபர்களை அழைத்துவரும் வாகனம் புறப்பட்டு வந்தது. பாலன் அந்த வாகனத்திற்கு வழிவிட்டு நின்றான். அதற்கு அந்தச் சாரதி கைகாட்டி நன்றி கூறினான். பாலனும் பதிலுக்குக் கை காட்டினான்.

வேலையால் வரும்பொழுது இரைப்பையில் சுரக்கும் அமிலம் அதை ஓட்டையாக்குவதாய் அரிக்கும். அதில் உருக்கிய லோகத்தை வார்ப்பதாக அந்தக் கடையில் இருந்துவரும் “கெவாப்” வாசம் மூக்கைத் துளைக்கும். இப்பொழுது அந்தக் கடை ஆளரவம் அற்று உறங்கியது. காற்று, சாப்பாட்டு மணமற்று சுத்தமாய் வந்தது. அது ஒரு சிறிய பெட்டிக்கடை. அந்தக் கடைக்கு முன்பு நான்கு ஆள்கள் இருந்து சாப்பிடக்கூடிய இடம் இருந்தது. கோடைகாலத்தில் அங்கு இருந்து சாப்பிடலாம். குளிர்காலத்தில் சாப்பாட்டை வாங்கிக் கொண்டு வீட்டை நோக்கி ஓடலாம். கடையின் பெயர்பலகையில் “கேக்” விளம்பரமும் பெரிதாக முகம் காட்டியது. பெரிய நிறுவனங்களின் விளம்பர பேரத்திற்கு இரையாகும் குட்டி முதலாளிகள்.

அந்தக் கெவாப் கடையைத் தாண்டினால் கார்க் கடைகள் வருகின்றன. அதன் பின்புறத்தில் கார்கள் திருத்தும் கடையொன்று உள்ளது. அற்கும் பின்புறமாக நவீன மாடிக் குடியிருப்பு ஒன்று புதிதாக எழுந்து நிற்கிறது. அதில் மேகலனும் அவனது குடும்பமும் சில காலத்திற்கு முன்பு குடிவந்திருந்தனர். மேகலனோடு பாலனுக்குப் சற்றுப் பழக்கம் உண்டு.

அவனை அறிவாளி என்பதா? பைத்தியக்காரன் என்பதா? அவனைப் பற்றி பாலனிடம் தீராத போராட்டமும் குழப்பமும் உண்டு. மேகலன் சிலவேளை வலியவந்து விழுந்து விழுந்து கதைப்பான். சிலவேளை பார்க்காதவன் போலப் போவான். பாலன் அதைப் பற்றிப் பெரிதுபடுத்திக் கொள்வதில்லை. கதைத்தால் கதைப்போம் அல்லது போசாது போவோம் என்பது அவன் கொள்கை ஆயிற்று.

பாலன் கெல்ஸ்பியூர் நோக்கி நடந்தான். அப்பொழுது சொல்லி வைத்தது போல மேகலன் அவசரமாக வந்தான். பாலனைக் கண்டு விட்டு அவனை நோக்கி ஓட்டமும் நடையுமாக நெருங்கினான். தன்னைப் போன்று வேலைக்குப் போகும் அவசரமாய் இருக்க வேண்டுமெனப் பாலன் எண்ணிக் கொண்டான்.

அவசரமாக வந்த மேகலன், "பாலன் உம்மோட கொஞ்சம் கதைக்கலாமோ?' எனத் துவங்கினான். பாலனுக்கு அது புதுமையாகிற்று. இந்தப் புதுமையான தொடக்கத்தின் பின்னால் ஏதாவது ஒளிந்து இருக்குமா என்கின்ற ஆவல் பிறந்தது.

அவன் அதைக் காட்டிக் கொள்ளதவனாய், "என்னண்ண விசயம்?" என்றான்.

"நான் கொஞ்சம் அந்தரங்கமான விசயம் உம்மோட கதைக்கோணும். தப்பா நினைக்க மாட்டீரே? அதோட மற்றவைக்கும் இதைப்பற்றி அலட்டக் கூடாது. எப்பிடியோ ஊரின்ர காதில இந்தச் சங்கதியும் விழத்தான் போகுது.

அதுக்காக நாங்களே சங்கூதவேணும் எண்டு இல்லைத்தானே?" எனப் பாலனுக்குக் விளக்கம் தந்தான்.

"இல்லையண்ண, நான் யாருக்கும் விசயத்தைச் சொல்ல மாட்டன். நீங்கள் தாராளமாய்ச் சொல்லுங்கோ."

"உதில வாற பஸ்ராண்டில நிக்காமல் நாங்கள் கெல்ஸ்பியூருக்கு நடந்து போவமே?"

"ஓ, அதுக்கென்ன? காலமை கொஞ்சம் உடற்பயிற்சி செய்த மாதிரி இருக்கும்."

மேகலன் நடந்தவண்ணம் கதைக்கத் தொடங்கினான்.

"பாலன் வாழ்க்கை எண்டுறது இடியப்பச் சிக்கல்தான். அதிலும் என்னுடைய வாழ்க்கை எப்பிடிப் பார்த்தாலும் அவிழ்க்க இயலாத படுமுடிச்சு! கண்ணதாசன் 'மனைவி அமைவதெல்லாம் கடவுள் கொடுத்தவரம்' எண்டு எழுதினான். பிசாசு அமைவதெல்லாம் யார் கொடுக்கும் வரம் எண்டு எழுதாமல் போயிட்டான். நான் தனிய இருக்கவேணும் எண்டுதான் ஆசைப்பட்டன். வம்சவிருத்தி இல்லாமல் போயிடும் எண்டு வலுவில இவளைப் பிடிச்சு எனக்கு அனுப்பி வைச்சினம். வம்ச விருத்தியோ சுக்கில தணிப்போ ஆரம்பத்தில சுகமாத்தான் இருந்திச்சுது. பிறகு நோர்வே பிடிபட, சட்டம் தெரிய, சமபாதி கேட்பினம். சரியெண்டு விட்டுக் கொடுக்கோணும். அது உண்மையில ஒரு பிரச்சினையும் இல்லை. வீட்டுக்கு மாதா மாதம் பத்தாயிரம் கட்டவேணும். சாப்பாடு, கரண்ட்பில், ரீவிபில் எண்டு மஞ்சள் துண்டுக்கு குறைவில்லை. அவள் முன்னுக்கு இருக்கிற 'வாணகாகனில' வேலை செய்யிறாள். இரண்டு பேரும் வேலை செய்யாட்டில் இங்க குடும்பம் நடத்தேலாது எண்டு பஞ்சம் கொட்டக்கூடாது. பணம் தாராளமாய் இருக்கும். நான் மட்டுமே குடும்பச் செலவெல்லாம் செய்ய வேணும். தான் உழைக்கிறதை ஆடம்பரமாச் செலவழிக்கோணும் எண்ட புத்தி இவளுக்கு எங்க இருந்து வந்தது எண்டு தெரியேல்ல. ஊரில தறியடிக்கப் போனவள். இங்கவந்து என்ர தலையில தறியடிக்கிறாள். என்ன வேண்டினாலும் அது இனி இல்லை எண்ட ஆடம்பரமா

இருக்கோணும். தனக்கு ஒரு மணிக்கூடு எழுபத்தி இரண்டாயிரம் குரோணருக்கு வாங்கி இருக்கிறாள் தம்பி.''

"என்ன?'' பாலன் அதிர்ந்தான்.

"அவசரப்படாதை. சொல்லுறன் கேள்.''

"சரி. சொல்லுங்க.''

"ரீவி, அடுப்பு, கட்டில் எண்டு எது வாங்கினாலும் அதுக்குச் செலவழிக்கிற காசுக்கு ஒரு கட்டுப்பாடு கிடையாது. சரி உழைக்கிறாள் செலவழிக்கிறாள் எண்டு விட்டிட்டு இருந்திடுவன். இந்த முண்டை ஒரு முப்பது மாஸ்ரர் காட் வைச்சிருக்கிறாள். எல்லாத்திலையும் கடன். இப்ப கொஞ்சம் கொஞ்சமா இன்கஸ்கோ (வசூலிக்கும் முறை) வரத் தொடங்கீட்டுது. அவளுக்கு அதைப் பற்றி கவலையே இல்லை தம்பி. நான் என்ன செய்ய முடியும்? சொல்லுபாப்பம்? அவளிட்ட நூறு சோடி சப்பாத்து இருக்குது. நேற்று மூவாயிரத்து எண்ணூறு குரொணருக்கு சாப்பாத்து வாங்கியாறாள். எனக்கு வந்த கோபத்தில கன்னத்தைப் பொத்தி ஒண்டு குடுத்திட்டன். பிறகு ஏன்ரா அப்பிடிச் செய்தன் எண்டு பைத்தியமாய் இருந்திச்சு. கோபம் வந்தா சிலவேளை என்ன செய்யிறம் எண்டு தெரியுது இல்ல. அதுக்குப் பிறகு அவள் கத்திக் கூப்பாடு போட்டாள். பிறகு அவளோடு வேலை செய்யிற செந்திலுக்கு போன் பண்ணி மணித்தியாலக் கணக்கில கதைச்சுக் கொண்டு இருந்தாள். இண்டைக்கு பொலிசுக்குப் போவன் எண்டு சொல்லுறாள். என்ன நடக்கும் எண்டு தெரியாது. இவள் ஒரு அடங்காப் பிடாரி தம்பி. சொன்னாச் செய்வாளடா. அதோட அவன் செந்தில் வேற ஏத்தி விடுவான். அவனுக்கு எங்கள் இரண்டு பேரையும் பிரிக்கிறதில என்ன ஆதாயம் இருக்குது எண்டு எனக்குத் தெரியேல்ல. நான் இவ்வளவு நாளும் யாருக்கும் கெடுதல் இல்லாமல்தான் வாழ்ந்து வந்திருக்கிறன். ஆனா என்னுள்ளையும் ஒரு வக்கிரமான மனிசன் சாடிக்க அடைச்ச பூதமாய் வாழுறான். சாடி இன்னும் மூடித்தான் இருக்குது. ஒரு நாளைக்கு சாடி மூடியக் கோபம் எட்டி உதைக்கப்

போகுது. அப்ப அவன் கட்டுப்பாடில்லமல் மனக்குகையை விட்டு வெளிய வருவான். இந்த மேகலன் யார் எண்டதை செந்திலுக்கு காட்டுவான்."

மேகலன் கோபத்தில் எரிய மூச்சு இரைச்சலாக அவனிடம் இருந்து வந்தது. மீண்டும் பேசத் தொடங்கினான்.

"இப்படி அல்லாடுறதிலும் பார்க்க எங்கயாவது துலைஞ்சு போயிடலாம் போல இருக்கும். நல்லகாலம்... வாரிசு ஒண்டும் உருவாகாத வகையில ஒரு நிம்மதி. இல்லாட்டி இன்னும் பெரிய உத்தரிப்பாய் இருந்து இருக்கும்."

நிஜத்தின் பிறாண்டலில் நினைவை இழந்தவர்களாய் சடுதியாகச் சுரங்கரத நிலையத்தை வந்து அடைந்தனர். காலை நேரத்திற்கே உரியதான வேலைக்குச் செல்லும் அவசரம், மனிதக் கால்களில் சில்லுப் பூட்டிய பரபரப்பு. அந்த பரபரப்பில் உரசிக் கொண்டு போகும் மேலங்கிகளின் மென்மையான வருடல். புயலாக வந்து நின்றது இரண்டாமெண் சுரங்கரதம். கடமையின் நினைவில் கதையைத் தொலைத்துப் பாய்ந்து ஏறிக் கொண்டான் மேகலன். நுகத்தில் பூட்டப்பட்ட இரண்டு மாடுகளும் ஒத்துழையாத பொழுது, இல்லற வாழ்க்கை என்னும் வயல் பண்படுமா? அவன் மனதில் அந்தக் கேள்வி பெரும் அலைகளாக எழுந்து மூர்க்கமாக மோதின. மீண்டும் மீண்டும் எழுந்து அடங்கும் அலைகள் ஓய்வதில்லை. மனித விருத்திக்கு கேள்வி என்னும் அலைகள் உயிர்நாடி. அதன் துடிப்பு அடங்காத வரை மனிதனின் தேடல் தொடர்கிறது எனப் பாலன் எண்ணிக் கொண்டான்.

6

நிமிடங்களை எண்ணும் மின்னெழுத்தின் மாற்றத்திற்காய் காத்திருக்கும் கண்கள். பாலனின் சுரங்கரதம் நிமிடங்களை விழுங்கி ஒளியோடு பிரசன்னமாகியது. நின்று மூச்சுவிட்ட சுரங்கரதத்திற்குள் பாலன் அவசரமாக ஏறினான். சியாமளா

தேவி என்கின்ற சிம்மியும், விக்னேஸ்வரன் என்கின்ற விக்கியும் உள்ளே இருந்தனர். பாலனைக் கண்டவுடன் தோழமையுடன் சிரித்தனர். சியாமளாவுக்கு இரண்டு ஆண் குட்டிகள் உண்டு. சியாமளாவின் கணவர் எங்கோ ஒரு பாடாசாலையில் கழுவும் வேலை செய்கிறார். சியாமளா இங்கு வந்த பின்பு படித்து தற்போழுது தாதியாக வேலை செய்கிறாள்.

சியாமளா கறுப்பு என்றாலும் வெள்ளைப் பளிங்கில் கறுப்பு வைரம் பதித்ததாக அவள் கண்கள் மின்னலாக வெட்டும். அது பார்ப்பவரின் இதயத்தை மெல்லச் சுண்டி இழுக்கும். இதயம் காயப்படாது இவளிடம் இருந்து தப்பிக் கொள்வது பெரும்பாடாகும். கண்ணைப் பார்த்துக் கதைப்பது தார்மீகம் என்றாலும் சில பெண்களின் கண்ணைப் பார்த்தால் காமம் புளித்த கள்ளாகப் போதையேற்றும். சியாமளா வின் கண்கள் எப்பொழுதும் மின்னலாக வெட்டும், அவள் காதில் தோடுகள் இல்லை. வந்தேறிய சில வளையங்கள் நவீன காலத்து நாகரிகத்தைப் பறைசாற்றும். மெல்லிய உதட்டுச் சாயம் படிந்திருக்கும் கீற்றான உதடுகள். அதன் நெளிவில் பரதம் பயிலும் கலைகள். இடைவிடாது தவழும் புன்னகை. இரண்டு பிள்ளைகள் பெற்றாலும் கவர்ச்சியில் சேதாரம் இல்லாத தோற்றம். சியாமளாவுக்கு இருபத்தியேழு வயது தொடங்கிவிட்டது என்பதை மட்டிட முடியாதவாறு அவள் இளமையின் பொலிவு.

விக்கி ஆறடி உயரம் இருப்பான். வெள்ளையும் கறுப்பும் கலந்து நெளிந்து முறுகிய முடிகள் காதுகளை மூடும் நரையை மறைக்க மீசைவழித்த முகம். சில வெண்கம்பிகள் காதுகளின் ஓரத்தில் தூக்கலாகக் குந்தியிருந்து முதுமை யின் வரவு சொல்லும் கோலம். மோகத்தை வீசுகின்ற விழிகள். சிரித்துக் கதைக்கும் கலகலப்பு. ஆழம்பார்த்து அலசும் அவனது கேள்விகள். சரளமாக நோர்வேஜிய மொழி கதைக்கும் திறமை. வயது நடுத்தரத்தைத் தாண்டினாலும் மனதில் குழந்தையான குதூகலிப்பு.

விக்கி தாதியாக இந்த முதியோர் இல்லத்தில் வேலை செய்கிறான். பாலனும் அதே முதியோர் இல்லத்தில் வேறு ஒரு மாடியில் உதவித் தாதியாக வேலை செய்து வருகிறான்.

பாலனும் புன்னகை புரிந்தவண்ணம் அவர்களுக்குப் பக்கத்தில் போய் இருந்தான்.

அவர்களின் பக்கத்து இருக்கையில் ஒரு காதல் சோடி. காலம் இடம் மறந்து, முத்தமழை சிந்தினர். குடியேறிகளின் பிள்ளைகளும் இப்படிக் குதூகலிப்பதைப் பாலன் கண்டு இருக்கிறான். இது அசிங்கமா? அழகா என்பது பார்ப்பவனின் மனதைப் பொறுத்தது என பாலன் எண்ணிக் கொள்வான். உணர்ச்சி ஓவியங்கள் இவை. பார்க்கும் கோணத்தில் பல விதமாகக் காட்சி தரும் என்பது பாலனின் கருத்து. பாலன் அந்தச் சுதேசிகளை ஒரு கணம் பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டான். அதைப் பார்த்த சிம்மி குறும்பாகச் சிரித்தாள். அவள் தொடர்ந்தும் அவர்களை ஆர்வமாகப் பார்த்தாள்.

"இதில என்ன தப்பு?" என அவள் பாலனைப் பார்த்துக் கேட்டாள். பாலனுக்கு ஒருகணம் என்ன சொல்வதென்று புரியவில்லை. சிம்மி இப்பிடி நிர்வாணமாய்க் கேட்பது ஒன்றும் புதினம் இல்லை. பாலன் பெண்களோடு அப்படிக் கதைப்பதில்லை. அது அவனுக்கு கூச்சமாக இருக்கும். அவன் வஸ்திரம் போர்த்த சொற்களை மட்டும் பயன்படுத்துவான். பாலன் தன்னைச் சுதாரித்துக் கொண்டவனாக, "நான் தப்பெண்டு சொன்னனா?" எனக் கேட்டான்.

"உங்கட பார்வை அப்பிடி இருந்திச்சுது. விக்கி நீங்கள் சொல்லுங்க இது தப்பா? இல்லாட்டி இருட்டுத் தேடியலையிற நாங்கள் செய்யிறது தப்பா?"

"முத்தம் என்பது காதலில் கட்டுண்ட இரு மனிதர் களுக்கு இடையில் மலரும் அழகிய உணர்ச்சிப் பூ. இதழ்களின் தொடுகையால் பகிர்ந்து கொள்கிற ஒரு அழகான மனித உணர்வின் கவிதை. இதழ்களின் உராய்வில்,

உறிஞ்சலில் ஏற்றம் கொள்ளும் இதயத்தின் புரிதலுக்கான மொழி. புரிந்தவர் அதில் அழகைக் காணலாம், புரியாதவர் கலாசாரச் சீரழிவாய்க் குறை காணலாம்'' எனக் கவிதை குழைத்துப் பதில் சொன்னான்.

“இங்கேயே வாழ்ந்து, இந்த நாட்டின் கலாசாரத்தில் கலந்த பின்பு, எங்கள் எண்ணங்களிலும் பரிணாம மூப்பு ஏற்பட்டுவிட்டது. இல்லையா? அதனால் முத்தம் அழகாக எங்களுக்குத் தோன்றுகிறது. இருட்டுக்குள் முடங்கிக் கொள்ளும் மனிதர்களுக்கு வெளிச்சத்தில் முத்தம் அசிங்கமாகும். இல்லையா?'' எனப் பாலனும் நோகாது பதில் சொன்னான்.

“எல்லாரும் போட்டி இட்டு முத்தத்தை ஆதரிப்போம் போல இருக்கிறது. நாங்கள் இளம் வயதில் அநுபவிக்க வேண்டியதை கலாசாரம் என்கின்ற வேலி போட்டுத் தடுத்தார்கள். அங்கும் மாற்றங்கள் இப்போது சுனாமியாக வந்தாலும் முகத்தைச் சுளிக்கும் மனிதர்கள் இருக்கத்தான் செய்வார்கள். நாங்கள் மனித உணர்ச்சியின் அழகு வடிவங்களையெல்லாம் இருட்டுக்குள் திணித்துக் கொண்டவர்கள் என்பது ஒரு வகையில் சோகமான உண்மை அல்லவா?'' என்றாள் சிம்மி.

சுரங்கரதம் தொய்யனை அடைந்திருந்தது. தொய்யனில் சில தமிழர்களும் அதே பெட்டிக்குள் ஏறினார்கள். எல்லோரும் அமர்ந்த பின்பும் ஒரு ஆசனம் வெறுமையாகச் சுமை தாங்கக் காத்திருந்தது. தமிழ் பெண்ணொருத்தி நின்று கொண்டு இருந்தாள். அவள் நிற்பது சுகம் என்று நின்றாளா அல்லது தமிழருக்குப் பக்கத்தில் இருப்பது சங்கடம் என்று நினைத்தாளா? அடுத்த நிறுத்தம்வரை அது புரியவில்லை. அடுத்த நிறுத்தத்தில் ஒரு சுதேசி எழுந்து செல்ல அந்தத் தமிழ் பெண் சென்று அங்கு அமர்ந்து கொண்டாள். அவளுக்குப் பக்கத்தில் ஒரு வியட்னாம்காரன் அமர்ந்திருந்தான்.

சியாமளா மெதுவான குரலில் சொன்னாள்.

"அங்க பாருங்க விக்கி... நாங்கள் வாழ்வை நடிப்பாக்கி யிட்டம் என்கிறதுக்கான உதாரணத்தை? அது என்ன தமிழருக்குப் பக்கத்தில இருக்க கூடாதா? தமிழருக்குப் பக்கத்தில இருந்தா தங்கை தாரமாயிடுவாளா? இப்படிச் சின்னச் சின்ன விடயத்துக்கே நடிக்கிறது எங்கட வாழ்க்கையாகிட்டுது இல்லையா? இங்க வந்தபிறகும் அதைத் தொடருறம் எண்டது

வெட்கக்கேடு இல்லையா? யாழ்ப்பாணத்திலேயே அறிமுகம் இல்லாத ஆம்பிளையோட இருந்து பஸ்சில போய் இருக்கிறம். இங்க வந்தாப்பிறகு, அதேன் ஒரு புதுவிதமாகத் தமிழரே தமிழரப் புறக்கணிக்கிறது? எனக்கு உண்மையா இதன் தத்துவம் விளங்கேல்ல பாலன் அண்ணா" எனப் பாலனைப் பார்த்து முடித்தாள்.

"உங்களுக்கே விளங்கேல்லை எண்டா எனக்கு விளங்குமா?" பாலனின் தப்பிக்கும் முயற்சி.

"சும்மா மட்டம் தட்டாதேங்க பாலன் அண்ணா. உங்களுக்கு எல்லாம் விளங்கினாலும் விளங்காததாய் அவை யின்ர நடிப்பையும் மிஞ்சப் பாக்கிறீங்க."

"அப்பிடி இல்ல சியாமளா, ஊரில உங்களுக்கு அறிமுகம் இல்லாத மனிசா இருந்தா, யாரோ ஒருத்தர் எண்டிட்டுப் போறம். இங்க அறிமுகம் இல்லாட்டியும் தமிழர் எண்ட ஏதோ நெருங்கின மாதிரி ஒரு பீலிங் வருகுது. கண்டா எல்லாரோடையும் கதைக்க வேணும் எண்டமாதிரி ஒரு எழுதப்படாத நடைமுறை. தொடர்புகளை அதிகம் விரும்பாதவை ஒதுங்கிக் கொள்கினம் எண்டு நினைக்கிறன். நீங்கள் என்ன சொல்லுறியள் விக்கி அண்ணா?"

"மனித மனம் மர்மமானது. அது மிகவும் சிக்கலானது. ஊரில எல்லாரும் தமிழரா இருக்கிறதால யாரோ ஒருத்தருக்குப் பக்கத்தில போய் இருக்க வேண்டியது கட்டாயமாகுது. இங்க அப்பிடிக் கட்டாயம் இல்லைத்தானே? பல நிறத்தில பல மனிதர்கள்... பக்கத்தில் இருப்பதற்கும் நிறையத் தெரிவுகள்."

அடுத்த நிறுத்தத்தில் பயணச்சீட்டுப் பரிசோதிப்பவர்கள் ஏறிக் கொண்டார்கள். இது அடிக்கடி நடைபெறும் சுற்றி வளைப்பு. பாலன் தனது அட்டையை எடுத்து நீட்டினான். கடதாசிப் பயணச் சீட்டில் இருந்து தற்பொழுது பிளாஸ்ரிக் அட்டைக்குப் பயணச் சீட்டுத் தாவி இருந்தது. அதைக் கடையில் கொடுத்து காசுகட்டிய பின்பு பேருந்துகளில், அல்லது சுரங்கரத நிலையங்களில் உள்ள அதற்கான கருவிகளில் செல்லுபடியாக்கிக் கொள்ள வேண்டும். பாலன் பணம் நிரப்பிய அடுத்தநாள் பேரூந்தில் ஏறிய பொழுது அந்தக் கருவியில் இழுத்துச் செல்லுபடியாக்கிக் கொண்டான். பேருந்தில் அல்லது சுரங்கரதத்தில் ஏறும்பொழுது பயண அட்டையை மீண்டும் அந்தக் கருவியில் இழுத்துக் கொள்ளலாம். பாலன் அலுப்பில் அப்படிச் செய்வதில்லை. மாதத்திற்கு ஒருமுறை பணம் நிரப்பி, ஒருமுறை செல்லுபடி செய்துவிட்டால் போதும் என்பதாகக் கடையில் கூறியதை ஏற்றுக் கொண்ட பாலன், சோம்பேறியாக இருந்துவிட்டான்.

பாலனின் அட்டையை வேண்டிய பரிசோதகர் ஒருமுறை தனது கருவியில் இழுத்துப் பார்த்தார். பின்பு தன்னை நம்பாதவராய் மறுமுறையும் அதை இழுத்துப் பார்த்தார். பின்பு பாலனைப் பார்த்து, "ஏன் செல்லுபடியாக்கவில்லை" எனக் கேட்டார்.

பாலனுக்கு என்ன இது எனப் புரியவில்லை. சிலர் கண்கள் தன்னைப் பார்ப்பதான அவமானம் பிடுங்கித்தின்றது. சியாமளாவின் சிரிப்பில் 'அட நீயுமா' என்பதான ஏளனம் இருப்பதான உணர்வு. தான் பிழை செய்யாத பொழுது பிழை பிடிக்கிறார்களே என்கின்ற வெப்பிசாரம். ஒருமுறை எதிர்த்துச் சண்டையிட வேண்டும் என்கின்ற ஓர்மம் பொங்கிற்று. பாலன் அந்த உணர்ச்சியை மெதுவாகப் புறம்தள்ளி அவர்களோடு சாந்தமாகக் கதைத்தான்.

பாலன் அட்டை செல்லுபடி செய்த திகதியையும் நேரத்தையும் கூறினான். அவர் சிரித்துவிட்டு, "அப்பொழுது உங்கள் பழைய நிலுவை காலவதியாகவில்லை. பத்து நிமிடங்கள் கழித்துத்தான் காலாவதியாகி இருக்கிறது. பழைய

நிலுவை காலாவதியாகாத பொழுது புதிதாகச் செலுத்திய பணத்திற்கான நாள்களைச் செல்லுபடியாக்க முடியாது. நீங்களும் உங்கள் அட்டையை இன்றுவரை செல்லுபடியாக்க வில்லை.'' என்றார்.

புரிந்து கொண்டு செய்த காரியம் இல்லை என்பதையும், இப்படியான நேரப்பிரச்சனை பற்றித் தனக்குத் தெரியாது என்பதையும் பாலன் கூறினான்.

"உங்கள் நிலை எனக்கு விளங்குகிறது. நான் தரும் மின்னஞ்சலுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்'' என ஒரு மின்னஞ்சல் முகவரியைக் கொடுத்த பரிசோதகர் அடையாள அட்டையைக் கேட்டார். பாலன் மேற்கொண்டு சத்தம் போட விரும்பாதவனாய் அடையாள அட்டையை எடுத்துக் கொடுத்தான். பரிசோதகர் விபரங்களைப் பதிந்து விட்டு, வங்கி அட்டை மூலம் பணம் கட்டினால் எழுநூறு குரோணர்கள் என்றும், அல்லது தொள்ளாயிரம் குரோணர்கள் என்றும் கூறினார். பாலன் வங்கி அட்டையை எடுத்துக் கொடுத்தான். இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டதைக் கூற அவர்களும் அவனோடு இறங்கினார்கள். பாலன் அலுவலை முடித்துக் கொண்டு நிமிர்ந்த பொழுது விக்கியும் சிம்மியும் முதியோர் இல்லம் இருக்கும் ஒழுங்கைக்குள் மறைந்து விட்டனர்.

7

பாலனுக்கு அன்று பின்னேர வேலை. அவன் வேலை முடிந்து கெல்ஸ்பியூருக்கு வந்து சேர்ந்த பொழுது இரவு பதினொருமணி இருக்கும். சுரங்கரத நிலையத்திற்குள் ஆள் அரவம் அற்ற அமைதி அடர்ந்து பயமுறுத்தும் தோற்றம். வெப்பத்தையும் அணைப்பையும் தேடும் மனிதவினம் கூடுகளுக்குள் புகுந்து கொண்ட நிசப்தம். குளிர். மெல்ல

தனது பிடியை இறுக்கும் காலம். பகலில் திரவமாய் இருப்பது இரவில் திண்மமாகி வழுக்கிவிடும் ஆபத்து. குண்டூசியாய் ஏறும் குளிர் தோலைப் பதம் பார்க்கும் அவஸ்தை. வாயைத்திறந்து ஊதினால் புகை புகையாய் போகின்ற குளிரின் மாயாஜாலம். வெளியே பெரும் தெருக்களில் இன்னமும் ஓய்ந்து விடாத வாகனங்களின் உறுமல். அது இங்கிதமற்று தூக்க நேரங்களின் அமைதியைக் கெடுக்கும்.

பாலன் வெளியே வந்தான். கெல்ஸ்பியூரில் இரண்டு பெரும் தெருக்கள் மேலும் கீழுமாக வெட்டிச் செல்கின்றன. அதைவிட சிறிய தெருக்கள் சிலவும் பாம்புகளாய்ச் சுற்றி நெளியும். அதன் உயிரோட்டமாய் எப்பொழுதும் ஒலியெழுப்பும் வாகனங்களின் ஓட்டம். பகலில் வாசலில் பிச்சை எடுக்கும் கிழக்கு ஐரோப்பிய நாட்டுப் பெண்ணை இப்பொழுது காணவில்லை. ஒவ்வொரு நாளும் காலை தொடங்கி மாலை வரையும் அந்தப் பெண் பிச்சை எடுப்பாள். இந்தச் சுரங்கரத நிலையத்திற்கு இரண்டு வாசல்கள் உண்டு. இரு வாசலிலும் நார்வேஸன் கடை உண்டு. ஒரு பக்கம் நார்வேஸன் கடையுடன் மரக்கறிக்கடை ஒன்று இருக்கிறது. மறுபக்கம் நார்வேஸன் கடைக்கு முன்பு கிவி கடை பசுமை காட்டும். இந்தப் பெண் கிவிகடை பக்கமாக இருக்கும் நார்வேசன் கடையருகே, சுரங்கரத வாயிலுக்கு முன்பாக இருந்து பிச்சை எடுப்பாள்.

நார்வேஸன் கடை இப்பொழுது பூட்டி இருந்தது. அதன் அருகில் வாடகைக் கார்கள் காத்திருந்தன. Fyrstikk Torget உறக்கத்திற்குப் போயிற்று. பகலில் அது எறும்பின் பாதை யாக மிகவும் சுறுசுறுப்பாக இயங்கும். இங்கு நோர்வே மொழி, கலாசாரம் போன்றவற்றை வெளிநாட்டவர் படிக்கும் பாடசாலை உண்டு. நார்வேஸன் கடைக்குப் பின்னால் இருக்கும் பெருந் தெருவால் இன்னமும் வாகனங்கள் இரைந்து கொண்டு சென்றன.

விமான நிலையத்தால் வந்த பேருந்து, தரிப்பிடத்தில் உறுமிவிட்டு நின்றது. அது பளிச்சிடும் வெண்மையில்

மினுங்கியது. அதில் நாம்பனுக்கு குறிசுட்டது போல நீளக்கோடு இழுக்கப்பட்டு இருந்தன. பெரிதாக SAS என்கின்ற நிறுவன முத்திரை அதன்மேல் குத்தப்பட்டு இருந்தது.

பேருந்தால் பிதுங்கி வழிந்து சிலர் வெளியே தெரிந்தார்கள். இரண்டு விமானப்பணிப் பெண்கள் முந்திச் சென்று வாடகைக்காரை பிடித்துக் கொண்டனர். இன்னும் இரண்டு ஆள்கள் வாடகைக் காருக்குக் காத்து நின்றனர். அந்தப் பேருந்தில் இருந்து பாலனுக்கு பழக்கமான ஒரு சுதேசி இறங்கினார். அவருக்கு "எஸ்பன்" என்று பெயர். அவரோடு ஒரு தாய்லாந்து நாட்டுப் பெண்ணும் இறங்கினாள்.

மேகலன் இருக்கும் அடுக்குமாடிக் கட்டடத்தின் இரண்டாவது மாடியில் அந்தச் சுதேசி குடியிருக்கிறார். அவருக்கு அறுபது வயது இருக்கும். பாலனைக் கண்டால் வணக்கம் சொல்லிக் கதைத்துவிட்டுச் செல்வது அவர் வழக்கம். அவரைத் தனிமை வாட்டுகிறது எனப் பாலன் எண்ணிக் கொள்வான். அவருக்குப் பானை வயிறு. அஸ்மா பிரச்சனையும் உண்டு. இடைக்கிடையே அதற்கான மருந்து பாவிப்பார். அஸ்மா பிரச்சனை என்றாலும் புகையும் கையுமாக அலைவதை மட்டும் அவர் இன்னும் விடவில்லை. அடிக்கடி கிவியில் இருந்து பியர் போத்தல்களை இழுவை மாட்டின் அவஸ்தையோடு இழுத்துக் கொண்டு செல்வார். அப்படி இழுத்துச் செல்லும்பொழுது அஸ்மாவால் அவருக்கு மூச்சுத் திணறும். பார்க்கப் பரிதாபமாய் இருக்கும்.

அவர் மூன்று பெண்களோடு திருமணம் செய்யாமல் வாழ்ந்து இருக்கிறார். திருமணம் செய்து கொள்வது வீண் சிக்கல் என்பதாக முதலில் எண்ணி இருந்ததாகவும், அந்த எண்ணத்தில் தனக்குத் தற்பொழுது மாற்றம் ஏற்பட்டு இருப்பாதாகவும் கூறியிருக்கிறார். முதலில் தனிவீடு வைத் திருந்தார். அதை நல்ல விலைக்கு விற்று விட்டு இப்பொழுது ஒரு பிளாற் மேகலன் குடியிருக்கும் மாடிக் கட்டடத்தில் வாங்கி உள்ளார். வீடு விற்ற பணத்தில் பெரும்பகுதி வங்கியில் இருக்க வேண்டும்.

அந்தப் பெண்ணிற்கு இருபத்தி ஐந்து வயது இருக்கும். நல்ல அவித்த முட்டையில் கறுத்த பொட்டு வைத்த கணக்கான கண்கள். முடியைக் கழுத்தோடு வெட்டிச் சிலுப்பி விட்டிருந்தாள். பாலனுக்கு தன்னைப்போலவே அவள் தோல்நிறம் மங்கியிருப்பதாகத் தோன்றியது. செயற்கைச் சாயத்தின் ஒத்தடத்தில் இதழைச் சிவப்பாக்கி இருந்தாள். சற்று அலை பாய்வதைப் போன்றது, அவள் பார்வை. உடனடியாக அந்த இடத்தை விட்டுப் போகவேண்டும் என்கின்ற அவதி அதில்.

அந்தப் பெண் துருவ வழுக்கல் புரியாது நடக்க முயன்று திடீரெனப் பரிதாபமாக நிலத்தில் விழுந்தாள். மூன்று பயணப் பெட்டிகளோடு எஸ்பன் இழுபட்டார்.

பாலன் அவர்களை நோக்கிச் சென்றான். எஸ்பனுக்கு பாலனைக் கண்டதும் மகிழ்ச்சி மட்டுக்கொள்ளவில்லை.

“ஹாய் கமறாத் ஹாய் கமறாத்” (வணக்கம் தோழா, வணக்கம் தோழா) என்றான். பாலனும் ஹாய் சொன்னான். அப்சரா என்று அவளைக் காட்டினான். அவள் பாலனுக்கு கை தந்தாள். அப்சரா என்றாள். இளம் தளிரின் மென்மையைப் பாலனால் உணர முடிந்தது. ஆங்கிலத்தில்’ ‘Where are you from?’ என்றாள். பதில் சொன்னான். பாலனுக்கு அவளைப் பார்க்கப் பரிதபமாய் இருந்தது.

“கமராத் டூ மோ ஜெல்பமை” (தோழா நீ எனக்கு உதவவேண்டும்) என்றார் எஸ்பன்.

“வுர்டன்?” (எப்பிடி?)

“எஜ் சொன்னர் இக்க...” (எனக்கும் விளங்கேல்ல).

பாலன் ஒருகணம் எப்படி உதவி செய்யலாம் என்று யோசித்தான். மறுகணம் பொருள்களையும் ஆள்களையும் ஏற்றும் பெரிய வாடகைக் கார் ஒன்றைக் பாலத்தின் மறுபுறத்தில் கண்டு கொண்டான். பாலன் பாலத்தின் கீழாக ஓடிச் சென்றான். அந்த வாடகைக் கார்ச் சாரதி பாகிஸ்தான் நாட்டைச் சார்ந்தவர். பாலன் கேட்டதிற்கு அமைய, வருவதற்கு ஒப்புக் கொண்டார்.

8

மனதும் உடலும் ஓர் இடத்தில் நிலையாமையே பலரது வாழ்வாகப் போயிற்று. பாலனின் மனதும் தனது இருப்பைவிட்டு எங்கோ தாவித் திரிவதை அவனால் உணர முடிந்தது. அதற்குத் தடைபோடமுடியாது அல்லலுறும் நிலை தொடர்ந்தது. பாலன் அன்று வேலை முடிந்து பின்பு வீட்டிற்கு பேருந்தில் பயணித்தான். அவன் பிரயாணம் செய்யும் பொழுது சுமி போன் பண்ணினாள். அவளது சித்தப்பாவும் சித்தியும் வீட்டிற்கு வந்து இருப்பதாகவும் சில பொருள்கள் "கிவி" கடையில் வேண்டி வரவேண்டும் என்றும் கூறினாள்.

பேருந்தில் அவனுக்குப் பக்கத்தில் ஒரு பாகிஸ்தானியப் பெண் இருந்தாள். பாகிஸ்தானியரும் எங்களைப் போன்று ஆசியாவில் இருந்து வருகிறார்கள். இருந்தும் எங்களுக்கும் அவர்களுக்கும் இடையில் நிரந்தரத் தூரம் இருப்பது மட்டும் உண்மை. மதம், மொழி, இனம், நிறம், கலாசாரம், நாடு,சாதி போன்றவை உறவுக்கான வாசல்களை அடைக்கின்றனவா? உலகத்தின் யதார்த்தம் அதுதான் என்பது பாலனின் எண்ணம். பாகிஸ்தானியர் தனியுலகம். அந்தத் தனியுலகத் திற்குள் பிரவேசிக்கும் அனுமதிச்சீட்டு எங்களுக்கு கிடையாது. எங்கள் உலகத்திற்குள்ளும் அவர்கள் மறந்தும் பிரவேசிப்பது இல்லை. தங்களது சொந்த மொழியில் கதைத்துப், பேசி, தொலைக்காட்சி பார்த்து, தங்களுக்கான உலகை அவர்கள் உருவாக்கிக் கொள்ளுகிறார்கள். பின்பு அந்த இரும்புக் கோட்டைக்குள் வாழ்கிறார்கள். அதற்குள் காலாவதியான சமுதாயக் கட்டுக்கோப்புகளைப் பேணுவதற்காகப் போராடு கிறார்கள். அந்த இரும்புக் கோட்டையைவிட்டு வெளியே வரப் பல இளைஞர்கள் போராடுகிறார்கள். இது பாகிஸ்தானியருக்கு மட்டுமல்லாது பல இன மக்களுக்குப் பொருந்துகிறது. தமிழராகிய நாங்களும் இதற்கு விதிவிலக்கு இல்லை என்பதைப் பாலன் அறிவான். பல இனங்கள் சமூகமாக

வாழ்ந்தாலும் மற்றைய இனங்கள்மீது கண்ணுக்குத் தெரியாத ஐயுறவு ஒன்று ஒளிந்து கிடப்பதாகப் பாலன் உணர்ந்தான்.

மொழியை விழுங்கும் மௌனமும், தயக்கமும் பாலனின் நிழலாகியதான உணர்வு. கதைத்தால் நையாண்டி செய்யும் சமுதாயத்தின் பாதிப்பு சொற்களை இழந்த ஊமையாக நடமாட வைக்கும். நாங்கள் தேடிச் சென்று கதைக்காதவரை வலிய வந்து கதைப்பவர் அரிதே. அது எந்த இனமாக இருந்தாலும் பொருந்துகிறது. வாயைத் திறப்பது என்றால் பாலனுக்கு சிலவேளை உயிரே போகின்ற சங்கடம். கதைப்பதில் தப்பு வரக்கூடாது என்பதற்காகக் கதைப்பதை நிறுத்தியதும் உண்டு. மௌனம் அவமானங்கள் வேண்டாம் எனபதற்கான மௌனம். அந்த மௌனத்தில் தொலைந்து போகும் பரிதாபம். பாலன் பேருந்தில் இருந்தபடி ஒருகணம் கண்ணை மூடித் தியானித்தான்.

தியானம் நிலைக்கவில்லை. சுமியின் சித்தப்பாவும் சித்தியும் எதற்காக இந்தத் திடீர் வருகை தந்தார்கள்? அந்தக் கேள்வி அவன் மனதில் குரங்காகத் தாவியது. சுமியின் சித்தப்பா ஸ்ரொவுணரில் குடியிருக்கிறார். ஸ்ரொவுணர் ஒஸ்லோவின் கிழக்குப் பக்கம். கிழக்குப் பக்கமென்பது பொருளாதார சமூகரீதியில் தாழ்த்தப்பட்டவர்கள் வாழும் இடம். அந்தப் பகுதியில் வந்தேறுகுடிகள் அதிகமாக வசிக்கிறார்கள். மேற்குக்கரை பணக்காரச் சுதேசிகளின் குடியிருப்பு. அங்கொன்று இங்கொன்றாய் சில வெளிநாட்டவரே அங்கே குடியிருக்கிறார்கள்.

பல சுதேசிகள் தற்போது கிழக்கு கரையை விட்டு வெளியேறுகிறார்கள். அங்கு வானளாவும் அடுக்குமாடிக் கட்டடங்களில் மக்களின் குடியிருப்புகள். கிழக்கு கரையில் வீடுகள் மலிவு. ஏழைகளாக வரும் வெளிநாட்டினர் வீட்டிற்குச் சொந்தக்காரர் ஆவது இங்கு சுலபம். வெளிநாட்டவரிலும் முஸ்லீம் மதத்தினர் இங்கு அதிகம் குடியிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளின் மேல்த் துவேசம் காட்டு கிறார்கள் எனச் சில சுதேசிகள் கூறிக் கொள்கிறார்கள்.

அங்கேதான் சுமியின் சித்தப்பாவும் குடியிருக்கிறார். அது மூன்று பெரிய படுக்கை அறைகளைக் கொண்ட குடியிருப்பு. மிகவும் நவீனமாகத் திருத்தி வைத்திருந்தார். அவர் சிறிய தொகைக்கு அந்த வீட்டைத் தொண்ணூறுகளில் வாங்கினார். இப்பொழுது அது குதிரை விலைக்குப் போகும். சித்தப்பா வீட்டுக்கடனைக் கட்டிமுடித்து வெகுகாலமாகிறது. இப்பொழுது மிஞ்சும் பணத்தை எடுத்துக் கொண்டு அவர்கள் அடிக்கடி சுற்றுலாப் போவார்கள்.

சுமியின் சித்தப்பாவுக்கு ஒரு மகன் இருக்கிறான். அவனுக்கு பதினெட்டு வயதாகிவிட்டது. வீமன் என்று பெயர். பாரதவீமன் மல்யுத்த வீரன். இந்த வீமன் காதல் வீரன். போகமுடியாத கோட்டைக்குள்ளே புகுந்தும் காதல் செய்து இருக்கிறான்.

அந்தப் பெண் இவர்களின் வீட்டில் இருந்து ஒரு கிலோமீற்றர் துராத்தில் குடியிருந்தாள். எங்கு எப்படிப் பற்றியது என்று தெரியாது. அவள் களவாக இவர்கள் வீட்டிற்கு வந்து போவாள். அப்படி வரும்பொழுது ஒருநாள் பாலன் அவளைக் கண்டு இருக்கிறான்.

கரும்பாம்பாக நீண்ட குழலில் சிவப்பு இளையோடிய மினுமினுப்பு. காதில் கவ்விக் கவர்ச்சியாய் ஒளிவீசும் வெள்ளை முத்துத்தோடு. இதழ்களில் ஒளிந்து விளையாடும் புன்சிரிப்பின் நளினம். வெண்பவளத்தில் குந்தியிருக்கும் கரும்பொட்டாக கண்கள். அது மின்னலாக ஒளிபாச்சி இதயம் வரை தாக்கும் மூர்க்கம். ஓவியத்தின் அழகில் அமைந்த மூக்கு. சிற்பமாகச் செதுக்கி எடுக்கப்பட்ட இதழ். அதில் ரோஜா நிறத்தில் மினுங்கும் உதட்டுச் சாயம். சிவப்பு நிறத்தில் சுடிதார். நெற்றியில் தனது மதத்திற்கு மாறாக ஒட்டுப் பொட்டு வைத்திருந்தாள். அது தமிழரோடு வாழ்வதற்குத் தன்னைத் தயார்ப்படுத்திக கொள்வதான சமிக்ஞை காட்டியது. தஞ்சை அழகுச் சிற்பங்கள் அவளைப் பார்த்து ஏங்கும் ஒரு நளினம். மிகவும் மென்மையான சுபாவம். கிளிப்பிள்ளையாக வரும் சொற்கள். வீமன்மீது வைத்த கண்வாங்க முடியாத காதலின் மோகம்.

பாகிஸ்தான் பெண் என்றவுடன் முதலில் சுமியின் சித்தப்பா சினந்தெழுந்தார். சினத்தால் ஒன்றும் மாறப் போவதில்லை என்பதை அவர் விரைவாக உணர்ந்து கொண்டார். ஒரே பிள்ளையுடன் இருக்கும் உறவையும் வெட்டிக் கொள்ளவும் முடியாது. எப்படிச் சமாளிப்பது என்பது நித்திய சஞ்சலம்.

இன்று என்ன நடந்தது? ஏன் இந்த நேரத்தில் வந்து இருக்கிறார்கள் பாலனுக்குப் புரியவில்லை.

பொருள்களின் பாரம் பாலனின் கையை இழுத்தது. புவியீர்ப்புமீது அவனுக்குப் புகைச்சல் வந்தது. எத்தனை ஈர்ப்புகள்? இதில் இதுவும் ஒரு ஈர்ப்பு. இந்த ஈர்ப்பு இல்லா விட்டால் பூமி எங்களை விட்டு வேறு திசையில் பயணித்துக் கொண்டு இருக்குமென எண்ணிக் கொண்டான். முதியோர் இல்லம் அரவம் அற்றிருந்தது. தெருவில் ஒரு சிலர் வேலை யிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தார்கள். பாலனைக் கடந்து முழு முக்காடு போட்டுக் கொண்டு ஒரு சோமாலியப் பெண் சென்றாள். அவள் வதனம் அவனைச் சொக்க வைத்தது. ஒருகணம் சுயநினைவிழந்து தனது சுமையை நழுவ விட்டான். பின்பு தன்னைச் ஒருவாறு சுதாகரித்துக் கொண்டான்.

அவள் வதனத்தில் இருந்த அழகை அவன் இதுவரை எந்தப் பெண்ணிலும் கண்டதாகத் தெரியவில்லை. கறுப்பு வைரம் ஒளிவீசுமா? அவள் வதனம் இதயத்தைத் திருடியது. கிளியோபற்றா உலகப் பேரழகி. அவளும் கறுப்பு என்பதாகப் பாலன் அறிந்திருந்தான். பேரழகு நிறங்களையும் மிஞ்சியதாக இருக்கும் என என்பதாக அவன் எண்ணிக் கொண்டான்.

பாரம் சுமக்கும் கழுதையாக பாலன் கிவிப் பைகளுடன் வீட்டிற்குள் சென்றான்.

சுமியின் சித்தப்பாவும் சித்தியும் இரண்டு இருக்கை கொண்ட சோபாவில் சோகத்தில் சூழ்ந்துபோய் இருந்தனர். சோகத்தால் வரையப்பட்ட அவர்கள் முகங்களில் ஆயிரம்

அவலமான சித்திரங்களின் மின்னல் மாற்றங்கள். சுமியின் அம்மா மௌனமாகத் தனிச் சோபாவில் இருந்தா.

ஹோலில் எங்கோ பயணம் புறப்பட்டு வந்தவர்கள் போல மூன்று சூட்கேஸ் பெட்டிகள் கவனிப்பார் அற்று அசையாது குந்தியிருந்தன. எங்கே புறப்பட்டு இருக்கிறார்கள் என்பது பாலனுக்குப் புரியவில்லை. அடிக்கடி ஊர்சுற்றுவார்கள் திடீர் திடீரெனப் புறப்படுவார்கள். அதற்கு ஏன் தங்கள் வீட்டிற்குப் பெட்டிகளுடன் வரவேண்டும் என்பது அவனைக் குழப்பியது.

சுமி அளவுக்கு மீறி மரியாதை தருவதாக நடித்தாள். ஆள்கள் இருக்கும்பொழுது அவள் அப்படித்தான் நடிப்பாள் என்பது பாலனுக்குத் தெரியும். பாலனும் சுமியின் சித்தப்பாவைச், சித்தப்பா என்று அழைப்பதே வழமை. பாலன் மெதுவாக அந்தக் மௌன அழுத்தத்தை விரட்டும் முயற்சியில் ஈடுபட்டான்.

"எங்க சித்தப்பா பெட்டி படுக்கையளோட வெளிக்கிட்டு இருக்கிறியள்?" எனக் கேட்க எண்ணியவன் நாகரிகம் கருதி மாற்றிக்கொண்டு "என்ன சித்தப்பா இடிவிழுந்தமாதிரி இருக்கிறியள்? என்ன நடந்தது? வீமன் எங்க? ஆருக்கும் ஏதும் பிரச்சனையே?" எனக் கேட்டான்.

"இடிதான் விழுந்து போச்சுது பாலன். அவங்கள் இப்ப எங்களையும் தேடித் திரியுறாங்கள். கண்டால் கொலையும் செய்வாங்கள் போல இருக்குது."

"யார் சித்தப்பா? பாகிஸ்தான் பார்டியோ?"

"ம்..."

"வீமன் எங்க?"

"அவனையும் அவளையும் அவங்கள் கொலை செய்யத் தேடித் திரிஞ்சு... நாங்கள் பட்டபாடு கடவுளுக்குத்தான் தெரியும். பிறகு பொலிஸில பழிகிடந்து அவை இரண்டு பேரையும் பாதுகாப்பா இருக்க லவங்கருக்கு பெயர் மாத்தி அனுப்பி இருக்கிறாங்கள். நாங்களும் எங்கையும் போவம் எண்டா இவ தன்ர அரண்மனைய விட்டிட்டு வெளிக்கிடமாட்டன்

எண்டிட்டா. பிறகு பாத்தா அவங்கள் அடிக்கடி காரோடை வந்து காவல் இருக்கிறாங்கள். எப்ப வீட்டுக்குள் புகுந்து கொலை செய்வாங்களோ எண்டு எனக்குப் பயமாக இருக்குது. அவளின்ர தேப்பன் வந்து அண்டைக்கு என்னப் பேசிப்போட்டு, கொலை செய்வன் எண்டிட்டுப் போயிருக்கிறான். ஒவ்வொண்டுக்கும் பொலிசுக்கு ஓடவும் விசரா இருக்குது. நாங்கள் எங்க போறது எண்டு தெரியாமல் முழிக்கிறம்.''

"அதுக்கென்ன சித்தப்பா... கொஞ்ச நாளைக்கு எங்களோட இங்க இருங்கோவன். மாமிக்கும் துணையாக இருக்கும். இதுவும் உங்கட வீடு மாதிரித்தானே? கொஞ்சம் தணியவிட்டிட்டு அங்க போய்ப் பார்க்கலாம். அது சரி, ஏன் திடீரெண்டு பிரச்சனையானது சித்தப்பா?''

"அவன் தேப்பனுக்கு விஷயம் தெரிய வந்திட்டுது. பெட்டைக்கு நல்ல அடி போட்டு இருக்கிறான். அதோடு பாகிஸ்தான் கொண்டு போக ரிக்கெற்றும் செய்தவனாம். சாமீகா தப்பி எங்கட வீட்டை ஓடிவந்திட்டாள். அதையும் அவங்கள் மோப்பம் பிடிச்சு ஆயதங்களோட வர, எங்கட பெடியள்தான் ஒருமாதிரிப் பொலிசில அவையக் கொண்டு போய் விட்டவங்கள். ஸ்ரொவுனருக்க இப்ப எங்கட கதையாத்தான் இருக்குது. வீமனும், சாமீகாவும் இல்லாததோட பிரச்சனைய விட்டிடுவாங்கள் எண்டு பார்த்தன். இல்லையெண்டு அவங்கள் எங்களையும் பலியெடுக்க நிக்கிறாங்கள். நாங்கள் ஏதோ வீட்டுக்க ஒளிச்சு வைச்சிருக்கிற மாதிரி வெருட்டுறாங்கள். கொலை பண்ணிப் போடுவாங்களோ எண்டு பயமா இருக்குது பாலன்.''

"ஒண்டும் நிதானமாச் சொல்ல ஏலாதுதான். யார் யார் எப்பிடி நடப்பாங்கள் எண்டு தெரியாது. கௌரவக் கொலை அவங்களுக்கு சாதாரணமானது. எதுக்கும் நீங்கள் கொஞ்சக்காலம் இங்க கவனமா இருங்கோ. கொஞ்சம் சூடாறின பிறகு போகலாம். இல்லாட்டில் வீட்ட விக்கிற ஏற்பாட்டைச் செய்வம். வேற எங்கயாவது பார்த்து ஒரு வீட்ட வாங்கிறதுதானே?

“அப்பிடியும் ஒரு யோசினைதான். என்ன செய்யிறது எண்டு சரியாத் தெரியேல்ல. வேற இடமா மாறிப் போனா வீமனும், சாமீகாவும் வந்திருக்க வசதியாக இருக்கும். எல்லாம் இப்ப ஒரே குழப்பமா இருக்குது.”

“ஆறுதலா இருந்து யோசியுங்க. அப்பதான் ஒரு நல்ல முடிவுக்கு வரமுடியும். சரி, சித்தப்பா எழும்புங்க... போய்க் குளியுங்க... சாப்பிடுவம்.”

“அது நாங்கள் ஆறுதலா குளிக்கலாம். நீ இப்ப நல்ல பசியில இருப்பாய். நாங்கள் முதல்ல சாப்பிடுவம்,” என்றார் சித்தப்பா.

9

குணேஸ் அன்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு தனது மாமா குடும்பம் ஸ்தவங்கரில் இருந்து வருவதாகவும், அவர்களை விமான நிலையத்திற்குச் சென்று அழைத்து வருமாறும் பாலனைக் கேட்டுக் கொண்டான். ஸ்தவங்கர் நோர்வேயின் கறுப்புத்தங்கத்தின் தலைநகரம். இங்கு அதிகமான எண்ணெய் நிறுவனங்கள் உண்டு. அவற்றுள் பல வெளிநாட்டு நிறுவனங்கள். ஆங்கிலத்தில் வேலைக்கான விளம்பரங்களை அவை அடிக்கடி பத்திரிகையில் வெளியிடும். ஸ்தவங்கரில் வாசிப்பவர்கள் பேசும்பொழுது அடித் தொண்டையில் இருந்து குரல் வரும். கரகரப்பாகச் சொற்கள் அறுபடும். ஸ்தவங்கருக்கும், ஒஸ்லோவிற்கும் சில சொற் களிலும் வேறுபாடு உண்டு. கதைக்கும் முறையிலும் வித்தி யாசம் அப்பட்டமாய்த் தெரியும்.

குணேஸ் லிண்டவர்க்கில் இருக்கிறான். அவனுக்கு இரண்டு பெண்கள் உண்டு. அவனுடைய மனைவி கணக்காளராய் ஒரு நிறுவனத்தில் வேலை பார்க்கிறாள்.

அவன் நோர்வேக்கு வந்த நாள்தொட்டே பாலனோடு நல்ல நட்பாய் இருந்து வருகிறான். இங்கு வந்தவுடன் தங்கியிருந்த அகதிமுகாமில் முளைவிட்ட நட்பு, பின்பு விழுதுபரப்பிய ஆல விருட்ச மாகிற்று. அவன் கேட்டால் பாலனால் எதையும் தட்ட முடிவதில்லை. பாலனுக்கு அன்று விடுப்பு நாளாயிற்று. விமான நிலையத்தில் இருந்து நகரத்திற்கு வருவதற்குப் பல வசதிகள் இருந்தாலும் காரில் சென்று அழைத்து வருவது தான் வருபவர்களுக்கும், வரவேற்கப் போகின்றவர்களுக்கும் ஒருவித கௌரவம் என்கின்ற தோரணை தமிழர்களிடம் உண்டு.

பாலன் காரை தரிப்பிடத்தில் நிறுத்தினான். சில சில்லறைகளை அருகிருந்த இயந்திரத்துக்குள் திணித்து அங்கீகாரச் சீட்டை எடுத்தான். பின்பு அதை நன்கு தெரியும்படி காரின் முன்கண்ணாடிக்கு கீழே இருக்கும் பகுதியில் வைத்தான். அனுமதிச்சீட்டு இருந்தாலும் நன்கு தெரியாவிட்டால் தண்டம் எழுதிவிடுவார்கள் என்பது அவன் அநுபவம்.

ஓஸ்லோ "கர்டமூவன்" விமான நிலையம் பொருளாதார வளத்தைப் பிரதிபலிப்பதாகப் பயணிகளால் நிறைந்து வழிந்தது. இந்த விமான நிலையத்தை மேலும் பெரிதாக்குவது பற்றி திட்டமிடுகிறார்கள். விமான நிலையத்திற்கு உள்ளே சென்ற பாலன் உள்ளூர் பயணிகள் வரும் பகுதிக்குச் சென்றான். விமானப் பயணிகள் பகுதி மேல்தளத்தில் உள்ளது. பயணிகள் விமானத்தால் வந்து இறங்கும் பகுதி கீழ்தளத்தில் உள்ளது. பாலன் கீழ்தளத்திற்குச் சென்றான். உள்ளூர்ப் பயணிகள் எந்தச் சுங்கச் சோதனையும் இன்றி விரைவாக வெளியே வந்துவிட முடியும். பாலன் காத்திருக்கும் பொழுது சில சுங்க அதிகாரிகள் மோப்ப நாய்களுடன் சென்றார்கள். ஏதாவது தகவல் கிடைத்திருக்கலாம் எனப் பாலன் எண்ணிக் கொண்டான். பலவிதமான நிறங்களும், வடிவங்களும் கொண்ட ஆடையணிந்த விமானப் பணிப் பெண்கள் வண்ணம் பூண்ட அன்னங்களாக அங்கும், இங்கும் அலைந்தார்கள். இவர்கள் வேலை முடிந்து வீட்டிற்கோ, அல்லது விடுதிக்கோ செல்பவர்களாக இருக்க வேண்டும் எனப் பாலன் எண்ணினான்.

வெளிநாட்டில் இருந்து நிறையப் பயணிகள் வந்திருப் பார்கள் போலத் தோன்றியது. வெளிநாட்டுப் பயணிகள் பக்கமிருந்து அதிகமாகப் பயணிகள் வெளியேறினார்கள். நோர்வே மக்கள் வெப்பத்தை நாடிச் செல்லும் உல்லாசப் பிறவிகள். அங்கு வெய்யிலில் நன்கு படுத்துக் காய்ந்து, போறணையில் இருந்து எடுக்கப்படும் பாணின் நிறத்திற்கு மாறி வருவதில் மகிழ்ச்சி காண்பவர்கள். அந்த நிறத்தை அழகு நிறமாக இவர்கள் மதிக்கிறார்கள். பாலன் நாங்களும் கருகிய பாணின் நிறம் தானே என எண்ணிக் கொண்டான். எங்கள் நிறத்தில் அவர்கள் அழகு பார்ப்பதில்லை என்கின்ற உண்மை உடனே கசந்தது. அவன் அவர்கள் வருகிறார்களா என்று துருவிப் பார்த்தான்.

குணேஸ் கூறிய அடையாளங்களை வைத்து அவனது மாமா குடும்பத்தை கண்டு பிடிப்பது பாலனுக்கு கடினமாக இருக்கவில்லை. மாமா வழுக்கல் விழுந்தாலும் இளமை குறையாது பொன்னிறத்தில் தகதகத்தார். மண்டைத் தோலோடு மற்றுமிடங்களும் கரட் குறையாமல் மினுமினுத்தன. மாமி நோர்வேக் கொழுப்பை உள்வாங்கி தாக்கத்திலே எடுத்து, இங்கும் அங்கும் சதைகள் தொங்க வந்தார். அவர்களது மகனோ தனக்கும் தனது பெற்றோருக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்பதுபோலப் அங்கும் இங்கும் பாராக்குப் பார்த்துக் கொண்டுவந்தான். அவன் ஏதோ தனக்குள் கதைப்பது போலவும் பாலனுக்குத் தோன்றியது. அவனது வலக்கையில் மணிகட்டைச்சுற்றி காயத்திற்கு கட்டுப் போடப்பட்டிருந்தது. இரண்டு சாதாரண சூட்கேஸ் பெட்டிகளை இழுத்துக் கொண்டு அவர்கள் வந்தார்கள். பாலனை அவர்கள் இதற்கு முன்பு கண்டதில்லை.

பாலன் முன்னே சென்று அவர்களை மறித்து, “நீங்கள் தானே குணேஸின் மாமா?” என்றான்.

“நீங்கள் பாலன். இல்லையா?” என்றார் குணேசின் மாமா. தான் முதலில் கண்டு பிடிக்கவில்லையே என்பதான தோல்வி அவரிடத்தில் அசடாக வழிந்தது.

“ம்... நான் பாலன்தான்...” எனக் கூறியபடி பாலன்... கையைக் கொடுத்து தன்னை அறிமுகம் செய்தான்.

“என்ர பெயர் சிவகுருநாதன். சிவா எண்டுவினம். அவவுக்கு பவானி பெயர். அவன்ர பெயர் அரண்” என இறுதியாக தனது மகனைச் சுட்டிக்காட்டினார். பாலன் அவரது மகனை மீண்டும் பார்த்தான். அவனும் பாலனை ஒருமுறை பார்த்தான். அதில் ஏதோ ஒருவித நம்பிக்கை இன்மை ஒளித்துப் பிடித்து விளையாடுவது போலத் தோன்றியது. பின்பு தந்தையைப் பார்த்த அவன் பார்வையில் வெறுப்பும் கோபமும் வெளிப்படையாகத் தெறித்து விழுந்தன. தாய் அவன் அருகிற் செல்ல அவன் தூரமாக விலகிச் சென்றான். பாலனுக்கு அதற்குமேல் அவர்களின் ஊடலில் மூக்கை நுழைப்பது அவ்வளவு உசிதமாய்ப் படவில்லை.

“பெட்டியத் தாங்க நான் கொண்டுவாறன்” என்றான் பாலன்.

“இல்ல நாங்க கொண்டுவாறம். சும்மா இழுத்தாறது தானே” என்று அவர்கள் மறுத்துவிட, பாலன் முன்னே வழி காட்டுவது போல் நடந்தான். பின்பு ஏதோ ஞாபகம் வந்தவன் போல, “குணேஸுக்கு இண்டைக்கு வேலை. இல்லாட்டி அவன் வந்து இருப்பான் “ என்றான்.

“அவன் சொன்னவன் தம்பி” என்றார் அவர்.

“கேட்கலாமோ தெரியேல்ல, நீங்கள் என்ன விஷயமா ஒஸ்லோவுக்கு வந்து இருக்கிறியள்?” என்றான் பாலன்.

“தம்பி எங்களுக்குப் பேரவா. அதுவும் எங்கட பொம்பிளையளுக்கு அடங்காத பேரவா. அது வினையாப் போச்சுது. அதால இங்க அலைய வேண்டி இருக்குது.”

“சும்மா பேசாமல் வாறியளே” பவானி கோபமாக இரைந்தாள். அவர் அதைப் பொருட்படுத்தாது தொடர்ந்தார்.

“இப்பிடித்தான் தம்பி ஒண்டையும் பேசவிடாமல், மற்றவை சொல்லுறதக் கேட்காமல், தாங்கள் நினைச்சதை எப்பவும்

திணிக்க முயலுறது. சிலவேளை அது குறுட்டுவாக்கில வாய்ச்சும் போகுது. பலவேளை அதே வினையாப் போகுது. நோர்வேக்கு வந்த பிறகும் யாழ்ப்பாணத்துக் கிராமத்தில வாழ்ற தமிழராட்டம் இங்க வாழ ஏலாது. இங்க உள்ளதுக்கு ஏற்றமாதிரி விட்டுக் கொடுத்துச் சாமாளிச்சுப் போகோணும். எங்கட பிள்ளையளும் நோர்வேப் பிள்ளையள் படிக்கிற பள்ளிக்கூடத்திலதானே படிக்கிறாங்கள்? அவங்களுக்கு தாய் தகப்பன் என்ன சுதந்திரம் கொடுக்கிறாங்கள் எண்டது நல்லாத் தெரியும். அப்படி இருக்க, நாங்கள் அங்க போகாதை.... இங்க போகாதை எண்டுறது மட்டுமில்லாமல், எப்பவும் படிபடி எண்டு ஆக்கினை காட்டினா எப்பிடி இருக்கும்? தமிழருக்கு தங்கட பிள்ளையள் எல்லாரும் டொக்டராகோணும் எண்டு ஆசை. தாங்கள் செய்யமுடியாமல் போனதை எல்லாம் அவங்களைக் கொண்டு செய்விக்கிற அவசரம். திறமையிருந்தா தாராளமாக விடோணும். திணிக்கிறது ஒண்டுக்கும் உதவாது. பானைக்க இல்லாமல் அகப்பையில வருமோ சொல்லும்? ஒவ்வொருத்தரும் பிறக்கிற போதே ஒவ்வொருவித வல்லமை யோட பிறக்கினம். அதை வளர்த்து எடுக்கோணும். அதை விட்டிட்டு டொக்ரர், டொக்ரர் எண்டாப் பிள்ளையளுக்கு வெறுத்துப் போகும்தானே? எங்களப் போன்ற இங்க இருக்கிற வெளிநாட்டுக்காரர் ஒண்டில் கட்டுப்பாடு துப்பரவா இல்லாமல் பிள்ளையள அலைய விடுறம், இல்லாட்டில் சிறை வைக்கிறம். இரண்டும் பிழையான விஷயம் எல்லே?"

கதைத்த வண்ணம் கார் நிற்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

"ஓம். நீங்கள் சொல்லுறது உண்மைதான். தாங்க பெட்டிய, டிக்கிக்க வைக்கிறன்." என்று கூறியவண்ணம் பெட்டிகளை எடுத்து டிக்கியில் வைத்து மூடிவிட்டுப் பின்கதவைத் திறந்து பிடித்துக் கொண்டு, "அக்காவும் தம்பியும் ஏறியிருங்கோ" என்றான். அவர்கள் ஏறியிருந்து கொண்டார்கள். சிவகுருநாதன் முன்னிருக்கையில் இடம்பிடித்தார். பாலன் கதவுகளைச் சாத்தி விட்டுக் காரை ஸ்ராட் செய்தான். கார் தரிப்பிடத்தை விட்டு

வெளியே வந்து பிரதானசாலையில், ஒஸ்லோவை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியது.

"நான் எங்க விட்டன்" சிவகுருநாதன் தானாகவே பேசத் துவங்கினார்.

"ஓ நான் ஒரளவுக்கு எண்டாலும் உந்த ஆக்கினையத் தடுத்து இருக்க வேணும். இப்படி ஆக்கினை செய்யாட்டி விளையாடிக் கொண்டு திரிவான் எண்டு நானும் கண்டும் காணாமல் விட்டிட்டன். அது கொஞ்சம் கொஞ்சமா பிள்ளைக்கு அவதியக் கூட்டிக் கொண்டு வந்து இருக்குது. அதை நுட்பமாக முதலில் நாங்கள் கவனிக்கேல்ல. அவனைப் படிபடி எண்டு திணிக்கத் தொடங்க, அவன் தனக்கு வயித்துக்க குத்துதெண்டு சொல்லிக் கொண்டு இருப்பான். சிலவேளை இரவில கெட்ட கனவு கண்டு குளறிக் கொண்டு எழும்பிடுவான். சிலவேளை இடையில படிக்கிறதை விட்டிட்டுப் போய்ப் படுத்திடுவான். அவனை வெளியால வெளிக்கிட விடுகிறது இல்ல. அப்பகூட எங்கட மரமண்டையளுக்கு இது சரியா விளங்கேல்ல. பவானி அப்பவும் விடமாட்டாள். அவனைப் படுக்கையிலும் போய் ஆக்கினை செய்வாள். சிலவேளை எழும்பி வந்து வேண்டா வெறுப்பாய் இருந்து படிப்பான். அப்பிடியே தலையிடிக்குது எண்டு மேசையிலேயே படுத்திடுவான்." அவர் ஒருமுறை மூச்சு இழுத்துக் கொண்டார்.

"இப்பிடி இருந்தா கடைசியில சொப்பிள் (குப்பை) பொறுக்கப் போறாய்" எண்டு பவானி குளறிக் கொண்டு இருப்பாள். தமிழ் பள்ளிகூடம் போறதை அவன் விரும்பேல்ல. பவானி ஆக்கினையைக் கட்டி கொண்டு போய் விடுகிறதுதான் மிச்சம். விருப்பம் இல்லாட்டி யாருக்கு எது ஏறும்? நாங்கள் தமிழ் கதைச்சால் தம்பிக்கு விளங்காது. பவானி கத்துறது எல்லாம் தமிழிலதான். என்ன விளங்குதோ இல்லையோ, கத்திறதப் பார்த்து அவனுக்கு ரென்சன் ஏறிடும்.

"தம்பிக்கு விளங்கிற எல்லாம் அம்மா தன்னைக் குறை சொல்லுறா எண்டது மட்டும்தான். போன கிழமை தமிழ் பள்ளிக்கூடம் போகேல்லை எண்டு சண்டை. அவன் கோபத்தில அறைக்க பூட்டிக் கொண்டு இருந்தான். கன

நேரமாய்க் கதவைத் திறக்கேல்ல. நான் யன்னலால எட்டிப் பார்த்தா கைய அறுத்துப் போட்டுக் கிடக்கிறான். பிறகு அன்புலன்ஸ்... பொலிசு... ஒரே அலங்கோலம்தான். எங்கட இடத்தில ஒரு டொக்ரரிட்ட காட்டினம். அவர் இங்க வேற ஒரு ஸ்பெசலிஸ்ட்ட அனுப்பி இருக்கிறார். அதுதான் இந்தப் பயணம்.''

''எனக்கும் இரண்டு மகள்மார். கயித்தில நடக்கிற மாதிரித்தான் இங்கத்த வாழ்கை. தமிழராவும் இருக்கோணும், நோர்வேயிலும் வாழோணும் எண்டுறது இருதலைக் கொள்ளி எறும்பு மாதிரி. எந்தப்பக்கமும் சாய முடியாத தவிப்பு. விட்டும் கொடுக்க வேணும்... விபரீதம் வராமல் காப்பாத்தவும் வேணும். நீங்க பயப்பிடாதேங்க. முதல்ல ஒழுங்கா வைத்தியத்தைப் பாருங்கோ. பிறகு அவற்ற விருப்பத்துக்கு விடுங்கோ. அவையின்ர வாழ்க்கை. அவை டிசைட் பண்ணட்டும். நாங்கள் வேணும் எண்டா சரி எது, தப்பு எது எண்டு அறிவுரை கூறலாம். மென்மையாப் புத்திமதி சொல்லலாம். அவ்வளவுதான்.''

10

''ஸ்குல்லறுாட்டில்'' புதிதாகக் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் இவளும் பிள்ளைகளும் குடியிருந்தார்கள். அந்தக் குடியிருப்பு சுரங்கரத நிலையத்திற்குப் பக்கத்தில் இருப்பதால் பயண நேரம் சுருங்கிப் போகின்ற சுகம். பாலன் சுரங்கரதத்தில் கண்ணை மூடியவண்ணம் சிலகணங்கள் அமைதி தேடிப் போராடினான். எரியும் தனது கோபத்தை அணைக்க முடியுமா என்று தியானித்துப் பார்த்தான். தாய்ப்பாலோடு வீரம் ஊட்டப்படுவதாய் இன்றும் புல்டா விடுகிறார்கள். தமிழர்கள் தாய்ப்பாலோடு வன்முறையை ஊட்டி வளர்த்ததாகப் பாலனுக்குத் தோன்றியது. அவளிடம் போய் ருத்திரதாண்டவம் ஒன்று ஆடினால்... பெண்களிடம் ருத்திரதாண்டவம் ஆடுவது ஆண்மைக்கு அழகில்லை

என்பதாக உடனேயே அதை எதிர்த்து மனச்சாட்சி நையாண்டி பண்ணியது. தத்துவங்கள் கோபத்தின் மூர்க்கத்தில் தவிடுபொடியாகிவிடும் என்பதாகப் பாலன் எண்ணினான். அவளிடம் போவதென்றால் அடுத்த நிறுத்தத்தில் சுரங்க ரதத்தை விட்டு இறங்க வேண்டும். இறங்குவதா? அல்லது விடுவதா?

இறங்குவதா! விடுவதா! என்பது தொடர்ந்தும் குழப்ப மாகியது. பாலன் கண்ணை மூடினான். வேண்டாம்! வேண்டாம்! என மனதிற்குள் சொல்லிக் கொண்டான். மூளையின் சமிஞ்ஞை, காலை அடையக்கூடாதெனக் கடவுளை வேண்டினான். சுரங்க ரதத்தின் கதவு பிரிந்து மூச்சுவிட்டது. மனிதர்கள் திறந்த கதவினூடாக வெளியேறினர்.

பாலன் அசையாது இருந்தான். அவனுக்கு முன்னே இருந்த பெண் கைத் தொலைபேசியில் பாட்டுக் கேட்டாள். கைத்தொலைபேசிகள் கணனியைப் பின்தள்ளப் போட்டி போடுகின்றன. அந்தப் பொறிக்குள் உலகத்தைத் தொலைத்து விட்டுத் தேடும் மனிதர்களைப் பார்க்க பாலனுக்கு சிலவேளை பரிதாபமாய் இருக்கும். வயது வித்தியாசம் இன்றி அதற்குள் உலகைத் தேடுகிறார்கள். பல்தேச நிறுவனங்களிள் வர்த்தக வலைக்குள் விழுந்துவிட்ட விட்டில் பூச்சிகளாய் அவர்கள் கைத்தொலைபேசியில் உலகைத் தேடுகிறார்கள். பாவம், உலகம் மனிதர்களைத் தேடுகிறது. மனிதம் தொலைத்த மனிதர்கள் இயந்திரங்களாகி... இயந்திரங்களிடம் சரணடைந்தவர்களாகி... மனிதப் படுகொலை களை வியாபாரமாக நோக்கி... இன்னும் ஆயிரம் அநீதிகளாக விரிந்து... அவன் கண்ணை மூடிக் கொண்டான்.

அந்தப் பெண் பாட்டிற்கு ஏற்ப தலையாட்டினாள். அவளுக்கு பதினாறு வயது இருக்கும். எந்தக் கவலை யிலும் அமுங்கிவிடாது இசையில் லயித்து, தன்னை மறந்து தலையாட்டினாள். பாகிஸ்தான்! இந்தியா! அல்லது தமிழ்! பாலனுக்குச் சரியாக அநுமானிக்க முடியவில்லை. அடையாளங் கள் கலங்கிப் போகும் புதிய வாரிசுகள் இவர்கள். அவள் கேட்கும் மென்மையான ஹிந்திப்பாட்டு காற்றில் தவழ்ந்து

காதை வருடியது. ஹிந்திப் பாட்டை யாரும் கேட்கலாம். இளைஞர்கள் இசையின் கனதியில் கிறக்கம் கொள்ளுவார் கள். அடையாளங்களைக் கரையச் செய்யும் வாரிசுக்கள். பாலனின் கோபத்தை இசை கரைப்பதான ஓர் உணர்வு. சுரங்கரதத்தின் கதவுகள் மீண்டும் மூச்சுவிட்டு, இறுக்கித் தாழிட்டன. சுரங்கரதம் நகர்ந்து வேகம் பிடித்தது. கோபம் மனதிற்குள் வயிரப்பனையில் பற்றிய தீயாகத் தணியவில்லை.

பாலனுக்கு அவள் நினைவு மீண்டும் திடீரென வந்தது. சுருண்டுகிடந்த நாகம் சுருக்கெனப் பாய்ந்து படமெடுப்பதாகக் கோபம் முன்னே பாய்ந்து வந்தது. பாலனுக்கு சுரங்கத்தில் இருந்து பாயவேண்டும் போல் இருந்தது. பாயமுடியவில்லை அந்தப் பெண் ஆனந்தமாகப் பாட்டுக் கேட்டாள். இசை கோபத்தை மாற்றும் மருந்தா?

பாலன் ஒரு தரம் அந்தப் பெண்ணைப் போலப் பாட்டுக் கேட்டான். கோபம் தணிந்ததோ தெரியவில்லை. காதுக்குள் புகையிரதம் ஓடத் தொடங்கியது. கோதாரி வேண்டாமென அதை கழட்டி எறிந்தான். மெல்லிய இசையைச் சற்று விலகி நின்று இரசிக்க வேண்டும். கோபம் தணிந்து குதூகலம் பிறக்கிறதா எனப் பார்க்க வேண்டும். பாலன் சிந்தனைச் சுழலில் சிக்குண்டு இழுபட்டான். அடுத்து வந்த தரிப்பில் அந்தப்பெண் இறங்கிச்சென்றாள். அவள் இருந்த இருக்கையில் அமைதி வந்து குந்திக்கொண்டது. பாலன் கண்ணை மீண்டும் மூடிப்பார்த்தான். கோபம் விழித்துக் கொண்டே இருந்தது.

சுரங்கரதம் பல தரிப்புகளைப் பின்தள்ளி “ஸ்குல்ல றூட்டில்” மூச்சுவிட்டது. பாலன் சுரங்கரதத்தில் இருந்து இறங்கினான். கால்களின் பலத்தை கோபம் களவு செய்த தான நடுக்கம். நோக்கண்ட இதயத்தில் மூர்க்கமான இரத்தப் பாய்ச்சல். குளிரிலும் சூடாகிய உடல். அவளிடம் போயிருக்க வேண்டுமென அடங்காமல் இன்னும் திமிறும் கோபம். பாலன் குளிரில் தோய்ந்து கூராக வந்த காற்றை ஊடறுத்து இவளின் வீட்டிற்குச் சென்றான்.

பாலனின் வரவை இவள் யன்னலால் பார்த்துவிட்டாள். பாலன் திறப்பை எடுக்க நினைக்கவும் கதவு தானாகத் திறந்து கொண்டது. கோபத்திலேகூட முறைக்கத் தெரியாத இவள். அந்த வதனத்தில் இன்னும் இழையோடும் மென்னகை தன் கோபத்தின் காலில் அடித்ததான உணர்வு பாலனுக்கு. பிள்ளைகள் பாடசாலையில் இருந்து இன்னும் வரவில்லை. வீடு மௌனத்தின் மொழி பேசியது.

இவள் தொடர்ந்தும் அந்தச் சிரிப்பு மாறாது, எந்தச் சலனமும் இல்லாது, "வாங்கப்பா. வந்து சோபாவில இருங்க, நான் ரீ வைக்கிறன்" என்று கூறிவிட்டுச் சமையல் அறைக்குள் சென்றாள். தென்றல் பிரிந்து பாலைவனம் சென்றதான ஏக்கம் பாலனிடம். பாலன் சோபாவில் புதைந்தான். பின்பு மனம் கொள்ளாதவனாய் எழுந்து சமையல் அறைக்குச் சென்றான். இவள் கொதிக்கும் கேத்தலைப் பார்த்துக்கொண்டு நின்றாள்.

பாலன் வருவதைப் பார்த்துவிட்டு, "ஏனப்பா இஞ்ச வந்திட்டியள்?" என்றாள்.

"நொந்து போச்சா?"

"ச்... அதை விடுங்கப்பா. உடல் நோகிறது ஒரு விசயம் இல்ல. மனது வலிக்கேக்கதான் தாங்க முடியுதில்ல. மானம் அவமானம் பாத்தால், உயிர் வாழ்றதே கஷ்டம் எண்டு புரியுது. எனக்கும் பொறுமை இல்லை எண்டு நினைக்கிறன். என்னாலும் அவவின்ர உணர்வைப் புரிஞ்சு கொள்ள முடியேல்ல எண்டது உண்மை. என்னால உங்களுக்கு வந்த குழப்பத்தை நினைக்க பைத்தியம் பிடிக்கும் போல இருக்குது." இவள் உணர்ச்சி வசப்பட்டிருந்தாள். கண்கள் கலங்கி இருந்தன. பாலன் இவளை காதலோடு அணைத்துக் கொண்டான். "நான் உன்மேல் மருவக் காதல் கொண்டேன்" என மெதுவாக இவளது முதுகைத் தடவிய வண்ணம் முணுமுணுத்தான். இவள் கண்களில் இருந்த கசிந்த கண்ணீர் சூடாக அவன் கன்னத்தில் பரவியது. பாலன் இவள் அணைப்பை விடாத வனாய், இவள் வதனத்தைத் திருப்பிக் கண்களைப் பார்த்து, "அநியாயத்துக்கு உன்ன வம்புக்கு இழுக்கிறாள். அவள என்ன செய்யிறது எண்டுதான் தெரியேல்ல." என்றான்.

"சும்மா இருங்க அப்பா. சனங்கள் ஏற்கனவே பொலீஸ் கேசாகிட்டுதுகள். கோபம் சத்திராதி அப்பா. பொறுமை இல்லாட்டி அது திரும்பத் திரும்ப மனிசரை அலைக்கழிக்கும். இப்ப கொட்டுறதை கொட்டித் தீர்க்கட்டும், நான் ஆறுதல-ாக் கதைக்கலாம் எண்டு இருந்தன். பொறுமை இல்லாத சனங்கள் கெடுத்துப் போட்டுதுகள். அவவின்ர மனதில நிறைய கஷ்ரம் இருக்கிறது எங்களுக்கும் தெரியும்தானே. அவவின்ர நிலையில இருந்தா யாருக்கும் கோபம் வரும்தானே? அவவின்ர மனநிலைய, கஷ்ரத்தை, நாங்கள் பாரபட்சம் இல்லாமல் ஏத்துக்கோணும். அவவின்ர குணத்தை, கருத்தை, நாங்கள் மதிச்சா அவவுக்கு நிச்சயம் கோபம் குறையும். அப்பிடி அவவுக்கு குறையாட்டியும் எங்களுக்காவது கோபம் வாராது இருக்கும்? என்றாள் இவள்.

"நீ என்ன சொல்ல வாற. மற்றவன் இளக்காரம் செய்யவும் கோபமே இல்லாத முண்டமா இருக்கோணும் எண்டுறியா? லெனின் கோவப்படாட்டி இரசியப் புரட்சி நடந்திருக்குமா? பாரதி கோவப்படாட்டி தமிழக்கு அவன் கவிதைகள் கிடைச் சிருக்குமா?" என்றான் பாலன்.

"தயவுசெய்து சோபாவில போய் இருங்க அப்பா. நான் ரீயோட வாறன்," என்றாள் இவள்.

பாலன் சென்று சோபாவில் இருந்தான். ரீவியில் நிகழ்ச்சி பார்க்க அவனுக்கு மனம் ஒப்பவில்லை. இவள் தேநீரைக் கொண்டு வந்து வைத்துவிட்டு அருகில் இருந்தாள். இவளின் வதனத்தைப் பார்க்கும் போதெல்லாம் ஒருவித சாந்தி பிறப்பதாகப் பாலன் உணர்வது உண்டு. அதிர்ந்து பேசுவது அர்த்தம் இழந்த செயல் என்பதை பாலன் இவளிடம் இருந்து கற்றுக் கொண்டான். கற்றவை அனைத்தும் நடைமுறையில் கை கூடுவதில்லை என்பது அவன் வருத்தம். இவளைத் தழுவி வந்த தென்றலில் வாசம் நெளிந்ததாக அவனது மூச்சு சாட்சியம் சொன்னது. இவள்மேல் கொண்ட காதல் பைத்தியத்தின் ஒருமுகம் என்பது பாலனுக்குப் புரிந்தது. பாலன் இவளைத் தன்னை நோக்கி இழுத்தான்.

இவள் இதழை ஆழச்சுவைத்து முத்தமிட்டான். பின்பு இவளது கண்ணைப் பார்த்தான். அதில் இருக்கும் சாந்தம் அவனுள் பாய்வதாக உணர்ந்தான். சாந்தமே உருவான பெண் இவள். யாருக்குத்தான் பிடிக்காது. சந்தர்ப்பமும் தன் அவசரமும் காலை வாரிவிட்டதை எண்ணித் துக்கித்தான். மனது விசித்திரமானது. அது எதை விரும்பும் என்பது, அதை விட விநோதமானது. பாலன் கோபத்தில் எரியும் போதெல்லாம் இவளின் சாந்தத்தைக் காதலித்தான்.

"நீங்கள் சொன்னது உண்மைதான் அப்பா. கோபத் திலையும் நல்வினையாக்கும் கோபமும் உண்டு. தீவினை யாகும் கோபமும் உண்டு. நல்ல கோபத்திற்கு லெனினும், பாரதியும் உதாரணம் எண்டா தீமையான கோபத்திற்கு ஹிட்லர், முசோலினி, போல்பொட்டு எண்டு முடிவிலாத பட்டியல் இருக்கப்பா. கோபத்தைக்கூடப் பிரயோசனமாகப் பயன்படுத்த எல்லாராலும் முடியிறேல்ல. அதைச் செய்யிறதுக்கும் ஒரு மேதாவித்தனம் வேணும்."

"என்னதான் தத்துவங்களை அறிஞ்சாலும், அறிவு மயங்கி, பொறுமை தொலைஞ்சு, கோபம் வேதாளமாய் அடிக்கடி மரத்தில ஏறுது. தடுக்கோணும், தடுக்கோணும் எண்டாலும், ஒரு நொடியில தடுக்கேலாமல் போயிடுது," என்றான் பாலன் தோல்வியோடு.

"கோபத்துக்கு காரணமே அவ அப்பிடித்தான் எண்டுறதை நீங்கள் முழுமையா ஏத்துக் கொள்ளேல்ல. அந்த உண்மைய ஒத்துக் கொள்ளுற பொறுமை எங்களிட்ட இல்லை. அவ நான் நினைக்கிறமாதிரி இருக்கோணும் எண்டு இப்பவும் எதிர்பார்க்கிறீங்கள். பொறுமை இல்லாதபோது நிதானம் பின்வாங்குது. நிதானம் பின்வாங்கக் கோபம் முன்னுக்கு வருகுது. நான் சொல்லுறது சரியா அப்பா?"

"உன்மொழிகள் பொன் மொழிகள் தங்கம்."

"பகிடிய விடுங்கப்பா." கூறிய இவள் பாலனின் கையை இறுகப்பற்றி தன்மார்போடு அணைத்துக் கொண்டாள்.

"நாங்கள் யாரையும் குறை சொல்லிக் கொண்டு இருந்தாப் பகையத்தான் வளர்க்க முடியும். மற்றைவையக் குற்றவாளியாக்க நினைச்சா அவை உடன எதிராளியா மாறித் தங்களைப் பாதுகாக்கத்தான் போராடுவினம். அதைவிட்டிட்டு அவை செய்யறதில இருக்கிற நியாயத்தை ஒத்துக் கொண்டம் எண்டா அங்க புரிந்துணர்வு பிறக்கும். நாங்கள் தங்களுக்கு எதிர் இல்லை எண்டு நினைச்சா நட்பு தானா வந்திடும் இல்லையா? அவவிட்டையும் நீங்கள் அப்பிடித்தான் நடக்கோணும். உங்களுக்கு கோவம் வரும்போதெல்லாம் பொறுமையா அவ உங்களுக்குச் செய்த நன்மையள யோசிச்சுப் பாருங்க. கோபம் தானா அடங்கும்.

"மனசு தனிய நன்மைய யோசிக்காதே? சாமிமாராய்த் திரியிற மனிசருக்கே அந்தப் பக்குவம் இருக்குமோ தெரியாது," என்றான் பாலன்.

"மனசை நாங்கள் பன்னாடையாக வைச்சிருக்காமல் பாத்துக்கொள்ள வேணும். கெட்டதை விட்டு நல்லதை மாத்திரம் ஏந்திற பக்குவத்தை ஏற்படுத்திக் கொள்ள வேணும். சாமியா மாறிறதுக்கு முதல் நாங்கள் மனிசரா இருக்கோணும்."

"ம்..." பாலன் இவள் கண்களைப் பார்த்தான். அவன் கண்களில் நீர் ததும்பி வழிந்தது. கோபம் அதில் கரைவதாக அவன் உணர்ந்தான். அவளை மீண்டும் இறுக்கி அணைத்துக் கொண்டான். "உன்கண்ணில் நீர்வடிந்தால் என்நெஞ்சில் உதிரம் கொட்டுதடி" அவன் மீண்டும் முணுமுணுத்தான். இந்தக் கணங்கள் இதமான பாசம் என்றது அவன் மனசு.

11

பசி இரைப்பையில் அமிலம் ஊற்றி விளையாடியது. இரைப்பையின் குமுறல் எரிவாக, நடுக்கம் கொம்பு முளைத்த பூதமாக எழுந்து, ருத்திரதாண்டவம் ஆடி, உடலை உலுக்கிற்று. சோறும் நீரும் தானமாகக் கொடுக்காதவரை அது ஓயாது

என்பது புரிந்தது. அரசனுக்கும் ஆண்டிக்கும் உள்ள ஒரே உணர்வு பசி. அது பாலனோடும் சேட்டை விட்டது. வீட்டிற்குச் சென்றவுடன் வயிற்றின் யுத்தத்திற்கு முடிவுகட்ட வேண்டும் என்பதாக அவன் எண்ணிக் கொண்டான்.

பாலன் வீட்டின் கதவைத் திறப்பதற்கு முதல் தபால் பெட்டியின் கதவைப் திறப்பது வழக்கம். இன்றும் அதை ஆவலோடு திறந்து பார்த்தான். பல விளம்பரக் குப்பைகளுக்குள் இலங்கைக் கடிதம் ஒன்று ஒளித்து விளையாடியது. அதைக் கண்டவுடன் இரத்தம் உச்சிக்குப் பாய்ந்தது. அவன் இன்பக் கிறக்கத்தில் தள்ளாடினான். விளம்பரக் குப்பைகளில் இருந்து மாணிக்கமான அந்தக் கடிதத்தைப் பிரித்து எடுத்துக் கொண்டான். பின்பு விளம்பரக் குப்பைகளை தனியாக எடுத்துக் கொண்டு உள்ளே சென்றான். ஹோலில் மாமி இருந்தா. மாமியிடம் விளம்பரக் குப்பைகளைக் கொடுத்தான். அவவுக்கு பொழுதுபோக்காய் இருக்கும் என்பது அவனுக்குத் தெரியும். பின்பு மாமியைப் பார்த்து "சுமி எங்க மாமி?" என்று கேட்டான். "அவள் வேலைக்குப் போட்டாள் தம்பி" என மாமி பதிலளித்தாள். பாலன் வயிற்றுப் பசியை மறந்து கடிதத்தின்மீது உள்ள அக்கறையினால் - காதலால் - தனது அலுவலக அறைக்குள் புகுந்து கொண்டான் அவள் கடிதங்கள் வரும்போது இரகசியம் பேசும் உணர்வு அவனையும் கேளாது வந்து விடுகிறது. உடலை ஏதோ ஒரு பரபரப்பு பிடித்து ஆட்டியது. ஏன் இந்த அவஸ்தை என்பது அவனுக்குப் புரியவில்லை. அலுவலக அறைக்குள் கடிதத்தைப் பிரிப்பதில் மும்முரமானான்.

காரைநகர்
14-09-2011

அன்புள்ள அத்தான்! சுமித்திராக்கா, சுருதி, சுபனி யாவரும் அறிவது நாங்கள் நலமாக உள்ளோம். அதுபோல்:

நீங்கள் யாவரும் நலமுடன் வாழ எல்லாம்வல்ல ஆண்டவனை வேண்டிக் கொள்கிறேன்.

அத்தான் செய்தித்தாளைப் பார்க்க இப்போது குலை நடுங்குகிறது. கிறிஸ்பூதங்களின் அட்டகாசம், சிறுவர் துஷ்பிர யோகம், விபசாரம், தர்க்கா உடைப்பென எங்களைக் கதிகலங்க வைக்கின்றன. எங்கள் ஊரில் இருந்த பிரச்சனை தற்போது நாடு முழுவதும் கிறிஸ்பூதங்களாய்ப் பரவிப் பயமூட்டுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். வடக்குக் கிழக்கில் மக்கள் பயத்தின் பிடியில் அல்லாடுகிறார்கள். யாழ்ப்பாணத்தில் ரியூஷன் வகுப்புகளுக்கு, கோவில்களுக்குப் போக மாணவிகள், பெண்கள் அஞ்சி நடுங்குகிறார்கள். வீட்டில் இருப்பதற்கே பயப்பட வேண்டி உள்ளது. பலர் காயங்களோடு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது உண்மை. பெண்களின் மார்பகங்களை நோக்கிய வன்மப் பாய்ச்சலும் ராணுவத்தினரின் செக்ஸ் சித்திரவதைகளும், யாழ்ப்பாணத்தில் நாவாந்துறையில் நடந்த சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவம் சுட்டபடி சென்றதாக ஊரில் கதைக்கிறார்கள். மீண்டும் எங்கள் கழுத்தைப் பாதுகாப்பின்மை மூச்செடுக்கவிடாது நெரிக்கிறது. எங்களால் நிம்மதியாகச் சுவாசிக்கக்கூட முடியவில்லை. இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்று கூறுகிறார்கள். சிறுபான்மை மக்களுக்கு எதிராகத் திட்டமிட்ட அராஜகம் தாண்டவமாடும் ஒரு நாட்டை எப்படி ஜனநாயக நாடு என்று கூறமுடியும்? அத்தான் சிபிச் சக்கரவர்த்தியைப் பற்றிக் கேள்விப்பட்டதுண்டு. புறாவுக்கு நீதி கொடுப்பதற்காய் தன்னைக் காயப்படுத்திக் கொண்டான். பிறரைக் காயப்படுத்துவதாலே எங்கள் மன்னர்கள் ஆட்சி செய்கிறார்கள். கதைகளில் மாத்திரம்தான் நீதி கிடைக்கும் என்பதுதான் இந்த உலகியலா என்பது எனக்குப் புரியிவில்லை. காந்தி தேசம் என்றால் என்ன? பௌத்த தேசம் என்றால் என்ன? சிறுபான்மையை நசுக்குவதில் ஈவிரக்கம் காட்டுகிறார்கள் இல்லை.

அநுராதபுரத்தில் முஸ்லிம் மக்களுடைய தர்க்கா ஒன்று மத, இனக் காழ்புணர்புடன் தரைமடட்டமாக்கப்பட்டதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அந்தத் தவறையும் அரசு வழமை

போல மூடிமறைப்பதில் மும்மரமாக ஈடுபட்டிருக்கிறது. இவர்களால் எப்படி எல்லாவற்றையும் மூடிமறைக்க முடிகிறது? அரசியல் என்னும் சாக்கடையில்... இனவாதச் சகதியில்... புரளும் இவர்களிடம் மனிதத்தை எதிர்பார்ப்பது மடமையே. மனிதம் இல்லாத இடத்தில் மனச்சாட்சிக்கு என்ன வேலை? இந்த நாட்டில் உள்ள பெரும்பான்மை மக்களில் ஒரு குறிப்பிட்ட தொகையினரையும், அரசியல்வாதிகளையும் ஒரு போதும் திருத்த முடியாது. அவர்களை தங்கள் வன் முறையைத் தொடர்கிறார்கள். அதற்கு வழமைபோலச் சிங்கள மயமாகிவிட்ட அரசயந்திரம் பாதுகாப்பு அளித்து வருகிறது. குற்றம் செய்பவர்களைச் சட்டத்தின் முன்பு நிறுத்தும் செயலை அவர்கள் ஒருபோதும் செய்வதில்லை. தமிழர்கள் குற்றம் செய்யாவிட்டாலும் அவர்களை சட்டத்தின் முன்பு நிறுத்த அவர்கள் தவறுவதில்லை. பயங்கரவாதப் பூச்சாண்டி காட்டித் தமிழரை அடிமையாக்குவது தொடர்கதையாகிவிட்டது. பௌத்தத் தின் பெயரில் வெறிபிடித்த பர்ணசாலைவாசிகளின் வக்கிர எண்ணங்கள் தலைவிரித்து ஆடுகின்றன. அவர்களால் தூண்டப்பட்ட மக்களின் முன்பு சிறுபான்மை மக்களின் அனைத்தும் பலியாகின்றன.

எண்பதுகளுக்குப் பின்பு தொடங்கிய ஆயுதப் போராட்டம் முற்றுப் பெற்றாலும் அரசபயங்கரவாதம் என்றுமே ஓயாது என்பதான தோற்றம் தொடர்கிறது. நடக்கும் அநியாயத்தை நியாயப்படுத்தும் அல்லது மூடிமறைக்கும் மூர்க்கமான சிங்கள இராணுவமும் அதன் அதிகாரிகளும்! யாழ்ப்பாணத்தில் மறுபடியும் ‘காணாமல் போகும்’ வியாதி தொடங்கி இருக்கிறது. யுத்தம் ஓய்ந்தாலும் திறந்த சிறை தமிழருக்கு நிரந்தரமாக்கப்பட்ட விதி மாறாது. என்றுமே முடிவில்லாத ஒடுக்கு முறை தொடரும் நாட்டில் எங்களுக்கு ஒரு வருங்காலம் உண்டா என்கின்ற கேள்வி எங்களை நசிக்கிறது. சிங்கள இராணுவம் எங்களுடையது அல்ல. சொந்த இராணுவங்கள் தங்கள் இனத்தைக் கொல்வதில்லை. சிங்கள இராணுவம் ஆடிய கோரத்தாண்டவம் எங்கள் இதயங்களிலே ஆறாச் சுவடாகப் பதிந்துவிட்டது. அதற்கு முள்ளிவாய்க்கால் அவசியம்

இல்லை. எப்போது சிங்கள இராணுவம் ஆயுதத்தோடு எங்கள் முன்பு வந்தார்களோ, அன்றே அந்நியர் எம்பூமியை ஆக்கிரமித்தனர் என்ற எண்ணம் நிலைத்தது. நாங்கள் அடிமைப் பட்டுக் கிடப்பதை உணரமுடிந்தது. நான் சிறுமியாக இருந்த பொழுதே தோன்றிய எண்ணமது. யாரும் அதை எனக்குச் சொல்லித் தரவில்லை. எங்கள் உணர்வுகளை அடக்கப்படும் இனங்களைத் தவிர வேறு யாராலும் புரிந்துகொள்ள முடியாது. தமிழர் படும் துன்பத்தைப் பெரும்பாண்மை சிங்களவரால் புரிய முடியவில்லை. அவர்களைத் தமிழராக்கி யாழ்ப்பாணத்தில் அலையவிட்டால்தான் அதன் அவலம் புரியும். அந்த மந்திரங்களைச் செய்யும் வல்லமை பரந்தாமனுக்குத் தான் உண்டு. கலியுகத்தைக் கண்டு ஒளிந்து விட்ட பரந்தாமனைத் தேடி நாங்கள் எங்கெல்லாம் அலைவது? திரௌபதிக்குத் துகில் கொடுத்தவனின் தீர்ப்பும் தமிழர்களுக்கு சார்பாக அமையவில்லை பார்த்தீர்களா?.

இலங்கை, பாலஸ்தீனம் தனி நாடாவதற்கு ஆதரவு அளிக்கிறதாம்? தனது சொந்த வீட்டில் சிறுபான்மையினருக்கு அடிமை விலங்கு பூட்டிவைத்திருக்கும் ஒருநாடு, அடக்கப்படும் இன்னொரு இனத்தின் சுகந்திரத்திற்கு குரல் கொடுப்பதான வேடம்... இதைத்தான் அரசியல் என்று சொல்கிறார்களோ தெரியவில்லை. எங்கும் இரட்டை முகங்கள். அதில் உண்மைகள் தொலைந்து மடிந்து போயின.

நாங்கள் முன்பைவிட இப்போது அதிகம் வீட்டில் தங்குவதில்லை. அது முற்றும் பாதுகாப்பற்றதாய் உணர் கிறோம். யுத்தம் முடிந்த பின்பு ஒரு விடிவு வரும் என்று எதிர்பார்த்த எங்களுக்கு மீண்டும், மீண்டும் ஏமாற்றங்களே கிடைக்கின்றன. இலங்கை வரலாற்றில் தமிழர்கள் ஏமாற்றப் படுவது ஒன்றும் புதுமையில்லைத்தான். அதைவிட இப்போது அநாகரிகமான செயல்கள் நாட்டில் நடக்கின்றன. ஒப்பந் தங்கள் போடாது ஒட்டுமொத்தமாய்த் தமிழர்களைக் குடி பெயர்க்க முயல்கிறார்களோ என்கின்ற அச்சம் பலரிடம் உண்டு. எங்கள் எண்ணத்தை யாரும் தவறு என்று கூறிவிட முடியாது. ஆண்டுவந்த சிங்கள அரசுகள் எல்லாம்

அளித்த பாடம் எங்களுக்கு அதுவாகவே அமைந்துவிட்டது. உரிமை கேட்கப் புறப்பட்ட தமிழர்களை அவர்கள் உருக்குலைப்பதில் வெற்றிகண்டதாகவே எனக்குத் தோன்றுகிறது. எலும்பும் சதையுமாக இருந்த எங்களினம் இப்போழுது எலும்புக்கூடாகச் சேடமிழுக்கிறது. அதன் இறப்பா அல்லது உயிர்ப்பா இனி வரப்போகிறது?

சேர்பியாவோடு கொசோவோவைச் சேர்ந்து இருங்கள் என்று கூறியது போன்ற நிலை தொடர்கிறது. கொசோவோ வில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப் பட்டார்கள். இலங்கையில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டார்கள். என்றாலும் ஐரோப்பியரின் தீர்ப்பு கொசோ வோவிற்கு ஒருவிதமாகவும், எங்களுக்கு இன்னொரு ஒருவித மாகவும் அமைந்துவிட்டது. இந்தியாவுடனான பொருளாதாரக் கூட்டல் கழித்தலில், தமிழரின் உயிர்கள் கழிக்கப்பட்டது மனிதத்தின் முகத்தில் மறையாத வடுவாக நிலைத்து நிற்கப் போகிறது. எங்கள் தரப்பில் நடக்கும் தவறுகளைத் தட்டிக் கேட்க முடியாது போனமையும் எங்கள் தோல்விக்கு ஒரு காரணமாய் அமைந்தது. அதை இன்னும் உணர்ந்து கொள்ளாத எம்மவரும் உண்டு.

இந்தப் பிரபஞ்சமே ஒருநாள் அழிந்து விடும் என்கிறது விஞ்ஞானம். அதில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றி மறையும் பூமியில் மானிடர் வாழ்கின்றனர். பிரபஞ்சத்தின் ஆயுளோடு ஒப்பிடும்போது பூமியின் ஆயுள் நீர்க்குமிழி யாகும். பூமியின் ஆயுளோடு ஒப்பிடும்போது மனிதனின் ஆயுள் நீர்குமிழியையை விட நிலையற்றது. இந்த உண்மைகள் உறைக்காது நித்தம் மானிடர் மரிக்கவும், நித்தியவரம் பெற்றதாகக் குரூரம் புரியும் அற்ப மனிதர்களை என்ன வென்பது? கௌதம புத்தரின் வாரிசுகளான இலங்கையை ஆளும் வர்க்கம் அந்த மகானின் சிறிய போதனையைக்கூட ஏற்காது, வேஷத்திற்காக பர்ணசாலை ஏறியிறங்குவதில் ஏதாவது அர்த்தம் உண்டா?

அத்தான் எனக்கொரு கவலை உண்டு. புலிகள் செய்த கொலைகளை சிங்களவர்கள் விசாரிக்க வேண்டும் என்று

சொல்லுகிறார்கள். சிங்கள இராணுவம் செய்த கொலைகளை தமிழர்கள் விசாரிக்க வேண்டும் என்கிறார்கள். சிலர் ஜேவிபி இளைஞர்கள் கொலை செய்யப்பட்டதையும் விசாரிக்க வேண்டும் என்கிறார்கள். இலங்கையின் சுதந்திரத்திற் குப் பின்பாகச் சிங்கள அரசால், இராணுவத்தால், காடையர் களால், இயக்கங்களால், என ஆயிரமாயிரம் மக்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு யார் நியாயம் கூறப் போகிறார்கள்? ஏன் மனிதத்திற்கு எதிராகச் செய்யப்பட்ட அனைத்து அநீதி பற்றியும் இலங்கையின் மைந்தர்கள் அக்கறையற்று இருக்கிறார்கள்?. ஏன் அதற்காகப் பொது நியாயம் வேண்டும் என்று, இனமத வேறுபாடு இன்றிப் போராடுகிறார்களில்லை? கொலைகள் செய்துவிட்டுத் தண்டனை பெறாது வாழக்கூடிய நாடாக இலங்கை இருப்பது என்றும் அவமானமானதே. அது இன்றும் தொடர்கிறது. இனியும் தொடரும் என்பதில் சந்தேகம் இல்லை. சட்டங்களைக் கையில் எடுத்துக் கொள்ளக்கூடாது என்பது சிறுபான்மை யினருக்கு மட்டுமே என்பதாக அமைந்துவிட்டது. உண்மை யைச் சொல்லப் போனால் அருவருக்கும் இலங்கையின் கலாசாரமாக அது அமைந்து விட்டது. இது சர்வதேசத்தின் கண்களைக்கூட இப்போது உறுத்துகிறது. என்றாலும் கூட்டல் கழித்தலில் எங்கள் குரல்கள் எங்கேயோ இடறி விழுகின்றன. யார் இந்த அவலத்தில் இருந்து எங்களைக் காப்பார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. உலக அரசியலின் எச்சங்கள் எங்கள் கிராம ஒழுங்கைகளிலும் அவலமாக நெளிகின்றன.

காந்தியின் தேசம் தந்த பரிசைத் தட்டிவிட்டது எங்கள் மடமை என்பது புரிகிறது. அதன்பின்பு காந்தியின் தேசம் நீதியின் கண்களை இழந்துவிட்டது. கசக்கும் அந்த உண்மையில் மாற்றம் வராதா என்கின்ற ஏக்கம் எங்களிடம் இன்னும் பாக்கி இருக்கிறது. ஈழத்துத் தமிழர்கள் உலகத்திற்கே எதிரிகளாக்கப்பட்டு, எவரும் தீண்டாத அபலை களாக்கப்பட்டதாய் உணர முடிகிறது. ஒரு விதவைக்காக இலட்சம் இலட்சமான விதவைகளை உருவாக்கும் விசித்திர அரசியலைக் காந்திதேசம் பயில்கிறது. அதில் அந்த தேசம் பரமதிருப்தி காண்பது கண்டு நாங்கள் வெதும்புகிறோம்.

அத்தான் நீங்கள் ஒருவகையில் அதிர்ஷ்டக்காரர் எண்டுதான் சொல்ல வேண்டும். சுதந்திரம் வரும் வரும் என்று ஏங்கிச் சாவதில் இருந்தாவது உங்களுக்கு விடுதலை கிடைத்து இருக்கிறது. தமிழராய்ப் பிறந்துவிட்டோம் என்பதிற்காய் வதைக்கப்படுவது எங்கள் விதியாகிவிட்டது. அதில் இருந்தாவது தற்காலிக விடுதலை உங்களுக்குக் கிடைத்து விட்டது. நாங்கள் எப்போதும் வேட்டையாடப்படலாம் என்கின்ற அந்தர நிலையில் வாழ்வது கொடுமை யானது. அது எங்கள் தலைவிதியாகத் தொடர்கிறது. அத்தான் கிறிஸ் பூதங்களோட போராடும் மூன்று பெண்களின் நிலையை உங்களால் கற்பனை செய்ய முடியும் என்று எண்ணுகிறேன். இந்தப் பாதுகாப்பின்மை மொத்த தமிழினத்திற்கும் பொது வாக்கப்பட்டு இருக்கிறது. இதன் பின்னணியைத் துட்ட கைமுனவோடு தொடங்கிய வியாதியின் தொடர்ச்சியாகத்தான் என்னால் பார்க்க முடிகிறது.

எங்கள் நாட்டில் எந்தச் சுதந்திரமும் பூரணமாக எங்களுக்கு கிடைப்பதில்லை. எனது கருத்துக்களை இந்தக் காகிதத்தில் எழுதுவதுகூட ஆபத்தானது என்பது எனக்குப் புரிகிறது. புரிந்தாலும், உங்களிடமாவது அதைக் கொட்டித் தீர்க்க வேண்டும் என்கின்ற ஆதங்கத்தை என்னால் கட்டுப் படுத்த முடியவில்லை.

அத்தான்! விதியும் அரசியலும் கொடுமையானவை. அது யார் யார் வாழ்க்கையில் எப்படி விளையாடி இருக்கிறது பார்த்தீர்களா? உங்களை என்னோடு இணைக்காத விதி... அவரை என்னிடம் இருந்து பிரித்த விதி... அரசியல் பற்றி நான் யாருக்கும் சொல்லத் தேவையில்லை. ஆற்றமுடியாத காயமாக வலிப்பதை இன்றும் எம்மால் உணர முடிகிறது. அத்தான் உங்கள் நேரத்தை நான் இதற்குமேல் வீணடிக்க விரும்பவில்லை. எங்கள் மானம் சிதைக்கப்படாதவரை உங்களுக்கு நான் கடிதம் எழுதுவேன். இந்தக் கடிதத்தை

முடிப்பதற்கு முன்பு உங்களுக்குப் பாரதத்தில் இருந்து ஒரு சிறிய கதை சொல்ல விரும்புகிறேன்.

பாண்டவர்களுக்கு நாடுகொடுத்து யுத்தத்தைத் தவிர்த்துக் கொள்ளும்படி துரோணர் சொன்ன அறிவுரை இவ்விதமாக இருக்கிறது. "துரியோதனா! நான்முகன் முதலானவரும் காண்பதற்கு அரிய பத்பநாதனாகிய கண்ண பிரான் உன்னை மைத்துனன் என்ற முறைகொண்டு, இவ்விடம் வந்து, நீயும் உய்யும்படி உனக்கு இதமான சொற்களைச் சொல்கிறான். அது நீ முற்பிறப்பில் செய்த தவமே. ஆதலின் கண்ணன் சொல் கேட்டு, கொடுப்பது சிறிதளவாக இருந்தாலும் உரிய நாட்டினைக் கொடுத்து வாழாமல் போனால், மன்னவனே! நீ அழிந்து போவாய். இதனை நன்கு தெரிந்து கொள்க" என்றார். இதைக் கேட்ட துரியோதனன் யதார்த்தத்தை விதி விழுங்கிய மாயையில் வயிறு குலுங்க நகைத்தான். பின்பு "போரில் வீரத்தைக் காணல் யாருக்கும் முறையானதே. சிவபெருமானே என் முன் வந்து நின்று கூறினாலும் அப்பாண்டவர்களுக்கு சிறிதளவுகூட இடம் கொடுக்கமாட்டேன்" என்கிறான்.

போரில் வெல்ல முதலே துரியோதனன் விதியிடம் அறிவை அடகு வைத்து, விவேகத்தைத் துறந்து, அகங்காரத் தைக் கைப்பிடித்து இப்படி உரைத்தான். எங்கள் நாட்டில் போர் ஒன்று நடந்து முடிந்தது. அதில் பாண்டவர்கள் இல்லை கௌரவர்கள் வென்று இருக்கிறார்கள். இனிப் பாஞ்சாலி தாசியாகவும், பாண்டவர்கள் அடிமையாகவும் வாழ்வதே விதியின் கட்டளையா? விதி சொல்லாவிட்டாலும் ஆள்பவர்கள் அப்படித்தான் சொல்வதாக நாங்கள் உணருகின்றோம். கௌரவர்படை மூன்று சகாப்தங்களாக எங்கள் தெருக்களை அடைத்துக் கொண்டுள்ளார்கள். துப்பாக்கி முனையில் எங்கள் அன்றாட வாழ்வைப் பிணைத்து வைத்து இருக்கிறார்கள். "சிவபெருமானே என் முன் வந்து நின்று கூறினாலும், அப் பாண்டவர்களுக்கு சிறிதளவு கூட இடம் கொடுக்கமாட்டேன்"

என்பது போல யார் கூறினாலும் "தமிழருக்கு உரிமை கொடேன்" என அடம்பிடிக்கும் சிங்கள அரசில் எந்த மாற்றமும் இல்லை. தோற்ற பாண்டவர்களுக்குத் துணைவர நவீன பாரதத்தில் நண்பர்கள் இல்லை. பாண்டவர்கள் இன்று தனியாக, அடிமையாக...

இப்படிக்கு
என்றும் அன்புடன்
செல்வி.

12

பாலன் சுரங்கரத நிலையத்தை விட்டு வெளியே வரும் போது அந்தப் பிச்சைக்காரி "நார்வேசனுக்கு" முன்பாக மடித்துப் போடப்பட்ட பிளாஸ்ரிக் பை ஒன்றின்மேல் இருந்தவண்ணம் கைத்தொலைபேசியில் யாருடனோ கதைத்தாள். மறுகையில் அரைவாசி தகனமாய்ப் போன சிகரெட் புகைந்தது. ஒரு பக்கத்தில் இரண்டு குழந்தைகளோடு அவள் நின்று எடுத்துக் கொண்ட புகைப்படம் பிச்சைகேட்டுச் சிரித்ததாகத் தோன்றிற்று. பார்ப்பதற்கு குட்டித் திறந்தவெளி அலுவலகத்தையே அவள் உருவாக்கியதாகப் பாலன் எண்ணிக் கொண்டான். புகைப்படம், அலுவலக அலங்கரிப்பா அல்லது அனுதாபச் சுவீகரிப்பா என்பது பாலனுக்குத் தெளிவாகவில்லை. அவள் கிழக்கு ஐரோப்பிய மொழியொன்றைக் கதைத்தாள். பாலனால் அது எந்நாட்டு மொழியென ஊகிப்பது கடினமாயிற்று. கிழக்கு ஐரோப்பிய மொழிகள் பல இரஸ்ய மொழியைப் போன்று ஒசையெழுப்புவதால் தடுமாற்றம் தன்னிச்சையாக வந்துவிடுகிறது. ஏழரை மணித்தியாலம் வேலை செய்வதில் தனக்கு கிடைக்கும் தொகையளவு இவளுக்கு பிச்சை எடுப்ப தில் கிடைக்குமா? இல்லையா என்பதாகப் பாலன் மனதிற் குள் தர்க்கித்தான். வேலைக்குப் போய் வருவதைப் போலக்

குறித்த நேரத்தில் இருந்து குறித்த நேரம்வரையும் அவள் இங்கு இருப்பாள். விறைப்பூசி ஏற்றியதாக அங்கம் குளிரில் விறைக்கும் இம்சையோடு அதில் அசையாது பிச்சைத் தவம் செய்வது, உடல்வருத்தி மனத்தை ஒருநிலைப்படுத்தும் தியானந்தான். பிச்சை எவ்வளவு கிடைக்கும்? பாலனை அந்தக் கேள்வி மீண்டும் நோண்டியது. இயந்திர மயமாகிவிட்ட நோர்வே மக்களிடம் அத்திப் பூவாகவே கொடையுணர்வு பீறிட்டுப் பாயும். கைநீட்டுபவர்களுக்கு எல்லாம் கொடுக்காது விடுவதும் ஒரு சமூகசேவை என்பது உழைப்பை மதிப்பவர் கொள்கையாகும். பிச்சை எடுக்காதபடி அமைக்கப்பட்ட சமுதாயத்தில் பிச்சை எடுப்பது அவமானமா? அவலமா? என்பது பாலனுக்கு விளங்கவில்லை.

பிச்சையெடுப்பதைத் தொழிலாக்கி, அதை மா.ஃபியா நிறுவனப்படுத்துகிறது என்கின்ற கருத்து பொலிசாரிடமும் அதிகார வர்க்கத்திடமும் உண்டு. பிச்சை கொடுப்பது அந்தச் சமூகவிரோதத்திற்கு நெய்யூற்றுவதாக அமையும். மனிதனை மனிதனே வியாபாரமாக்கும்... திரைக்குப் பின்னால் நடக்கும் திருகுதாளங்கள்... பாலன் தலையைச் சொறிந்து கொண்டான். பிச்சையெடுப்பதைத் தொழிலாக்கும் மா.ஃபியாக்கள்? மண்டையைக் குடைந்த வெறுப்பும் கோபமும் “வைக்கீங்”களின் கொம்பாய் முளைப்பதுபோல...

பாலன் மேற்கொண்டு நடந்தான். பொன்னாக மாறிய இலைகள் மண்ணாகும் காலம் வந்ததாக காற்றின் முதுகில் சவாரி செய்து நல்லடக்கத்திற்கான இடம் தேடின. சருகுகளின் மேல் சப்பாத்துக்கள் மொறு மொறுக்க பாலத்தைத் தாண்டிப் பாலன் வெளியே வந்தான். சாவு என்பது அழகு என்பதைச் சத்தமில்லாமல் சொல்லிப்போகும் இலைகள் என்பதாகப் பாலனுக்குத் தோன்றியது. தான் அழியப் போகும் வேளையிலும் அது வர்ணஜாலம் காட்டிப் பிரியாவிடை கேட்கிறது. பருவகாலங்களும் அதன் நிறங்களும் மூர்க்கமாகப் பாயும் பூமியிது. ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வொரு வண்ணம் பூசிக்கொள்ளும பூமித்தாயின் மகோன்மத லீலை இங்கே.

காலங்கள் மரித்தாலும் நினைவுகள் மரிக்காத மாணவப்பருவத்தின் குதூகலம் அப்பிக் கொள்ள, மாணவர்கள் தங்கள் வீடுகள் நோக்கி காற்றில் அடிக்கப்பட்ட சருகாக அங்கும் இங்கும் சென்றார்கள்.

வேலை முடிந்து வீட்டிற்குப் போவதை யாருக்கு மறைக்க முடிந்தாலும், பாலனால் அவன் வயிற்றுக்கு மறைக்க முடியவில்லை. செத்தவீட்டில் மார்பில் அடித்து அழும் பெண்டுகள் போலச் சிறுகுடலும் பெருங்குடலும் அடித்துக் கொண்டு அழுகின்றன. ஓலமிட்டு அது எழுப்பும் ஓசை இடைக்கிடையே கேட்கிறது. பாலன் வீட்டை நோக்கிச் செல்லும் பொழுது யாரோ பின்னால் கூப்பிட்டது போன்ற ஒரு இனம் தெரியாத உணர்வு அவனைத் தடுத்து நிறுத்தியது. பாலனுக்கு அது மனப்பிரமையாக இருக்க வேண்டும் என்று தோன்றினாலும் திரும்பிப் பார்க்காமல் மேற்கொண்டு போகமுடியவில்லை. பாலன் திரும்பிப்பார்த்தான். அந்த அயல்வீட்டு நோர்வே காரனுடைய பிள்ளைகள் தெருவின் ஓரத்தைக் கோடுபிடித்து நடந்து வந்தார்கள். குனிந்த தலைநிமிராத கோலம். ஊரைப்போல் வேலியிருந்திருந்தால் உரசிக் கொண்டு வருவதில் அவர்கள் முதுகு புண்ணாகி இருக்கும். சோர்வு, தயக்கம், நடுக்கம், அவமானம், வெறுப்பு அத்தனையும் தலையில் ஏறியிருக்க அதன் பாரம் தாங்கமுடியாது தாங்கி நடப்பதான நடை. என்ன சோகம் இவர்கள் வாழ்க்கையில்? பாலனுக்குப் குழப்பமாகியது.

காலங்கள் மரித்தாலும் நினைவுகள் மரிக்காத மாணவப்பருவத்தின் குதூகலம் அப்பிக் கொள்ளும் காலத்தில் வண்ணத்துப் பூச்சிகளாக மிதக்க வேண்டிய இவர்களின் கனவுகளை யார் களவாடியது? தங்கள் சந்தோஷத்தை யாரிடம் இவர்கள் தாரைவார்த்துக் கொடுத்தார்கள்? அவர்கள் நிச்சயம் தன்னைக் கூப்பிட்டு இருக்கமாட்டார்கள் என்கின்ற அசையாத நம்பிக்கையோடு பாலன் மீண்டும் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினான். பாலனுக்கு மீண்டும் அவர்களைத் திரும்பிப்பார்க்க வேண்டும் போல் இருந்தது. அதைப் போராடிப்

புறம்தள்ளி தலைக்கு கடிவாளம் போட்டவண்ணம் அவன் மேற்கொண்டு நடந்தான். மீண்டும் அவனை யாரோ கூப்பிட்டதான உணர்வு. அதே இனம் புரியாத உணர்வு. பாலன் திரும்பிப்பார்த்தான். பாலனுக்கு அதிர்ச்சியாயிற்று. அவர்கள் அவனுக்கு பின்னே சில மீற்றர்கள் தள்ளி வந்தனர். பாலனுக்கு அவர்களைப் பாத்துச் சிரிக்க வேண்டும் போல இருந்தது. சிரிப்பதா? விடுவதா? என்பதில் குழப்பம் நீடித்தது. சிரித்தால் எப்படி எடுத்துக் கொள்வார்கள்? சிரிக்காவிட்டால் எப்படி எடுத்துக் கொள்வார்கள்?

ஒரு கணம் அந்தச் சகோதரர்களைப் பாலன் நன்றாகப் பார்த்தான். சந்தோஷம் களவாடப்பட்ட பின்பு சக்கையாகி வெளிறிப் போன முகங்கள். யாரைத்தான் நம்புவது என்கிற அச்சம் ஒழுகும் பார்வை. மற்றவர்களைப் பார்த்து தங்களை வேட்டையாடும் மிருகத்தைக் காண்பதாக ஒதுங்கிக் கொள்ளும் அவசரம். இரையாகிப் போய்விடுவோமோ என்கின்ற ஓயாத பதட்டம். உள்ளம் உருகுவதுபோல் ஊனும் உருகியதாக எலும்புகள் எங்கும் துருத்தும் அடையாளம். நடந்து செல்வ தற்கே உடலில் சக்தி உள்ளதா என்கின்ற அவநம்பிக்கையோடு நடப்பதான. உலாஞ்சுகின்ற தளர்வு. முகத்தில் சிவப்புச் சிவப்பாக இலவம் பழம்போலக் கொப்பளிக்கும் பருக்கள். சீப்புகள் வேண்டாமெனச் சிலம்பிக்கிடக்கும் கேசத்தில் நீர் படாது தூசுமண்டியதான பரட்டை பொன்னிறத்தின் மினு மினுப்பைத் தின்ற கோலம். அடிக்கடி அந்தப் பெண் வயிற்றில் கையை வைத்து வலியை அடக்குவதான பாவனை. அந்தப் பையனில் இருந்து புகையால் அழிந்து கொண்டிருக்கும் சுவாசப்பையிலிருந்து பிறக்கும் இருமல். அவனது கையில் குறிசுட்டது போல அடுக்கடுக்காக வெட்டப்பட்ட அடையாளங் கள். சிரிப்பு என்பது சீண்டக்கூடாது என்பதாக அவர்கள் வத னங்களில் கவலையின் ஆட்சி.

பாலனுக்கு அவன் கைகளில் இருந்த அடையாளத்தை மறக்க முடியவில்லை. தனக்குத் தானே வெட்டிக் கொண்டு இருப்பானா? அப்படித்தான் செய்திருப்பான் என்று அவனுக்குத்

தோன்றியது. அந்த வெறுப்பு எதிலிருந்து முளைவிட்டிருக்கும் என்கிற எண்ணம் அவளைக் குழப்பியது.

பாலனுக்குத் தனது தோலின் கருமையை உணரும் பொழுது தாழ்வு மனப்பான்மை ஆமையாகத் தலைநீட்டும். அது மெல்லவும் முடியாது, விழுங்கவும் முடியாது... அவஸ்தையாகப் பரிணமிக்கும். நிறத்தை வைத்து மனித தரத்தை மதிக்கும் எங்கள் அறிவீனம் மங்கவில்லை. இங்கு வந்தபின்பும் அது ஆழமாக வேரூன்றி, விழுது பரப்பி நிற்கிறது. வெள்ளை நிறத்தை மேன்மையாக நினைக்கும் முள்ளந்தண்டற்ற நினைவுகளில் இருந்து விடுபட முடியாமை எங்கள் மடமையாகும். ஆங்கிலத்தையும், ஐரோப்பிய மொழிகளையும் மாத்திரம் புரிந்துகொண்டு ஆராதிக்கும் ஐரோப்பியரின் வீரப்பிரதாபங்கள், நிறத்தால் திறமை நிர்ணயிக்கப்படுகிறதா என்கின்ற தடுமாற்றதை உண்டுபண்ணும். இந்த நினைவு பாலனை சிலவேளை கூனிக் குறுகவைத்துவிடும். தமிழில் அற்புதங்கள் இருந்தாலும் தமக்குள் பூட்டிவைத்துக் குமைவதான எண்ணம் அவனை வாட்டும். தன்னையறியாதே ஒரு தாழ்வு மானப்பான்மை தோளில் ஏறிச் சவாரி செய்வதைத் தடுக்க முடியாது போகும்.

இப்போழுது இந்த இருபிள்ளைகளும் தாங்கள் தாழ்ந்தவர்கள் என்பதுபோல ஒதுக்கம் காட்டியது, இதயத்தை யாரோ பிடித்து முறுக்குவதாய் பாலனுக்கு வலியைத் தந்தது. தாழ்வு மனப்பான்மை என்பது இடியப்பச் சிக்கலைப் போன்றது.

பாலன் அவர்களை மீண்டும் பார்த்தான். பாலன் பார்ப்பதைப் பார்த்துவிட்ட அவர்கள் தலையைக் குனிந்த வண்ணம் அப்படியே நின்று விட்டார்கள். அவர்கள் ஏதோ காரணத்திற்காய் வேகமாகச் சென்றிருக்க வேண்டும். தனது இடையூறான பார்வை அவர்களைக் குழப்பபுகிறது எனப் பாலன் புரிந்து கொண்டான்.

திடீரென அந்தப் பையன் மேலே பார்த்தான். 'பிரபஞ்சம் என்னைச் சாப்பிடப் போகிறது' என்றான். தலையை

மேல்நோக்கிச் சரித்து ஆகாயத்தையும் சூரியனையும் மீண்டும் மீண்டும் பார்த்தான். அவனது சகோதரி அவன் கையைப் பிடித்து இழுத்தாள். அவன் நினைவுகள் இன்றி இழுபடுபவன்போல இழுபட்டான். பாலன் தன்னால் அவர்கள் அல்லல்படலாகாது என்கின்ற நினைப்போடு நடக்கலானான். இனி என்ன சத்தம் கேட்டாலும் திரும்பிப் பார்க்க கூடாதென எண்ணிக் கொண்டான். அவன் அப்படி எண்ணிச் சிறிது தூரம் சென்றிருக்க மாட்டான்.

"டு மோ ஜல்ப ஒஸ்." (நீங்கள் எங்களுக்கு உதவ வேண்டும்).

பாலனுக்கு முள்ளந்தண்டில் குளிர் ஓடிற்று. ஒருகணம் உடல் உதறிப் போட்டது. அந்தக் குரல் காதிற்குள் கேட்டதான உணர்வில் பாலன் மீண்டும் திடீரெனத் திரும்பிப் பார்த்தான். அவர்கள் முன்பைவிட அருகில் வந்துவிட்டார்கள். அந்தக் குரல் அவர்களுடையதா அல்லது பிரமையா! என்பதில் பாலனுக்குத் தொடர்ந்தும் குழப்பமாகிற்று. மத்தியானம் சாப்பிட்டேனா? தண்ணீர் குடித்தேனா? எனத் தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். இது பிரமை இல்லை நிஜம்தான் என்பதாகவே அவனுக்குத் தோன்றியது. பாலன் மீண்டும் அவர்களைப் பார்த்தான். அவர்கள் தலையைக் குனிந்தவண்ணம் பூமியை வெறித்துக் கொண்டு நின்றனர். பாலனுக்கு குழப்பமாகியது. கேட்பதா? விடுவதா?

"வா? (என்ன?)"

அவர்கள் பதில் பேசாது நின்றார்கள். இரக்கம் மெதுவாகக் காலால் இறங்கிப்போகக் கோபம் மெல்ல ஏறிவருவதாகப் பாலன் உணர்ந்தான். முதலில் தன்னோடு இவர்கள் விளையாடுகிறார்கள் என்கின்ற கோபம் வந்தது. பின்பு தன்னிடம் சொல்ல முடியாது மனதில் எதையோ வைத்துக் கொண்டு தவிக்கிறார்கள் என்கின்ற இரக்கம் சுரந்தது. என்னவென்று கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கின்ற அவா பிறந்தது. ஏதோ இக்கட்டிலுள்ள இவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். மனிதாபிமானம் உள்ள மனிதன்

செய்யும் இந்தச் சிறு செயலையாவது தான் செய்யவேண்டும் எனப் பாலன் எண்ணிக் கொண்டான். பாலன் அவர்களை நிதானமாகப் பார்த்தான்.

பின்பு "வா? (என்ன)" என மீண்டும் கேட்டான்.

அவர்கள் கண்கள் பாலனையும் தாண்டி தெருவின் முனையை நோக்கி நிலைகுத்தின. அவர்கள் திடீர் வேகம் கொண்டவர்கள் போலப் பாலனை விலத்திவிட்டு, அவசரமாக வீதியில் முன்னோக்கிச் சென்றனர். பாலன் எதுவும் விளங்காது திகைத்துப் போய் நின்றான். பின்பு எதற்காக இப்படிப் பதறியடித்துக் கொண்டு செல்கிறார்கள் என்பது புரியாது தெருவின் முனையை வெறித்துப் பார்த்தான். தெருவின் முனையில் அவர்களின் தகப்பன் என்பவன் முறைத்துக் கொண்டு நின்றான். அந்தப் பிச்சைக்காரிக்கு இருக்கும் சுதந்திரங்கூட இந்தப் பிள்ளைகளுக்கு இல்லையே என்கின்ற ஏக்கமும் கவலையும் பாலனைப் பந்தாடின.

13

சுபனி பாடசாலை முடிந்தவுடன் காற்றில் பறக்கும் சருகாக, ஓட்டமும் நடையும் கலந்த மெல்லிய துள்ளலோடு நூலகத்தை நோக்கிச் சென்றாள். பாடசாலைக்கும் நூலகத் திற்கும் சில நூறு மீற்றர் இடைவெளி. அவள் நடந்து சென்று புத்தகம் எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் செல்வது வழமை. இன்றும் அவளுக்குச் சில புத்தகங்கள் அவசியம் தேவைப்பட்டன.

சுபனி நூலகத்திற்குள் நுழைந்தாள். அங்கு வைக்கப் பட்டிருந்த அலுமாரிகள் கோட்டைமதில் சுவர்களாக மறைப்புக் கட்டி நின்றன. சுபனி ஒரு "பானா" வடிவிலான பகுதிக்குள் நின்று புத்தகம் தேடினாள். அவள் நின்ற இடத்தைப் போன்ற பானா

வடிவமே அவள் நிற்கும் பகுதிக்குப் பின்னாலும் விம்பம்போல் எதிர்திசையை நோக்கியது. சுபனி புத்தகம் தேடுவதின் மோகத்தில் தன்னைச் சுற்றிய உலகத்தைத் தொலைத்தாள். அப்படியும் அவள் தேடிவந்த புத்தகம் அகப்படவில்லை. அவளுக்கு அலுப்புத் தட்டியது. என்ன செய்வது என்று யோசித்த பொழுது பக்கத்தில் எங்கேயோ அக்காவின் குரல் கேட்பதை உணர்ந்தாள். சுபனிக்கு முதலில் அது அக்காவின் குரல்தானா என்கின்ற சந்தேகம் உண்டாகிற்று. அவள் அந்தக் குரலை மீண்டும் ஒருமுறை உற்றுக் கேட்டாள். அது அக்காவின் குரல்தான் என்பது நிரூபணமாகிற்று. அக்காவின் குரல் மட்டும் தனியே கேட்டிருந்தால் ஓடிப்போய் அவளைக் கட்டிப் பிடித்திருப்பாள். அக்காவின் குரலோடு ஒரு ஆண்குரலும் கேட்தால் இடியோசை கேட்ட சர்ப்பமாக, அசைவின்றி அலுமாரிக்குப் பின்னே நின்றாள். யாராய் இருக்கும் என்கின்ற கேள்வி அவள் மூளைக்குள் நெளிந்தது. அவள் அவதியில் உழன்றாள். அவளுக்குத் தான் என்ன செய்ய வேண்டும் என்பது புரியவில்லை.

அவர்கள் இருவரும் கதைக்கும் சத்தம் மட்டும் கேட்டிருந்தால் சுபனியும் போய் கைகொடுத்து தன்னை அந்த ஆணுக்கு அறிமுகம் செய்திருப்பாள். அந்த ஆண் யார் என்பதை அறிந்து ஆர்வத்தைக் குறைத்திருப்பாள். அந்த வாய்ப்பு அவளுக்குக் கிடைக்காமல் அவளை எதிர்பாராத அதிர்ச்சி தாக்கிற்று.

அலுமாரிக்குப் பின்னே உருவாகிக் காற்றில் பறந்த குரலின் சொந்தக்காரி அக்காவென்பது உறுதியாகிற்று. அவர்கள் கலகலப்பாய்ச் சிரிப்பதும், இடையிடையே முத்தம் கொடுப்பதுமாய் உலகை மறந்து பருவசேட்டைகளில் பகலை இரவாக்கினர். அவர்களின் உலகமறுப்பு, சுபனியின் காலுக்கு விலங்கைப் பூட்டிற்று. உண்மையை அறிய வேண்டும் என்கின்ற குடைச்சல் மேலும் மண்டையைப் பிளந்தது. அதிரடியாய் அக்கா முன்னால் போய் நின்றால் அது எப்படியான அதிர்வலையை உண்டுபண்ணும் என்கின்ற தயக்கம் மீண்டும் அவள் காலைப்பிடித்து இழுத்தது. சுபனிக்கு என்ன

செய்வதென்று புரியவில்லை. அவள் அந்த அலுமாரிக்குப் பின்னால் வயிற்றை அழுத்திய வண்ணம் அப்படியே இருந்துவிட்டாள். அவளின் இதயம் படபடப்பாய் அவசரமாக அடித்துக் கொண்டது. அக்காள் தப்புச் செய்யும் பொழுது தனது இதயம் ஏன் அவசரப்படுகிறது என்பதை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. அக்காள் செய்வது தப்பா? இங்கு அதை யாரும் தப்பென்று சொல்லுவார்களா? "வரம்பு மீறிப்போனால் தப்புத்தானே "எது வரம்பு? அவளுக்கு குழப்பமானது.

சுபனி அலுமாரிக்குப் பின்னால் எழுந்து கொள்ள விருப்பமற்றவளாய் அப்படியே இருந்தாள். முத்தச்சத்தமும், அக்காவின் சிரிப்பும் அலுமாரியை விட்டு நகர்ந்து வரவேற்புப் பகுதியை நோக்கி முன்னேறின.

சுபனி ஒருவாறு துணிவை வரவழைத்துக் கொண்டு தனது தலையை நீட்டிப் பார்த்தாள். அது அக்காள்தான். அதுவும் அவளது வகுப்பில் படிக்கும் சஜீவனோடு கட்டிப் பிடித்தவண்ணம், இணைபிரியாது நடந்து சென்றாள். அவன் கை ஒன்று அக்காவின் பின் போக்கேற்றைத் துளாவியது. அவள் கையொன்று அவனின் பின் போக்கேற்றைத் துளா வியது. இடையில் காற்றுக்கூட இடையூறு செய்துவிடாத நெருக்கம். இருவரும் இடம், காலம் மறந்து அடிக்கடி முத்தமிடுகிறார்கள். யாரும் பார்க்க மாட்டார்கள் என்கின்ற துணிவில் கூத்தாடுகிறாள். சுபனிக்கு அக்காள் செய்வது கவலையைத் தந்தாலும் அவள் தன்னிடம் மாட்டிக் கொண்டதான சின்னப் புளுகம் ஒன்று மெல்லக் கிளப்பியது. "வரட்டும் வீட்டிற்கு" என அவள் மனதில் கறுவிக் கொண்டாள்.

அவர்கள் ஏதோ ஒரு புத்தகத்தைப் பதிந்து எடுத்துக் கொண்டு திரும்பிப் பாராது வெளியே சென்றார்கள். சுபனி அவசர அவசரமாய்த் தானும் புத்தகம் ஒன்றைப் பதிவுசெய்து எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். அக்காள் வீட்டிற்குத்

தான் செல்வாள் என்கின்ற ஊகம் சுபனியிடம் இருந்தது. அவள் அந்தத் திசையை நோக்கி அவசரமாகச் சென்றாள். தெருவில்கூட இணைவில் பிரிவு இல்லாது அவர்கள் சென்றார்கள். முத்தம் கொடுப்பது குறைந்து விட்டது. "கெபாப்" கடையடிக்கு வந்ததும் சஜீவன் சுருதிக்கு இறுக்கமாக முத்தம் கொடுத்துவிட்டு தனது குடியிருப்பை நோக்கிச் செல்லத் தொடங்கினான். அந்த முத்தத்தைப் பெற்ற பின்பு பால் குடித்த பூனையாகச் சுற்றும் முற்றும் திரும்பிப் பார்த்தாள் சுருதி. அவளை மயக்கம் என்னும் மின்னல் வெட்டியதாய் துடித்தாள். அவள் முகம் ஆயிரம் பேய்களிடம் ஒரே நேரத்தில் அடிபட்டதைப்போல வெளிறிப் போயிற்று. தாங்கள் முத்தமிட்டதைப் பார்த்தாளா இல்லையா என்கின்ற சந்தேகம் முதலில் தலைதூக்கினாலும் அது விரைவாகவே கருடனைக் கண்ட பாம்பாகப் புற்றிற்குள் புகுந்து கொண்டது. கோடு அடித்ததாய் நீண்டு கிடக்கும் இந்த தெருவில் வந்தவள் நிச்சயம் தங்களைப் பார்த்து இருப்பாள் என்பதாக அவள் முடிவு செய்து கொண்டாள். அவள் பரிதாபமாய்ச் சுபனியைப் பார்த்தாள். சுபனி அவளைப் பாரிகாசமாய்ப் பார்த்தாள். பின்பு பார்வையால் கதை பேசுவதைச் சகோதரிகள் நிறுத்திக் கொண்டார்கள்.

"ஏனக்கா இதோட நிப்பாட்டிப் போட்டியள்? ம்... இரண்டு பேரும் சேர்ந்து வீட்டை வந்திருந்தா அம்மா நல்ல விருந்து போட்டிருப்பா. அருமையான சந்தர்ப்பத்தை விட்டிட்டாய்..."

"பிளீஸ் சுபனி. அம்மாவால இதையெல்லாம் புரிஞ்சு கொள்ள முடியாது. தயவு செய்து எதையும் அங்க வந்து உளறாதே" எனச் சுருதி கெஞ்சத் துவங்கினாள். அவளுக்கு அப்பாவைப் பற்றிக் கவலை இல்லாவிட்டாலும் அம்மாவைப் பற்றிய கவலை மனசில் பிராண்டியது. அது நிம்மதியை உருட்டி அடித்துச் சென்றது.

"சரி. அப்ப நான் அப்பாவிட்ட சொல்லுறன். அவருக்கு விளங்கும்தானே?" என்றாள் சுபனி.

“பிளீஸ் சுபனி தயவுசெய்து யாருக்கும் சொல்ல வேண்டாம். அது நான் சொல்லுற நேரம் சொல்லிக் கொள்ளுவன்,” என்றாள்.

“நீ சொல்லுற நேரம் சொல்லிக் கொள்ளுவாய். எனக்குச் சொல்லாட்டித் தலை வெடிச்சிடுமே. நான் யாரிட்டை யெண்டாலும் சொல்ல வேணும்.”

“பிளீஸ் சுபனி. எனக்காக இந்த ஒரு உதவி செய்ய வேணும்.”

“ம்.... பாப்பம்.”

அந்தச் சம்பவம் நடந்து ஒரு கிழமை இருக்கும். அன்று பாடசாலையால் வந்தவுடன் வீட்டுப் பாடங்கள் செய்ய வேண்டும் என்கின்ற அவசரத்தில் சுபனி, சுருதியின் அறைக்குள் சென்றாள். ஏன் வந்தாய் என்பதான இளக்காரப் பார்வை ஒன்று சுருதியிடமிருந்து வந்தது. என்ன திமிரா? என்கின்ற கேள்வி சுபனியின் பார்வையில் நெருப்பாகத் தெறித்தது. செய்நன்றி மறப்பவள் என் அக்காவென அவள் எண்ணிக் கொண்டாள். அந்த எண்ணம் அவளைச் சூடாக்கியது.

“அக்கா எனக்கு லப்ரோப் வேணும்,” என்றாள் சுபனி.

“நான் பாட்டுக் கேட்கிறன்,” எனச் சுருதி அலட்சியமாக மறுத்தாள். அது சுபனியை மேலும் சூடேற்றியது.

“நான் வீட்டுப் பாடம் செய்ய வேணும்,” என்றாள் சுபனி.

“அப்பான்ர அறையில இருக்கிற பீசியப் பாவி.”

“அது பூட்டி இருக்குது.”

“நான் பாட்டுக் கேட்கிறன். இப்ப தரேலாது. பிறகு வா.”

“அம்மா....?” சுபனி இழுத்தாள்.

"போடி... போய்ச் சொல்லு. சும்மா வெருட்டிக் கொண்டு திரியிற. இதெல்லாம் இங்க சாதாரணம். அம்மா அப்பா ஒண்டும் சொல்ல மாட்டினம். நீ வேணும் எண்டாப் போய்ச் சொல்லிப்பார்." சுருதி அலட்சியமாய்ச் சொல்லிவிட்டுப் பாட்டுக் கேட்டாள்.

"சரி அதையும் நான் பாக்கிறன்" என்று கூறிய சுபனி அவசரமாகக் கோபத்தோடு கீழே இறங்கிச் சென்றாள்.

சுருதி கதிரையில் இருந்து பாட்டுக் கேட்டாள். பாட்டின் இரசனையில் பின்னால் யார் வருகிறார்கள் என்றெல்லாம் அவள் கவனிக்கவில்லை. எப்பொழுது அம்மா பத்திரகாளி கோலத்தில் அறைக்குள் புகுந்தா என்பதை அவள் ஊகிக்க முன்னமே, அவளது பிடரியில் முதல் ஒரு அறை விழுந்தது. அந்த அதிர்ச்சியில் திரும்பியவளின் கன்னத்தில் மேற்கொண்டும் அம்மா சரமாரியாக அறைந்தாள். சுருதி அந்த அதிர்ச்சியில் உறைந்து, செயலிழந்து, சிலையானாள். அம்மாவின் அடிகளும், உலுக்கலும் அவளை நிலைகுலைய வைத்தன. சுபனி வாசலில் நின்று வன்மமாகச் சிரித்தாள். சுருதிக்கு என்ன நடந்தது என்பது மெல்லப் புரியத் தொடங்கியது. 'என்ன கோபம் வந்தாலும் என்மேல் கைவைக்கும் உரிமையை அம்மாவுக்கு யார் கொடுத்தது?' என்கின்ற தன்மானம் அவள் தலையைக் கிறுகிறுக்க வைத்தது. அதுவே அவளுக்கு அவமானமாய் மாறியது. அங்கிருந்து தொலைந்து போய்விட வேண்டும் போலத் அவளுக்குத் தோன்றியது. அந்த எண்ணம் தொடர முடியாதவாறு அம்மா கத்தினாள்.

"எங்கட குடும்ப மானத்தை கெடுக்கிறியே சனியனே. ஐயோ நாங்கள் இனி எப்பிடிச் சனங்களின்ர மூஞ்சையில முழிக்கிறது? எங்களை ஏனடி சாகடிக்கிறாய்? ஐயோ நான் இதை யாரிட்டப் போய்ச் சொல்லுவன்," என்று கூறியவண்ணம் மீண்டும் கன்னத்தில் அறைந்தாள்.

அதற்குமேல் சுருதியால் பொறுத்துக் கொண்டு இருக்க முடியவில்லை. தலைவெடிக்கும் கோபத்தில் கண்கள் சிவந்தன. சிதைக்கும் அனல் அதில் வழிந்தது. அதரத்தில் அக்கினி பாய்ந்து செம்மை படர்ந்தது. அவள் தன் நிலை யிழந்து கோபப் பிசாசின் வசப்பட்டாள்.

தாயின் கைகளைத் திடீரெனத் தட்டிவிட்ட சுருதி விறைப்பாக எழுந்து நின்றாள். எரிந்து கனன்ற கோபத்தோடு முனிவனைப் போல அம்மாவை நோக்கினாள். அம்மா எரியவில்லை. அரண்டு போனாள்.

“நிப்பாட்டு அம்மா. இங்க எதுக்கும் யாரையும் அடிக்கேலாது எண்டது உனக்கு இன்னும் தெரியாதே?. இப்ப நான் பொலிசுக்கு அடிச்சா அவங்கள் வந்து உன்ன இழுத்துக் கொண்டு போய்விடுவாங்கள் தெரியுமே? நீ அம்மாவான பாவத்துக்கு அதைச் செய்யாமல் விடுறன். ஆனா நான் இனி ஒருகணம்கூட இந்த வீட்டில இருக்க மாட்டன்!” எனக் கத்தினாள்.

பின்பு கோபம் தணியாதவளாய் சில உடுப்புகளை எடுத்துப் பெட்டி ஒன்றில் அடையத் துவங்கினாள். சில கணம் என்ன செய்வது என்று புரியாமல் நின்றிருந்த சுமிதா, அவள் செய்வதைத் தடுக்கச் சென்றாள். கோபத்தில் அம்மாவைச் சுருதி தள்ளிவிட அவள் போய்க் கட்டிலில் விழுந்தாள். மகள் தள்ளியதில் திகைத்துப் போன சுமிதா அப்படியே கிடக்க சுருதி பெட்டியோடு படிகள் இறங்கிக் கீழே சென்றாள். பூதமாய்க் கிளம்பி விட்ட பிரச்சனையைக் கண்ட சுபனி பயத்தில் தனது அறைக்குள் புகுந்து கொண்டாள். புயலுக்குப் பின்னரான அமைதி. தன்னிச்சையாக வந்து வீட்டிற்குள் ஆட்சி செய்யத் தொடங்கியது.

சாவியை நுழைத்துப் பாலன் வீட்டுக் கதவைத்திறந் தான். ஒவ்வொரு நாளும் அந்தக் கதவைத் திறக்கும் பொழுது அது இன்பத்தின் வாசலாக இருக்க வேண்டுமென அவன் பிரார்த்திப்பான். பிரார்த்தனைகள் பலவேளை கைகூடும்.

சிலவேளை அடிசறுக்கும். வாழ்க்கை என்பது இன்பத்திற்கும் துன்பத்திற்கும் இடையேயான பந்தயம். அதில் வெற்றி தோல்வி வானிலையாக மாறும் மாயாஜாலம். வெற்றிக்கு மலர்ந்து, தோல்விக்குச் சுருங்கும் வெறும் அன்றாட மனிதர்களே நாங்கள் என்பது பாலனின் முடிவு. கதவைத்திறந்து உள்ளே காலடி எடுத்து வைத்த பொழுது கோழியிறைச்சி சமைத்த வாசம் அவனை வரவேற்றது. வாசம் கண்டதும் பாலனின் வயிறு ரோசம் கொண்டதாக ஆர்ப்பரித்தது. வீட்டின் வாசலில் பாதணிகளின் படையெடுப்பிற்குப் பஞ்சம் இருப்பதில்லை. பாதணிகள் வைப்பதற்கு இன்று இடம் கிடைத்தது. அதைப் பார்த்ததும் யார் வரவில்லை என்கின்ற ஆராய்வு தன்னிச்சையாக அவன் மனதில் எழுந்திற்று. சுருதி இன்னும் வரவில்லை. அவளது பாதணிகளைக் காணவில்லை. அவள் சிலவேளை யாராவது சிநேகிதிகள் வீட்டிற்குச் சென்றுவிட்டு ஆறுதலாயும் வருவாள். தான் அப்படிப் பிந்தி வருவதென்றால் சிலவேளை சுமிக்குத் தொலைபேசியில் அழைத்துக் கூறுவாள். சிலவேளை பாலனுக்குக் கூறுவாள். இன்று சுமியிடம் கூறி இருக்க வேண்டுமெனப் பாலன் எண்ணிக் கொண்டான். பாலன் அவசரமாகத் தனது பாதணிகளைக் கழற்றி ஒதுக்கமாக வைத்தான்.

உள்ளே சோபாவில் மாமி இல்லை. சுமி தலைவிரி கோலமாக இருந்தாள். கண்கள் இலவம்பழமாய் மின்னிற்று. கையில் நிறையக் கடதாசி வைத்து மூக்குத் துடைத்தாள். “அதிக நேரம் அழுகிறாளா? எதற்காக அழுகிறாள்?” பாலனுக்கு ஒன்றும் புரியவில்லை. ‘என்ன இழவு இது?’ என மனதிற்குள் எண்ணிக் கொண்டான். சுமி பாலனைப் பார்த்ததும் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

“என்ன இது? பெண்ணாய்ப் பிறந்துவிட்டால், அழுவது அவர்களின் இரண்டாவது மொழியாகிவிடுகிறது. இந்தப் பெண்களே இப்படித்தான்” எனப் பாலன் சலித்துக் கொண்டான்.

யாராவது ஊரில் மோசம் போயிருப்பார்களா? அப்படித் தான் பாலனுக்குத் தோன்றியது. யார் மோசம் போயிருப்

பார்கள்? நெருங்கிய உறவான சுமியின் அம்மா இங்கே. சுமியின் அப்பா பரலோகம் போய்ப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. மாமா? மாமி? சித்தப்பா? யாரெண்டாலும் சுமி பிழியப் பிழியத்தான் அழுவாள் என்று எண்ணிய பாலனுக்கு மேல்தளத்தில் உள்ள தனது அலுவலக அறைக்குள் போய் அடைந்து கொண்டால் நல்லது எனத் தோன்றியது. தான் அப்படிப் போனால் சுமியின் அழுகை ஒப்பாரியாக மாறும் என்கின்ற பேதி கலக்கியது. பாலன் சுமியை நெருங்கினான். பாலன் நெருங்கவும் சுமி காக்காய் வலிப்பு வந்தவள் போலக் குலுங்கிக் குலுங்கி அழுதாள். பாலன் என்ன செய்வது என்கிற குழப்பம் மேலிட அசையாது நின்றான். பின்பு தன்னை உணர்ந்தவனாக, சோபாவில் இருந்த வண்ணம் "ஏன் அழு கிறாய் சுமி? என்ன நடந்தது?" என்று கேட்டான்.

"குடி முழுகிப் போச்சுது. நான் நஞ்சு குடிச்சுச் சாகப் போறன். ஐயோ இந்த மானக்கேட்டோட இனியாற்ற முகத்தில முழிப்பன். எனக்கு சாவராதே இப்ப. ஐயோ" பிதற்றிய வண்ணம் சுமி குலுங்கிக் குலுங்கி அழுதாள். பாலனுக்கு வந்த கோபத்தில் கன்னத்தைப் பொத்தி சுமிக்கு அறைய வேண்டும் போல் இருந்தது. என்ன அவலமான ஒப்பாரி இது?" என்பதாகப் பாலன் மனதிற்குள் சலித்துக் கொண்டான். சுமி இப்படித்தான். எதையும் நேரடியாகச் சொல்லமாட்டாள். சுற்றி வளைத்தால் பாலனுக்குப் பற்றிக் கொண்டு வரும். மற்றவர் குணம் புரிந்தாலும் தங்கள் குணங்களை மாற்றிக் கொள்பவர் அரிதே. பெண்கள் மாறுவார்கள் என்கின்ற ஆண் சமுதாயத்தின் எச்சத்தை நம்பிய பாலனுக்கு ஏமாற்றமே கிடைத்தது.

"இப்ப உந்த ஒப்பாரிய விட்டிட்டு என்ன நடந்தது எண்டு சொல்லுறியே?"

"ஐயோ எனக்கு நெஞ்சுக்க குத்துது. அவள் போட்டாள். அவள் பெட்டியோட போட்டாள்."

"யார் போனது? எங்க போனது? போனா வருவினம்தானே. அதுக்கு நீயேன் குத்தி முறியிறாய்?"

சுமி பாலனைப் பார்த்து பல்லை நறுமினாள்.

"ஒண்டும் விளங்காமல் கதைக்கிறியள். சுருதி வெளிக் கிட்டுப் போட்டாள். என்னோட கோவிச்சுக் கொண்டு போறாள். நான் அவளைக் கோபத்தில அடிச்சுப் போட்டன்."

"என்ன?"

"அவள் கோவிச்சுக் கொண்டு போட்டாள். பெட்டியோட போட்டாள்."

அப்பாவின் சத்தம் கேட்டுச் சுபனி கீழே இறங்கி வந்தாள். இறங்கி வந்தவள் படிக்கட்டு முடியுமிடத்தில் இருந்து கொண்டாள்.

சுமிதாவேடு கதைக்கப் பொறுமையற்ற பாலன் சுபனியைப் பார்த்து, "என்ன நடந்தது இங்க? எங்க அக்காள்?" எனக் கேட்டான்.

"அது வந்தப்பா?"

"என்ன சொல்லு?"

சுபனி நடந்ததைச் சொல்லத் துவங்கினாள்.

14

பாலன் மத்திய சுரங்கரத நிலையத்தில் அலுப்போடு இறங்கிக் கொண்டான். தமிழ்கடைக்குச் செல்ல வேண்டும் என்கின்ற சுமியின் வற்புறுத்தலை அவனால் தட்டிக் கழிக்க முடியவில்லை. மாமி வந்தபிறகு மச்சம் மரக்கறி என்று சட்டி பானையெல்லாம் தனிநாடு பெற்றுவிட்டன. பாலனுக்கு மரக்கறி என்றால் ஒருபிடி சோறே பெரும்பாடாகும். மாமி வரமுதல் மரக்கறி சமைத்தாலும் அவனுக்கும் பிள்ளைகளுக்கும் முட்டை என்றாலும் சுமி பொரித்து வைப்பாள். இப்பொழுது முதல்நாள் இரவே சட்டிபானை எல்லாம் கழுவிக் காயவைத்து விடுகிறாள். அடுத்தநாள் பிரால் சட்டியை மணந்தால் சோப்பு

வாசத்தை தவிர எதுவும் அவன் மூக்கிற்கு பிடிபடுவதில்லை. பாலனுக்கு மாமியையும், சுமியையும் சேர்த்தே ஊருக்கு அனுப்ப வேண்டும் என்கின்ற எண்ணம் எழும். பிள்ளைகள் பெற்ற பின்பு பிரமச்சாரியமா என்கின்ற தோல்வியோடு அந்த எண்ணத்தைக் கைவிடுவான். மீண்டும் கோபம் பொங்கும். மீண்டும் அதைக் கைவிடுவான். இந்த மனச்சலனங்களைப் பார்க்கப் பிடிக்காத காலம் ஞாயிறைக் கண்ட பனியாகக் கரைந்து சென்றது.

பாலன் அவசரமாகத் தமிழ் கடையை நோக்கிச் சென்றான். ஒஸ்லோவில் குண்டு வெடித்த பின்பு, அடைத்து வைக்கப் பட்டிருந்த பகுதியெல்லாம் ஓரளவிற்குத் திறந்து விடப் பட்டிருந்தன. ஒஸ்லோவை உலுக்கிய அந்த அநர்த்தம் இன்னும் அழியாச் சுவடுகளாய்ச் சுவர்களில் அப்பிக்கிடக் கின்றன. வானளாவிய அரசகட்டிடம் தனது விழுப்புண்களைக் காட்டாது மறைப்புக் கட்டியபடி நின்றது. ஒஸ்லோவின் பொது நூலகத்திற்கான பாதை அதன் பின்புறமாக மாற்றப் பட்டுள்ளது. மனிதர்கள் வழமைக்குத் திரும்பியதான சாயலைக் காணமுடிந்தது. இந்தமுறை சொந்தநாட்டுக்காரனே வைத்ததால் நாங்கள் தப்பிக் கொண்டோம் எனப் பாலன் எண்ணிக் கொண்டான். அடுத்தமுறை யாரோ ஒரு முஸ்லிம் தீவிரவாதி வைக்க எங்களை ஐந்துக்களாகப் பார்ப்பார்கள். ஒருவர் எங்களை இழிவாகப் பார்க்கும் பொழுது ஏற்படும் உணர்வு கொடுமையானது. இலங்கையில் நாங்கள் பெரும்பான்மை இனத்தால் அப்படிப் பார்க்கப்பட்டோம். இங்கும் நாங்கள் அப்படிப் பார்க்கப்படுகிறோம். வருங்காலத்திலும் நாங்கள் அப்படி மூர்க்கமாகப் பார்க்கப்படுவோம். இந்த உண்மை பாலனை மேலும் வெறுப்பேற்றியது.

உலகத்தில் குண்டுகள் வெடிக்காமல் இல்லை. மக்கள் உயிரை விடாமல் இல்லை. அதிலும் பணக்கார நாடுகளுக்கு கிடைக்கும் விளம்பரம் வறிய நாடுகளுக்குக் கிடைத்து விடுவதில்லை. கடல்போல மாண்டு போன மனிதருள் நோர்வே யில் மாண்டவர்கள் மதிப்பிட முடியாத ஒரு சிறுதுளியே. காவுகொடுத்தவர்களின் கவலை மதிக்கப்பட வேண்டியதே.

இந்த ஒரு குண்டு வெடிப்புத்தான் உலகத்திலேயே நடந்தது என்பதான பிரச்சாரம் சற்றுத் தூக்கலாக இருக்கிறது. குண்டு வெடித்தவுடன் தன்னையும் அது தாக்கியதான உணர்வில் பாலன் தவித்தான். அதன் பின்பு, அதுக்குக் கொடுக்கப்பட்ட அதீத கவனிப்பு அவனை சற்றுச் சலிப்படையப்பண்ணியது. நோர்வே சமாதானத் தூதுவராய்... கொடை வள்ளலாய்... வலம் வந்தாலும், இந்த நாடு செய்யும் ஆயுதங்கள் வறிய நாட்டு மக்களின் உயிரை விலை பேசுகிறது. அது பற்றி யாரும் சத்தமாகக் கதைத்து விடுவதில்லை. தீவிர வலதுசாரிகளின் பேச்சு பலர் மனதில் நஞ்சை விதைக்கிறது. அதைவிடத் தீவிரமானவனே தொழிற்கட்சியை நோக்கிக் குண்டு வைத்தான் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. தீவிர வலதுசாரிகளின் அரசியலை, தொழிற்கட்சி வாக்குகளுக்காகக் கொஞ்சம் கொஞ்சமாக இரகசியமாகப் பிரதிபண்ணுகிறது என்கின்ற உண்மையை எவர் சத்தமாகச் சொல்லப் போகிறார்கள்? “தானும்“ அகதி முகாமில் இருந்து வரும் மணம் சொல்லுமா? படிப்பது தேவாரம், இடிப்பது சிவன் கோவில் என்பதில் எங்கும் மாற்றம் இல்லை. இப்படியாக எண்ணிய பாலன் சலித்துக் கொண்டான்.

பாலன் தமிழ்கடைக்குச் செல்லும்பொழுது சடுதியாக மேகலனைக் கண்டான். அவன் பேருந்திற்காகக் காத்திருப்பது போலத் தோன்றியது. மேகலன் பாலனைப் பார்க்கவில்லை. அவன் கிவி கடையைப் பார்த்துக் கொண்டு நின்றான். அவன்தான் மேகலன் என்பதை ஐயுறத் தெரிந்து கொள்ளப் பாலனுக்குச் சில கணங்கள் ஆகிற்று. என்ன நடந்தது இவனுக்கு என்கின்ற பரிதாபமும் கேள்வியும் மனதில் உறக்கம் இல்லாத ஓநாயாக ஓலமிட்டது. அரைப்பைத்தியமாய்த் திரிந்தவன் அங்கே முழுப்பைத்தியமாக நின்றிருந்தான். மனித உறவுகள் சிக்கலானவை. புரிந்துணர்வு இல்லாத உறவுகள் பகையாக மனித நிம்மதியையும், இருப்பையும் குடைகிறது. வெறுப்பும் விரக்தியும் விட்டுக் கலைக்கிறது. மேகலனின் நிலைமையும் அப்படித்தான் உள்ளதோ என்பது பாலனுக்குப் புரியவில்லை. பாலனுக்குக் கடைக்குப் போவதா அல்லது

மேகலனிடம் சென்று கதைப்பதா என்பது குழப்பமாகிற்று. வலியச் சென்று அவன் வேதனையைக் கிளறுவதாய் அமைந்துவிட்டால்? என எண்ணிய பாலன், தமிழ்க்கடையை நோக்கி நடந்தான்.

தமிழ்க்கடையில் பொருள்கள் வாங்கிக் கொண்டு பாலன் வெளியே வந்தான். நோர்வேயில் தமிழ் மரக்கறி சாப்பிடுவதிலும் பார்க்க மீனும் இறைச்சியும் சகாயமானது எனப் பாலன் எண்ணிக்கொண்டான். மேகலனின் நினைவுகள் மீண்டும் வந்தன. என்ன நடந்தது இவனுக்கு என்கின்ற கேள்வி குடைவதான உணர்வு பாலனுக்கு உண்டானது. பாலன் மத்திய சுரங்கரத நிலையத்திற்குச் செல்ல எண்ணி நடக்கத் தொடங்கினான். மூளைக்குடைச்சலின் வேதனை குறையவில்லை.

ஒஸ்லோவின் மையப்பகுதி அநேகமாகச் சுறுசுறுப்பாய் இருக்கும். இப்பொழுதும் அது சுறுசுறுப்பாகவே இயங்கியது. மலிவு விற்பனைகள் என்கின்ற விளம்பரங்கள் எங்கும் சடைத்திருந்தன. பூவிலிருக்கும் தேன்போல மனிதர் களை அது கவர்ந்து இழுக்கும். இந்த வித்தையறியா விந்தை மனிதர்கள் தேனீக்களாக மொய்க்கிறார்கள். சிலவேளை மலிவாகப் பொருள்கள் விற்கப்படுவதும் உண்மை. சிலவேளை விலையை முதலில் ஏற்றிவிட்டுப் பின்பு மலிவாக விற்பதாக விளம்பரத்தில் வித்தை காட்டப்படும். சிலவேளை காட்சிக்கு ஒரு பொருளை மட்டும் விலைகுறைத்து வைத்துவிட்டு விளம்பரம் கொடுப்பார்கள். கேட்டால் களஞ்சியத்தில் இல்லையெனக் கைவிரிப்பார்கள். வியாபாரம் என்பது ஏமாற்றுவதைத் திருமணம் செய்து கொண்ட தொழில். ஏமாற்றத் தெரியாதவன் நட்டத்திடம் தன்னை அடகு வைக்கிறான். நேர்மையாக வியாபாரம் செய்து முன்னேற முடியாது. நோர்மையாக வியாபாரம் செய்கிறேன் என்பவன் கண்ணைக்கட்டி அடிக்கிறான் என்பதே யதார்த்தம். வியாபாரம் என்பது நேர்மையை விவாகரத்து செய்த பின்பு தான் வாழ்வைப் பெறுகிறது. அதுவே சட்டப்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட வியாபாரமாகிறது.

பாலன் தன்னுள் எழுந்த அலசல்களைத் தள்ளிவிட்டு நடந்தான். மத்திய சுரங்கரத நிலையத்தை அடைந்தபொழுது யாரோ பின்னால் கூப்பிடுவது போல இருந்தது. பாலன் திரும்பிப் பார்த்தான். கையில் ஒரு பையுடன் மேகலன் ஆடியாடி நடந்து வந்தான். அந்த வெள்ளைநிறப் பையில் அரச மதுக்கடையின் சின்னம் மரூண் நிறத்தில் தனியாட்சி செய்தது. இங்கு மதுவிற்கு விளம்பரம் செய்ய முடியாது. அந்தத் தேசிய சட்டத்தை ஐரோப்பிய ஒன்றியப் பொதுச்சட்டம் ஏறிமிதிக்கத் தொடங்கி விட்டது. இப்பொழுதும் எல்லா மதுக்கடைகளும் அரச கட்டுப்பாட்டில் இருக்கின்றன. பியரைத் தவிர்ந்த மற்றைய மதுபானங்கள் அந்தக் கடைக்குச் சென்றே வாங்க வேண்டும். மேகலனின் கையில் இருந்த பையில் வொட்காப் போத்தல் ஒன்று தலையை நீட்டியது. இப்பொழுது மேகலன் நல்லாக் குடிக்கிறார் என்பது பாலனுக்குப் புரிந்தது.

“என்ன பாலன்? அவசரமாப் போறீரே?” மேகலன் பாலனைக் கேட்டான்.

“இல்ல தமிழ் மரக்கறி வாங்கிக் கொண்டு போறன். மாமியும் மனிசியும் மச்சம் மாமிசம் குறைவு. இஞ்ச வேண்டுற மரக்கறி சமைச்சா நாக்குச் செத்துப்போமாம். சமைக்கத் தெரியாது எண்டுறதை யாரும் ஒத்துக் கொள்ளமாட்டினம். அதுதான் தமிழ் மரக்கறி வேண்டியரச் சொல்லிச்சினம்... அதை விடுங்க அண்ண. நீங்கள் என்ன கோலமும் மாறி... கையில வேற வொட்காவோட வாறியள்? உங்கட வாழ்க்கை எப்பிடிப் போகுது? ஒரு நாளைக்கு குடிச்சுப்போட்டு அழுதாக் கவலை குறையலாம். ஆனா ஒவ்வொரு நாளும் குடிச்சா ஈரல் குறைஞ்சு போகும். கைகால் நடுக்கம் பிடிக்கும். குடிய எங்கட கட்டுப் பாட்டில் வைச்சிருந்தா அதை நாங்கள் அநுபவிக்கலாம். இல்லாட்டி அது எங்களை விழுங்கிப்போடும். உங்களப் பார்த்தா பூதத்தின்ர வாய்க்குப் பக்கத்தில நிக்கிறமாதிரி இருக்குது.”

"அப்பிடி இல்லைப் பாலன். என்ர கவலைக்கு ஒவ்வொரு நாளும் குடியில மிதக்கோணும் போல இருக்குது. உலக நினைவே வராமல் இருந்தால் நல்லா இருக்கும். அண்டைக்கு உம்மோட கதைச்சதுக்குப் பிறகு நிறைய விஷயங்கள் நடந்திட்டுது. எல்லாம் விதி பாலன், அதை யாராலும் வெல்ல முடியாது. அப்ப இருந்த கோபத்தில, சிந்தனை இல்லாத ஜென்மங்களோட சீவிக்கிறதிலும் பார்க்க எந்த அவமானமும் எனக்கு பெரிசாப்படேல்ல. ஆனா அரிக்கிற கவலைக்கு மருந்து தெரியேல்லப் பாலன். அதுதான் இது. எல்லா விஷயத்தையும் இதில நிண்டு கொண்டு கதைக்க ஏலாது. நேரமிருந்தா "ஒஸ்லோசிற்றிக்க" போயிருந்து கதைக்கலாம். உமக்கு அவசரம் என்டாப் பிறகொரு நாளைக்குக் கதைப்பம்."

பாலனுக்குச் சங்கடமாகிற்று. வயிற்றில் பசிவேறு எறி வெடி எறிந்து விளையாடியது. மேகலனைப் பார்க்க மனம் உருகிற்று. பாலன் தனது அவசரத்தைப் புறம் தள்ளினான்.

"சரிவாங்க. போயிருந்து கதைப்பம்."

இருவருமாக ஒஸ்லோசிற்றிக்குள் சென்று கீழ்தளத்தில் இருந்த உணவகத்தில் அமர்ந்து கொண்டார்கள். அந்த உணவகத்திற்கு முன்புதான் அரசமதுக்கடை. அதையொட்டி "மெனி" எனப்படும் பலசரக்குக்கடை. அதைவிடப் பல கடைகள்...

மேகலன் சென்று இரண்டு பியர் வாங்கிக் கொண்டு வந்தான். பியர்க்கிளாஸ்கள் முத்து முத்தாய் வியர்த்து வழிந்தன. மேகலன் பாலனைப் பார்த்து "நாக்க நனையும், கதைப்பம்" என்றான்.

பாலனுக்கு இருந்த களைப்பிற்கு குளிராக ஏதாவது தொண்டையில் இறங்கினால் இதம் தருமெனத் தோன்றியது. இருவரும் பியர் கிளாசைக் கையில் எடுத்துக் கொண்டனர். பாலனின் கைகளில் குளிரும் ஈரமும் படர்ந்தன. இச்சைக் குமரியை முத்தமிட்டதான இன்பம் கைகளில் மெல்லப் படர்ந்தது.

"பியர் இடைக்கிடை அடிச்சா ஓகேயாத்தான் இருக்கும். மற்ற நசல்களைத் தொட்டா, பிறகு பக்கவாதம் வந்தமாதிரி அந்தப் பக்கமே இழுக்கும். பேசாமல் விட்டிட்டு வேற என்ன எண்டாலும் செய்யுங்கோ" என்றான் பாலன். அவன் ஒரு மிடர் பியரை உறுஞ்சினான்.

"எல்லாம் அப்பிடித்தான் பாலன். இதையும் விட்டாக் கட்டைதான் அடிக்கோணும். வாழோணும் எண்ட விருப்பம் இல்லாட்டி வருங்காலம் பற்றின கவலை எதுக்கு?"

"ஐயோ அண்ணை! ஏன் இப்பிடி எல்லாம் நினைக்கிறியள்? பிரச்சினை இல்லாத வாழ்கை இருக்கா? பிரச்சினையத் தூசா நினைச்சுத் தட்டிப் போட்டுப் போய்க் கொண்டு இருக்கோணும். அதை மலையாய் நினைச்சமெண்டா நாங்கள் அழிஞ்சு போயிடுவம்."

"தத்துவம் கதைக்கிறமாதிரி இல்ல மனக்காயங்கள் பாலன். அதை அநுபவிக்கிறது கொடுமையானது. அந்த அடங்காப்பிடாரியால நான் அநுபவிக்கிறது அப்பிடி இருக்குது. சில பெம்பிளையள் தெய்வங்கள் மாதிரி செய்யிற குற்றத்தையெல்லாம் மன்னிச்சு, தாய்மாதிரி இருந்து வழி காட்டுவாளவை. சில பெம்பிளையள் சூர்பனகை மாதிரி. தனக்கு எதுவும் கிடைக்காட்டி குலத்தையே அழிக்கிற வேலை செய்வளாவ. இவள் சூர்பனகை இனத்தைச் சார்ந்தவள். நாங்கள் நல்லா வாழவேணும் எண்டு சொன்ன புத்திமதிகளை எல்லாம் புறம் தள்ளிப்போட்டு, என்ர கை பட்டதுக்காய்... என்னப் பாழிவாங்க வேணும் எண்ட நினைப்போட... அண்டைக்கே பொலிசுக்குப் போட்டாள். எனக்கும் அண்டைக்கெண்டுபார் என்ர கையைக் கட்டுப் படுத்த முடியாமல் போச்சுது. இளமையில் கல்வி சிலையில் எழுத்து எண்டமாதிரி நாங்கள் சின்னனில இருந்தே பார்த்து வந்த மேதாவித்தனங்கள் இன்னும் மறையேல்ல. அது எங்களை இங்க பெரிய பெரிய சங்கடங்களில மாட்டி விடுகுது. அவள் போய்ப் பொலிசில என்றி போட்டிட்டாள். பிறகு தெரியும்தானே என்ன நடக்குமெண்டு. அடுத்த நாளே

நான் தனியப் போக வேண்டியாதாயிட்டுது. அதுக்குப் பிறகு அந்தக் கந்தோர், இந்தக் கந்தோர் எண்டு அலைஞ்சு திரியிறன். கடனோட கவலையும் சேர்ந்து இனியேன் வாழ்வோணும் எண்டதாப் போயிட்டுது. இதுக்கு அந்தச் செந்தில் நல்லாச் சாவி குடுக்கிறான். ஒருநாளைக்கு அவனைப் பிடிச்சு சாத்தவேணும். அப்பிடி ஏதாவது செய்தாலும் என்னைத்தான் கொண்டுபோய்ப் போடுவாங்கள். எல்லாத்தையும் யோசிச்சு யோசிச்சு கடைசியில எனக்கு ஆறுதலாக இருக்கிறது இந்த வொட்காதான்.''

''ம்... உங்களுக்கு எப்பிடி ஆறுதல் சொல்லுறது எண்டு எனக்கு விளங்கேல்ல,'' என்றான் பாலன்

''எல்லாம் விதி பாலன்'' என்றான் மேகலன்.

'விதியில்லை, மனித மடமை' என்று சொல்ல பாலனின் நுனி நாக்குவரை வந்தது. அப்படியென்றால் என்னவென்று ஆறுதல் அடைவது? ஏன் தானும் அவனை நோகடிப்பான் என எண்ணிய பாலன் மௌனமாகினான். மௌனம் ஒரு மொழி. பாலன் சிந்தனையில் கரைந்தான்.

''என்ன பாலன் அமைதியாகிட்டியள்?''

''இல்ல. உங்களுக்கு எப்பிடி ஆறுதல் சொல்லுறது எண்டு விளங்கேல்ல. தலையிடியும் காச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும் எண்டுவினம். உங்கட பிரச்சினை உங்களுக்குத்தானே புரியும்.''

''அது உண்மை பாலன். என்னெண்டு வாழப்போறனோ தெரியேல்ல.''

''மனசைத் தளரவிடாதேங்கோ. இனி என்ன செய்யிறதா ஐடியா?''

''இதுக்குமேல என்ன செய்யிறது? அவள் விவாகரத்து வேணும் எண்டதில பிடியா நிக்கிறாள். அவளோட இருந்து உத்தரிக்கிறதிலையும் இது நல்லது எண்டு நினைக்கிறன். என்ன சனங்கள் ஒருமாதிரிக் கதைக்குங்கள். அது கொஞ்ச நாளைக்கு உறுத்தலாத்தான் இருக்கும்.''

"சனத்த விடுங்கண்ண. அவையே உங்களுக்குச் சாப்பாடு தருகினம்? நல்லா இருந்தாலும் பொறாமைப்படுவினம்; கஷ்ரப்பட்டாலும் நெளிப்புக் காட்டுவினம். அதுக்கெல்லாம் நாங்கள் கரிசனை கொடுக்காமல் எங்கட அலுவலைப் பார்க்க வேணும்."

"நீர் சொல்லுறதும் சரிதான்."

இருவரது கிளாசும் வெறுமையாகியது அதைப்பார்த்த மேகலன் வியர் வாங்குவதற்கு எழுந்தான்.

"அண்ணை, வேண்டாம் அண்ணை. எனக்குப் பசிக்குது. வீட்டிலும் தேடுவினம்" என்றான் பாலன்.

"சரி பாலன். அப்ப இன்னொரு நாளைக்கு கதைப்பம்."

பாலன் பைகளைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டான். மேகலன் கதிரையில் இருந்தான்.

"நீங்களும் வாறியளோ?"

"இல்லைப் பாலன். நீர் போம். நான் கொஞ்ச நேரம் இங்க இருந்திட்டு வாறன்."

பாலனுக்கு அவனைப் பார்க்க மனசு வெதும்பியது. அவனை மீறித் தன்னிச்சையாக வெளியேறிய பெருமூச் சொன்று காற்றோடு கலந்தது. கனத்த இதயத்துடன் மத்திய சுரங்கரத நிலையத்தை நோக்கிப் பாலன் நடக்க முடியாது நடந்தான்.

15

பாலும் பார்த்து நாணும் வெண்மை கொண்ட சீருடையைப் பாலன் மாற்றிக்கொண்டு அலுவலக அறைக்குச் சென்றான். நித்திரைக் களை அப்பியிருந்த முகத்தோடு

இரு சுதேசிகளும், ஒரு பிலிப்பைன்ஸ் நாட்டுக்காரியும், ஒரு கென்னியா நாட்டவளும் வந்திருந்தனர். இன்னுமொரு செர்பியப் பெண்ணின் பெயர் அன்றைய பட்டியலில் இருந்தபோதிலும் அவளை அங்குக் காணவில்லை. அவள் பதுமையாகக் கதைப்பவள் வட்ட முகம் கறுப்பான தலைமயிர் அழகான பற்கள் அன்னம் போன்ற நடை பாலனுக்கு அவளோடு கதைப்பது பிடிக்கும். அவளும் பாலனோடு வாஞ்சையோடு கதைப்பாள். கோசவோகாரரைப் பற்றி மட்டும் அவளோட கதைத்தால் கோபம் அக்கினி சுவாலைகளாக அவள் முகத்தை சிவக்கப்பண்ணி விடும். எல்லோரும் நித்திரையோட்டும் மருந்தாகக் கோப்பியை குவளைகளில் ஊற்றி ஆறுதலாக உறுஞ்சினார்கள். கோப்பியின் வாசம் பாலனுக்கும் விழிப்பைத் தந்தது. அதை மேலும் வலுப்படுத்த அவனும் ஒரு குவளையில் ஊற்றிப் பருகத் தொடங்கினான்.

ஒரு சுதேசியே இங்கு தலைமைத் தாதி. அவள் அரசுக்கு விசுவாசமாய் இருப்பதில் மனிதத்தை மறந்து போனவள். இங்கு வருவது தொடக்கம் வீட்டிற்குப் போகும் வரைக்கும் அவள் கவனம் எல்லாம் மிச்சம் பிடிப்பது எப்படி என்பதில் இருக்கும். மிச்சம் பிடிப்பதாக மனிதத்தைத் தொலைக்கிறோம் என்பது முதல் இருந்த தலைமைத் தாதியின் கருத்து. அவள் தன்கருத்தை வலுவாக நம்பினாள். இந்த வேலை வேண்டாம் என்று ராஜினாமாச் செய்துவிட்டு வேறு வேலைக்குச் சென்றுவிட்டாள். இப்பொழுது இருக்கும் தலைமைத்தாதி மிச்சம் பிடிப்பது மகத்துவமான கடமை என நினைக்கிறாள். மனிதத்தின் கதறல்கள் அவள் காதில் விழுவதில்லை. மனிதத்தை மறத்தல் பாலனுக்கு வெறுப்பைத் தரும்.

தலைமைத்தாதி கோப்பியை உறுஞ்சுவதும் பட்டியலைப் பார்ப்பதுமாய்ச் சிறிது நேரம் இருந்தாள். யாருக்கோ உதவி செய்துவிட்டு வந்து இரவு வேலை செய்பவள், மணிக்கட்டைப் பார்த்தாள். பின்பு அவசரமாக அறிக்கை தரத் தொடங்கினாள். இது ஒவ்வொரு நாளும் நடக்கும் சடங்கே. இந்தச் சடங்கு முக்கியமான ஒரு விஷயம். உற்பத்தி என்கின்ற பார்வையில்

மனிதம் நிறுக்கப்படும் பொழுது இந்த அறிக்கைக்கு என்ன பெறுமதி இருக்கிறது?

காலை அறிக்கை முடியும் பொழுது அந்தச் சேர்பியப் பெண் சுகயீனம் காரணமாக வரமாட்டாள் எனக்கூறப்பட்டது. பாலன் எதிர்பார்த்ததுதான். அவளுக்கான வேலையை மற்றவர் கள் பகிர்ந்து செய்ய வேண்டுமெனத் தலைமைத்தாதி கூறினாள். பாலனுக்கு எரிச்சல் வந்தது. ஒரு ஆள் வேலைக்கு வரவில்லை என்றால் அதற்குப் பதிலாக வேறு ஒரு ஆளை வேலைக்கு அழைக்க வேண்டும். அதைத்தான் தொழில் சம்பந்தமான சட்டமும் வலியுறுத்துகிறது. அப்படி அழைத்து மேலதிக சம்பளம் கொடுக்காமல், வந்தவர்களை முறிப்பதே வழமையாகிவிட்டது. அதில் இந்தத் தலைமைத்தாதி கெட்டிக் காரி. அவள் கெட்டித்தனம் பாலனுக்கு எரிச்சலை உண்டு பண்ணியது.

தலைமைத்தாதி கூறியவற்றைக் கேட்டுக் கொண்டு மற்றவர்கள் அமைதியாக இருந்தார்கள். எல்லோர் மனதிலும் சாம்பல் படர்ந்த தணலாய் எரிச்சல் ஒளிந்திருக்கும். வெளியே காட்டிக் கொள்ள எவரும் விரும்புவதில்லை. உள்ள வேலையைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காய், கிடைத்த உரிமைகளைக் காற்றில் பறக்கவிட வேண்டியதா யிற்று. இப்பொழுது தாதிவேலைக்கும் கூட நோர்வேயில் தட்டுப்பாடு. கிழக்கு ஐரோப்பா, சுவீடன் போன்ற நாடுகளிலிருந்து பொருளாதாரப் பிரச்சனையால் அதிகம் ஆள்கள் இங்கு வருகிறார்கள். அவர்கள் தாதிவேலை செய்வதற்கு விருப்பம் கொள்ளுகிறார்கள்.

தலைமைத்தாதி அன்று ஒவ்வொருவரும் பராமரிக்க வேண்டிய ஆள்களின் பெயர்களைக் கூறினாள். பாலனுக்கு ஓர் ஆளின் பெயர் அதிகமாகத் தரப்பட்டது. பாலன் தனது சினத்தை அடக்கியவண்ணம். "எனக்கு வலது காலுக்கு நோகுது. எல்லாரையும் சமாளிப்பனோ தெரியாது" என்றான்.

"முயற்சி செய் பாலன். உன்னால ஏலாட்டி பெட்டையள் உனக்கு உதவி செய்வாளவ" என அவர்களைப் பார்த்துச்

சிரித்தாள். அவர்கள் வெளிக்குச் சிரித்தார்கள். உள்ளே அழுதார்கள். பாலனுக்குப் அவர்களைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

“ஓ நான் முயற்சி செய்யிறன். “

பாலன் எழுந்து வெளியே சென்றான். தனது எதிர்ப்பை இப்படியாவது காட்டியதில் பாலனுக்கு ஒருவித திருப்தி. பெட்டையளை உதவிக்குப் பாலன் கேட்டுக் கொண்டு இருக்கப் போவதில்லை. அவர்களுக்கு அவனது உதவி தேவை யில்லாமல் விட்டாலே தலை தப்பிய சந்தோஷம். அந்தச் சேர்பியாக்காரி நல்ல வடிவான குட்டிதான் எனப் பாலன் மீண்டும் நினைத்துக் கொண்டான். சுமியிடம் சேர்பியக்காரி அழகானவள் என்று சொன்னால் “ஓ உங்கட மூஞ்சைக்கு அது வேறையோ?” என்று கேட்பாள் என்பது அவனுக்குத் தெரியும். சேர்பியாக்காரி இப்படி இடைக்கிடை வராமல் விடுவதுதான் அவனுக்கு எரிச்சலைத் தந்தது. அதுவும் பகல் வேலைக்கு வராது விட்டால் வந்தவர்கள் முறியவேண்டி இருக்கும்.

வேலை அதிகமானால் நேரம் சிட்டாகப் பறக்கும். நேரம் சிட்டாகப் பறப்பது பாலனுக்குப் பிடிக்கும். மத்தியானச் சாப்பாட்டிற்கான நேரம் வரவும் வயிறு ஊளையிட்டது. முன்பெல்லாம் அலுவலகத்திலேயே இருந்து சாப்பிடுவது வழமை. சிலவேளை அங்கு இருக்கும் சாப்பாட்டையும் எடுத்துச் சாப்பிடுவார்கள். தேநீரோ கோப்பியோ போட்டுக் குடிப்பார்கள். இப்பொழுது எந்த உணவையும் தீண்டக்கூடாது என்பது சட்டம். குடிக்கும் கோப்பிக்குத் தடைவந்தாலும் வாயைப் பொத்திக் கொள்ள வேண்டிய நிலைமை. அங்கு சாப்பிடுவதற்கும் பாலனுக்குப் பிடிப்பதில்லை முப்பது நிமிடங்கள் சம்பளமில்லாத சாப்பாட்டு இடைவேளை. அந்த இடைவேளையிலாவது தொந்தரவு வேண்டாம் என்பதாக அவன் கன்ரீனுக்கு ஓடிவிடுவான். வேலையென்பது வேலைத்தளத்தோடு முடிந்துவிட வேண்டும். நினைவிலும் கனவிலும் வேலை, என்கின்ற எண்ணத்தை வெறுப்பவன். பாலன். வாழ்வதற்காக வேலை; வேலைக்காக வாழ்க்கை அல்ல. அதில் பாலன் மிகவும் தெளிவாக இருந்தான்.

பாலன் பசியின் பிறாண்டலில் அவசரமாகத் தட்டொன்றை எடுத்தான். பலவிதமான உணவுகள் இருந்தன. பாலன் தனக்குப் பிடித்த பாணின்மேல் வைக்கப்பட்டிருந்த பால் விட்டுப் பொரித்த முட்டையும், புகையில் வாட்டிய சமன்டின் மீனும் எடுத்துக் கொண்டான். குடிப்பதற்குத் தேநீர். பணத்தை கொடுத்துவிட்டு எங்கு இருக்கலாம் என்று ஆராய்ந்தபொழுது, "பாலன் இங்க பாரும்" என்கின்ற விக்னேஸின் குரலும், 'கிளுக்'கென்ற சியாமளாவின் சிரிப்பும் கேட்டது. அவன் கண்கள் அடுத்தகணமே அந்தத் திசையை நோக்கின. அங்கே அவர்கள் இருவரும் சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்கள். பாலன் அவர்களை நோக்கி நடந்தான்.

அவர்கள் இருவரும் பாணின்மேல் சாலத் வைத்து அதற்குமேல் இறால் வைத்து, மயோனஸ் என்னும் கீறீம் விட்டுச் செய்யப்பட்ட சாப்பாட்டைச் சாப்பிட்டார்கள். பாலன் அவர்களோடு அமர்ந்து கொண்டான்.

"அதிசயம்தான் மூன்றுபேரும் ஒரே நேரத்தில சந்திச்சு இருக்கிறம்" என்றான் பாலன்.

"இதில என்ன அதிசயம் இருக்குது பாலன் அண்ணா. நாங்கள் எந்த உலகத்தில இருக்கிறம்? ஒரு எஸ் எம் எஸ் தந்தியள் எண்டா ஒவ்வொரு நாளும் சேர்ந்தே சாப்பிடலாம். நானும் விக்கியும் அப்பிடித்தானே செய்யிறம். நொஸ்க்குகளோட எவ்வளவு நேரம் இருந்து கதைக்கிறது? நாங்கள் எண்டாத் தமிழில நிறைய விஷயம் கதைக்கலாம்... இல்லையா? நீங்களும் சேர்ந்தியள் எண்டா இன்னும் பம்பலா இருக்கும்" என்றாள் சியாமளா.

"ஓ அப்பிடியா விஷயம். சரி அப்ப நானும் இனி எஸ் எம் எஸ் அனுப்புறன். ஆருக்கு அனுப்புறது? விக்கிக்கா அல்லது உமக்கா?"

"ஐயோ என்ன விட்டிடுங்க. சியாமளாதான் ஓர்கனைசர்" என்றான் விக்கி அவசரமாக.

"நீங்க எனக்கு அனுப்புங்க. இல்லாட்டி நான் உங்களுக்கு அனுப்புறன். விக்கி நல்ல பிள்ளை பாலன் அண்ணா. அவர் தேவையில்லாத விஷயம் எல்லாம் செய்ய மாட்டார்."

சொல்லிய சியாமளா விக்கியைக் கடைக்கண்ணால் பார்த்தாள். பின்பு பாலனைப் பார்த்து சிரித்தவண்ணம், "இந்தப் பூனையும் பால்குடிக்குமா? நீங்கள் பாத்து சொல்லுங்க பாலன் அண்ணா?" என்றாள் கெஞ்சும் பாணி யாக.

"நான் பூனை பால் குடிச்சதைப் பார்த்ததே இல்லை சியாமாளா பூனை பால் குடிக்கிறது புதுமையும் இல்லை. ஒஸ்லோவில கள்ளுக் குடிக்கிற பூனையைக் கண்டா நிச்சயமாச் சொல்லுறன்" என்றான் பாலன்.

"என்ன பாலன் அண்ணா இண்டைக்கு இப்பிடிப் பிசத்துறியள்? ஆரும் புதிசா வேலைக்குச் சேர்ந்து இருக்கினமே?."

"ஐயோ அது வேறையே? வேலைக்கு வரவேண்டியவளே வரேல்ல. அந்த வேலையையும் நாங்கள் செய்ய வேண்டி இருக்குது. வரவர இந்த வேலை வெறுக்குது சியாமளா? அது சரி. நான் சீரியஸ்சா தத்துவம் சொன்னா உங்களுக்குப் பிசத்தலாட்டம் இருக்கா?"

"நீங்கள் தத்துவமா சொன்னியள் பாலன் அண்ணா? இனிமேல் சொல்லிப்போட்டுச் சொல்லுங்கோ. சரி அதை விடுங்க. உங்களுக்கு ஒண்டு தெரியுமே? இப்ப எல்லா இடமும் இப்பிடித்தான். இக்கரைக்கு அக்கரைப் பச்சையே தவிர, ஒரு இடத்திலும் சும்மா இருக்க விடமாட்டாங்கள். முறிச்சாத்தானே சேமிக்க முடியும்? அதுவும் அடிமட்டத்தில தான் கைவைப்பாங்கள்."

"உண்மைதான் சியாமாளா. வரவர இந்த நாட்டிலும் சேர்த்து வைக்கிற பைத்தியம் பிடிச்சிட்டுது."

"சிலவழிக்க பயப்படுறாங்கள். கணக்காளர் பிரதமரா இருந்தா கணக்குப் பாக்காமல் செலவழிப்பாரோ?"

“அவர் பாக்கிற கணக்கில எங்கட நாரியெல்லோ முறியுது.”

“எங்களுக்கு நாரி முறிஞ்சாலும் நாட்டுக்கு அதுதான் நல்லது. எண்ணைக்காசு வரும், வராமல் விடும். அதை நம்பி இருக்காமல் அரசு இயங்க வேணும் எண்டு எதிர்பார்க்கிறார். இதில என்ன பிழையிருக்குது?” என்றான் விக்கி.

அப்பொழுது ஒரு நோர்வேஜிய நடுத்தர வயதுப் பெண்ணும், நடுத்தர வயது ஆணும் சாப்பாடு எடுத்துக் கொண்டு இவர்களைத் தாண்டிச் சென்றார்கள். சியாமளாவைப் பார்த்து அந்தப் பெண் சிரித்தாள். சியாமளா அவளைப் பார்த்து வாழ்த்துக்கள் என நோர்வே மொழியில் கூறினாள். அவர்கள் இருவரும் அதற்கு நன்றி கூறினார்கள். பாலனுக்கு எதற்குச் சியாமாளா வாழ்த்துக் கூறினாள் என்பதை அறிய வேண்டும் என்கின்ற மண்டை வெடிப்பு.

“என்ன சியாமளா ரெண்டு பேருக்கும் பிறந்த நாளா?”

“அப்பிடியும் வருமா?”

“அப்ப எதுக்கு வாழ்த்துச் சொன்னியள்?”

“அவை புதுசா கலியாணம் செய்திருக்கினம்?”

“ஓ... இந்த வயசிலயா?” என்றான் பாலன்.

“என்ன பாலன் இப்பிடி அதிசயப்படுகிறீர்? இது இங்க நடக்கிற ஒண்டுதானே? “சிறிதான் அவளின்ர பெயர். இது மூண்டாவது கல்யாணமாக இருக்கோணும்” என்றான் விக்கி.

“அவங்களுக்குப் பிரச்சனையில்ல. எங்கட சனங்கள் எண்டா திண்டு கை கழுவுங்கள்” என்றான் பாலன்.

“என்ன திண்டு கைகழுவுறது பாலன் அண்ணா? நாங்களும் கொஞ்சம் எண்டாலும் மாறவேணும்” என்றாள் சியாமளா.

“என்ன சொல்லுறீங்க சியாமளா? எனக்கு விளங்கேல்ல.”

"ஆத்மாவைக் கொலை செய்துகொண்டு, சமுதாயத்திற்கும் பயந்து சாகக்கூடாது எண்டுறன்" என்றாள். பின்பு "நீங்கள் என்ன சொல்லுறியள் விக்கி?" என விக்கியைப் பார்த்துக் கேட்டாள்.

"நீர் சொல்லுறது உண்மைதான் சியாமளா. எண்டாலும் எங்களுக்கு அந்த மனத்துணிவு இருக்கிறேல்ல."

"துணியோணும் விக்கி. எதுவுமே நிரந்தரம் இல்லை. இன்று என்பது காலடியில் கிடக்கும் உண்மை. நாளை என்பது இன்னும் கைக்கு எட்டாத கற்பனை. ஊர் என்கின்ற நாளைய கற்பனைக்குப் பயந்து இன்று என்கின்ற நிஜத்தைப் புதைக்க முடியாது. கிடைக்கின்ற ஒவ்வொரு நொடியையும் மானிடர் அநுபவிக்க வேண்டும். அநுபவிச்சு வாழ்ந்து நிம்மதியாகத் திருப்தியாகச் சாகவேணும். ஊரு. உலகம் எனச் சப்புக் கொட்டிக் கொண்டு, உள்மனதுக்கும், சுயவிருப்பத்திற்கும் துரோகம் செய்யக்கூடாது. விரும்பாத வாழ்வை நூறு வருஷம் வாழ்றதிலும் பார்க்க விரும்பின வாழ்வை நூறு செக்கன் வாழ்ந்திட்டுப் போகலாம். உடலும் உள்ளமும் கரையிற வாழ்க்கை வேணும். உடலும் உள்ளமும் எரியிற வாழ்க்கை வேண்டாம். நான் சொல்லுறது சரியா பாலன் அண்ணா?" எனப் பாலனைப் பார்த்து முடித்தாள்.

பாலன் சியாமளாவைப் பார்த்தான். அவள் உணர்ச்சி வசப்பட்டிருந்தாள். பாலனுக்கு அவளைப் புரிந்து கொள்ள முடியவில்லை. என்ன பதில் கூறுவது என்பதிலும் தடுமாற்றம் ஏற்படபட்டது. அவள் சொல்வது ஒருவகையில் நியாயமாகப் பட்டது. சுமிதாவுடனான தன்னுடைய உறவில் உருகும் காதல் இருக்கிறதா எனச் சிந்தித்துப் பார்த்தான். அங்கு உருகல் கிடையாது. எரிவும் உராய்வும் கொண்டது தான் அவர்கள் உறவு. அதற்காக...? பாலனுக்குச் சங்கடமாய்ப் போயிற்று.

"என்ன பாலன் அண்ணா பேசாமல் இருக்கிறியள்?"

"இல்லச் சியாமளா... நாங்கள் எவ்வளவு காலம் இங்க இருந்தாலும் இரத்தத்தோட ஊறிப்போன மாதிரி சில விஷயங்கள் காலைப் பிடிச்சு இழுக்கத்தானே செய்யுது?

எங்கட பிள்ளையள் அப்பிடி உணரமாட்டாங்கள். எங்களால அப்பிடி உணராமலும் இருக்க முடியேல்ல'' என்றான் பாலன்.

“ஒவ்வொருத்தர் ஒவ்வொரு மாதிரி உணரலாம். ஒரு வகையில சியாமளா சொல்லுற மாதிரி இண்டைக்கு வாழாத வன் தன் வாழ்வையே சூதாடுகிறான் இல்லையா?'' என்றான் விக்கி.

நேரத்தைப் பார்த்த சியாமளா. “ஐயோ நேரமாச்சுது. நான் போகவேணும்'' எனப் பதறிக் கொண்டு எழுந்தாள். அவளோடு சேர்ந்து பாலனும் எழுந்து கொண்டான். தலைமைத்தாதி மணிக்கூட்டைப் பார்த்துக் கொண்டு இருப்பாள் என்பது பாலனுக்கு நினைவு வந்தது.

16

நத்தாரை ஒட்டி ஒழுங்கு செய்யப்பட்ட விருந்திற்கான அழைப்பு பாலனுக்கு வந்திருந்தது. அந்த உணவு விடுதி அமைந்திருந்த இடம் ஒருவித தயக்கத்தை அவனுக்கு உண்டு பண்ணியது. ஒஸ்லோவின் சிவப்பு விளக்குப்பகுதி அது. அதற்குள் எதற்காகச் சென்றார்கள் என்பது பாலனுக்குப் புரிந்தது. நத்தாரையொட்டிய காலங்களில் உணவு விடுதி களில் இடம் பிடித்துக் கொள்வது விண்வெளிக்குப்போகும் ஏவுகணையில் இடம்பிடிப்பதைப் போலாகும். இடத்துக்கு அலைந்து கடைசியாக இங்கே விழுந்து இருக்கிறார்கள். வழமையாகப் பாலன் நத்தார் விருந்திற்கு ஏதாவது சாட்டுச் சொல்லித் தட்டிக்கழித்து விடுவான். இம்முறை பாலன் என்ன செய்வது என்று சிந்தித்த பொழுது அவன் சிந்தனையைச் சேர்பியாக்காரி குழப்பிவிட்டாள். அவள் பாலனையும் விருந்திற்கு வருமாறு குழைந்து குழைந்து அழைத்தாள். அவள் குழை வில் பாலன் அனல் கண்ட மெழுகாய் கரைந்து போனான். பாலனால் அதற்குமேல் அந்த அழைப்பைத் தட்டமுடியவிலை. அவளிடம் விருந்திற்கு வருவதாக ஒப்புக்கொண்டான்.

பாலன் விருந்திற்குச் செல்வதாகக் கூறியவுடனேயே சுமி குடிக்காமல் வரவேண்டும் என்றாள். குடிக்காமல் என்ன விருந்து எனப் பாலன் எகிறினான். அவன் எகிறலைப் பார்த்துவிட்டுக் "கொஞ்சமாக் குடியுங்க, ஏளியா வந்திடோணும்" எனச் சிறிது கட்டுப்பாடுகளைத் தளர்த்தினாள். "ஓம் ஓம்" என்று பாலன் தலையை ஆட்டினான். "நான் தூக்கிய காவடியைச் சுழற்றி ஆட்டியபின்தான் இறக்குவேன்" என அவன் மனதிற்குள் சொல்லிக் கொண்டான். பாலன் கோட், சூட் அணிந்து பின்பு ஒப்பனை செய்து கொண்டான். பின்பு தான் லண்டன் விமான நிலையத்தில் வாங்கிவந்த அத்தர் வகையறா வாசனைத் திரவியத்தில் சற்றுக் கழுத்தில் பூசினான். முடிவில் கண்ணாடி யைப் பார்த்தவனுக்குத் தனது கோலம் திருப்தியாயிற்று.

பாலன் அலங்கரித்து வருவதைப் பார்த்த சுமிதா, "பாக்க நல்லாத்தான் இருக்குது, மினக்கெடாமல் கெதியா வீட்ட வந்து சேருங்கோ" என்றாள். மீண்டும் கடமைக்கு 'ஓ... ஓ...' என்று தலையாட்டிவிட்டுப் பாலன் தனது சீசன்கார்டை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

ஓஸ்லோவின் மத்திய பகுதியில் வாகனம் நிறுத்துவது என்றால் பல நூறுகளைத் தாண்டிவிடும். குடித்த பின்பு வாகனம் செலுத்துவது தண்டனைக்குரிய பாரிய குற்றமாகும். இரண்டிற்கும் நல்ல பதிலாக இருப்பது சீசன்டிக்கற். எந்தத் தொந்தரவும் இல்லாது எவ்வளவு நேரம் வேண்டும் என்றாலும் நின்று விட்டு வரலாம். எண்ணியவண்ணம் அவன் நடந்து சென்றான்.

இந்த விருந்து பாலன் வேலை செய்யும் பகுதியினருக்கு மட்டுமானது. சியாமளாவும் விக்கியும் வந்திருந்தால் சிரிப்புக் களை கட்டியிருக்கும். சேர்பியக்காரியும் கலகலப்பாய் கதைப்பாள். பிலிப்பைஸ்காரி ஓரளவிற்கு கலகலப்பைத் தருவாள். கென்னியாக்காரி மற்றும் சுதேசிகளின் சுய ரூபத்தை குடித்த பின்புதான் கண்டு மகிழலாமெனப் பாலன் எண்ணிக் கொண்டான்.

பாலனை மத்திய சுரங்கரத நிலையத்திற்கு வருமாறு கூறியிருந்தார்கள். அங்கிருந்து அந்த உணவு விடுதிக்கு நடந்து போகலாம் என்பது அவர்களுடைய திட்டம். இரவு வேளைகளில் இப்பொழுது ஒஸ்லோவில் அடிக்கடி கற்பழிப்பு நடக்கிறது. அதுவும் வெள்ளியிரவும், சனியிரவும் மோசமாக இருக்கும். அந்த நாள்களில் பெண்கள் குடித்துவிட்டு வெறியில் தனியே வரும் சந்தர்ப்பத்தில் அவர்களை இலகு வாகத் தாக்கலாம் என்பதைக் கற்பழிக்கும் ஆண்மிருகங்கள் தெரிந்து வைத்திருந்தார்கள். அதுவும் வெளிநாட்டு ஆண்களே இந்தக் காரியங்களில் அதிகம் ஈடுபடுவதாய்க் கூறப்படுகிறது. அப்படிக் கற்பழிக்கும் வெளிநாட்டவரைப் பிடித்து அவர்களது சொந்த நாட்டிற்கு ஏன் அனுப்பி வைக்கிறார்கள் இல்லை என்பது பாலனின் ஆதங்கமாகும்.

வழமையாகவே இந்த உணவு விடுதி அமைந்த பகுதியில் தொழில் செய்பவர்கள்தான் நிற்பார்கள். வேறு பெண்கள் நடந்து சென்றால் சிலர் அவர்களையும் தொழில் செய்யும் பெண்கள் எனவெண்ணி அழைப்பதும் உண்டு. அந்தப் பயத்தில் பாலனை நம்பியே அவனது தோழிகள் காத்து இருந்தனர். பாலனின் வருகை அவர்களுக்குப் பெரிய துணை என்று தலைமைத்தாதி அன்று ஒருநாள் கூறினாள். அது பாலனுக்கு ஒருவித கிறக்கம் தந்தது. அவன் அதை மறைப்பதற்கு அன்று பெரும்பாடுபட்டான்.

பாலன் சுரங்கரதத்தால் இறங்கிய பொழுது அவர்கள் ஏற்கனவே வந்து பாலனுக்காய் காத்துக் கொண்டு நின்றார்கள். பாலனைக் கண்டவுடன், 'நீ பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறாய்' என முகமன் கூறினார்கள். பாலனும் அவர்களைப் பார்த்து அதையே கூறினான். வேலைத்தளத்தில் பார்த்ததிற்கும் இப்பொழுது பார்ப்பதற்கும்... இராக்கதிகள் தேவதைகளாகி விட்ட கோலம்! வண்ணங்களும், உடுப்புகளும் பாலனின் எண்ணத்தில் கள்வெறிகொள்ள வைத்தது. பாலன் சுமியை நினைத்தான். கள்வெறி சொல்லாமல் கொள்ளாமல் கரைந்து ஓடியது. நினைக்கக்கூடாததைப் பொருந்தாத நேரத்தில் நினைத்தது தப்பு என்பதை உணர்ந்தான்.

எல்லோரும் நடக்கத் தொடங்கினார்கள். நடந்த வண்ணமே பாலன் அவர்களைப் பார்த்து, "யார் உங்களைக் கூட்டிச் செல்ல வருவார்கள்? ஒஸ்லோ நிலைமை தெரியுமல்லவா? தனித்து அந்த நேரத்தில் போவது அவ்வளவு உசிதம் இல்லை. உங்கள் திட்டம் என்ன?" என்றான்.

தனது கணவர் வருவார் என்றாள் சேர்பியாக்காரி. அட கோதாரி எனப் பாலன் மனதிற்குள் எண்ணிக் கொண்டான். தனது சகோதரன் வருவான் என்றாள் பிலிப்பைன்ஸ்காரி. கென்னியாக்காரி தன்னிடம் பெப்பர்ஸ்பிறே இருக்கிறது என்றாள்.

தலைமைத் தாதியையும் மற்ற சுதேசியையும் பார்த்துப் பாலன் "நீங்கள்" என்றான். அதற்கு தலைமைத்தாதி தாங்கள் ஒரு வாடகைக்கார் பிடித்துக் கொள்ளப் போவதாகச் சொன்னாள்.

இயற்கை குளிரைக் குண்டுசியாக்கித் தோலைப் பதம் பார்த்தது. வெள்ளி வைரங்களாய்ப் பனியிறங்கினாலே நத்தார் சிறக்கும் என்பது இங்கு ஐதீகம். வானத்தை அண்ணார்ந்து பார்த்த தலைமைத்தாதி, "நாங்கள் பனிக்காகக் காத்து இருக்கிறோம். இம்முறை வெள்ளை நத்தாராக அமைந்துவிட வேண்டும்" என்றாள் ஏக்கத்தோடு.

விடுதிக்குள் சென்ற பொழுது வெப்பம் ஓடிவந்து அணைத்து இதம் தந்தது. குளிரின் பிடியில் இருந்து தப்பிய உணர்வு எல்லோருக்கும் ஆறுதல் தந்தது.

அது பெரியதொரு விடுதி. ஒருபகுதி உணவு உண்பதற்கும், மறுபகுதி மதுவருந்தி நடனமாடுவதற்கும் என இரண்டு பகுதிகளாக அமைக்கப்பட்டு இருந்தது. அந்த அமைப்பு வந்தவர்களை இரவு முழுவதும் வைத்திருப்பதான தந்திரம் என்பதைப் பாலன் புரிந்து கொண்டான்.

இவர்கள் வந்ததைப் பார்த்துக் கொண்டு நின்ற பணி யாள் ஒருவன் இவர்களை நோக்கி வந்தான். அவன் பெயர் விபரங்களைக் கேட்டு அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த

மேசையைக் காட்டி, அமர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டான். மங்கலான மின்னொளியில், சிவப்பு நிற அலங்காரம் கரைந்து, தங்கமாக மின்னியது.

முதலில் குடிப்பதற்கு மதுபானம் தெரிவு செய்ய வேண்டியதாகிற்று. பெண்களின் முதற் தெரிவாக வையின் இருந்தது. சிலர் பியர் எடுத்துக் கொண்டார்கள். சாப்பாட்டிற்கு வையின் பொருத்தமாக இருக்கும் என்பது பாலனின் எண்ணமும்கூட. வெறிகொள்ள அவனுக்கு வையின் பிடிப்ப தில்லை. கலந்து குடித்தால் தலைப்பாரம் மிஞ்சும் என்ற பயமும் உண்டு. அவன் விஸ்கி தெரிவு செய்தான். பணியாளன் சிறிது நேரத்திலேயே மது நிரம்பிய கண்ணாடிக்குவளை களுடன் வந்தான். அவன் மதுபானத்தைப் பரிமாறி விட்டு புத்தகம் போன்ற உணவு விபரம் அடங்கிய பட்டியலை அவர்களிடம் தந்து விட்டுச் சென்றான். மதுவை அருந்திய வண்ணம் என்ன உணவு எடுப்பது என்கின்ற சம்பாஷணை தொடர்ந்தது.

உணவு உண்டு முடிந்தபொழுது மனம் விட்டுப் பேசுமளவுக்கு மது தனது வேலையைச் செய்யத் தொடங்கிற்று. அவர்கள் எல்லோரும் உணவு பரிமாறும் பகுதியை விட்டு நடனமாடும் பகுதிக்கு மாறியிருந்தனர். இங்கு இருப்பதற்கு வசதியான சோபாக்கள் போடப்பட்டு இருந்தன.

ஒரு லத்தின் பாட்டுக்கு சேர்பியக்காரி பாலனை நடன மாட வருமாறு அழைத்தாள். பாலன் மது அருந்தாவிட்டால் நடனமாட மறுத்து இருப்பான். மதுவின் துள்ளலில் அவளுடன் சென்று நடனமாடினான். நடனமாடத் தொடங்கிய பாலனுக்கு அவளது ஆட்டத்திற்கு தன்னால் ஈடுகொடுக்க முடியாது என்பது பட்டெனப் புரிந்து போயிற்று. அவளின் அணைப்பை அறுத்துக் கொள்ளாதேயென மனம் மண்டியிட்டது. அடுத்த பாட்டு மாறும் வரையும் அவளை இறுகப் பற்றிக் கொண்டான். அவளில் இருந்து வந்த வாசனைப் பூக்களுடன் மது வாசனை இன்னும் இறுக்கி அணைத்துக் கொள் என்பதாக அவன் மனதை உசுப்பேற்றியது. மதுவின் மயக்கத்திலும்

பண்பாடு கருதி பாலன் இருவருக்கும் இடையில் ஒரு நூல் இடைவெளி இருக்குமாறு பார்த்துக் கொண்டான்.

ஆட்டத்தால் பாலன் களைத்து... அதனால் உடல் வியர்த்துப் போனான். உள்ளே இப்பொழுது அதிக மனிதர்கள் வந்துவிட்டதால் அவியத் தொடங்கியது. வெளியே சென்று வந்தால் சுத்தமான காற்றைச் சுவாசிப்பதோடு குளிர் பட்டு மேனி சிலிர்க்கும். பாலன் அந்தப் பெண்களைப் பார்த்து யாரும் வெளியே வருகீறீர்களா என்று கேட்டான். பிலிப்பைன்ஸ்காரி அவனோடு வருவதாக எழுந்தாள். சடுதியாக எதையோ யோசித்துக் கொண்டு மீண்டும் ஆசனத்தில் அமர்ந்து கொண்டாள். பாலன் அதைப் பொறுக்க முடியாது, "இது நியாயம் இல்லாத வேலை. ஒருத்தரும் வரமாட்டியளா?" என்றான் பரிதாபமாய். அதற்குப் பிலிப்பைன்ஸ்காரி "எனக்கும் வெளிய வரத்தான் விருப்பம். ஆனால் இந்த ஒழுங்கையில் வெளிய நின்றால் தப்பாய்ப் புரிந்து கொள்ளப்படும். மன்னிக்க வேண்டும் பாலன்" என்றாள்.

"மற்றைய மனிதருக்காய் நாங்கள் எங்கள் உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது" என்றாள் சேர்பியாக்காரி

"அது எல்லா நேரமும் சரிவராது. எல்லாருக்கும் தத்துவமும் விளங்காது. ஏன் தேவையில்லாத பிரச்சினையில் மாட்ட வேண்டும்?" என்றாள் பிலிப்பைன்ஸ்காரி.

"ஓ கே. நான் வெளிய போறன்" என்று கூறிவிட்டுப் பாலன் வெளியே வந்தான். ஒருத்தியும் தன்னுடன் வரவில்லையே என்பது அவனுக்குக் கடுப்பாக இருந்தது. வெளியே வரவும் குளிரின் ஆசை உரசல் அந்தக் கடுப்பைப் போக்குவதுபோல இதம் தந்தது.

உள்ளே பெண்கள் கூறியது சரியாகப் போயிற்று. தெருமுனையில் நல்ல வெளிச்சம். அந்த வெளிச்சத்தில் நடுத்தெருவில் நின்று ஆண்களோடு கதைக்கும் மூன்று பெண்கள். குதியுயர்ந்த பாதணிகளும், குளிரென்றும் பாராத குட்டைப் பாவாடையும், மையள்ளி அப்பி மறைத்துக்

கொண்ட வதனங்களும் அவர்கள் யார் என்பதை சொல்லாமல் சொல்லியது. அதில் ஒருத்தி ஆபிரிக்கப் பெண். அவள் நைஜயர் நாட்டைச் சேர்ந்தவளாய் இருக்கலாம் எனப் பாலன் எண்ணிக் கொண்டான். ஒருத்தி தாயிலாந்து நாட்டைச் சார்ந்தவள் போல இருந்தது. அவள் பாலன் நின்ற பக்கத்திற்கு நேர் எதிராகத் திரும்பி நின்றாள். அவளின் முகத்தை அவனால் பார்க்க முடியவில்லை. மற்றையவளின் பொன்னிறக் கேசத்தைப் பார்த்துவிட்டு சுதேசியாக இருக்க வேண்டும் எனப் பாலன் அநுமானித்துக் கொண்டான்.

அந்தப் பெண்களில் ஆபிரிக்க நாட்டைச் சார்ந்தவள் ஒரு சுதேசியுடன் பேரம்பேசினாள். சிறிது இழுபறியின் பின்பு அவனோடு பாலன் நிற்கும் திசைக்கு எதிர்திசையில் செல்லத் துவங்கினாள்.

வேறு ஒரு ஆண் வந்து அந்தக் குட்டையான பெண்ணோடு கதைக்க அவள் திரும்பினாள். அவளைப் பார்த்ததும் பாலனுக்குப் பேரதிர்ச்சியாகிற்று. அவளும் பாலனை அடையாளம் கண்டு கொண்டாள். அந்த அதிர்ச்சியில் அவள் பேரம் போசாது நிற்க அவளுடன் பேரம் பேசிய ஆண் கெட்ட வசனத்தால் அவளைத் தூஷித்துக் கொண்டு சென்றான். பாலனுக்கு ஒருகணம் என்ன செய்வது என்பது புரியாத மலைப்பாகப் போயிற்று. பின்பு தன்னைச் சமாளித்துக் கொண்டு அவளை நோக்கிச் சென்றான். அவளும் தயக்கத்தோடு சாலையின் ஓரத்தில் வந்து நின்றாள். பாலன் கிட்ட சென்றபோழுது அவள் கண்கள் பளபளத்தன. ஏன் அவள் இங்கு நிற்கிறாள்? எதற்காக இப்பொழுது அழுகிறாள் என்பது பாலனுக்கு மேலும் குழப்பமாகியது. பாலன் பரபரப்பாக அவளருகே சென்றான். ஏறியிருந்த வெறி காலால் இறங்கிக் கனதூரம் சென்றிருந்தது. அதிர்ச்சி மேல் அதிர்ச்சி அவனைத் தாக்கின.

அவளை நெருங்கிய பாலன், “உங்களுக்கு என்ன நடந்தது? நீங்கள் ஏன் இங்கே நிக்கிறீர்கள்? எனக்கு ஒண்டும் விளங்கவில்லை? எப்பிடி இது நடந்தது? எஸ்பன்

என்னவானான்?" பாலன் அவசரமாய்க் கேள்விகளை அடுக்கினான். எஸ்பன் என்றதைக் கேட்டபோது அனல் பொசுக்கிய மயிர்கொட்டியின் வேதனையோடு பாலனை நிமிர்ந்து பார்த்தாள்.

"அவனைப் பற்றிக் கதைப்பதே அருவெருப்பானது. அவன் ஒரு மிருகம்" என்றாள் அப்சரா.

அவள் குளிரில் நடுங்கினாள். குட்டைப் பாவாடையூடே அவள் தொடையும் நடுங்குவதாய்ப் பாலனுக்குத் தோன்றியது. அவனுக்கு அவளை அழைத்துக் கொண்டு தான் சாப்பிட்ட உணவகத்திற்குப் போகத் தயக்கமாக இருந்தது. அவன் அவளை அழைத்துக் கொண்டு வேறு ஒரு உணவகத்திற்குச் சென்றான்.

அங்கு மூலை ஒன்றில் சற்று ஒதுக்கமாக இருந்த மேசையில் இடம்பிடித்துக் கொண்டார்கள். எதற்காக தான் பயப்படுகிறேன் எனத் தன்னை ஒருமுறை பாலன் கேட்டுக் கொண்டான். அவனை அவமான உணர்வு இலேசாகத் தழுவிச் சென்றது.

"ஏதாவது சாப்பிடப் போகிறீர்களா?" என்று பாலன் அவளைப் பார்த்துக் கேட்டான். அவனுக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

"இல்ல. ஏதாவது சூடாக்குடிச்சா நல்லாய் இருக்கும்," என்றாள் அப்சரா.

இரண்டு காப்பிக்கு ஓடர் கொடுத்துவிட்டு மீண்டும் பாலன் அப்சராவைப் பார்த்தான். அப்சரா தனது ஜக்கெற்றைக் கழற்றி கதிரையில் கொழுவினாள். அவள் கைமூட்டில் இருந்த இரத்தக் கண்டல் பாலனின் கண்களில் பட்டது. பாலனுக்கு மீண்டும் அதிர்ச்சியாகியது. அவன் பொறுக்க முடியாதவனாய்?

"என்ன அது கண்டல்? எப்பிடி வந்தது?" என்றான்.

அவள் கண்கள் மீண்டும் கலங்கின. சிறிது நேரம் தலையைக் குனிந்துகொண்டு இருந்தாள். பின்பு

தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு, "என்ன எஸ்பன் ஏமாத்திப் போட்டான். அவன் மனிசனே இல்லை. சாப்பாடு தாறதெண்டா இந்த வேலை செய்து காசைக் கொண்டுவா என்று என்னைக் கலைக்கிறான். இல்லாவிட்டால் பட்டினி போடுறான். குடிச்சுப் போட்டு அடிக்கிறான். சிலவேளை அவனின் இரண்டு நண்பர்களும் அவனும் சேர்ந்து என்ன வலோற்காரம் பண்ணுகிறார்கள். நான் ஒரு இடமும் போக முடியவில்லை. பாஸ்போட்டையும் பறித்து வைத்திருக்கிறான். யாருக்கும் சொன்னால் நாட்டைவிட்டுக் கலைத்து விடுவேன் என்று பயமுறுத்துகிறான். நான் என்ன செய்ய முடியும்?"

அவள் அதற்குமேல் சொல்லமுடியாமல் முகத்தை மேசையில் அழுத்தியவண்ணம் தேம்பித் தேம்பி அழுதாள். அவளை எஸ்பனும் அவனது நண்பர்களும் என்ன செய்து இருப்பார்கள் என்பதைப் பாலனுக்கு கற்பனை செய்யப் பிடிக்கவில்லை.

எஸ்பனைக் கண்டால் உதைக்க வேண்டும்போல் ஆத்திரமாகிற்று. பாலனுக்கு தற்போது என்ன செய்வது என்று புரியவில்லை. தான் செய்வது சரியா என்பதில் ஏகப்பட்ட தடுமாற்றம் ஆயிற்று. அவளை ஆசுவாசப்படுத்த வேண்டும் என்கின்ற ஒரே வேட்கை. அவன் அவளது தலையை தனது கையால் மெதுவாகத் தடவினான். அவள் அதை ஆமோதிப்பவள் போல தலையை நிமிர்த்தாது சிறிது நேரம் தொடர்ந்து அழுதாள்.

பின்பு காப்பி வரவும் அழுகையை நிறுத்திவிட்டுப் பாலனைப் பார்த்து, "தாங்ஸ்" என்றாள்.

"ச். அதெல்லாம் தேவையில்லை."

"எஸ்பன் என்னை அடிக்கிறான். எல்லாரும் என்னை அடிக்கிறார்கள். கையைவிட நிறைய இடங்களில எனக்கு காயங்கள் இருக்கின்றன. சிலது வெளிக்காயங்கள். சிலது உள்காயங்கள். உங்களால் எனது வெளிக்காயங்களை மட்டுமே பார்க்க முடியும். இங்கு வந்து. கூட்டிக் கொண்டு

போறவங்கள் கூடக் கட்டிவைச்சு அடிக்கிறார்கள். கண்ட கண்ட மாதிரியெல்லாம் செய்கிறார்கள். மூச்சு வரமுடியாமல் மிருகவதை செய்பவர்களும் உண்டு. இந்தத் தொழில் சித்திரவதை. எப்பிடிப் பாய்வார்கள் என்பது தெரியாமல் அவர்களின் குகைக்குச் செல்ல வேண்டும். அங்கே ஒவ்வொரு கணமும் இரையாகப் போவதை எண்ணி நடுங்க வேண்டும். நாங்கள் தாயிலாந்தில ஒரு கிராமப் பகுதியில் வாழ்ந்தோம். எங்களின் குடும்பம் கஸ்ரப்பட்டது. எனக்கு பிறகு மூன்று தங்கைகள் உள்ளார்கள். ஒரு ஆள் என்றாலும் ஐரோப்பாவுக்கு வந்தால் கஸ்ரம் தீரும் என்பதால் எந்த வயது வித்தியாசமும் இல்லாமல் என்னை இவனோட அனுப்பி வைத்தார்கள். அங்கு இருக்கும்பொழுது எஸ்பன் நல்ல மனிசன் மாதிரி இருந்தான். இங்கே வந்தும் கொஞ்சநாள் பிரச்சினை செய்யவில்லை. பின்பு அவனுக்கு ஒரு நண்பன் பழக்கமானான். அவனும் தாய்லாந்துப் பெண்ணை மணம் முடித்து இப்பொழுது பிரிந்து இருக்கிறான் என்று முதலில் சொன்னான். பின்பு அவள் ஆக்கினை தாங்காது ஓடிவிட்டாள் என்று கேள்விப்பட்டன்.

அவன் நட்புக் கிடைத்த பின்பு எஸ்பன் கொஞ்சம் கொஞ்சமா மாறத் தொடங்கினான். நாங்கள் கிராமப்புறத்தில் வாழ்ந்தது அவனுக்குத் தெரியும். அப்படி இருந்தும் அங்கேயும் விபசாரம் செய்தியா என்று கேட்டு என்னை ஒருநாள் அடித்தான். அதுக்குப்பிறகு குடிக்கிற நேரம் எல்லாம் என்னை அடிப்பான். அவனுடைய நண்பர்கள் எதாவது சொன்னாலும் என்னை அடிப்பான்.

“அவனுக்கு இப்போது அடிக்கடி முட்டு இழுக்கிறது. எனக்குச் சாப்பாடு தரேலாது... சாப்பாடு வேணும் எண்டா போய் வேலை செய்து காசு கொண்டுவா எனக் கலைப்பான். வேலை எடுத்து தந்தா, அதை நான் செய்கிறேன் என்றேன். அதுக்கு நொஸ்க் தெரியாமல் உனக்கு வேலை தரமாட்டாங்கள் போய் தெருவில நில் என்று கலைத்தான். நான் அதுக்குப் போக மறுத்தேன். சாப்பாட்டுப் பொருள்களை எல்லாம் ஒரு அறைக்குள் வைத்துப் பூட்டிச் சாவி எடுத்துக் கொண்டான். பசி.

பசி. நான் பட்டினி கிடந்து பார்த்தேன். என்னால இயலாமல் போய்விட்டது. அவன் என்னை ஒருநாள் கூட்டிவந்து இந்தத் தெருவில விட்டிட்டுப் போனான். இப்பொழுது அவன் என்னைத் தொடமாட்டான். கொண்டு போற பணத்தை எல்லாம் பறித்துக் கொள்வான். நான் சீரழிஞ்சாலும் எனது சகோதரங்களுக்கு கொஞ்சம் உதவி செய்யலாம் எண்டு பார்க்கிறேன். அதுக்கு அவன் இடம் கொடுக்கிறான் இல்லை. நான் உழைக்கிற காசு முழுவதையும் அவன் பறிக்கிறான். அவனிடம் நிறையப் பணம் இருக்கிறது. என்னை ஏன் இப்படி வதைக்கிறான் என்பது புரியவில்லை. அவனுள் ஏதோ மனநோய் மறைந்து இருக்கிறதா என்பது எனது சந்தேகம். நான் தற்கொலை செய்து கொள்ளலாமா எண்டு யோசிக்கிறேன். எனக்கு யாரும் உதவி செய்யாவிட்டால் இன்னும் கொஞ்ச நாள்களில் நான் தற்கொலை செய்து கொள்ளவேண்டும் என்று இருக்கிறேன்.” அவள் நிறுத்திப் பாலனைப் பார்த்தாள்.

“எனக்குத் தெரியும். பணம் இருக்கிறவன் கலியாணம் என்கின்ற பெயரில மனிதனையே அடிமையாக்கிற நவீன காலம் இது. இங்க வாழ்கிற பெண்களைத் தங்கள் இஷ்டம் போல நடத்த முடியாது என்கின்ற உண்மை புரிந்த சில மனோவியாதிக்காரர்கள் ஆசியாவை நோக்கிப் படையெடுக்கிறார்கள். அவர்களிடம் நீங்கள் மாட்டிக் கொள்ளுகிறீர்கள். அதற்காக நல்லவர்களே இல்லை என்பது அர்த்தம் அல்ல. எனக்குத் தெரிந்து தாயிலாந்தில் திருமணம் செய்து வாழும் நல்லவர்களும் உண்டு. அதே நேரம் மாடு வேண்டுவது போல், பெண்களைத் தாய்லாந்து அல்லது பிலிப்பைன்ஸில் இருந்து கொண்டு வரலாம் என்று அநுபவம் பேசுபவர்களும் உண்டு. எஸ்பன் அந்தத் துஷ்டர்களில் ஒருவனாக இருப்பான் என்று நான் எண்ணி இருக்கவில்லை” என்றான் பாலன்.

“நான் இவனிடம் இருந்து விடுபட முடியுமா? உடனே தாய்லாந்திற்குச் செல்ல முடியாது. அது எல்லாருக்கும் கஷ்டமாகவும், அவமானமாகவும் இருக்கும். அவனை விட்டு

வெளியேறினால் நான் இங்கேயே தங்கி இருப்பது சாத்திய மாகுமா? எனக்கு நீங்கள் தயவு செய்து உதவுவீர்களா?"

"அவசரப்படாதே அப்சரா! நிச்சயம் நான் உனக்கு உதவி செய்கிறேன். உன்னைப் போன்று அவதிப்படுபவர்களுக்கு உதவி செய்வதற்கு அரசாங்க அமைப்பு ஒன்று உண்டு. நான் உன்னை அங்கு கூட்டிச் சென்று விடுகிறேன். மற்ற உதவிகளை அவர்கள் செய்வார்கள்" என்றான் பாலன்.

பின்பு பாலன் தனது கைத்தொலைபேசியில் இணைய இணைப்பை ஏற்படுத்தினான். அதில் அவர்களின் எண்ணை இணையத்தில் தேடி எடுத்துவிட்டு அவர்களுக்குப் போன் செய்தான். விபரங்களைக் கேட்ட மறுமுனை அவளைக் குறிப்பிட்ட முகவரிக்கு கூட்டிக் கொண்டு வருமாறு கூறினார்கள்.

பாலன் அப்சராவைப் பார்த்து "போவோமா" என்றான். அவள் எதுவும் சொல்லாது அவன் பின்னே நடந்தாள்.

17

முதியோர் இல்லத்தில் காலை வேலையென்பது மூச்சுவிடமுடியாத, முதுகெலும்பு முறிகின்ற பாரிய வேலை. அந்த யாகத்தில் பாலன் ஒன்றி, ஞாலம் மறந்து போவதுண்டு. இன்றைய வேலையில் ஞாலம் மறந்து... காலம் பறக்க பாலன் உழன்றான். பாலன் "மாறித்" என்கின்ற அந்த தொண்ணூறு வயதுக்காரியின் அறையைத் துப்பரவு செய்தான். அப்பொழுது சேர்பியாக்காரி "பாலன், பாலன்" எனச் சாத்சொல்லுவது போல அவசரமாக ஓடிவந்தாள். அழகிய வதனமும், ஆடு தனங்களுமாய் வசீகரிக்கும் தோற்றம் அவளது. அவள் அவசரமாய் வருவதுகூட அபார அழகுதான் என்கின்ற உலக ஞானம் பாசத்தை மீறி அவனை உசுப்பிற்று.

அதை மறைத்து... தன்பார்வையை நிதானித்து... அவளைப் பார்த்து... "என்ன?" என்றான் பாலன்.

"உனக்குப் போன் வந்து இருக்குது. உன்னுடைய மனைவி கதைக்கிறாள். போய்ப் போனையெடு, நான் இந்த அறைய துப்பரவு செய்துவிட்டு வருகிறேன்" என்றாள்.

"நன்றி" என்ற வண்ணம் பாலன் அந்த அறையைவிட்டு வெளியேறினான். 'சுமி இப்பொழுது எதற்காகப் போன் பண்ணினாள்? பிள்ளையளுக்கு ஏதாவது சுகம் இல்லையா? வேலைத்தலத்திற்குத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளு மளவிற்கு என்ன நடந்திருக்கும். வளர்ந்த பிள்ளைகள் வருத்தம் என்றாலும் சமாளித்துக் கொள்வார்கள்தானே? எதற்காக இப்பொழுது என்னைக் கூப்பிடுகிறாள். ஏதாவது ஒரு நொட்டுக் கண்டு பிடித்திருப்பாள்' என்கின்ற ஊமைக் கோபத்தோடு பாலன் அலுவலகத்தை நோக்கிச் சென்றான்.

அலுவலகத்திற்குச் சென்று போனை எடுத்தவன் தனது ஊமைக் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாதவனாய், "என்ன கோதாரி இப்ப?" எனப் போனில் கத்தினான்.

"ஏனப்பா எரிஞ்சு விழுகிறியள்? தேவையில்லாமல் உங்களுக்குப் போன் பண்ணுவனே? இங்க ஒரே ரென்சன் அப்பா. வீமனை யாரோ சுட்டுப் போட்டாங்களாம்" என்றாள் சுமிதா.

"என்ன?" பாலன் தான் கேட்பதை நம்ப முடியாமல் துள்ளினான்.

பின்பு தலையை ஆட்டியவண்ணம் "என்ன சொல்லுற சுமி? என்னால நம்பமுடியாமல் இருக்குது. "என்ன நடந்தது?" எனக் கேள்விகளை அடுக்கினான். புதினம் அறியும் பதட்டம் அவனைத் தொற்றிக் கொண்டது.

"அவங்களுக்கு வீமனும் சாமீகாவும் இருக்கிற இடம் தெரிஞ்சு போச்சுது. இவை வெளியால போகேக்க யாரோ அவங்கட ஆள்கள் கண்டு தகப்பனுக்குத் தகவல் கொடுத்து

இருக்கவேணும். அவர் யாருக்கோ காசு கொடுத்துச் செய்விச்சு இருக்கிறார் போல இருக்குது. இவை வெளியால போயிட்டு வீட்ட வரேக்க காத்திருந்து சுட்டு இருக்கிறாங்கள். அவங்கள் சுடேக்க ஆள்கள் வந்ததால கனநேரம் மினக்கெடாமல் ஓடிட்டாங்களாம். வீமனுக்குக் காயமாம். துரொண்ணியம் கொஸ்பிற்றல்லை வைச்சிருக்கினமாம். சாமீகா தப்பீட்டாளாம். அவளைப் பொலீஸ் கூட்டிக் கொண்டு போய்ப் பாதுகாப்பான இடத்தில வைச்சிருக்குதாம். வீமனுக்கும் ஆஸ்பத்திரியில பாதுகாப்பு போட்டிருக்கினம் எண்டு போனில சொன்னவை. இங்க சித்தப்பாவும் சித்தியும் அழுது கொண்டு இருக்கினம். நான் அவைக்கு "நோர்வேஜியன்"இல ரிக்கெற் செய்து வைச்சிருக்கிறன். மூண்டு மணிக்குப் பிளைற். அவைய எயாப்போட்டில கொண்டே விடவேணும் அப்பா. நீங்க என்ன எண்டாலும் சொல்லி லீவு எடுத்துக் கொண்டு வீட்ட ஓடிவாங்க. என்ன... நான் சொல்லுறது விளங்குதே?" என்றாள்.

"ஓ... ஓ... நான் கெதியா வந்து சேருறன்" என்றான் பாலன்.

மதிய இடைவேளைக்குப் பின்பு அதிக வேலை இருக்காது என்பதால் தலைமைத்தாதி பாலன் செல்வதற்கு ஒப்புக் கொண்டாள். அவளுக்குப் பொதுவாக முஸ்லீம்களைப் பிடிக்காது. முஸ்லீம்களை மட்டும் பிடிக்காதா அல்லது வெளி நாட்டவரையே பிடிக்காதா என்பதில் பாலனுக்கு வலுவான சந்தேகம். பாகிஸ்தானியர் வீமனைச் சுட்ட செய்தியைச் சொன்னவுடன் தலைமைத் தாதியின் முகம் இருண்டு போய்விட்டது. பின்பு பாலனைப் பார்த்து, "அவர்கள் ஆபத்தானவர்கள்" என்றாள்.

"எல்லா இனத்திலும் இப்பிடியான ஆட்கள் இருப்பார்கள்" எனப் பாலன் அவள் கருத்தைத் திருத்தினான்.

"நீ சொல்லுறது உண்மைதான். என்றாலும் இவர்கள் முரட்டுத்தனமானவர்கள். பாகிஸ்தானில் பெண்களை கௌரவத்திற்காய்க் கொலை செய்கிறார்கள். உயிரோடு

எரித்த பெண்ணின் வாக்குமூலத்தை நான் தொலைக்காட்சியில் பார்த்து இருக்கிறேன். முரட்டுத்தனமான மதமும், கலாசாரமும் அவர்களுடையது'' என்று அவள் தனது கருத்திற்கு வலுவேற்றினாள். பாலன் இதை எப்படி மறுப்பது என்கின்ற தடுமாற்றத்தில் போசாது நின்றான். அதைப் பார்த்த தலைமைத்தாதி, "சரி, நீ போ பாலன்'' என்று விடை கொடுத்தாள்.

பாலனைக் கண்டவுடன் சித்தப்பா அவ்வளவு நேரமும் சித்திக்குச் சொல்லிக்கொண்டு இருந்த சமாதானத்தையும் மறந்து, குலங்கிக் குலுங்கி அழுதார். அதைப் பார்த்த பாலனுக்குப் பெரிய சங்கடமாய்ப் போய்விட்டது. பாலன் அவரைப் பார்த்து, "அழாதேங்க சித்தப்பா. அது ஒண்டும் நிச்சயம் ஆபத்தாய் இருக்காது. நீங்கள் தேவையில்லாமல் பயப்பிடாதேங்க.'' என்றான். தனது வார்த்தையில் தனக்கே நம்பிக்கையில்லா ஒரு உணர்வு அவனை ஊடுருவியது.

செய்தி வந்ததில் இருந்து செத்தவீடு கொண்டாடிய தோற்றத்தில், வீடும், வீட்டில் இருப்பவர்களும் தோன்றினார்கள். இவர்களை இப்படியே கூட்டிச் செல்வது இங்கிதமாய் இருக்காது எனப் பாலன் நினைத்தான்.

அவன் சித்தப்பாவையும் சித்தியையும் பார்த்து, "எழும்புங்கோ இரண்டு பேரும். போய்க் குளியுங்க. குளிச்சிட்டு ஏதாவது சாப்பிடுங்க. நான் உங்களைக் கொண்டுபோய் எயாப்போட்டில விடுகிறன். துறண்ணயத்தில உங்களை என்ர பிரண்ட் சோமு வந்து கூட்டிக்கொண்டு போவான்'' என்றான்.

அவர்கள் அதிர்ச்சியில் இருந்து விடுபட முடியாதவர்களாய் சேற்றில் புதையுண்ட வண்டில் போல அசையாது இருந்தார்கள்.

பாலன் சுமியைப் பார்த்து, "சுமி சொல்லு. அவைய எழும்பிப் போய்க் குளிச்சு, வெளிக்கிடச் சொல்லு'' என்றான்.

"சித்தி எழும்புங்கோ'' என்ற வண்ணம் சுமிதா அவவின் கையைப் பிடித்துக் கொண்டாள். சித்தி மனமில்லாது எழுந்து குளியல் அறையை நோக்கி சென்றாள்.

“எனக்குப் பயமா இருக்குது பாலன். வீமன்... வீமன்...” சித்தப்பாவின் தொண்டை அடைத்து, அழுகை வெடித்து, கண்கள் பனித்தன. பாலனுக்கு மீண்டும் சங்கடமாய் போய் விட்டது. பாலன் என்ன செய்வது என்பது புரியாது நெளிந்தான். பின்பு சமாதானமாய் ஏதாவது சொல்ல வேண்டும் என்பதற் காக, “கவலைப்படாதேங்க சித்தப்பா. எல்லாம் இனி நல்லது நடக்கும்” என்றான்.

“எனக்கு இருக்கிறது ஒரே ஒரு ஆம்பிளைப்பிள்ளை. அதையும் விடுறாங்கள் இல்லை” அவருக்கு மீண்டும் தொண்டை அடைத்தது. கவலை வெடித்தது.

பின்பு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு, “அவங்கள் அடிபட்ட பாம்புகள் ஆட்டம்... விடமாட்டாங்கள் போல இருக்குது.”

“இப்ப பொலீஸ் கேஸாப் போச்சுது. இனி பயத்தில விட்டிடுவாங்கள். பயப்பிடதேங்க. சுட்டவங்கள் இப்ப பாகிஸ் தானுக்குப் போயிருப்பாங்கள்” எனப் பாலன் அவருக்குத் தென்பூட்டினான்.

குளித்துவிட்டு வந்து சாப்பாட்டு மேசையில் சித்தப்பா இருந்தார். சித்தப்பாவுக்கு முன்பே சித்தி வந்து சோபாவில் இருந்தா. குளித்துவிட்டு வந்தாலும் அவர்கள் முகங்கள் கவலையில் இருண்டே கிடந்தன. புத்திரசோகத்திற்குப் புத்திமதி யெல்லாம் சொல்லமுடியாது என்கின்ற உண்மை புரிந்த பாலன், மௌனமானான். சுமி தட்டுகளை எடுத்துவைத்து சாப்பாடு பரிமாறத் தொடங்கினாள். மீன்குழம்பு வாசம் பாலனுக்குப் பசியைக் கிளறினாலும் சித்தப்பாவையும் சித்தியையும் பார்த்தபொழுது கை, வாயைப் பார்த்துக் கடையடைப்புச் செய்தது.

இதைப் பார்த்த சுமி, “சாப்பிடுங்கோ. இப்பிடியே இருந்தா எயாப்போட்டுக்குப் போறேல்லேயே?” என எல்லோரையும் அவசரப்படுத்தினாள்.

சித்தப்பா தன்னை அடக்க முடியாமல் மீண்டும் குலுங்கினார். இப்பொழுது சித்தி சித்தப்பாவுக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டு இருந்தாள்.

விமானநிலையத்தை அடைந்தபொழுது வானம் தரை யில் சங்கமித்து இருந்தது. கார் ஓட்டுவதே விமானம் ஓட்டுவதான உணர்வைத் தந்தது. ஒஸ்லோவின் விமான நிலையத்தில் புகார் இறங்குவது புதினம் இல்லை. அது இன்றும் வானத்தை மண்ணிற்கு கொண்டு வந்தது பாலனுக்கு எரிச்சலைத் தந்தது. விமானநிலையத்திற்குள் அமளியாகத்தான் இருக்கும் எனப் பாலன் எண்ணிக் கொண்டான்.

“என்ன பாலன் இப்பிடிப் புகாரா இருக்குது...” எனச் சித்தப்பா கவலைப்படத் துவங்கினார்.

“அதுதான் தெரியல்ல சித்தப்பா. உள்ள போய்ப் பாப்பம்.”

“பாவியார் போற இடமெல்லாம் பள்ளமும் திட்டியுமாய் இருக்கும் போல இருக்குது.” சித்தப்பா அலுத்துக் கொண்டார்.

பாலன் மேல்தளத்தில் இருந்த தரிப்பிடத்தில் காரை நிறுத்தினான். பின்பு ஞாபகமாக அதற்கான அனுமதிச்சீட்டை எடுத்து வைத்துவிட்டு இருவரோடும் விமானநிலையத்திற்குள்ளே சென்றான்.

அறிவிப்பு மின்பலகைகளில் பல விமானங்கள் தாமத மாகிக் கொண்டிருப்பதாகக் காட்டின. பாலன் அவசரமாகத் தங்களது விமான எண்ணைப் பார்த்தான். அவனை அதிர்ச்சி தாக்கியது. அந்த விமானம் இரத்து செய்யப்பட்டுள்ளதாக மின்பலகை காட்டிற்று.

அவன் பணிப்பெண்களிடம் சென்று விளக்கம் கேட்டான். அவர்கள் புகார் காரணமாக விமானம் எடுக்க முடியாமைக்கு வருந்துகிறோம் என்றனர். நாளைக்கு போகும் விமானத்தில் நிச்சயம் இடம் தருவதாகவும் கூறினர். அதற்கு விருப்பம்

இல்லாவிட்டால் கட்டிய பணம் திருப்பித் தரப்படும் என்று கூறினார்கள்.

பாலனுக்கு மேற்கொண்டு என்ன செய்வது என்பது புரியவில்லை. சித்தப்பாவும் சித்தியும் பரிதாபமாய் விழித் தார்கள்.

"பார் தம்பி அவன் ஏலாமல் கிடக்கிறான். போய்ப் பார்க்கக் கூடக் கடவுளுக்குப் பொறுக்குதில்லை" அவர் மீண்டும் கலங்கினார்.

"கவலைப்படாதேங்க சித்தப்பா. ஒஸ்லோவுக்குப் போய் றெயின் ரிக்கெற் இருக்கா எண்டு பார்ப்பம்."

"எங்களுக்கு முதல் எவ்வளவு சனம் போயிருக்கும். அதில இடம் கிடைக்குமா எண்டதும் ஐமிச்சம்தான்" என்றார் சித்தப்பா. பாலனுக்கும் அது நியாயமாகவே பட்டது. சித்தப்பாவினால் கார் ஓட்ட முடியாது. அவருக்கு கார் ஓட்டிக்கொண்டு இருக்கும்பொழுது மாரடைப்பு ஒரு முறை வந்திருந்தது. அந்த விபத்தில் அவர் அருந்தப்பில் சில காயங்களோடு தப்பித்துக் கொண்டார். அதன் பின்பு பயம் அவரை அழுத்திப் பிடித்துக் கொண்டது. அதில் இருந்து அவருக்கு சாரதி யின் ஆசனத்தில் அமர்வதற்கு ஒத்துக்கொள்ளாது. அதை நினைத்தாலே கைகால் நடுக்கமெடுக்க, வியர்வை குடம் குடமாய் ஓடும். வீமன் இருக்கும் வரைக்கும் அது ஒரு பிரச்சனையாக இருக்கவில்லை. சித்தி கார் பழகியிருக்கலாம். என்ன செய்வது?

பாலன் சிறிது நேரம் யோசித்தான். பின்பு சித்தப்பாவையும் சித்தியையும் பார்த்து, "வாங்க முதல்ல ஒஸ்லோ போவம். ஒண்டும் கிடைக்காட்டி உங்களை நானே கொண்டு போய் விடுகிறன்" என்று கூறிவிட்டு காரை ஒஸ்லோ நோக்கி ஓட்டினான்.

குரண்லாண்கலரிக்குப் போகும் பொழுது பாலனுக்கு அவ்வளவாக நம்பிக்கை இருக்கவில்லை. அங்கு சென்று இடம் கேட்டபோது அதிர்ஷ்டவசமாக பிற்பகல் ஏழு மணிக்குச் செல்லும் பேருந்தில் இடம் இருப்பதாகக் கூறினார்கள். பாலன்

அவசரமாக இரு அனுமதிச்சீட்டுகளை வாங்கிக் கொண்டான். பஸ்சிற்கு நேரம் இருந்தது. மீண்டும் வீட்டிற்குச் சென்று தங்கி விட்டுத் திரும்பி வருவதே உசிதமாகப்பட்டது.

மீண்டும் அவர்களை வழியனுப்ப வரும் பொழுது சுமியும் வந்திருந்தாள். அவர்களை அனுப்பிவிட்டு வீடு வந்த பொழுது அடித்துப் போட்டதாய் அவனை அலுப்பு ஏறி மேய்ந்தது. சுமியைப் பார்க்கவே விருப்பமற்றவனாய் கட்டிலில் போய் விழுந்தான்.

18

சனிக்கிழமை என்பது விடுமுறை நாள் என்னும் போர்வை போர்த்திய சம்பளம் பெற்றுக்கொள்ளாத வேலை நாள். நவீன சந்தைகளுக்குள் அலைந்து திரிவது வேலை செய்யப்போவதும் அலுப்பான காரியம். கால்கள் ஓய்ந்து விடும். மனது சலித்துக்கொள்ளும். சுமியோடு பொருள்கள் வாங்கப்போவதும் பாலனுக்குச் சோதனைக் காலம். அவள் ஐந்து சதத்திற்காய் அரை மணித்தியாலம் அலைபவள். அவளுக்குப் பின்னால் வாலாக அலைந்து, கால்கள் நோக, கடுப்பு தலைக்கேறும். அந்தரங்க இடங்களெல்லாம் அப்பொழுது தீ பற்றிக்கொள்ளும். பல்லைக் கடித்துக்கொண்டு பராக்குப் பார்ப்பதாய்ப் பாலன் பாவனை காட்டிச் செல்லுவான். சுமிதா ஏதாவது மலிவு விளம்பரங்கள் தேடிப்பிடித்து வைத்திருப்பாள். முதலில் அங்கு போகவேண்டும். சாரதியும் வாகனமும் தயாராக இல்லாவிட்டால் சாப்பாட்டில் புரளி ஏற்படலாம் என்கின்ற பயம் பாலனுக்கு. பாலன் தயாராக நிற்பான்.

மலிவு விற்பனைக் கடைகள் தேடி முடிந்தபின்பு, தமிழ்கடைக்குச் செல்ல வேண்டும். இலங்கை என்கின்ற விலாசம் ஒட்டியதற்காக இங்கு பொருள்கள் இரண்டு மடங்கு விலையாக இருக்கும். ஐந்து சதத்திற்கு அலைபவள் இங்கு

அதை மறந்து போவாள். பாலன் அது பற்றியெல்லாம் சுமி யிடம் கதைப்பதில்லை. கதைக்குக் கதை சினத்தையே உற்பத்தியாகும் என்கின்ற ஞானம், மௌனத்தை தேர்ந் தெடுக்கச் செய்தது. சிலவேளைகளில் அந்த மௌனம்கூட எரிமலையில் படிந்த பனிப்படலமாகத் தொலைந்து போவ துண்டு. அப்பொழுது பாலன் உருத்திரத்தாண்டவம் ஆடுவான். அது வீட்டில் நடந்தால் மாமி காதைப்பொத்திக் கொண்டு தனது அறைக்குப் போவாள். சுருதியும் சுபனியும் தங்கள் அறைக் கதவுகளை இறுக்க சாத்திக்கொள்வார்கள். சுமியின் ஒரு பாட்ட அழுகையோடு அந்த நாள் சண்டை முற்றுப்பெறும். உடம்பில இருக்கிற ஊத்தையும் போகாது, புருசனுக்கும் பெண்டாட்டிக்குமிடையில சண்டையும் ஓயாது என்பது சுமியின் புதிய தத்துவம். மனிதன் மனிதனாய் இருக்கும் வரைக்கும் உணர்ச்சிகளால் பந்தாடப்படுகிறான் என்பது பாலனின் அநுபவம். உணர்ச்சியைக் களைந்து அவன் ஞானி ஆவதாலோ அல்லது மிருகமாதலோ அந்த அவதியில் இருந்து விடு படலாம் என்பது அவன் எண்ணம்.

தமிழ்கடை முடிந்ததும் நோர்வேஜிய கடைக்குச் செல்ல வேண்டும். சனிக்கிழமையில் பாலன் சுமியுடன் செல்லும் நோர்வேஜிய கடைக்குப் பெயர் “றேமா 1000.” நோர்வே மொழியில் ஆயிரத்தை தூசன் என்பார்கள். இந்தக் கடையில் பொருள்கள் மலிவாக இருக்கும் என்பது கருத்துக் கணிப்பு சுமி அதை வலுவாக நம்பினாள். கடைகள் எல்லாம் ஏறி யிறங்கிவர மணி மூன்றாகிவிடும். வயிறு எரி குழம்பாய்க் கொதிக்கும். மனிதனை மூன்று தேவைகள் அழுத்திக் கொண்டே இருக்கிறன. அது அரசனென்றும் ஆண்டியென்றும் பிரித்துப் பார்ப்பதில்லை. அதில் ஒன்று பசி. அது பாலனைப் பிடிக்கும் பொழுது அவனுக்கு நடுக்கமெடுக்கும்.

வீட்டில் இருக்கும் மாமி தேநீர் அருந்திப் பசியைத் தணித்துக் கொள்ளுவாள். மேற்கொண்டு நேரம் போவதற்காய் ஒவ்வொரு அலைவரிசையாக மாற்றி மாற்றி அலுத்துப் போய்த் தமிழ்ப்பாட்டு பார்க்கத் தொடங்கி இருப்பாள். என்ன

தான் வயது போனாலும் இளசுகளின் நெளிப்பும் கிளு கிளுப்பும் இரசிப்புத் தருகிறது. பாவம் மாமி என்ன செய்வாள் என மாமிமீது அவனுக்கு இரக்கம் வருவதுண்டு. ஊரில் ஓடித்திரியும் அரிய வாய்ப்பை மகளுக்காகத் துறந்து, ஐரோப்பிய அழகிய சிறைகளில் வாழும் அவலத்தை ஏற்றுக் கொண்டவள் என்கின்ற பரிதாபம் சுரக்கும்.

அன்று கடைகளுக்குச் சென்றுவிட்டு வந்தபோது சல்பூரிக் அமிலம் ஊற்றியதாய் வயிறு புகைந்தது. வயிறு புகையும்பொழுது சினமும் சேர்ந்து புகையும். சுமி உடுப்பு மாற்றச் சென்றவள், சுருதியோடு ஏதோ வாக்குவாதப்பட்டாள். பாலனுக்கு புகைச்சல் தீ பற்றும் நிலையை அண்டியது. மாமி அவனைப் பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு தனக்கும் அவனுக்கும் தேநீர் தயாரித்துக் கொண்டுவந்து மேசையில் வைத்தாள்.

பின்பு பாலனைப் பார்த்து, “எடுத்துக் குடிதம்பி” என்றா. பாலனுக்கு முதலில் கூச்சமாக இருந்தது. தான் மாமிக்கு தேநீர் வைத்துக் கொடுத்து இருக்கவேண்டும். மாமி தேநீர் தயாரிக்கப் பார்த்துக்கொண்டு இருந்தது மனிதாபிமானத்தைக் காலில் போட்டு மிதித்தாக மனச்சாட்சி எட்டி உதைந்தது.

“என்ன தம்பி யோசிக்கிறியள்? ரீயக் குடியுங்கோ. முதல் கொஞ்சம் பசியாறட்டும்.” பாலனைப் புரிந்துகொண்ட மாமி அவனை மீண்டும் உசுப்பினாள். பாலனின் பசி அதற்குமேல் சிந்தனைக்கு இடம்கொடுக்க மறுத்தது. அவன் தேநீரை எடுத்து பருகத்தொடங்கினான். அப்பொழுதுதான் அவனது கைத்தொலைபேசி அதைக் கெடுப்பதுபோலச் சிணுங்கியது.

மறுமுனையில் குணேஸ் பதட்டமாகப் “பாலன்... பாலன்” என்றான். அவனது குரலில் பதட்டத்தோடு கலக்கமும் சேர்ந்து இழையோடியது. குணேஸ் இப்படிப் பதறியடித்துத் தொலைபேசியில் பாலனோடு கதைப்பது இதுதான் முதன் முறை. பாலனுக்கு அது குழப்பத்தைத் தந்தது. என்ன நடந்தது இவனுக்கு என்கின்ற கேள்வி மெல்ல அரித்தது.

"என்ன ஏதும் பிரச்சனையே?" என்றான் பாலன்.

"எல்லாம் சீர்கேடாப் போச்சுது. மாமியும் மாமாவும் பைத்தியம் பிடிச்சுப்போய் நிற்கினம்." அவனது குரலில் பதட்டத்தோடு விரக்தியும் இழையோடியது.

"என்ன நடந்தது? ஏன் இப்பிடிக் கதைக்கிறாய்?"

"அரண் 'ஒஸ்மார்க்காவுக்கு' நடந்து போட்டு வாறன் எண்டு காலமை பத்துமணிக்குப் போனான். இன்னும் திரும்பி வரேல்லை. ஓரே ரென்சனா இருக்குது. என்ர பிள்ளையள் அவனோட போகக் கேட்டவங்கள். அவன் வேண்டாம் எண்டிட்டுத் தனிய போயிட்டான். அவனுக்கு ஒஸ்லோ புதிசுதானே? அதுவும் உந்தக் காட்டுக்க உதுக்கு முதல் அவன் போகேல்ல. அவனிட்ட மெபைல் இருந்தது. அதுக்கு அடிச்சுப் பாத்தா ஓ.்.ப் பண்ணி இருக்குது எண்டு சொல்லுது. ஓ.்.ப் பண்ணி இருக்குதா அல்லது கவரேச் இல்லையா எண்டு தெரியேல்ல. எனக்கும் பயமா இருக்குது. அவன் ஒரு மாதிரி... தெரியும்தானே உமக்கு? ஏதாவது செய்து போடுவானோ எண்டு குழப்பமா இருக்குது பாலன். பொலிசுக்கு அடிச்சு இருக்கிறம். வாறம் எண்டு இருக்கிறாங்கள். நான் ஒருதரம் தேடிப்பாத்திட்டு வந்திட்டன். மலையும் காடுமா இருக்கிற இடத்தில நான் எங்கையெண்டு தேடுறது? என்ன செய்யிறது எண்டு எனக்குத் தெரியேல்லப் பாலன்."

"பயப்பிடாதையும். உந்தக் காட்டுக்க நிறைய வழி காட்டியள் இருக்குது. அவன் நிச்சயமா திரும்பி வருவான். தைரியமா இரும். மாமா மாமியையும் ஆறுதல்படுத்தும். நான் இப்ப வாறன்."

"வா பாலன். நீ வந்தாக் கொஞ்சம் ஆறுதலா இருக்கும் எண்டுதான் போன் பண்ணினான்."

பாலன் அவசரமாக மீதித் தேநீரை அருந்திவிட்டுச் சுருதியோடு மோதிய விசை தாளாது கீழே வந்த சுமியிடம் "நான் குணேஸ் வீட்ட போட்டு வாறன்" என்ற வண்ணம் வெளியே சென்றான்.

"ஏனம்மா இந்த மனுசன் சாப்பிடாமல் இப்ப எங்க ஓடுது?" என்று சுமி தாயைப் பார்த்துக் கேட்டாள்.

"குணேஸ் வீட்டுக்கு வந்த பெடியனைக் காணேல்ல எண்டு போன் செய்தவன். அதுதான் தம்பி ஓடுறார்."

"அட கறுமமே?" என்ற வண்ணம் சுமி சமையல் அறைக் குள் சென்றாள். சுருதியும் சுபனியும் வளர்ந்துவிட்டாலும் சமையல் கற்றுக் கொள்வது பாவம் என்கின்ற கணக்கில் சமையல் நேரத்தில் தமது அறைக்குள் அடைந்து கொள்வார்கள். சுமிதா இப்போதும் பிள்ளைகளுக்கு ஊட்டி விடத் தயாராக இருந்தாள். அவளுக்கு அவர்கள் இன்னும் குழந்தைகள் என்பதான கற்பனை. அவர்களோ சமையலையும் வீட்டு வேலையையும் தவிர மற்றவை அனைத்திலும் தாங்கள் வளர்ந்தவர்கள் என்பதை நிரூபிக்கப் போட்டி போட்டார்கள்.

காட்டிற்கும் நாட்டிற்கும் எல்லையாக அடுக்குமாடிக் குடியிருப்புகள் முளைத்த பகுதியில் குணேஸின் வீடு இருந்தது. அவனது வீட்டில் இருந்து சிறிது தூரம் நடந்து சென்றாலே காட்டுக்குள் சென்றுவிடலாம். அந்தக் காடு பயங்கரம் ஊட்டாத பசுமை கொண்டது. அங்கு கரடியைக்கூட யாரும் கண்டதில்லை. வளர்ப்புக் குதிரைகள் உலாவுவது உண்டு. கண்டது ஓநாயா அல்லது நாயா என்கின்ற குழப்பம் சிலவேளை எழுவதுண்டு. கண்ணுக்குத் தென்படுவது எல்லாம் ஊசியிலை மரங்கள், சிறிய குன்றுகள், ஆழமான குழிகள், சிறிய பள்ளத்தாக்குகள், சிறிய அருவிகள், குறிப்பிடத்தக்க ஏரிகள், வியர்க்க வியர்க்க ஓடும் மனிதர்கள், மலம் கழிக்கும் நாய்கள், ஊன்று தடியோடு உலாவரும் வயோதிபர்கள்...

பச்சையாக இருக்கும் அந்தப் பகுதியில் நடந்து செல்வது புத்துணர்ச்சி ஊட்டி, உடலுக்குள் புதுவேகத்தைப் புகுத்திவிடும். காடுகள் அழகை ஒருபக்கமும், ஆபத்தை மறுபக்கமும் வைத்திருப்பவை. எல்லைகள் தாண்டினால் இசகுபிசகாய் மாட்டிக் கொள்வது விதியாகும். திசை தெரியாது குன்றுகளில் ஏறியிறங்க தொடங்கினால் சிக்கலில்

மாட்ட நேரிடும். அப்படித்தான் அரண் எங்காவது மாட்டிக் கொண்டிருப்பான் என்கின்ற நினைவுகளோடே பாலன் குணேஸ் வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

பாலன் வரும்பொழுதே பொலீஸ் அங்கு வந்து விட்டது. அவர்களது வெள்ளை வாகனத்தில் நீலவிளக்குகள் அவசரமாய் விட்டுவிட்டு மின்னின. பொலிஸ் அம்புலன்ஸையும் வரவழைத்து இருக்க வேண்டும். அது குருத்துப் பச்சை நிறத்தில் வந்து நின்றது. அதிலும் நீலவிளக்குகள் அவசரமாய் விட்டுவிட்டு மின்னின. பொலீஸ் தங்களது தொடர்புசாதனம் மூலம் வேறு யாருடனோ தொடர்பு கொண்டார்கள்.

குணேஸையும் மாமா-மாமியையும், வேறு சில பொலிஸார் ஏதோ விசாரித்தார்கள். தான் விமான நிலையத்தில் இருந்து அழைத்து வரும்பொழுது இப்படியான சிக்கலில் அவர்கள் மாட்டிக்கொள்வார்கள் என்று அவன் கற்பனை செய்திருக்க வில்லை. இப்பொழுது மனிதக் கற்பனைகளை மீறியும் உலகத்தில் பல காரியங்கள் நடந்தேறும் என்பதைப் பாலன் உணர்ந்து கொண்டான். பாலன் விசாரணை முடியும் வரையும் அவர்கள் அருகே செல்லவேண்டாமென முடிவு செய்தான்.

சிறிது நேரம் அங்கு நின்றிருந்த பாலன் "எங்கே அகிலாவைக் காணவில்லை?" என்கின்ற அங்கலாய்ப்போடு குணேஸின் வீட்டின் பக்கம் திரும்பிய பொழுது அகிலா பிள்ளைகளோடு பாலனை நோக்கி வந்தாள்.

"என்ன பாலன் அண்ணா இங்க நிக்கிறியள்? சுமியக்கா வரேல்லையா? சரி பரவாய் இல்ல, நீங்கள் வீட்ட வாங்க. குளிருக்க எவ்வளவு நேரம் நிக்கப் போறியள்? அவரும் மாமா மாமியும் பதினொருமணியில இருந்து தேடிக் களைச்சுப் போச்சினம். அவையும் இனி வீட்டதான் வருவினம். அவங்கள் ஏதோ கேட்கிறாங்கள், கேட்டுப்போட்டு விடுவாங்கள். வாங்க நாங்கள் போவம் பாலன் அண்ணா" என்றாள்.

"சுமி சமைச்சுக் கொண்டு நிக்கிறாள். பொலிஸ் நான் உங்கட வீட்டுக்க வாறது பற்றி ஒண்டும் சொல்லாதே?"

“பொலீஸுக்காக நான் இந்தப் பிள்ளையளையும் கூட்டிக் கொண்டு எங்க போவன் அவை தங்கியிருக்கிற அறைய ஒருக்கா வந்து பாத்திட்டுப் போனவங்கள். யாரையும் வரவேண்டாம் போகவேண்டாம் எண்டு எதுவும் சொல்லேல்ல. சீ வந்த இடத்தில இப்பிடியாப் போச்சுது பாருங்க பாலன் அண்ணா. பாவம் அவையள். ஏற்கனவே மகனைப் பற்றின கவலை. இப்ப அது நரகவேதனையாப் போயிட்டுது.”

“நினைத்ததெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதும் இல்லை... இல்லையா அகிலா?”

“தெய்வம் துணையிருந்தாலும் மனிசன் நினைக்கிறமாதிரி வாழ்க்கை அமைஞ்சிடாது எண்டு புரியுது பாலன் அண்ணா.”

“ம்... உண்மைதான்” பாலனின் மனது கவலையில் மூழ்கியது. அகிலாவின் முகத்திலும் அதிர்ச்சியும், வருத்தமும் அப்பிக் கிடந்தன. பாலன் அசையாது நின்றான். அகிலா “குளிருது அண்ணா” என்றாள் கெஞ்சுவதுபோல. பாலன் குணேஸின் வீட்டிற்குப் போவதற்குத் திரும்ப எண்ணிய பொழுது ஒரு பொலீஸ் வாகனம் வேகமாக வந்து நின்றது. அதில் இருந்து சில பொலீஸ் அதிகாரிகள் முதலில் வெளியே வந்தார்கள். அவர்கள் ஏற்கனவே நின்றிருந்த அதிகாரிகளோடு ஏதோ கதைத்தார்கள். பின்பு அந்த வாகனத்திற்குள் நின்றிருந்த ஒரு மோப்ப நாயையும் குணேஸையும் அழைத்துக் கொண்டு அவனது வீட்டிற்குச் சென்றனர். அதைப் பார்த்த பாலனும் அகிலாவும் அவர்களை நோக்கிச் சென்றனர்.

அந்த நாய் தாய்பசுவின் மடியில் ஊட்டப்போகும் மாட்டுக்கன்றுகளைப் போல அந்த அதிகாரிகளை இழுத்துக் கொண்டு சென்றது. பின்பு குணேஸ் அவர்கள் தங்கியிருக்கும் அறையைக் காட்ட, பொலீஸ் அதிகாரிகள் நாயுடன் அதற்குள் சென்றனர். சிறிது நேரத்தில் மூர்க்கம் கொண்ட நாய் அந்த அதிகாரிகளையும் இழுத்துக்கொண்டு வெளியே ஓடியது.

அகிலா சமையல் அறைக்குச் சென்று தேநீர் தயாரிக்கத் துவங்கினாள். குணேஸின் மாமி அழுதபடி வந்து சோபாவில்

இருந்தா. மாமாவின் கண்கள் இலந்தைப் பழங்களாய்ச் சிவந்து மினுமினுத்தன. அவரும் வந்து மாமிக்குப் பக்கத்தில் இருந்து, மாமியை ஆதரவாக அணைத்துக் கொண்டார். அவர் அணைப்பு மாமிக்கு மேலும் கவலையை ஊட்ட, மாமி வாய்விட்டுக் குலுங்கிக் குலுங்கி அழத்தொடங்கிவிட்டா.

"அழாதேங்க மாமி. அரண் எங்கையும் நிற்பான். இப்ப பொலிஸ் கூட்டிவரும். சும்மா கவலைப்படாதேங்க. உது என்ன பெரிய காடே, உதுக்க துலைஞ்சு போறத்துக்கு?. பயப்பிடாதேங்க. அழாதேங்க" எனச் சமாதானப்படுத்தினான் குணேஸ். மாமி அவனது சமாதானத்தைக் காதில் போட்டுக் கொள்ளாது தொடர்ந்தும் அழுதா. குணேஸ் என்ன செய்வது என்று தெரியாது நின்று தவித்தான்.

அப்பொழுது ஹெலி ஒன்று தாழ்வாகப்பறக்கும் சத்தம் கேட்டது.

"வா பாலன் வெளிய போய்ப் பாத்திட்டு வருவம்" எனக் குணேஸ் பாலனைப் பார்த்து கூறிவிட்டு வெளியே புறப்பட்டான். அவனுக்கு அந்த இக்கட்டில் இருந்து தப்பித்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிற்று.

அப்பொழுது தேநீரோடு வந்த அகிலா, "என்னப்பா இது? ரீயும் குடிக்கவிடாமல் எங்க பாலன் அண்ணாவக் கூட்டிக் கொண்டு போறியள்? ரீயக் குடிச்சிட்டு வெளியால போங்க" என்றாள்.

"ஓ பாலன் அண்ணேல உனக்கு நல்ல அக்கறைதான்" என்று மற்றைய நாள் என்றால் குணேஸ் வாடல் பகிடி ஒன்று விட்டு இருப்பான். இன்றிருந்த மனநிலையில் அவனுக்கு எதுவும் சொல்ல வரவில்லை. அவன் போசாது ரீயை எடுத்துக் குடித்தான்.

"என்ன 'ஹெலி' போற சத்தம் கேட்குது. அதுகும் தேடப் போகுதோ?" எனக் குணேஸைப் பார்த்துப் பாலன் கேட்டான்.

"ஓ "கீற்சேர்சிங்" கமறாவால தேடப் போறாங்களாம். அதுதான் ஹெலி. அதோட "றெட்குறொஸ்"க்கும் அறிவிச்சு

இருக்கிறாங்கள். அவங்களும் வருவாங்கள். கடவுளாணை என்னால ஏலாமல்தான் இருக்குது. அதுக்காக வீட்டுக்கையும் நிற்க மனது கேக்குதில்லை. மாமி வேற அழுது கொண்டு இருக்கிறா. பார்க்கப் பைத்தியம் பிடிக்குது.''

''சரி அப்ப போய்ப் பாத்திட்டு வருவம்'' என்றான் பாலன். இருவரும் அவசர அவசரமாய் தேநீரை அருந்திவிட்டு வெளியே புறப்பட்டுச் சென்றனர்.

இவர்கள் வெளியே சென்ற பொழுது சிவப்பு நிறத்தில் முழு அங்கி அணிந்த வண்ணம் இருபது றெட்குறோஸ் ஆள்களும் தேடும்பணிக்குத் தயாராகி விட்டார்கள். செய்தி கேட்டுச் சில ஊடகங்களும் வந்துவிட்டன. விடுப்பு பார்ப்பதற்குச் சனங்கள் கூடியிருந்தனர்.

சிறிது நேரத்தில் றெட்குறொஸ் அணி காட்டுக்குள் இறங்கிச் சென்றது.

அரண் அந்தக் காட்டிற்குள் சென்றபோழுது சுவர்க்கம் ஒன்று வாய்திறந்து உள்ளே வாவென்று அழைத்தது. ''சுதந்திரம் சுதந்திரம்'' என ஆர்பரித்த வண்ணம் அவன் ஆவலோடு அந்தக் சுவர்க்கத்திற்குள் சென்றான். அங்கு இருப்பதற்கு வசதியாகக் கல்லாலான இருக்கை ஒன்று இருந்தது. சுவர்க்கத்தில் கல்லிருக்கையா? சரி பரவாயில்லை என்று எண்ணிய வண்ணம் அவன் அதில் ஆசையோடு இருந்தான். உலகின் கோரப்பிடியில் இருந்து தப்பித்துக் கொண்ட ஆறுதல் அவன் இதயத்துடிப்பைச் சமாதானம் செய்தது. அந்தச் சமாதானம் கிடைத்ததும், ஆகாயத்துச் சூரியன் அங்கே வந்து குதித்ததாக, அந்தச் சுவர்க்கம் ஒளிமயமாகியது. ஒளியில் மிதந்தவண்ணம் அவனருகில் அழகிய தேவதை ஒருத்தி வந்து அமர்ந்தாள். அவள் வெள்ளை உடையணிந்து, சிறகுகட்டி வரவில்லை. அவளைச்சுற்றி ஒளிவட்டம் பிரகாசிக்கவில்லை. அசரீரி எதுவும் கேட்கவில்லை. ஆகாயம், பூமி, அதைத்தாண்டும் அண்டம் அனைத்தும் அமைதியாக இருந்தன. முகில்கள்

வானத்தில் பிரம்மஜாலம் காட்டவில்லை. தங்களுக்குள் மோதிக்கொண்டு மின்னலை உற்பத்தி செய்யவில்லை. மின்னல் கண்ணைப் பறிக்கவில்லை. காதைச் செவிடாக்கும் இடியோசை கேட்கவில்லை. அவள் அமைதித் தேவதையாக இருக்க வேண்டும். நவீனகாலம் புரிந்த யதார்த்த தேவதையாக இருக்கவேண்டும். ஊட்டி வளர்த்த கற்பனையை விரட்டி விட்டவள் போலப் பச்சைநிறத்தில் ஜெக்கெற் அணிந்து, ரோஜா முகத்தில் ஒளி வீச நின்றாள். இவள் தேவதையா? சாதாரண பெண்ணா? என்கின்ற சந்தேகம் அரணை உரசியது.

அவள் வதனத்தில் அவன் இதுவரை கண்டிராத ஒளி, சாந்தம், காந்தம், ஞானம், அருள் என்பன நிறைந்து வழிவதைக் கண்டான். அவன் தேவதை, தேவதை என முணுமுணுக்கத் தொடங்கினான். அவள் ஒளி கவலையறுத்து, அருள்கூர்ந்து ஞானம் தந்தது. அது அவனுக்கு அவலம் அறுத்து அமைதியூட்டியது. இது ஞான ஒளியே. அவள் தேவதையே என அரண் முடிவு செய்து கொண்டான்.

அவன் கவலை மறந்து, நிம்மதி மேலிட தன்னருகே இருக்கும் தேவதையைத் உற்றுப் பார்த்தான். தேவதையே தன்னைத் தேடிவந்த மகிழ்ச்சியில் அவனது மனது ஆனந்தக் கூத்தாடியது. அவன் தன்னை மறந்து, அவளின் ஒளியில் கலந்து, வார்த்தைகளைத் தொலைத்து ஊமையானான். சந்தோஷ ஊமையாக அவன் சர்வமும் மறந்தான். அம்மா, அப்பா, நண்பர், சமூகம் என்கின்ற விம்பங்கள் அந்த ஒளியில் கரைந்துபோன நிம்மதியில் அவன் திளைத்தான். அவன் ஆறுதலாக, அமைதியாக அந்தக் குளிர்காற்றைச் சுகித்து, வெறுப்புக் கரைய அந்தத் தேவதையைப் பார்த்து விம்மி விம்மி அழத்தொடங்கினான். வெறுப்புக் கரைந்து, வினைகள் அறுந்து, பஞ்சாகப் பறக்கும் மனசை மேலும் பஞ்சாக்க அவன் விம்மி விம்மி அழுதான்.

அந்தத் தேவதை ஒளிசிந்த அவனருகில் வந்து அவனை அணைத்தாள். அவன் உயிர் அவளது ஒளியில் கரைவது

புரிந்தது. அவன் தனது உடலும் கரைந்து இன்றோடு தான் இல்லாது போய்விட வேண்டும் என்கின்ற ஏக்கத்தோடு அவளை நோக்கினான். தாய்க்கோழியிடம் தஞ்சம் புகுந்த குஞ்சானான்.

அந்தத் தேவதையை நோக்கி, "நீ யார்? எதற்காக என்னிடம் வந்தாய்?" என்று கேட்டான்.

"நான் உன் சிநேகிதி. உன் இதயத்தின் காயங்களைப் போக்க இங்கே வந்தேன். உன் மனசு அமைதியடைய நான் என்ன செய்ய வேண்டும் என்று சொல். அதை நான் செய்வேன். உனக்கு நிம்மதி தருவேன்" என்றாள் தேவதை.

"இல்லை. நீ சிநேகிதி இல்லை. நீ தேவதை. என்னை நீயும் ஏமாற்றாதே தேவதையே! என்வாழ்வில் முதன்முதல் நிம்மதி, அன்பு, பாசம், ஞானம் உன்னிடம் கிடைக்கும் என்று எண்ணியிருக்கிறேன். சிநேகிதியென்று கூறி அதைக் கெடுத்துவிடாதே என் தேவதையே!"

"சரி நான் தேவதைதான். தேவதை உனக்கு சிநேகிதியாக வாய்க்கக் கூடாதா? உன் மனதின் காயத்தைப் போக்கக் கூடாதா?"

"மனிதரை என்னால் நம்ப முடியவில்லை. அம்மா, அப்பா, சிநேகிதி எல்லோரும் மனிதர்கள். மற்றைய மனிதர்களின் மனதைப் புரிந்து கொள்ளமுடியாத நீயும் சிநேகிதி என்று மானிட அவதாரம் எடுத்தால், நான் இனி யாரிடம் செல்லுவேன்? நீ என் தேவதை. எனக்கு ஞானம் தரும் போதிமரம். என்னைவிட்டுப் பிரியாத உயிர். என்னுடன் இணைபிரியாது இருந்து, உனது வதனம் அட்சயபாத்திரமாக, நீ எனக்கு நிம்மதியை அள்ளித்தரப்போகின்ற அழகிய தேவதை. மறுக்காதே!"

"நான் உன்னை விரட்டவில்லை. உன்னைவிட்டு நீங்கவில்லை. மற்றைவரின் மனதைப் புரிந்து கொள்ளாத மனிதர்களை விலங்குகளெனத் தூற்றுகிறாய்."

"சர்வநிச்சயம். மனிதர்கள் சக மனிதர்களைப் புரிந்து

கொள்வதே இல்லை. மனிதகுலம் பெருகப்பெருக மிருக குணம் வக்கிரம் நோக்கிச் செல்கிறது. என்னை எவரும் புரிந்து கொள்ளவில்லை. என் விருப்பங்கள் உதாசீனப் படுத்தப்படுகின்றன. என் ஆத்மா புழுவாகத் துடித்து மரணித்துப்போகிறது."

"அப்படியா? சரி இருக்கட்டும். நான் கேட்கும் கேள்விக்கு யோசித்துப் பதில் சொல்ல முடியுமா?."

"என்ன கேட்கப் போகிறாய். கேள் தேவதையே. தாராளமாய்க் கேள்."

"உன்னை மற்றவர்கள் புரிந்து கொள்வது இருக்கட்டும். நீ யாரைப் புரிந்து வைத்திருக்கிறாய்? நீ யாரையாவது புரிந்துகொண்டு அவர்களுக்குச் செய்த உதவியென்ன? சொல்லு பார்ப்போம்?"

"அது வந்து..."

"உன்னைப்பற்றி, உனது சுகத்தைப் பற்றி எந்தவித விட்டுக்கொடுப்பும் இல்லாது சிந்திக்கிறாய். அதுவே உன் உயிர் மூச்சாகிறது. அதில் தோற்றதாக நீ தோம்பு சொல்லிக்கொண்டு திரிகிறாய். எங்கள் வாழ்வு என்பது நாங்களே வரைந்து கொள்ளும் ஓவியம். அதில் கோணல்கள் விழுந்தால் யார் தவறாக இருக்க முடியும்? அல்லது அந்த ஓவியம் மிகவும் ரசிக்கப்பட்டால் யாருக்கு அந்தப் புகழ் வருகிறது?"

"தேவதையே நீ என்னைக் குழப்புகிறாய்."

"இல்லை. குழம்பிப்போய் இருக்கும் உனக்கு ஒளியூட்ட வந்தேன். உன்னைப் பற்றியே மட்டும் இடையறாது சிந்திக்கும் தன்னலத்துக்கு விடைகொடு. ஒருகணம் உனது அன்னை-தந்தை பற்றிச் சிந்தி. உன் அன்னையும் தந்தையும் அழகான சித்திரம் வரைவதற்கு வழிகாட்டுகிறார்கள். தாங்கள் பெருமைப் பட்டுக்கொள்வதற்கு மட்டும் அவர்கள் பாடுபடவில்லை. அவர்கள் பார்வையில், அவர்கள் செய்வது தியாகம். உனது பார்வையில் அது உரிமை மீறல். அவர்கள் மாத்திரமே விட்டுக்

கொடுக்கவேண்டும் என்று எதிர்பாராதே. விட்டுக்கொடுப்பு இருபகுதியாரிடமும் இருந்து வந்தால்தான் அது உயிருள்ள தாக இருக்கும்.''

“நிறுத்து தேவதையே நிறுத்து. உன் அறிவுரை இனி எனக்குத் தேவையில்லை. மனித உருவத்தில் வந்ததால் உனக்கும் மனித குணம் வந்துவிட்டது.''

“அற்ப மனிதனே!'' அதிர்ந்து கூறிய தேவதை சிரித்தாள். தேவதையின் பச்சை நிறம் மங்கி, நிலநிறத்தில் ஒன்று இரண்டாகி... இடியெனச் சிரித்த குரல், நாய் குரைப்பது போலக் குரைத்து...

19

வேலையே தொண்டாக மாறிய வேலையிது. கன்னியாஸ்திரியாய் மாறாமல், மேலே கன்னியஸ்திரியாய் மாறிய திருப்தி இது. சினப்பவர்களும் இருப்பார்கள், இனப்பகையோடு பார்ப்பவர்களும் இருப்பார்கள். அறிவீனர் அவர் என்கின்ற ஞானத்தோடு அஞ்சாது செய்யும் பணியிது. பணம் தரும் பணியென்றாலும் மனமுவந்து செய்யும் பணியிது. மனது கசிய, ஆத்மதிருப்தி அள்ளித்தரும் பணியிது என்பது பாலனுக்கு இந்த வேலைபற்றி இடைக்கிடையே தோன்றும் ஞானம். இன்றும் அது ஏனோ தோன்றி மறைந்தது.

பிற்பகல் வேலைக்குச் சென்ற பாலன் சீருடை மாற்றிவிட்டு மேலே வரும்பொழுது முதியவர்கள் பலர் உண்ட களை தொண்டருக்கும் உண்டு என்பதை நிரூபித்தனர். முதுமை என்பது பழுத்த கூட்டில் வாழும் குழந்தைப்பருவம் என்பது பாலனின் அநுபவம். கிழண்டிப்போன உடம்பும், குழந்தைகளின் செயல்களும் கலந்த ஒரு விசித்திரப் பருவமாய் பாலனுக்கு விந்தை காட்டி நிற்கும். பின்னேர வேலை சற்று ஆறுதலாக

அவனுக்கு இருக்கும். பிற்பகல் வேலைக்குச் செல்வதற்காய் வீட்டில் காத்துக் கொண்டு இருப்பது மட்டும் மகா அலுப்பாக நீளும். ஒரு சுகத்திற்காக இன்னொரு சுகத்தை இழக்க வேண்டியது விதியாகும் எனப் பாலன் எண்ணிக் கொள்வான். இன்றைய அலுப்பிற்கு முடிவு வந்ததில் பாலனுக்கு ஒருவித சந்தோஷம். வேலை தொடங்கிவிட்டால் நேரம் பறந்து கொண்டிருக்கும்.

பாலன் சென்று அலுவலகத்தில் இருந்தான். சும்மா இருப்பது சுகம். பாலனுக்குச் சும்மா இருந்து கோப்பி அருந் தினால் இன்னும் சுகமாய் இருக்கும் என்பதான எண்ணம் எழுந்தது. அவன் அங்கு வைத்திருந்த கோப்பை ஒன்றில் கோப்பி ஊற்றிப் பருகினான். தலைமைத்தாதி எங்கோ சென்றிருந்தாள். ஒரு எரித்திரியப் பெண் இப்பொழுது புதிதாக வேலைக்குச் சேர்ந்து இருக்கிறாள். அவள் கணினியில் அறிக்கை பதிந்து கொண்டு இருந்தாள். இப்பொழுது எல்லோரும் கணினியில் தங்களது அறிக்கையைப் பதிவு செய்துவிட வேண்டும். இளைய தலைமுறைக்கு இது ஒரு பிரச்சினையாக இல்லாவிட்டாலும் அறுபதைத் தாண்டியும் வேலை செய்யும் சிலருக்குச் சிலவேளை சவாலாகி விடுவது உண்டு.

பாலன் கோப்பி அருந்திக் கொண்டு இருந்தபொழுது இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க சுதேசிய இளம் பெண்ணொருத்தி வந்தாள். அவள் சீருடை அணிந்திருந்தாள். அவளது பொன்னிறக் கேசம் கழுத்தளவே நிற்பதற்காகக் கவனத்தோடு வெட்டப்பட்டிருந்தது. பாலனைவிட அவள் சற்று உயரம். எந்தவித ஒப்பனையும் இல்லா எண்ணை வழுவழுப்போடு துப்பரவாக இருந்த வதனம். அந்தத் தூய்மை பாலனுக்குப் பிடித்திருந்தது. பூச்சுப் பூசி பூச்சாண்டி காட்டும் உலகில் கலப்படம் இல்லாத சொக்கத்தங்கமாய் அவள் வதனம் ஒளி வீசுவதாய்ப் பாலன் எண்ணிக்கொண்டான். இறுக்கமான தனங்கள். நிமிர்ந்த உடல்வாகு. இராணுவத்திற்குப் பொருத்தமான கம்பீரம். பாலன் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

உள்ளே வந்தவள் பாலனைப் பார்த்துச் சிரித்தாள். பின்பு "வெங்க" எனக் கூறிய வண்ணம் கைகொடுத்து அறிமுகம் செய்து கொண்டாள். பாலனும் தன்னுடைய பெயரைச்சொல்லி அவளின் கையைப் பிடித்துக்கொண்டான்.

அப்பொழுது தலைமைத்தாதி அலுவலகத்திற்குள் வந்தாள்.

அவள் பாலனைப் பார்த்து, "பாலன் இது வெங்க. அவள் பொலீஸ் கல்லூரியில் படித்துக் கொண்டு இருக்கிறாள். நீ அவளுக்கு இங்கு வேலை செய்வதற்கான பயிற்சி கொடுக்க வேண்டும். ஒரு நாள் காலையில் வேலை செய்யவிருக்கிறாள்." என்றாள்.

"நல்லது. நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றான் பாலன்.

வழமைபோல அறிக்கை தரப்பட்டவுடன் எல்லோரும் கலைந்து சென்றுவிட்டனர். பாலனுக்கு வெங்கைக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்கின்ற சிறு பரபரப்பு. வெங்க படித்து முடிக்கும் வரைக்கும் இங்கே வேலை செய்வாள். பின்பு நீலநிறச் சீருடையோடு மிடுக்காக வலம் வருவாள். அவளுக்கு இது ஒரு இடைத்தங்கல். சேவையில் ஆத்மதிருப்தி காணும் மனங்களும் சிலவேளை சலித்துக் கொள்ளும் என்பதாகப் பாலன் எண்ணிக் கொண்டான்.

பாலன் வெங்கயைப் பார்த்து, "நான்கு மணிக்கு எல்லாருக்கும் கேக், கோப்பி, அல்லது சப்ற் கொடுக்க வேண்டும். நீங்களும் எனக்கு உதவி செய்யலாம். நாலுமுப்பது போல லூாசி வருவாள். அவளும் எங்களுக்கு உதவி செய்வாள்" என்றான்.

"நாங்கள் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?" என்றாள் வெங்க.

"கேக்கைத் துண்டுகளாக வெட்ட வேண்டும். கோப்பி தயாரிப்பதோடு, சப்ற் கரைக்க வேண்டும். அவற்றை அந்த

வண்டிலில் வைத்து தள்ளிச் சென்று ஒவ்வொரு வயோதிபருக்கும் பரிமாற வேண்டும்'' என்றான் பாலன்.

பாலன் சமையலறைப் பகுதிக்குள் சென்று எங்கே கோப்பித்தூள் உள்ளது, எங்கே பில்றர் உள்ளது, எவ்வளவு கோப்பி தயாரிப்பது, எவ்வளவு சப்ற் கரைப்பது என்பனவற்றைக் கூறிக் கூறி அந்த வேலைகளைச் செய்தான். அவளும் அதற்கு உதவி செய்தாள்.

சிறிது நேரத்தின் பின்பு ஹோலில் இருந்தவர்களுக்குக் கோப்பி பரிமாறிவிட்டு அறைகளுக்குள் இருப்பவர்களுக்கு கோப்பி பாரிமாற வண்டியையும் தள்ளிக் கொண்டு இருவரும் சென்றனர். பாலனுக்கு அவளோடு எதாவது கதைக்க வேண்டும் போல் இருந்தது. என்ன கதைப்பது என்பது தெரியவில்லை. வயதைக் கேட்பது அநாகரிகம் என்று எண்ணிக் கொண்டான். முதலாவது அறை வந்தது,

"இந்த அறைக்குள் குடியிருப்பவரின் பெயர் காறாலட். அவருக்கு தொண்ணுற்றிநாலு வயது. நல்ல கடவுள் பக்தி உள்ளவர். ஒரு கால் இல்லை. அதனால் வெளிய எல்லாம் வரமாட்டார். புது ஆள்கள் வந்தால் கொஞ்சம் பழகப் பின்னடிப்பார். புதிதாய் வருபவர்கள்மீது ஒருவித தயக்கம். ஒருவித நம்பிக்கையீனம்'' என விளக்கம் கொடுத்துவிட்டுப் பாலன் அழைப்புமணியை அழுத்தினான். பின்பு கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றான்.

"யார்! பாலனே வாறது? நீ வடிவாய் சிரிக்கிறாய். நீ வந்தால் எனக்கும் ஒருவித ஆறுதல்'' என்றார்.

"கேட்க நல்லா இருக்கின்றது. என்னோடு ஒரு வருங்காலப் பொலீஸ் அதிகாரி வந்து இருக்கிறாள். அவளுக்குப் பெயர் வெங்க. உங்களுக்கு இவளைப் பிடிக்கும் என எண்ணுகிறேன்'' என வெங்கவை அறிமுகம் செய்துவைத்தான் பாலன்.

"ஓ. இவள் வடிவாத்தான் இருக்கிறாள்.'' பகிடிவிட்டதாக எண்ணிக்கொண்டு அவர் சிரித்தார். வெங்க அதற்கும் அவருக்கு நன்றி சொன்னாள்.

அவருக்குக் கோப்பி கொடுத்துவிட்டு வெளியே வந்தார்கள். மற்றைய அறையை நோக்கிச் செல்லும்பொழுது, "உங்களுக்க எத்தனை வயது?" பாலனைப் பார்த்து வெங்க கேட்டாள். பாலனுக்கு அது சற்று வியப்பாகத்தான் இருந்தது. வயதை யாரும் சிறிய பழக்கத்தோடு கேட்க மாட்டார்கள். அப்படி இவள் கேட்டது பாலனுக்குப் புதுமையாகிற்று.

பாலன் அதைக் காட்டிக் கொள்ளாது, "எனக்கு நாற்பத்தியாறு! உங்களுக்கு?"

"இருபத்தியேழு வயது."

அவள் கேட்ட கேள்வியில் பாலனுக்கு துணிவு பிறந்தது.

அவன் அவளைப் பார்த்து, "உங்களுக்குத் திருமணமாகி விட்டதா?" என்று கேட்டான்.

"ஆகியது. பின்பு முறிந்த போயிற்று. இப்பொழுது நான் தனித்து வாழ்கிறேன்." என்றாள். பின்பு பாலனைப் பார்த்து "நீங்கள்?" என்று இழுத்தாள்.

பாலனுக்குச் சிறிது நேரம் என்ன பதில் சொல்லுவது என்று புரியவில்லை. பின்பு, "எனக்குத் திருமணமாகிவிட்டது" என்று கூறினான்.

"பிள்ளைகள்?"

"இரண்டு பெண்கள். உங்களுக்கு?"

"ஒரு பெண்குழந்தை" என்றாள்.

"விவாகரத்து என்பது வாழ்க்கையின் பாதாளத்திற்குச் சென்று திரும்பும் வலியைத் தருமல்லவா?"என்றான் பாலன்.

"ம்... அப்படித்தான். எல்லோருக்கும் அதில் வருத்தம் இருக்கத்தான் செய்யும். விரல் விட்டு எண்ணக்கூடியவர்களுக்கு மட்டுமே கவலையில்லாத விடுதலையாகும். விவாகரத்தான பின்பு எப்படிப் பிள்ளைகளைப் பாதிக்காது நடந்து கொள்ள வேண்டும் என்பதில் நாங்கள் மிகவும் உறுதியாக இருக்கிறோம். அவன் எனக்கு அதில் நிறைவே ஒத்துழைப்புத் தருகிறான்.

பிரிவதைவிடப் பிரிந்த பின்பு பிள்ளைகளைப் பாதிக்காத விதத்தில் வாழ்வதுதான் சிக்கலான விடயம். அதில் நாங்கள் வெற்றி கண்டு இருக்கிறோம். அது பிரிந்த வேதனையை மிகவும் குறைத்து விட்டது. இனிக் காலம்தான் வழிகாட்ட வேண்டும்.''

"எங்கள் சமுதாயத்தில் விவாகரத்து ஏற்பட்டால் அதைப் பார்க்கும்விதம் வேறுவிதமாக இருக்கும். விவாகரத்து பெற்ற பின்பு சம்பந்தப்பட்டவர்களிடம் விட்டுக் கொடுக்கும் மனப்பக்குவம் இல்லாது போய்விடும். பிள்ளைகளின் வாழ்க்கை பிரச்சனையில் தொலைந்து போகும்'' என்றான் பாலன்.

"எங்கள் சமூகத்திலும் எல்லோரும் எங்களைப் போல ஒத்துழைப்பதில்லை. எனக்கு நன்கு தெரியும். சிலர் குண்டுசிக்குகூடக் கோட்டிற்குச் செல்வார்கள். பிள்ளைகள் முன்பு சண்டை போட்டுக்கொள்வார்கள்'' என்றாள் வெங்க.

"எங்கள் சமூகங்களில் இது பெரும் கௌரவப் பிரச்சனையாக, இதற்குப் பின்பு வாழ்வே இல்லை என்பதாக, தற்கொலை முயற்சிகள், பயமுறுத்தல்கள், சாத்வீக அசாத்வீகப் போராட்டங்கள்... என்று தொடரும். பிள்ளைகளின் கருத்து அறியப்படாது, அறிந்தாலும் மதிக்கப்படாமல் அவர்களின் குழந்தைப்பருவம் சிதைக்கப்படும்'' என்றான் பாலன்.

"நீங்கள் மற்றவர்களின் துன்பத்தை நன்கு உணருகிறீர்கள்.''

"நன்றி. மனிதனாய் இருத்தல் என்பதே மற்றைய மனிதர்களைப் புரிந்து கொள்ளுவதில்? அவர்களுக்காக இரக்கப்படுவதில்தானே துவங்குகிறது? தாய் பிள்ளைமீது காட்டும் அன்பு தொடக்கம்... தெருவில் ஏழ்மையில்வாடும் ஓர் அந்நியனைப் பார்த்து இரக்கப்படுவது வரைக்கும் அப்படியான ஓர் உணர்வுதானே மனிதனை மனிதனாக வாழவைக்கிறது. அண்மையில் காட்சி ஒன்றை நான் இணையத்தில் பார்த்தேன். எனக்கு இப்பொழுது நினைத்தால்கூட கண்கள் கலங்குகிறன. சீனாவில் நடந்த ஒரு கொடூரக் கொலை அல்லது விபத்து. ஆறு வயதுக் குழந்தையாக இருக்க வேண்டும். ஏதோ

எடுப்பதற்காய் தெருவில் ஓடுகிறது. அந்தக் குழந்தை வாகனம் வருவதைக் கவனிக்கவில்லை. வாகனம் ஓட்டுபவன் அந்தக் குழந்தையைக் கவனிக்கவில்லையா அல்லது கவனித்தாலும் கருணை காட்டவில்லையா என்பது புரியவில்லை. அந்தக் குழந்தைமீது வாகனத்தை ஏற்றிவிட்டான். வாகனத்தின் முன் சில்லுகள் ஏறியிறங்கியபடி குழந்தை அதன் நடுவில் அகப்பட்டுக் கிடக்கிறது. சாரதி வாகனத்தை நிறுத்தினான். அவன் வாகனத்தை நிறுத்திவிட்டு வெளியே வந்து அந்தக் குழந்தையை எடுப்பான் என்று எல்லோரும் எதிர்பார்ப்பார்கள். அவன் அப்படிச் செய்யவில்லை. பின்சில்லையும் அந்தக் குழந்தைமேல் ஏற்றி, அந்த இடத்தைவிட்டு எந்த மனிதாபிமான மும் இல்லாது தப்பிச் சென்று விடுகிறான். குழந்தை நடுத்தெருவில் கிடந்து துடிக்கிறது. பின்பு ஒருவன் சைக்கிளில் போகிறான். குழந்தை அடிபட்டுக் கிடப்பதைப் பார்த்தும் எந்த இரக்கமும் இன்றி மிருகத்திலும் கேவலமாகப் பார்த்தும் பார்க்காதவன் போல அந்தக் குழந்தையைக் கடந்து செல் கிறான். அதன்பின்பு அவ்வழியால் இன்னும் ஒரு மனிதன் நடந்து போகிறான். அவனும் அந்தக் குழந்தையைப் பார்த்து விட்டு, எந்த உதவியும் செய்யாது நடந்து செல்கிறான். எனக்கு இதற்கு மேல் அதை நினைக்கவே பிடிக்கவில்லை. இரக்கம் இல்லாத மனிதர்கள் எப்படி இருப்பார்கள் என்று பாருங்கள்.''

வெங்க பேசவில்லை. கண்களில் ததும்பிய நீரைத் திரும்பித் துடைத்துக் கொண்டாள்.

சாப்பிட்ட பின்பு சோபாவில் வந்திருந்த பாலனுக்குச் சுபனியின் நினைவு வந்தது. இன்று வியாழக்கிழமை. சனிக்கிழமை தன்னைத் தமிழ்ப் பாடசாலைக்கு கூட்டிச் செல்லுமாறு போன் செய்வாள். அதுவரையும் பொறுமையாகத் தான் இருக்க வேண்டும். அந்த வீட்டிற்குப் போவதை அவனால் எண்ணிப் பார்க்க முடியாது.

அன்றைய சண்டைக்குப் பின்பு அவள் இவனின் வீட்டிற்கு வருவதில்லை. பாலனும் அங்கு தேவையில்லாது போவதில்லை. போனாலும் வீட்டிற்குள் செல்லவதில்லை. சுபனி தமிழ் பள்ளிக்கூடம் அல்லது வேறு எங்காவது போக வேண்டியிருந்தால் தன்னை வந்து கூட்டிச் செல்லுமாறு போன் செய்வாள். பாலன் வீட்டிற்குள் செல்வதில்லை. சென்றால் தகராறாகும் என்கின்ற யதார்த்தம் அவனைத் தள்ளியே வைத்திருந்தது. அவன் தெருவில் காரை நிறுத்திவிட்டு அதற்குள் இருந்து கொள்வான். மேற்கொண்டு சுபனியுடனான தொடர்புக்குக் கைத்தொலைபேசி உதவும்.

அம்மா மிகவும் கண்டிப்பு என்பதாய் பாலனிடம் முறையிடுவாள். பாலனுக்கு அப்பொழுது எதுவும் சொல்ல முடியாது இருக்கும். பாசமாக, ஆதரவாக அவளது தலையைத் தடவி விடுவான். தான் பாலனோடு வர விரும்புவதாகச் சுபனி அடிக்கடி கூறுவாள். அம்மாவைத் தனியே எல்லோரும் விட்டுவிட்டு வருவது நல்லது இல்லை எனப் பாலன் அவளுக்குச் சமாதானம் சொல்லி வைத்தான். என்றாலும் மனதில் அவளின் கருத்து மதிக்கப்படாது, அவள் மீதே தேவையற்ற சுமை ஏற்றும் சுயநலத்தை எண்ணி வேதனை கொள்வான்.

பாலன் சுபனியின் நினைவில் மூழ்கி இருந்தபொழுது, திடீரெனக் கைத்தொலைபேசி இராகத்தோடு விழித்துக் கொண்டது. சுபனிதான் அதற்குப் புதிய இராகம் தெரிவு செய்திருந்தாள். அவளின் தெரிவு அற்புதம் என்பது பாலனின் அபிப்பிராயம். அவன் தொலைபேசியை எட்டிப் பார்த்தான். சுபனியின் படம் தோன்றி அவளிடம் இருந்து அழைப்பு வருவதைக் காட்டியது. பாலன் அவசரமாக எட்டிப் பாய்ந்து தொலைபேசியை எடுத்தான்.

"அப்பா, அப்பா! அம்மா மயங்கிப் போயிட்டா. எனக்கு பயமா இருக்குது அப்பா. உடன இங்க வாங்க அப்பா."

அதற்கு மேல் கதைக்க முடியாது அவள் தேம்பித் தேம்பி அழுதாள்.

"நான் வாறன். நீ அம்புலன்ஸ்ஸுக்குப் போன் பண்ணினனீயா?"

"ஓம் அப்பா. அவங்கள் வருவாங்கள். நீங்கள் வாங்க அப்பா. எனக்குப் பயமா இருக்குது."

"ஓகே, நான் வாறன். பயப்பிடாத..." என்று கூறிவிட்டுப் பாலன் போனைத் துண்டித்துக் கொண்டான்.

அவள் படுக்கை அறைக்குள் சென்று வெளியே போட்டுக் கொண்டு செல்வதற்கான உடுப்புகளை எடுத்து தயாராக வைத்தாள். பாலனுக்குச் சற்றுக் குழப்பமாக இருந்தது. போவதா, விடுவதா என்பது புரியவில்லை.

படுக்கை அறையில் இருந்து "வாங்க அப்பா என்ன யோசிச்சுக் கொண்டு நிக்கிறயள்" என்று அவள் உலுப்பினாள். பாலன் எதுவும் சொல்ல முடியாதவனாய் உடுப்புகளை மாற்றினான். "கெதியாப்போய் என்ன எண்டு பாருங்கோ" என்று இவள் மேலும் அவசரப்படுத்தினாள்.

அவளின் வீட்டிற்கு வரும்பொழுது அம்புலன்ஸ் வந்து விட்டது. பாலன் உள்ளே போனவுடன் சுபனி ஓடிவந்து பாலனின் கையைப் பிடித்துக் கொண்டு "அப்பா, அப்பா" எனத் தேம்பித் தேம்பி அழுதாள். அவள் பயந்து போய் இருப்பதைப் பார்க்கப் பாலனுக்கு வேதனையாயிற்று. அவன் அவளின் பயத்தைப் போக்குவதுபோல அவளைத் தன்னோடு அணைத்து ஆசுவாசப்படுத்தினான்.

மாமி பாலனைக் கண்டவுடன் மூஞ்சியைத் திருப்பிக் கொண்டாள். மாமியின் முகத்தில் வழிந்த வெறுப்பைப் பார்த்த பின்பு நெருப்பில் நிற்பதாக பாலன் நெளிந்தான். மாமி சோபா வில் இருக்க மனம் பொறுக்காது சமையல் அறைக்குள் சென்று மறைந்துவிட்டாள். பாலன் இப்படி நடக்குமென எதிர்பார்த்தான். எதிர்பார்த்தாலும் நேரே அநுபவிக்கும் பொழுது இதயத்தை ஏதோ நெருடுவது போல ஒரு வலியை அவனால் உணர முடிந்தது.

அவளுக்குத் தற்போது மயக்கம் தெளிந்து விட்டது. அம்புலன்ஸ்ஸில் வந்தவர்கள் குளுக்கோஸ் ஏற்றியிருந்

தார்கள். மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்கான ஆயத்தத்தில் அவர்கள் மும்முரம் காட்டினார்கள். பாலனைக் கண்ட அவள் கண்களில் இருந்து கண்ணீர் பெருகிற்று. பின்பு அவனைப் பார்க்க முடியாதவளாய் முகத்தை மறுகரைக்குத் திருப்பிக் கொண்டு அழுதாள். பாலனுக்கும் தன்னைக் கட்டுப்படுத்த முடியாது கண்கள் கலங்கின. பின்பு அவன் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு அம்புலன்ஸில் வந்தவர்களிடம் என்ன பிரச்சனை என்று கேட்டான். அவர்கள் சாப்பிடாது இருப்பதால் வந்த மயக்கம் இது என்றும், நாளைக்கே திரும்பவும் வீட்டிற்கு வந்து விடலாம் என்றும் கூறினார்கள்.

பாலன் மருத்துவமனைக்குச் சென்றுவிட்டு வீட்டிற்குத் திரும்பி வந்த பொழுது இரவு பத்து மணியிருக்கும். இவளைத் தவிர வீட்டில் எல்லோரும் நித்திரையாகி இருந்தனர். பாலன் கையைக் கழுவிய பின்பு வந்து சோபாவில் உட்கார இவள் சாப்பாட்டுடன் வந்தாள். அதுவரையும் இருவரும் கதைத்துக் கொள்ளாதது ஒருவித அன்னியமாகத் தோன்றியது. என்ன நடந்தது எனக்கு என்கின்ற சிந்தனையில் பாலன் மீண்டும் தன்னை மறந்தான். கதைக்காமல் இருப்பது மேலும் அச்சத்தைப் பாலனுக்கு உண்டுபண்ணியது. அவன் தானாகவே இவளைப் பார்த்து, "என்ன பயந்து போயிட்டியா? கடுமையா யோசிக்காத. அவள் சாப்பிடாமல் இருந்ததால வந்த வில்லங்கம். நோர்மலாச் சாப்பிட்டாச் சரியாயிடும்" என்றான்.

"எங்கட பக்கத்துக்கு நீங்கள் சொல்லுறது சரியான நியாயந்தான் அப்பா. அவவின்ர நிலமை வேற. இனி அவ சாப்பிட்டா உடம்பு தேறலாம். மனசு தேறுமே அப்பா? கவலை அவவை உய்யவிடாமல் அரிக்குது. அதை யாராலும் தடுக்கேலாது."

"நான் என்ன செய்யிறது சொல்லும்? உமக்குச் சின்ன உதவி செய்யவேணும் எண்டு நினைச்சன். அவள் அதை புரிஞ்சுகொள்ளாமல் உன்னோடேயே போய் வாழ்க்கை நடத்து எண்டு கலைச்சாள். என்னோடு இனி வாழேலாது

எண்டாள். இப்ப பட்டினி கிடந்து கண்ணீர் வடிச்சா மட்டும் என்னவாகிறது? எல்லாரும் தனக்கு மட்டுமே எண்ட நினைப்பை அவள் விடுறாள் இல்லை."

"ஒண்டு செய்யலாம் அப்பா."

"என்ன?"

"நீங்கள் கோவிக்கக் கூடாது."

"அது நீ சொல்லுறதைப் பொறுத்து."

"சரி நீங்கள் கோவிச்சாலும் பரவாயில்லை. நான் மனசில இருக்கிறதைச் சொல்லுறன். சொல்லித்தான் ஆக வேணும்."

"ம்... சொல்லு."

"நானும் பிள்ளையளும் திரும்ப ஊருக்குப் போறம்."

பாலனுக்கு எதிர்பார்க்காத அதிர்ச்சியாக இருந்தது. பின்பு அது கவலையாகிப் பச்சாதபமாய் மாறிற்று. கோபத்திற்குப் பதிலாக அழுகை வந்தது. நடுக்கடலில் தத்தளிப்பதான அவஸ்தையாயிற்று. அங்கே இனிப்போக முடியாது என்பதே அவன் ஆழ்மனதின் உணர்வாயிற்று. இவளும் தன்னை விட்டுப் போனால் என்கின்ற நினைவு அவன் இதயத்தை அறுத்தது.

"என்னப்பா பேசாமல் இருக்கிறியள்?"

"என் உணர்வுகள் உனக்கும் ஒரு பொருட்டா இல்லையா? சரி நீ எங்கையாவதும் உடைஞ்ச கண்ணாடிய ஒட்டி முகம் பாக்கிறதைப் பார்த்து இருக்கிறியா? அதை மாதிரியான முடிவுதான் இது. என்னால இனி அவளோட போய்க் குடித்தனம் பண்ணேலாது. அதே நேரம் நீயும் இல்லையென்றால் நான் அனாதையா? தனியக் கிடந்து சகலாமா?. அதுதான் உன்ர விருப்பம் எண்டா சரி. அதுதான் சிலவேளை என்ர விதிப்பயன் எண்டு நினைக்கிறன்." என்றான்.

"ஐயோ அப்பா, நான் உங்களை அப்பிடி விடுவனே?' என்று கத்தியவண்ணம் பாய்ந்து பாலனைக் கட்டிப்பிடித்து

மார்பில் தலை புதைத்து விம்மி விம்மி அழுதாள்.

"நான் என்னப்பா செய்ய. அவவைப் பாக்கவும் பாவமா இருக்குது. உங்களைப் பாக்கவும் பாவமா இருக்குது. எனக்கெண்டும் ஒரு மனச்சாட்சி இருக்குது. இப்பிடியான சங்கடங்கள் யாருக்கும் வரக்கூடாது அப்பா. கடவுளே எங்களுக்கு ஏனப்பா இப்பிடி ஒரு சோதனை?"

"நான் சொல்லுறதைக் கேள். நாங்கள் நிதானமாய்ச் சிந்திப்பம். இனி எந்த மாற்றத்தையும் நாங்கள் இப்பகொண்டு வரேலாது. அது மேலும் சீரழிவாய்ப் போகும். அவள் முதல் திரும்பி வரட்டும். பிறகு என்ன செய்யலாம் எண்டு யோசிப்பம். நீ எந்த முடிவுக்கும் வராமல் இருக்கிறியா, தயவுசெய்து எனக்காக?" பாலனுக்கு அதற்கு மேல் கதைக்க முடியவில்லை. கவலையை அடக்க முடியவில்லை. பாலனை அவள் தன் மார்போடு சேர்த்து இறுக்கி அணைத்துக் கொண்டாள். பாலன் அவள் மார்பில் விசும்பிக் கரைந்தான்.

20

அன்று இரவு பாலன் தனது திட்டத்தைச் சொல்ல ஓம் ஓம் என்று கேட்டுக் கொண்டு படுத்தாள் சுமிதா. மௌனம் சம்மதம். ஓம் ஓம் போடுவது இரண்டு மடங்கு சம்மதம். முடிவு செய்த பாலன் அடுத்தநாளே அவசரமாகக் கடிதம் எழுதி ஊருக்கு அனுப்பிவிட்டான். உதவி செய்ய வேண்டும் என்கின்ற அவாவில் அவன் நிதானம் கரைந்து போயிற்று.

அடுத்து வந்த இரண்டு நாள்களும் அவள் கடுமையாக யோசித்திருக்க வேண்டும். மூளைக்குள் ஆயிரம் வழக்குகள் நடந்து முடிந்து இருக்கவேண்டும். மாமியிடமும் புத்திமதி கேட்டு இருக்கலாம். சுமிதாவின் மனம் காளியின் கடாட்சம் பெற்று உருவேறிற்று. பாலன் இந்த உருவேற்றத்தை

எதிர்பார்க்கவில்லை. சுமிதாவை நம்பமுடியாது என்பது பாலனுக்குத் தெரியும். இப்படித் தலைகீழாய் மாறுவாள் என அவன் எண்ணி இருக்கவில்லை. வாக்கு கொடுத்துவிட்டு மாறவேண்டும் என்பதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. தான் செய்யப்போகும் பிராயச்சித்தம் தடைபட்டுப் போவதைப் பொறுக்க முடியவில்லை. இந்தக் கணத்தில் மண்டை சிதறி மாண்டு போதல் மேல் என அவன் எண்ணிக் கொண்டான்.

அன்று படுக்கையறைக்குச் சென்ற பொழுது மறுபக்கம் திரும்பிப் படுத்தவள் "எல்லா நிம்மதியும் போச்சுது" என்றாள். அதை சொல்லி முடித்தபொழுது வந்த அனுங்குதலே வேலாகப் பாலனின் மார்பில் ஏறிற்று. அவன் வேதனையில் துடித்தான். போராட்டம் தொடங்கி விட்டதைப் புரிந்துகொண்டான். பாலனுக்கு உடம்பெல்லாம் எரிவதான ஒரு கோபம். அது பூதமாக எழும்பிப் புயலாக அசையத் தொடங்கியது. அதை அடக்கியவண்ணம், "என்ன நிம்மதி போச்சுது?" என்றான்.

"பின்ன இங்க என்னத்துக்கு அவளை எல்லாம் எடுத்துக் கொண்டு? என்னையும் பிள்ளையளையும் நிம்மதியா இருக்க விடுங்க"

"நீதானே ஓம் ஓம் எண்டு சொன்னாய். நான் கடிதமும் எழுதிப் போட்டிட்டன். அதுகளுக்கு ஆசை காட்டிப்போட்டு மோசம் செய்யக்கூடாது."

"அப்ப எனக்கு மாத்திரம் மோசம் செயலாமே? கடிதம் எழுதினா கட்டாயம் எடுக்கோணுமே? என்ர நிம்மதிய கெடுக்காதேங்க."

"நான் வாழ்க்கை நடத்த அவளை இங்க கூப்பிடேல்ல. அது உனக்கு நல்லாத் தெரியும். ஆசை காட்டிப் போட்டு எடுக்காமல் விடுகிறது பாவம். நிம்மதியா இருக்கிறதும், அவஸ்தைப்படுகிறதும் நீ எப்பிடி யோசிக்கிறாய் எண்டதைப் பொறுத்தது. உனக்கு ஒரு கேடும் வராது. அதை நம்பு. நிம்மதியா இருக்கப் பார்."

“இல்ல நீங்கள் அவளை இங்க எடுக்கவேண்டாம். பிறகு நான் பத்திரகாளியா மாறிடுவன். ஓ...”

“என்ன வெருட்டுறாய் போல இருக்குது. உந்தப் பருப்பு இனி என்னில அவியாது. தயவு செய்து பொறுமையா இருக்கப் பார். நான் ஏற்கனவே கடிதம் எழுதிப் போட்டாச்சு. அத்தோட முடிவும் எடுத்திட்டன். அவைய இங்க எடுக்கிறதை நிறுத்தப் போறேல்ல. இப்பிடியாவது ஒரு உதவி செய்ய முடிஞ்சது எனக்குச் சந்தோஷம்.”

“அப்பிடி எண்டா நீங்கள் அவளோட போய்த்தான் இருக்க வேண்டிவரும்.”

“வாய மூடு. சரி அதுதான் விதியெண்டா யார் என்ன செய்ய முடியும்?”

“ஐயோ.”

சுமிதா கோபத்தில் படுத்தபடியே திரும்பிப் பாலனின் முதுகில் காலால் உதைந்தாள். பாலன் கட்டிலால் கிழே விழுந்தான். அவன் செய்ய எண்ணிய காரியத்தில் இருந்த உறுதி கம்பீரம் கொண்ட பூதமாக மேலே எழுந்து நின்றது.

சிவமயம்
20-10-2011, காரைநகர்

அன்புள்ள அத்தான்! சுமித்திராவக்கா, சுருதி, சுபனி யாவரும் அறிவது: நாங்கள் நலமாக உள்ளோம். அதுபோல் நீங்கள் யாவரும் நலமுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இறைஞ்சுகிறேன்.

இந்தக்கடிதம் சுமித்திரா அக்காவின் கண்களில் பட்டுக் கோபத்தைத் தூண்டாமல் இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். என்றாலும் சில உண்மைகளை எடுத்துக் கூற வேண்டியது எனது கடமையாகிறது. நீங்கள் முதலில் கடிதங்கள் அனுப்பினீர்கள். நானும் மகிழ்வும், மன ஆறுதலும் கண்டேன். திடீரென எப்பொழுது கடிதத்தில் வெடிகுண்டு வைத்து அனுப்பப் பழகினீர்கள்? உங்களிடம் இருந்து வந்த

கடைசிக் கடிதம் அப்படித்தான் இருந்தது. பகிடிக்குத்தான் சொல்கிறேன். கோபிக்காதீர்கள்.

உங்கள் கடிதத்தைப் பார்த்த பின்பு என்னைச் சந்தோசமும் கவலையும் ஒன்றாகச் சேர்ந்து பந்தாடுகின்றன. நீங்கள் எனக்கு நீதி தரும் சிபிச்சக்கரவர்த்தி ஆகிவிட்டீர்கள். அந்த நியாயத்தை ஏற்றுக்கொள்ளும் கொடிய புறாவாக என்னால் இருக்க முடியாதே. உங்களுக்கு என்மீதும், எனது குடும்பத்தின்மீதும் உள்ள அக்கறை போலவே எனக்கும் உங்கள் மீதும், உங்கள் குடும்பத்தின் மீதும் மாறாத அக்கறை உண்டு. எங்களுக்கு நன்மை செய்வதாகப் புறப்பட்டு, அது உங்களுக்கே கேடாக அமைந்துவிடக்கூடாது என்பது எனது கவலையாக உள்ளது. எனது சுயநலத்தை அடக்கம் செய்து, இதற்கு மறுப்புத் தெரிவிக்க வேண்டி, எனது ஒரு பக்க மனசு அழுகிறது. மறுபக்க மனசு சம்மதிப்பதற்குப் பல காரணங்களைக் கண்டுபிடிக்கிறது.

சுமித்தராவக்காவால் எங்களைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது என்கிறீர்கள். அவசரப்படாமல் இதை நன்கு அறிந்து கொள்ளுங்கள். அக்கா சம்மதித்தால் எனது பிள்ளைகளுக்கு ஒரு பாதுகாப்பான வாழ்வு அமை வதைத் நான் தடுக்கக்கூடாது என்கிறது என் பேதை மனது. மனிதர்களின் வாழ்வே அவர்கள் குழந்தைச் செல்வங்களைச் சுற்றித்தானே இருக்கிறது. எனது வாழ்க்கையும் அவர்களைச் சுற்றியே பின்னிப் பிணைந்து கிடக்கிறது. எனது செல்வங்கள் அவர்கள். எனது உயிர், பாசம், வாழ்வு என்பன அவர்களுக்கு சமர்ப்பணமானது. அப்படி இருக்க அவர்களுக்கு உண்டாகும் ஒரு நன்மையை நான் எப்படித் தடுப்பேன்? அதேவேளை இப்பொழுது சமாதானமாய் இருக்கும் அக்கா பின்பு ஒரு சமயத்தில் குழம்பிவிட்டால் என்னால் அதை நிச்சயம் தாங்கிக் கொள்ள முடியாமல் போகும். எதற்காக என்னை ஆசைகாட்டிச் சிக்கலில் மாட்டிவிட்டீர்கள் என்பது புரியவில்லை என்றும் என்னால் சொல்ல முடியாது. உங்கள் நல்ல உள்ளம் புரிகிறது. எங்களுக்கு ஒரு பாதுகாப்பான வாழ்வை அமைத்து தரவேண்டும் என்பது உங்கள் அவாவாக இருக்கிறது. நீங்கள்

அதன்மூலம் பிராயச்சித்தம் பண்ண எண்ணுகிறீர்களா! என்று தெரியவில்லை. எது எப்படி இருந்தாலும் உங்கள் நல்ல மனதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

நான் பெண்ணாய் இருந்தாலும், பெண்களைப் பற்றிய சில அபிப்பிராயங்கள் சமுதாயத்தில் நிலவுவதை நான் அறிவேன். சமூகத்தின் கருத்துக்கூட சிலவேளை சரிதானோ என்று எண்ணத் தோன்றுகிறது. பெண்கள் தங்கள் உரிமையைப் பாதுகாத்துக் கொள்ளச் சிலவேளைகளில் கீழ் நிலைக்குச் சென்று விடுவார்கள். அண்டத்தின் ஆழத்தைக் கண்டாலும் பெண்ணின் மன ஆழத்தை காணமுடியாது என்பது சிலவேளை உண்மையாக இருக்கலாம். அக்காவின் மனதை நீங்கள் நன்கு புரிந்து இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். தயவு செய்து உங்கள் முடிவை மீண்டும் ஒருமுறை நன்கு பரிசீலித்த பின்பு என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள்.

சொந்த குழப்பத்தில் நாட்டின் குழப்பம் பற்றி இன்று அதிகம் எனக்கு எழுத மனமில்லாது இருக்கிறது. ஆயுதம் யார் கையில் இருக்கிறதோ அவர்களுக்கு அடிபணிந்து கூனிப்போன முள்ளந்தண்டை நிமிரவிடாது அவர்கள் பார்த்துக் கொள்ளுகிறார்கள். பல இளைஞர்கள் தங்கள் தியாகத்தால் தனிநாட்டிற்கு வித்திடுவோம் என்கின்ற உயரிய நோக்கோடே இயக்கங்களுக்குச் சென்றார்கள். அந்த இயக்கங்களில் அவர்கள் எப்படி வழி நடத்தப்பட்டார்கள் என்பது சோகமான வரலாறு. அதற்காக அந்த மறவர்களின் தியாகத்தை அவமதிக்க முடியுமா? அது தமிழரின் ஆத்மாவை அவமதிப்பதாய் இருக்காதா? தலைமைகள் செய்த தவறுகளுக்காக ஆத்ம சுத்தியுடன் விடுதலைக்கு ஆகுதியானவர்களை அவமதிப்பதா? அவர்கள் கல்லறைகள் ஒருவகையில் தமிழ் இனத்தின் ஆத்மாக்கள். அது இன்று இல்லாது ஆக்கப்படுகிறது என்பது வலி தரும் உண்மை. அது யார் பெற்ற பிள்ளைகளோ... அவர்களுக்கான நினைவுகளோ?

எனக்கு ஒரு கதை ஞாபகம் வருகிறது. அதைக் கூறி இந்தக் கடிதத்தைச் சுருக்கமாக இன்று முடித்துக் கொள்கிறேன்.

பீஷ்மரைப் பார்த்து தருமர் "தெரிவையர் எல்லாம் பாவவுருவம் (பெண்கள் எல்லாம் தீவினையின் படிவங்கள்) என்று உரைப்பார் உலகினர். இதைப்பற்றி தங்கள் கருத்து என்ன?" என்று கேட்டார்.

அதற்குப் பிதாமகர் பீஷ்மர் "ஒரு முறை நாரத மாமுனிவர் உலகை வலம்வந்த காலத்தில் அவர் எதிரே பஞ்சசூடை என்னும் அழகான பெயரை உடைய பெண் ஒருத்தி வந்தாள். அவளை நோக்கி நாரதர், "பஞ்சசூடை! பெரியோர்கள் பெண்களைப் பற்றி நல்லபிப்பிராயம் கொள்ளவில்லை என்றாலும் கற்றுணர்ந்தோர் பெண்களைப் பற்றி என்ன கூறுகிறார்கள்? மறைக்காமல் சொல்வாயாக" என்று கேட்டார். அப்பொழுது அந்நங்கை நாரதமுனிவரிடம், "தூய்மை யானவரே! நீராழம் கண்டாலும் காணலாம். மங்கையரின் மன ஆழத்தைக் காணமுடியாது என்பர். அவர்கள் நகை, நல்லாடை, நற்சாந்து, நற்பூ, நல்லுணவு முதலியனவற்றின் மேலேயே அன்பு வைப்பார்கள். ஆடவர் யாராக இருந்தாலும் அவருடன் சேர விரும்புவர். தம்மை விரும்பும் ஆடவர் முன் தம் அழகு காட்டி மயக்கித் திரிவர். கரும்புபோல இனிக்கப் பேசும் அப்பெண்களிடத்து பஞ்சமா பாதகங்களும் குடியிருக்கும்" என்று கூறி அந்த பஞ்சசூடை போயினாள் என்று கூறப்படுகிறது.

பெண்களை பற்றிக் கூறும் இந்தப் பகுதியை இப்போழுது வாசிக்கும் பொழுது அருவருப்பாக இருக்கிறது. அதேவேளை ஒரு பெண்ணே, பெண்களைப்பற்றி இவ்வளவு இழிவாகக் கூறினாளா? அல்லது இதை எழுதிய கதாசிரியன் தனது கூற்றுக்கு வலுச்சேர்க்க ஒரு பெண் பாத்திரத்தின் மூலமாகச் சொல்ல வைத்தானா என்கின்ற ஐயமும் எழுகின்றது. "ஆடவர் யாராக இருந்தாலும் அவருடன் சேர விரும்புவர்" என்பது மிகவும் கேவலமான கணிப்பாகிறது. பெண்களைப்

பற்றி இவ்வளவு இழிவாகச் சொல்லப்பட்டு இருப்பதை ஏற்கமுடியாது. இருந்தும் பெண்களின் குணங்கள் சிலவேளை களில் பிரபஞ்சத்தைப் போல ஆழம் காண முடியாது இருக்கும். அதற்குள் விஷநாகங்களும் கருநாகங்களும் பதுங்கியிருக்கும். தன்னை அல்லது தனது உரிமையை, உடையானை யாராவது தீண்டுகிறார்கள் என்றால் அந்த நாகங்கள் அவர்கள்மீது நஞ்சைக் கக்கத் தயங்காது என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும். கொலையும் செய்வாள் பத்தினி என்பார்கள். சில அநுபவத்தைப் பார்க்கிறபொழுது அந்த வசனங்களை அனுபவித்தே கூறியிருக்கிறார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. உங்களை நான் பயமுறுத்தவில்லை. பெண்கள் மனது ஆழமானது மட்டுமல்ல சலனமானதும்.

ஒரு சிறிய தளும்பல் பெரிய பூசலாகி, உங்கள் வாழ்வே பெரிய நரகமாகிவிடும் என்ற ஐயம் உங்கள் கணக்கிற்குள் சிக்காதா என்பது பற்றித் தயவு செய்து நன்கு சிந்தித்த பின்னர், என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்.

நீங்கள் எனக்கு இந்த உதவி செய்தாலும் செய்யா விட்டாலும் உங்கள்மீதும், உங்கள் குடும்பத்தின்மீதும் உள்ள எனது அன்பில் எப்பொழுதும் எந்தப் பழுதும் உண்டாகாது. அதில் நீங்கள் எள்ளவும் ஐயம்கொள்ளத் தேவையில்லை. எனது வாழ்வில் ஒருமுறை அழகாக வாய்த்தது வசந்தம். அது கருகினாலும், அடிமனதில் ஆழமாய் சுவடு பதிந்து கிடக்கிறது. யாரையும் எக்காலத்திலும் எதற்காகவும் காயப்படுத்தக்கூடாது என்பதே எனது அவாவாக உள்ளது. அந்த எண்ணத்தை நிறைவேற்றவாவது ஆண்டவன் துணைசெய்ய வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

தயவு செய்து நான் யாரையும் குறை சொல்வதாக, அல்லது நம்பிக்கை இல்லாது இருப்பாதாக எண்ணிக் கொள்ளவேண்டாம். இந்தக் கடிதத்தில் தவறு இருந்தால் நீங்கள் எல்லோரும் என்னை மன்னித்துக் கொள்ளவேண்டும்.

எல்லாம் அவன் கையில் என்கின்ற நம்பிக்கையோடு நேற்றுக் காலை கோவிலுக்குச் சென்று பூக்கட்டிப் பார்த்தேன்.

வெள்ளைப் பூ வந்திருக்கிறது. எல்லோரது மனதும் வெள்ளையாகவே இருக்கவேண்டும், எல்லோரது வாழ்விலும் இன்பம் வழியவேண்டும் என்று இறைவனை வேண்டிக்கொண்டு விடைபெறுகிறேன்.

இப்படிக்கு
என்றும் அன்புடன்
செல்வி

21

விபத்துக்களின் கோவையே வாழ்க்கை என்பது பாலனின் தத்துவம் அவனுக்கு அதில் அசைக்கமுடியாத நம்பிக்கை. மனிதன் நினைப்பது போல் வாழ்க்கை அமைவதில்லை. வாழ்க்கை அமைவது போல் மனிதனின் நினைவுகள் அமைவதில்லை. விளக்க முடியாத முடிச்சுகளும் வாழ்வில் உண்டு. யோகிக்கும், போகிக்கும், அரசனுக்கும், ஆண்டிக்கும் பொதுவான விதி இது. வாழ்க்கையின் விபத்துக்களே விதியின் பாதையாக அமையும் போலும். திட்டமிடும் வாழ்க்கை கணப்பொழுதில் திசை மாறிப் போகும். சம்பவம் என்னும் புயல்கள் தாக்கும் வேகத்தில் தனிமனிதனின் சரித்திரம் மாறி நடைபோடும். தானும் சம்பவம் என்னும் புயலில் சிக்கித் தனது சரித்திரமும் மாறி நடை போடுவதாக அடிமனதில் பதுங்கிக் கிடக்கும் உண்மை விழித்துக் கொண்ட சோகம் பாலனை வருத்தியது. அலைமோதும் மனதுடன் பாலன் உடலும் உளமும் சோர்ந்துபோய் வேலையால் வந்தான்.

மார்கழி மாதக் காலைப்பொழுது. வானம் பேரொலி யோடு அழுகின்ற கோலம். காலையில் வேலைக்குச் சென்ற பாலனுக்கு விசித்திரமும் வியப்பும்.

காலைப்பொழுது முழுவதும் மழைபெய்ந்து இப்பொழுது ஓய்ந்துவிட்டது. மானிடம் ஏற்றுக் கொண்டாலும் இல்லாவிட்டா

லும் மனிதன் என்னும் விபத்தால் பூமியின் விதி மாறிப் போகிறது என்பது நிஜம். மாரியில் இந்தக் காலநிலை விபத்து. மாரியில் மழையென்ன விபத்தா? மாரியில் மழை விபத்து இல்லை. மாரியில் மழை நோர்வேயில் பொழிவது விபத்து. அந்த விபத்து இப்பொழுது சாதாரணமாயிற்று. மாரியில் மலர்கள் மலரும் விசித்திரம் பார்க்கும் காலம் வந்தாயிற்று. இது இந்த வருடத்திற்கான விசேட குணமா? அல்லது இனிவரும் காலங்கள் இப்படித்தானா? விடை காணப்படாத கேள்விகள் அவை.

இயற்கையின் தடுமாற்றம், இங்குத் தாவரங்களுக்குக் குதூகலம். பனிக்காலத்தை எண்ணி முடங்கிக் கொள்ள நினைத்தவை பொழியும் மழையை எண்ணி பச்சையாகச் சிரிக்கின்றன. அவை ஆதவன் கதிர்களை ஆரத்தழுவி மலர்களாய் விரிந்து இது குளிர்காலமா அல்லது கோடை காலமா என்கின்ற மயக்கம் தருகின்றன.

மனிதன் என்னும் விபத்தால் பருவகாலத்தில் எற்பட்ட விசித்திரம். பூமியின் விதி மனிதனால் எழுதப்படுகிறதா? அல்லது மனிதனின் விதி பூமியால் எழுதப்படுகிறதா? பூமியின் விதியை மனிதன் மாற்ற நினைத்ததால், மனிதத்தின் விதி பூமியால் மாற்றி எழுதப்படும் என்பது பாலனின் எண்ணம்.

பாலன் சிந்தனையோடு வீடு நோக்கி நடந்து வந்தான். வழமைபோலப் பாடசாலை முடிந்திருக்க வேண்டும். பல வண்ணங்களில், பலதோற்றங்களில், மாணவர்கள் சோடியாக, கும்பலாக, தனித்து என்று பல வகைகளிலே தங்கள் வீடு நோக்கிச் சென்றார்கள்.

மாரியில் நோர்வேயில் மழை. மழைக்குப் பின்பு சூரியனின் பிரசன்னம். இயற்கையின் விபத்துக்கள்கூட அழகாய் இருப்பதாய்ப் பாலன் எண்ணிக் கொண்டான். பாலன் சூரியனையும், நீலவானத்தையும் பார்த்த வண்ணம் வீட்டை நோக்கி நடந்தான்.

யாரோ பின்னால் ஓடிவரும் சத்தம் கேட்டது. பாலன் திரும்பிப் பார்த்தான். அவர்கள்தான். இன்று பாலன் திரும்பிப்

பார்த்த போதும் அவர்கள் தங்கள் ஓட்டத்தை நிறுத்தவில்லை. ஏதோ முடிவு செய்தவர்கள் போலப் பாலனை நோக்கி ஓடிவந்தார்கள். பாலனுக்கு நம்பமுடியாத வியப்பு. வழமையாக ஓரம்கட்டிப் போகின்றவர்கள் இன்று நேராக ஓடி வருகிறார்கள். அதுவும் என்னைப் பார்த்தவண்ணம், எந்தவித தயக்கமும் இன்றி, ஓடி வருகிறார்கள். எங்கிருந்து வந்தது இந்தத் துணிவு? அவர்களின் பொறுமையும் எல்லை கண்டிருக்கலாம். ஏதோ முடிவோடுதான் அவர்கள் ஓடிவருகிறார்கள் எனப் பாலன் எண்ணிக்கொண்டான்.

மூச்சுவிடாது ஓடிவந்தவர்கள் பாலனுக்குக் கிட்டே வந்ததும் ஓட்டத்தை நிறுத்தினார்கள். ஓடிவந்த களைப்பாற அவதி அவதியாக மூச்சை இழுத்துவிட்டார்கள். இன்று பாலனின் கண்ணைத் துணிவாக அந்தப் பெண் பார்த்தாள். அதில் ஒரு தீர்க்கமான முடிவு தெரிந்தது. பாலன் என்ன என்பது புரியாத கேள்வியோடு நின்றான். அந்தப் பெண் அவசரமாகப் பேசத் தொடங்கினாள். விரைவாக அலுவலை முடித்துவிட்டுப் போக வேண்டும் என்கின்ற அவசரம் அவளிடம்.

"எங்களுக்கு யாரையும் தெரியாது. யாருடனும் நாங்கள் பழகவும் இல்லை. அதற்கான சந்தர்ப்பமும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. நீங்கள் எங்களுக்கு உதவி செய்ய வேண்டும். விபரமாக விளங்கப்படுத்த இப்பொழுது எங்களுக்கு நேரம் இல்லை. எப்பொழுதும் எங்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடையாது. எந்தக் கணத்திலும் அவர் வரலாம். எல்லா விடயங்களையும் இந்தக் கடிதத்தில் எழுதி இருக்கிறேன். நீங்கள் எனக்கு உதவி செய்ய வேண்டும்."

"இன்ரநெற் ரெலிபோன் இருக்க, எதுக்காக என்னிடம் நீங்கள் உதவி கேட்கிறீர்கள்?"

"அவர்கள் ஒன்றும் முட்டாள்கள் இல்லை. அந்த வசதிகள் எல்லாம் எங்களுக்கு கிடைக்காமல் மிகவும் கவனமா பார்த்துக் கொள்கிறார்கள்."

"ஓ..."

"கடிதத்தைப் பொலிசிடம் ஒப்படையுங்கள். இந்த உதவியை நிச்சயம் நீங்கள் செய்ய வேண்டும். எங்கள் வாழ்வும் சாவும் இதில் தங்கி இருக்கிறது. உங்களைத்தான் நாங்கள் தேவனாகப் பார்க்கிறோம்."

அடுத்த கணமே அவர்கள் வேகமாக ஓடத் தொடங்கி னார்கள். பாலனுக்கு அவர்களிடம் நிறையக் கேட்க வேண்டும் போல் இருந்தது. அவர்கள் ஓடிய வேகத்தில் வெகுதூரம் போய்விட்டார்கள். பாலன் முதலில் கடிதத்தைப் பிரித்துப் படிக்க எண்ணினான். பின்பு அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான். "அந்தப் பெண் பொலிஸிடம் கொடுக்கச் சொன்னாள். என்னை வாசிக்கலாமா அல்லது வாசிக்க கூடாதா என்று கூறவில்லை. வாசிக்குமாறு கேட்டுக்கொண்டால் மட்டுமே மற்றவர்களின் கடிதத்தை வாசிக்கலாம். மற்றும்படி அவற்றை வாசிப்பது நாகரிகம் அல்ல" எனப் பாலன் எண்ணிக் கொண்டான்.

அவன் கடிதத்தைத் திருப்பிப் பார்த்துவிட்டுத் தனது பைக்குள் கவனமாக வைத்தான். மனதிற்கு வர்க்கமூலத்தில் பெருகும் விடையில்லாத கேள்விகள் மேலெழுந்து வந்து மூளையைக் குடைவதான அவஸ்தை. என்ன நடக்கிறது அந்தக் குடும்பத்திற்குள்? பதில் கிடையாத தவிப்போடு பாலன் வீட்டை நோக்கி நடந்தான்.

வீட்டிற்குச் சென்ற பாலன் முதலில் இதைச் சுமியிடம் சொல்லக்கூடாது என்றுதான் எண்ணினான். அவனால் அந்த மனச்சுமையைப் பகிர்ந்து கொள்ளாமல் இருக்க முடியவில்லை. சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் பொழுது, "என்ன குழம்பிப் போய் இருக்கிறியள்?" என்று கேட்டாள் சுமிதா.

"எல்லாமே குழப்பம்தான்."

"என்ன எல்லாமே குழப்பம். நீங்கள்தான் தேவையில்லாமல் குழம்பிறியள். மற்றவையையும் குழப்பிறியள்."

"நான் என்ன சொல்ல வந்தனான் எண்டது தெரியாமல்

தேவையில்லாமல கத்துறாய்?"

"என்ன சொல்ல வந்தனியள்?"

"அந்த நாலு வீடு தள்ளி இருக்கிற நோர்வே குடும்பத்தைத் தெரியும் எல்லே?"

"ஓ... பிள்ளையள் ஒரு மாதிரி எண்டு சொல்லி இருக் கிறியள்."

"பிள்ளையள் ஒரு மாதிரியா? அல்லது தாய் தகப்பன் ஒரு மாதிரியா? ஒண்டும் புரியேல்ல."

"எங்களுக்கு இருக்கிற பிரச்சனைக்கு ஆற்றையன் வீட்டில நடக்கிற அலுவல் பற்றிக் கவலப்படுவானேன்?"

"நான் தேடிப் போகேல்ல. அது தேடி வந்து இருக்குது."

"என்ன சொல்லுறியள்."

நான் முதல் ஒருநாள் வேலையால வரேக்க அவங்கள் ஏதோ சொல்ல வந்து இருக்க வேணும். ஆனால் தேப்பன் வந்திட்டான். உடன விழுந்தடிச்சு ஓடிட்டாங்கள். இண்டைக்கு ஆத்துப்பறந்து ஓடியந்தாங்கள். ஒரு கடிதத்தைத் தந்து பொலஸிட்ட குடுக்கச் சொல்லிப் போட்டு ஓடிட்டாங்கள். நான் என்ன செய்யறது எண்டு தெரியேல்ல."

"உங்களுக்கு ஏன் தேவையில்லாத வேலை. பேசாமல் அதை ஏறிஞ்சு போட்டு இருங்கோ. நீங்கள் பொலிஸுக்கு கொண்டுபோய்க் குடுத்ததை அவன் அறிஞ்சா பிரச்சனை பெரிசாப் போகும்."

"அதுக்காக இரண்டு பிள்ளையள் என்னவாப் போனாலும் சரியே?"

"அதுதான் அதுகளின்ர விதியெண்டா நாங்கள் என்ன செய்யிறது."

"எதிர்பார்க்காமல் விதி விளையாடினா ஒண்டும் செய்ய முடியாதுதான். தெரிஞ்சுகொண்டும் உதவி செய்யாமல் இருந்திட்டு விதியில பழிபோடக்கூடாது. அப்பிடிச் செய்தா,

அது ஒரு மனிதாபிமானம் இல்லாத சமூகக்குற்றம்."

"உந்த ஒண்டுக்கும் உதவாத தத்துவம் பேசி நீங்கள் மாட்டப் போறியள். பிறகு எங்களையும் தேவையில்லாத பிரச்சினையில மாட்டி விடப்போறியள்."

"மனிதாபிமானம் இல்லாத ஜடமா இருக்கிறதிலும் பார்க்க, இல்லாமல் போதல் மேல்."

"இப்பிடி விதண்டாவாம் பிடிக்கிற உங்களோட கதைச்சு என்ன பயன்?" எனக்கூறிவிட்டு சுமிதா மேலே சென்று விட்டாள். தாதி என்னும் தொழில் வாயோதிபர் மடத்தில் வேலை செய்வதோடு முற்றுப் பெறுவதில்லை; ஆபத்தில் அவதிப்படுபவர்களை எங்கு கண்டாலும் உதவி செய்ய வேண்டும். அதுதான் அந்தத் தொழிலின் தர்மம். அது உடல் சம்பந்தப்பட்டதாய் மட்டும் இருக்க வேண்டும் என்கின்ற வரையறை எதுவும் இருப்பதாய் பாலனுக்குத் தோன்றவில்லை. அந்தப் பிள்ளைகள் உடலாலும் மனதாலும் வதைபடுகிறார்கள் என்றே அவனுக்குத் தோன்றியது. அவன் அடுத்தநாள் காவல் நிலையத்திற்குப் போவதாக முடிவு செய்து கொண்டான்.

அடுத்தநாள் காலை பாலன் காவல் நிலையத்திற்குச் சென்றான். பலர் முறைப்பாடு செய்வதற்கு காத்து நின்றனர். ஒஸ்லோவின் சனத்தொகை பெருகப் பெருக பிரச்சனைகளும் பெருகிக் கொண்டு செல்கின்றன எனப் பாலன் எண்ணிக் கொண்டான்.

கண்ணாடிக் கூட்டிற்குள் ஓர் ஆணும் ஒரு பெண்ணுமாக இரு பொலீஸ் அதிகாரிகள் இருந்தார்கள். பெண் பொலீஸ் அதிகாரி நெட்டையாக இருந்தாள். அவளது முடி கறுப்பைச் சூல்கொண்டிருந்தது. இயற்கையிலேயே கறுப்பா அல்லது செயற்கை கறுப்பா என்கின்ற ஒரு சிறிய கேள்வி பாலனை நோண்டியது. அவளது கண்ணும் கறுப்பாய் இருந்த தால் அது இயற்றைக் கறுப்பாய் இருக்கலாம் எனப் பாலன் எண்ணிக் கொண்டான். இத்தாலிய நாட்டுச் சந்ததியைச்

சார்ந்தவர்கள் இப்படி இருப்பது வழமை. ஆண் அதிகாரி தமிழரைப் போல மீசை வைத்திருந்தான். அவன் முடி பொன்னிறத்தில் மினுங்கின. அவன் தோற்றம் தான் ஒரு வைக்கிங்கின் வாரிசு என்பதைச் சொல்லாமல் சொல்வதாகப் பாலன் எண்ணிக் கொண்டான்.

பொலிஸார் ஒவ்வொருவரையும் விசாரித்து, படிவங்களை நிரப்புமாறு வேண்டினார்கள். படிவம் நிரப்பியவர்களை முறைப் படிக் கூப்பிட்டு உள்ளே மேற்கொண்டு விசாரித்தார்கள்

போதை மருந்து பாவிக்கும் இருவர் அந்த ஆண் அதிகாரியோடு குழப்பம் செய்தார்கள். அவர்களின் குழப்பத்தால் பாலன் மேலும் பொறுமையாகப் பின்னால் நிற்க வேண்டியதாகிற்று. அவர்கள் பிரச்சினை அடங்கிய பின்பு ஒருவாறு பாலனின் முறை வந்தது. வழமையான முறைப்பாடு செய்ய வந்திருப்பதான தோரணையோடு பாலனைக் அந்தப் பெண் அதிகாரி அங்கு இருக்கும் படிவம் ஒன்றை நிரப்புமாறும் வேண்டிக் கொண்டாள். பாலன் தான் எதற்கு வந்து இருக்கிறேன் என்பதை விளங்கப்படுத்திக் கடிதத்தைக் கொடுத்தான். அந்தப் பெண் அதிகாரி ஒழுங்கின்படி வராது, முந்திச் செல்வதற்குப் பாலன் முயற்சிக்கிறானா என்கின்ற சந்தேகத்தோடு அந்தக் கடிதத்தை வேண்டிக் கொண்டாள். பின்பு பாலனைப் பார்த்து, வாசிக்கலாமா என்று கேட்டாள்.

“நீங்கள் வாசிப்பதற்குத்தானே அவர்கள் எழுதியிருக் கிறார்கள்” என்று பாலன் பணிவாகப் பதிலளித்தான். பாலனை ஒரு முறை கேள்விக்குறியோடு பார்த்தவள், அதைப் பிரித்துப் படித்தாள். பாலன் அவள் படிப்பதைப் பார்த்துக் கொண்டு நின்றான். அவளது ரோஜா நிறத்து வதனம் மெதுவாக இரத்த நிறத்திற்கு மாறிச் சென்றது. அவளின் அழகிய வதனத்தில் கவலையும் கோபமும் காளியின் ஆட்டம் ஆடியது. இந்த ருத்திரத்தாண்டவம் பிரசன்னமாக அவர்கள் என்ன எழுதியிருக்கிறார்கள்? பாலனால் ஆர்வத்தை அடக்க முடியவில்லை. தான் வாசித்துப் பார்த்து இருக்கலாமோ என்கின்ற ஏக்கம் எழுந்தது. அந்தப் பெண்ணதிகாரி பாலனைப்

பார்த்து, சற்றுப் பொறுங்கள் என்று கூறிவிட்டு உள்ளே சென்றாள். சிறிது நேரத்தில் வந்து பாலனை உள்ளே வருமாறு அழைத்துச் சென்றாள்.

பொலீஸ் நிலையத்தை விட்டு வெளியே வந்தபொழுது பாலன் வியர்த்துப் போய் இருந்தான். சை... மிருக குணத்தையும் மனித உருவத்தையும் கொண்டலையும் பிறப்புக்கள். அவர்களின் அக்கிரமமான வக்கிர புத்திகள். கடுவன் பூனைகளைவிட மோசமான குணம் படைத்தவர்கள். தனது சந்ததி பெருகவேண்டும் என்பதற்காக வேறு ஒரு கடுவனின் பரம்பரையைக் கொண்ட குட்டியைக் கொலை செய்யும் கடுவன் பூனை. அதைவிட மனிதன் கேவல மானவன். சொந்த இரத்தத்தின்மீதே தனது வக்கிரத்தைப் பாய்ச்சுகிறான். என்ன கொடுமை இது? எதனால் இந்த மனிதர்களின் மூளையில் இப்படியொரு வக்கிரம்? பாலன் விடைகள் அற்ற கேள்விகளின் பெருக்கத்தில் மூழ்கித் திணறி னான். கால்கள் வலுவிழந்ததாக, கடவுளர் கண்கெட்டவராக, ஐயோ என்று கத்தி அழவேண்டும் என்கின்ற உணர்ச்சி மேலிட்டவனாக, அத்தனை உணர்வையும் மனதில் பூட்டிக் கண்கள் ததும்புவதை மட்டும் தடுக்க முடியாதவனாய், சுரங்கரத நிலையத்தை நோக்கி நடந்தான்.

இரண்டு நாள்கள் வெறுப்போடும் வேதனையோடும் கழிந்தன. மனிதமனம் சிலவேளை தொட்டால் சிணுங்கி போன்று கோலம் காட்டும். எங்கோ ஒருமூலையில் இருக்கும் மனிதனுக்கு ஏற்படும் சலனம்கூட மறுமுனையில் இருக்கும் மனித மனத்தை ஆழமாகப் பாதிக்கும். பாலனுக்கும் அதே அவஸ்தை. மற்றைய மனிதர்களைப் பற்றிச் சிந்திக்காமல் அவனால் இருக்க முடியவில்லை.

அது ஒரு வியாழக்கிழமை. மாலை ஐந்து மணி இருக்கும். பாலன் வேலையால் வந்து சாப்பிட்டு விட்டு குடும்பத்துடன் தமிழ் படம் பார்த்தான். கவலைகளை சிறிது நேரமாவது சினிமாப்படங்கள் விழுங்கும் என்கின்ற அநுபவம் பாலனுக்கு உண்டு. அத்தோடு படம் பார்ப்பது ஒரு

வகையில் வாய்க்குப் பூட்டுப் போடுவது போல இருக்கும். அதன் கவனத்தில் வீட்டில் தேவையில்லாத சண்டைகள் தலை காட்டாமல் பதுங்கிக்கொள்ளும். அந்த இடைவெளி பாலனுக்குப் பரமதிருப்தி தரும். சுமியோடு இப்பொழுது தொட்டதுக்கெல்லாம் சண்டை வருகிறது. கோடு விழுந்த உறவு போன்ற குடைச்சல் மனதை எப்பொழுதும் அரிக்கிறது. கோபம் பட்டெனப் பாய்ந்து வருகிறது. எங்கோ மனதின் ஒரு மூலையில் இருக்கும் வெறுப்பை எடுத்து எறியத் தெரியாத அவஸ்தை தொடருகிறது.

கோபம் கொள்ளாது மனதை அடக்கவேண்டும் என்று பாலன் பாடுபடுகிறான். ஒரு கணத்தில் அதன் பலன் கைநழுவிப் போய்விடுகிறது. அவன் நினைத்ததுக்கு எதிர்மாறாய் எல்லாம் நடந்து விடுகிறது. கோபம் என்னும் கொம்பு முளைத்த காண்டாமிருகத்தைக் கட்டிக் காப்பது கடினமாகிறது. பாலனுக்கு முன்பு தமிழ் படத்தில் வரும் பாட்டும், சண்டையும் பிடிப்பதில்லை. இப்பொழுது நேரம் போகட்டும் என்பதற்காயும் பிள்ளைகளின் வேண்டுகோளுக்கு இணங்கவும் அவர்களோடு இருந்து அதையும் இரசிக்கிறான். முதுமை உடம்பில் ஏற முயற்சித்தாலும் மனசு இளமை யாக இருப்பதில் என்ன தவறு என்பது அவன் எண்ணம். இளமை துள்ளும் தென்னிந்தியத் திரைப்படங்கள் ஒருவகை போதை மருந்துதான். அதனால் அவை நேரத்தை வீணடிக்கும் என்கின்ற உண்மையும் அவனுக்குப் புரியும். சாக்கடையில் மயங்கும் மனிதக்கூட்டம் நாங்கள். பாலன் தானும் அந்த மயக்கத்தைச் சுகித்தான்.

திடீரென பொலிஸ்கார்களின் அலாரம் சத்தம் அலறியது. அது தங்கள் வீட்டை அண்மிப்பதாய் பாலன் உணர்ந்தான். பாலன் அவசரமாக யன்னலுக்கு அருகிற்சென்று வெளியே பார்த்தான்.

வேகமாகச் சென்ற பொலீஸ் வாகனங்கள் அந்த மனி தனின் வீட்டிற்கு முன்பே நின்றன. பாலன் அதற்கு மேல் பொறுமையற்றவனாய் ஜக்கற்றை எடுத்துக் கொழுவிக்கொண்டு

வெளியே புறப்பட்டான்.

இதைப் பார்த்த சுமிதா, "உங்களுக்கு ஏனப்பா தேவையில்லாத அலுவல்? ஏற்கனவே பொலிஸுக்கு ஒருத்தருக்கும் சொல்லாமல் போயிருக்கிறியள். அது காணாது எண்டு இப்ப என்னத்துக்கு ஓடுறியள்?"

"பாலன் உயிரோட இருந்தா ஓடுவான். அதை யாரும் தடுக்கேலாது. போசமல் இரு. இப்ப வாறன்" எனக்கூறிய பாலன் சுமிதா சொல்வதைக் கேட்பதற்கு நிற்கவில்லை.

அந்த மனிதனின் வீட்டிற்கு முன்பு புதினம் பார்க்கப் பலர் கூடிவிட்டார்கள். உள்ளே சென்ற பொலீஸார் அந்த மனிதனையும் அவனது மனைவியையும் கைதுசெய்து கொண்டு வெளியே வந்தார்கள். அப்படி அழைத்துச் செல்லும் பொழுது அவர்களின் முகத்தையும் தலையையும் ஜக்கற்றால் மறைத்துச் சென்றார்கள். இரக்கமே இல்லா மனிதனுக்கு மானம் என்கின்ற ஒன்று உண்டா என்பது பாலனுக்குப் புரியிவில்லை. என்றாலும் அது அவர்கள் உரிமை என்பதில் பாலன் தெளிவாக இருந்தான்.

பொலிஸாரோடு வந்த பிள்ளைகள் குழந்தைகள் காப்பகத்தினருடன் புறப்பட்டிருந்தனர். வெளியே அவர்கள் வரும்பொழுது பாலன் நிற்பதை அந்தப் பெண் கண்டு கொண்டாள். அவள் அவர்களிடம் அனுமதி பெற்றுக் கொண்டு பாலனிடம் ஓடி வந்தாள். பாலன் அவளைப் பார்த்துத் திருப்தியாகச் சிரித்தான். பாலனுக்கு அருகே வந்த அந்தப் பெண், "நீங்கள் செய்த உதவிக்கு ஆயிரம் நன்றிகள்" என்றாள்.

"அது என்னுடைய கடமை. உங்களுக்கு நல்லதொரு வாழ்க்கை இனியாவது அமையட்டும். உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்."

"மிகவும் நன்றி. உங்கள் தொலைபேசி எண்ணைத் தரமுடியுமா?"

பாலன் எண்ணை ஒரு கடுதாசியில் எழுதிக் கொடுத்தான். அவள் அதைப் பெற்றுக்கொண்டு மீண்டும் நன்றி கூறிவிட்டுச் சென்றாள். பாலனுக்கு மனதில் திருப்தி குடியேறியது. நிறையத் தமிழ்ப்படங்கள் பார்க்கவேண்டும் என எண்ணிக் கொண்டான்.

22

அன்று பிற்பகல் வேலைக்குச் சேர்பியாக்காரி வந்தாள். பாலனுக்கு அவள் வந்தால் மனதில் ஒருவித குஷி துள்ளி விளையாடும். அவளோடு கதைப்பது நல்ல சிநேகிதியுடன் கதைப்பதான ஒரு உணர்வை அள்ளித்தரும். அவளின் சிரிப்பும், பரந்த அழகான வதனமும் அவன் மனதில் ஒருவித அமைதியைக் கொண்டு வந்துவிடும். சில மனிதர்களோடு இருப்பது சுகம். விடுதலை. நட்பு. அமைதி. அது ஏன் உண்டாகிறது என்பது புரியவில்லை. சில மனிதர்களோடு சேர்ந்து இருக்க முடியாது. எப்போது அந்த இடத்தைவிட்டு நகரலாம் என்கின்ற தவிப்பாய் இருக்கும். காரணமில்லா வெறுப்பு அவர்களைக் கண்டவுடனேயே பிறந்துவிடும். இவ்வாறு பாலன் எண்ணிக் கொண்டான்.

இந்தச் சேர்பியாக்காரி முற்பிறப்பில் தன்னைப் புரிந்து கொண்ட தாயாக இருந்திருக்க வேண்டும். அல்லது சகோதரி யாகப் பிறந்து தன்னோடு வாழ்ந்து இருக்க வேண்டும். சகோதரமாய் அல்லது தாயாக இருந்துவிடுவதால் மட்டும் புரிந்துணர்வு வந்து விடுவதில்லை. சகோதரனைப் புரிந்து கொள்ளாத பல சகோதரிகள் இருக்கிறார்கள். பெற்ற பிள்ளையைப் புரிந்துகொள்ள முடியாத தாய்மார்கள் நிறைய இருக்கிறார்கள். இவள் தன்னைப் புரிந்து கொண்டவள் என்பதாகவே பாலன் உணர்ந்திருந்தான்.

மனிதனின் புரிந்துணர்வு, இரக்கம், அன்பு, பாசம் போன்ற உணர்ச்சிகளில் பல மரபணுவில் பதிந்து வைக்கப்பட்டு

இருக்கிறது. பிறப்பில் இருந்தே அவை வேலை செய்யத் துவங்குகின்றன. அமைதி தருபவள் எப்போதும் அமைதியே தரமுயலுகிறாள். அமைதியை அபகரிப்பவளின் ஒவ்வொரு அசைவும் வெறுப்பைத் தோற்றுவிக்கிறது. அவர்கள் அப்படித்தான் என்பதை எளிதில் மாற்றிவிட முடிவதில்லை. மனிதன் தன்னை உணர்ந்து கொள்வதில்லை. அவன் "தான்" என்கின்ற அகங்காரத்திற்கு அடிமைப்பட்டவன். அந்த அகங்காரம் விட்டுக் கொடுப்பை விரட்டியடிக்கிறது.

சேர்பியாக்காரி தரும் அமைதி பாலனுக்கு மிகவும் பிடிக்கும். பாலனுக்கு அவளை எண்ணச் சிலவேளை வியப்பாக இருக்கும். தான் என்ன செய்திருப்பேன், என்ன செய்யாது விட்டிருப்பேன் என்பதைக்கூடப் புரிந்து கொண்டு செயற்படும் அவளின் ஞானம், புரிந்துணர்வு அவனை வியப்பேற்றும். சேர்பியாக்காரியின் கணவன் கொடுத்து வைத்தவனாக இருக்கவேண்டும். பாலன் மன்னிப்பே கேட்காத மனை வியோடு வாழ்ந்து பழக்கப்பட்டவன். சேர்பியாக்காரியின் மனிதம் நிறைந்த பேச்சு சிலவேளை அவன் மனதைக் கரைத்துவிடும். ஜடங்களாய்ப் பார்க்கப்படாது, நட்பும் நேசமும் கரைந்தோடும் வாழ்க்கை பாலனின் கனவாகும். அது கனவாகிப் போனதே இன்றைய நிஜமாகும். சேர்பியாக்காரியோடு கதைக் கும் பொழுது அது இன்னும் அதிகமாய்க் கொழுந்து விட்டு எரியும். கடந்துபோன வாழ்வில் தான் இழந்தவற்றிற்குப் பிராயச்சித்தம் செய்ய வேண்டுமென்று மனது நிறைய உருகத் தோன்றும்.

அன்று மாலைச் சாப்பாடு வழங்கி முடிந்த பின்பு பல முதியவர்களைப் பாலனும் சேர்பியாக்காரியும் தொலைக் காட்சிக்கு முன்பு இருந்த சோபாவில் இருக்க வைத்தார்கள். தள்ளுவண்டிலில் இருப்பவர்களும் செய்தி பார்ப்பதற்கு ஏற்ப வசதி செய்தார்கள். சிறிது நேரத்தில் செய்திகள் துவங்கின. பாலனும் ஆவலாகச் செய்திகள் பார்க்கத் தொடங் கினான். சேர்பியாக்காரியும் தனது மாலைச் சாப்பாட்டை சாப்பிட்டவண்ணம் செய்திகள் பார்க்கத் தொடங்கினாள்.

செய்திகளில் சரிந்துவரும் ஐரோப்பியப் பொருளாதாரமே முதலிடம் பிடித்துக்கொண்டது. பொருளாதாரத்தைச் சூதாட்ட மாக்கி சூடுகாயும் முதலைகளின் ஆட்டத்தில் அவலம் வழிந்து ஓடுகிறது. சரிந்து போகும் பொருளாதாரம் நிமிருமா அல்லது ஐரோப்பிய யூனியனுக்கு சாவுமணி அடிக்குமா என்கிற கேள்விகள் பலர் மனதில் எழுந்தாயிற்று. இன்றைய பொருளாதாரத்தின் ஒருமைப்பாடு ஏழைகளை அசுரவேகத்தில் உற்பத்தி செய்தல், பணக்காரரை மேலும் செல்வந்தர் ஆக்குதல், நாடுகளின் பொருளாதாரத்தை ஆட்டம், காணவைத்து ஏழைகளிடம் மேலும் வரியைப் பிடுங்குதல்... பாலன் நினைவுகளின் சஞ்சாரத்தை நிறுத்தினான்.

மீண்டும் உள்ளூர் செய்திகள் காட்டும்பொழுது பல வெளிநாட்டினரும் சில சுதேசிகளும் பிள்ளைகளை அடிப்பதான கருத்துக் கணிப்பு வெளிவந்து இருப்பதைப் பற்றி விபரித்தது. பலருக்கும் அது அதிர்ச்சியைத் தந்திருந்தது.

செய்தி முடிந்த பின்பு கட்டிலிலேயே படுக்கையாகக் கிடக்கும் ஒரு வயோதிபரை இரவு தொடர்ந்தும் படுப்பதற்கு ஏற்ப வசதிகள் செய்ய வேண்டிப் பாலனும் சேர்பியாக்காரியும் அந்த அறைக்குள் புகுந்தார்கள். அந்த அறைக்குள் ஒரு மனிதர் நீண்டகாலமாகப் படுக்கையில் கிடக்கிறார். படுக்கை யில் கிடந்தால் நாரிப் பகுதிகளில் அல்லது பின்பகுதிகளில் புண் வந்துவிடும். புண்வந்தால் அதன் மணம் தாங்க முடியாது இருக்கும். புண்வராது இருப்பதற்காக அவர் படுக்கும் பக்கத்தை அடிக்கடி மாற்ற வேண்டியதாக இருக்கிறது. இருவருமாக அருக்கு இரவு உடை மாற்றி அவரது படுக்கும் பக்கத்தையும் மாற்றும் முயற்சியில் ஈடுபட்டார்கள். அப்படி செய்து கொண்டு இருக்கும்பொழுது சேர்பியாக்காரி பாலனைப் பார்த்து, "நீங்களும் பிள்ளைகளுக்கு வீட்டில் அடி போடுவீர்களா?" என்று கேட்டாள். பாலன் ஒருகணம் அவளை வியப்பாகப் பார்த்துவிட்டு, "இல்லை. நான் சிறுவயதில் நிறைய அடி வேண்டி இருக்கிறேன். அப்பொழுது என்னை அடிப்பவர்கள் மேல் எனக்கு அளவு கடந்த வெறுப்பாய் இருக்கும். இன்றும் அந்த வெறுப்பின் சுவடுகள் என்

மனதில் ஆழமாகப் பதிந்து கிடக்கின்றன. எனக்கு எனது இளமைப்பருவம் தந்த பாடம் என்றும் அழியாது ஞாபகத்தில் இருக்கிறது. நான் பட்ட வேதனையை என் பிள்ளைகளும் அநுபவிப்பதை என்னால் கனவிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இங்கு வளரும் பிள்ளைகளுக்கு அடிக்காமல் இருந்துவிட்டால் மட்டும் போதாது. அவர்களைத் தேவையில்லாது பேசினாலோ அல்லது நச்சரித்தாலோ அவர்கள் அதையும் தண்டனையாக எண்ணுகிறார்கள். உடல்ரீதியான தண்டனை, மனரீதியான தண்டனை என இரண்டு வகைகள் இருக்கின்றன அல்லவா? அவர்கள் தங்கள்மீது எந்த வகையான தண்டனையும் பாவிக்கப்படக்கூடாது என்று எதிர்பார்க்கிறார்கள். உடல் ரீதியான தண்டனையை வெகுசுலபமாக நிறுத்திக் கொள்ளலாம். மனதைப் புரிந்து கொள்ளுதல் அப்படியல்ல. மனதை நோகடிக்காது புத்திமதி சொல்வது பெரும் சங்கடமாகும். எது அவர்கள் நன்மை கருதிய புத்திமதி, எது அவர்கள் மனதை நோகடிக்கும் சொற்கள் என்பதை இனம்கண்டு கதைப்பது மிகவும் கடினமானது. எனது போராட்டம் அங்கே நிற்கிறது. அது சரி நீங்கள் எப்படி?" என்றான்.

"நாங்கள் குழந்தைகளை அடிப்பதில்லை. என்னை எனது அப்பா அம்மாவும் அடித்ததில்லை. சில தாய் தகப்பன் பிள்ளைகளை அடிப்பதை எனது கிராமத்தில் பார்த்திருக் கிறேன். இங்கு பிள்ளைகளை அடிக்க வேண்டும் என்று நாங்கள் மனதிலும் எண்ணுவதில்லை. ஆனால் நீங்கள் சொல்லுவது போல மனரீதியான காயங்கள் வராது புத்திமதி சொல்லுவது சவாலாகத்தான் இருக்கிறது" என்றாள்.

"ஒரு சில நாடுகளைத் தவிர பிள்ளைகளை அடிப்பது பல நாடுகளில் நடைமுறையில் இருக்கிறது. இங்கிலாந்தில் கூட இன்னும் அது நடைமுறையில் இருக்கிறது. ஏன் இங்கும் தடியால் அடிக்காவிட்டாலும் வேறு வகையில் அச்சுறுத்து வதும் ஒருவித வன்முறைதானே? சட்டங்கள் ஆயிரம் இருக் கலாம். பிள்ளையோடு வாழ்பவர்கள் அதன் பெற்றோர்கள் தானே? அவர்களிடம் பிள்ளைகளை அடிக்கக்கூடாது என்கின்ற

தெளிவான அறிவு இல்லாவிட்டால் சட்டத்தில் இருக்கும் வசனங்களுக்கு அர்த்தம் இல்லாது போய்விடும்.''

“அது உண்மை. அந்த அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்கின்ற விருப்பம் இருக்கிறது. வாழ்க்கையில் பிள்ளைகள் உயிர்நாடி போன்றவர்கள். அவர்கள் எந்த வகையிலும் காயப்படுவதை அனுமதிக்க முடியாது.''

“உண்மை'' என்றான் பாலன்.

அந்த அறையில் வந்த வேலை முடிந்துவிட்டது. இருவரும் வெளியே வந்தனர். பாலன் தனியாக உதவி செய்ய கூடிய ஒரு வயோதிபரின் அறைக்குள் புகுந்து கொண்டான். திடீரென அவனுக்குச் சுமியின் நினைவு வந்தது. அது ஏனோ வெறுப்பாய் மனதில் கசந்தது. அவன் நினைவுகள் அவன் கட்டுப்பாட்டினை மீறி ஓடின.

அன்று சுருதிக்கு சுமி அடித்த கோபத்தில் அவள் புறப்பட்டு எங்கோ சென்றுவிட்டாள். இதை அறிந்த பொழுது பாலனுக்கு சுருதியின்மீது கோபம் வரவில்லை. இங்கு வளரும் பிள்ளைகள் தாங்கள் உடல் ரீதியாகத் தாக்கப்படும்பொழுது எதைச் செய்வார்களோ, அதையே அவள் செய்திருக்கிறாள். தானும் இங்கு வளர்ந்து இருந்தால் அதையேதான் செய்து இருப்பேன் எனப் பாலன் எண்ணிக் கொண்டான்.

சுமி செய்த காரியத்தை எண்ணிய பொழுது அவளைக் கொலை செய்யவேண்டும் போலப் பாலனுக்கு கோபம் வந்தது. பாலன் தனது கட்டுப்பாட்டை மீறி அன்று பாய்ந்தான். அவனது வசனங்கள் கோபத்தில் பண்பிழந்து போயிற்று. மாமி இருக் கிறாள் என்பதையும் மறந்து கத்தினான். மாமி பொறுக்க முடியாது தனது அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டாள். அப்பாவின் அசுரக் கோபத்தைப் பார்த்த சுபனி மெதுவாக பின்பக்கமாக படிகளில் ஏறித் தனது அறைக்குச் சென்று விட்டாள். பாலன் கோபம் அடங்காதவனாய்த் தொடர்ந்தும் கத்தினான்.

“சனியனே, என்ன பிரச்சனை நடந்தது எண்டு நீ அவளில கை வைச்சனி? நானே உன்னைப் பொலிஸில் பிடிச்சுக்

குடுக்கோணும். அப்பதான் உனக்கும் அறிவு வரும். இந்த வீட்டிலையும் நிம்மதி வரும். எருமைமாடு மாதிரி அடிக்கத் தெரிஞ்சதுதானே? இப்ப அவள் எங்க இருக்கிறாளோ தெரியாது. உதில படுத்து கிடந்து ஒப்பாரி வைக்கிறதை விட்டிட்டு போய் தேடி அவளைப் பிடிச்சுக் கொண்டுவா'' என்று கத்தினான்.

"ஐயோ நான் செய்யிறது மட்டும் பிழையாவே இருக்குது. இப்பிடிக் கிடந்து உத்தரிக்கிறதிலும் எங்கையாவது செத்துப்போகிறன். ஊரெல்லாம் பிள்ளையள் இருக்குதுகள். இவள் மாத்திரம் ஆடப் போறன் எண்டு நிக்கிறாள். ஏன் எண்டு நான் கேட்டா என்னில எல்லாரும் குற்றம் காணுகினம்.''

"உனக்கு நாங்கள் எங்க வாழுறம், எப்பிடிப் பிள்ளையள நடத்தோணும் எண்டு புரியேல்ல. மற்றவை சொல்லுறதையும் கேட்க மனமில்லை. இவ்வளவு காலம் இருந்திருக்கிறாய் சுயமா கவும் உன்னால விளங்கிக் கொள்ள முடியேல்ல. ஒரு மொக்கை என் தலையில கட்டி வைச்சிருக்குது. இந்த வீட்டில இருக்கிறதிலையும் எங்கயாவது போய்த் துலையிறன்'' என்று கூறிய பாலன் கோபமாக வீட்டை விட்டு வெளியேறினான். அவன் கதவை அடித்துச் சாத்திய வேகத்தில் புவியதிர்ச்சி வராமலே வீடு ஒருமுறை நடுங்கியது. புயலுக்குப்பின் வந்திறங்கும் அமைதியின் ஆட்சி அங்கு தொடங்கியது.

வீட்டை விட்டு வெளியே சென்ற பாலனுக்கு முதலில் என்ன செய்வது என்று புரியவில்லை. வீட்டை விட்டு வெளியே போவது என்றால் பிள்ளைகள் எப்போதும் எங்கே போகிறார்கள் என்று கூறிவிட்டுத்தான் செல்வார்கள். அதுதான் இன்றுவரை இருந்து வந்த வழமை. இன்று எதுவும் சொல்லாது சுருதி எங்கோ சென்றுவிட்டாள் என்பதை எண்ணவே அவனுக்குப் பிடிக்கவில்லை. "எல்லாம் சுமியால் வந்தது.'' மீண்டும் அவனுக்குச் சுமி மீது கோபம் பொங்கியது.

பாலன் தனது காரில் ஏறி இருந்து கொண்டான். பின்பு தனது தொலைபேசியை எடுத்து சுருதிக்குப் போன் செய்து பார்த்தான். அது அணைத்து வைக்கப்பட்டு இருப்பதாய் மீண்டும் மீண்டும் ஒரு குரல் சொல்லியது. என்ன நடந்து

இருக்கும் என்பது அவனுக்குப் புரியவில்லை. சிலவேளைகளில் சுரங்கரத்தில் சென்றாலும் செல்போன்கள் இதையே கூறும். பாலனுக்கு சுருதியோடு பேசமுடியாதது மேலும் அந்தரத்தை தந்தது.

சுருதியின் சிநேகிதிகள் வீட்டிற்கு செல்வதற்கும் அவனுக்கு மனம் வரவில்லை. என்ன சொல்லி அவர்களிடம் கேட்பது? அவளுடைய நண்பன் வீடு எங்கு இருக்கிறது? யாரவன்? தெரிந்தால் சென்று பார்த்துவிட்டு வந்து விடலாம் என அவனுக்குத் தோன்றியது. "யாருக்குத் தெரியும்?" சுபனிக்குத் தெரியும் என்பது பாலனுக்கு ஞாபகம் வந்தது. பாலன் உடனேயே போன் செய்து அவளைக் கேட்டான். அவன் பெயர் சஜீவன் என்பது மட்டும் அவளுக்கு தெரிந்திருக்கிறது. அவனை நேரே பார்த்தால் அவளால் யார் என்று அடையாளம்காட்ட முடியும். மற்றும்படி அவனைப் பற்றி அவளுக்கு அதிகம் தெரியவில்லை. அவன் எங்கள் வீட்டுச் சுற்றாடலில் தான் இருக்க வேண்டும் என்பது அவள் ஊகம். "எங்கள் வீட்டுச் சுற்றாடலில் எத்தனை ஆயிரம் வீடுகள் இருக்கின்றன? எங்கு சென்று தேடுவது?" என்கின்ற திகைப்பு மிகவும் வெறுப்பைத் தந்தது. "அம்மா அடித்தாலும் நான் வரும்வரைக்காவது காத்திருந்து இருக்கலாம்." அப்படிச் செய்யாது சுருதி உடனேயே புறப்பட்டுப் போனதை எண்ண அவனுக்கு அவள்மீதும் கோபம் வந்தது.

பாலன் சுபனியிடம் சஜீவன் என்கின்ற பெயரை இணையத்தில் தேடிப்பார்க்கச் சொன்னான். அவள் தேடிவிட்டு அவனது பெயரில் எதுவும் இல்லை என்றாள். 'அநேகமாகத் தாய் தகப்பன் பெயரில் தான் பிள்ளைகளுக்குத் தொலைபேசி இருக்கும். முகப்புத்தகத்தில் இருந்தாலும் கண்டுபிடிக்கலாம். முகப்புத்தகத்தில் அவன் சொந்தப் பெயரா பாவித்து இருப்பான்? என்ன பெயர் பாவித்து இருப்பான் என்பது யாருக்குப் புரியும்? சுபனிக்கு ஆராய்ந்து தேடுமளவுக்கு கணினி அறிவும் இல்லை' எனப் பாலன் எண்ணிக் கொண்டான்.

மீண்டும் வீட்டிற்குச் சென்று, தான் கணினியில் தேடி பார்த்துவிட்டுத் தொடர்பு கிடைக்காவிட்டால் பொலிஸிடம்

உதவி கேட்டுப் பார்ப்போமா என்று எண்ணினான். தொலைபேசி இல்லாவிட்டாலும் வங்கி அட்டைகள் பாவிக்கும் இடங்களை அவர்கள் அறிந்து சொல்லலாம்.

பாலன் வீட்டிற்குச் செல்வதற்காய்க் காரால் வெளியே இறங்கினான். காரைப் பூட்டிவிட்டு வீட்டை நோக்கிச் சென்றவன் மீண்டும் சுருதிக்கு தொலைபேசி செய்தான். அதிர்ஷ்டம் அடுத்த முனை உயிர் பெற்றுக் கொண்டது.

"அப்பா" என்ற சுருதி தொடர்ந்து அழும் சத்தம் கேட்டது. பாலனுக்கு அது பெரும் சங்கடமாய்ப் போய்விட்டது. தன்னைச் சமாளித்துக் கொண்டு, பாலன் அவளைச் சமாளிக்கும் வித மாகப் பேச எண்ணினான்.

"ஏன் அழுகிறாய் சுருதி? நீ வீட்ட வா. நாங்கள் ஆறுதலாகக் கதைப்பம்."

"இல்லையப்பா, அம்மா எனக்கு அடிச்சுப் போட்டா. நான் இனி அங்க செத்தாலும் வரமாட்டன். எனக்கு அங்க வரப் பிடிக்கேல்ல."

"அப்பிடியெல்லாம் கதைக்கக்கூடாது சுருதி. அம்மா மாத்திரமா வீட்டில இருக்கிறது? நான், சுபனி, அம்மம்மா எல்லாரும் இருக்கிறம் இல்லையா? அம்மாவுக்காக எங்களை எல்லாம் பார்க்காமல் இருப்பியா? தயவு செய்து அப்பா சொல்லுறதைக் கேட்க வேணும். வீட்ட வா செல்லம். இப்ப எங்க நிக்கிறாய் எண்டு சொல்லு. நான் வந்து பிள்ளைய கூட்டிக் கொண்டு வாறன்."

"நான் வரேல்ல அப்பா."

"அம்மா அடிச்சது பிழைதான் அம்மா இனிமேலைக்கு பிள்ளைய அடிக்கமாட்டா. அதுக்கு நான் பொறுப்பு. தயவு செய்து நீ வீட்ட வாம்மா. அல்லது எங்க நிக்கிறாய் எண்டு சொல்லு. நான் வந்து ஏத்திக் கொண்டு வாறன்."

"அதொண்டும் வேண்டாம் அப்பா. நான் வரேல்ல."

"சரி நீ வரவேண்டாம். எங்க நிக்கிறாய் எண்டு சொல்லு நான் வாறன்."

"அது வேண்டாம் அப்பா."

"இல்ல நான் உன்ன பார்க்கவேணும். சொல்லம்மா எங்க நிக்கிறாய்?"

தயக்கமாகக் கழிந்த சிலகணங்களின் பின்பு, முகவரியைச் சொல்லப் பாலன் அது எங்கு இருக்கிறது என்பதை மனதில் படமாக்கிக் கொண்டான்.

பாலன் ஒருவாறு வீட்டைத் தேடிப் பிடித்து சென்றான். சுருதியே வந்து கதவைத் திறந்தாள். பாலன் அவளைக் கண்டவுடனேயே "சுருதி இது என்ன வேலையம்மா?" என்று கேட்டான்.

"அம்மா அடிச்சுப் போட்டா"! என்று அவள் கிளிப் பிள்ளையாகச் சொன்னதையே மீண்டும் சொன்னாள்.

ஹோலில் சஜீவன், அவனது அப்பா ஆகிய இருவரும் இருந்தார்கள். சமையல் அறையில் இருந்து அவனது சகோதரியும், தாயும் ஹோலை எட்டிப் பார்த்தார்கள்.

பாலனுக்கு அந்த வீட்டுக்காரர்மேல் கோபம் கொப்பளித்துக் கொண்டு வந்தது. குழந்தைப் பிள்ளைகள் அறிவில்லாமல் ஏதோ செய்கிறார்கள் என்றால் அவர்களை சமாதானப்படுத்தி அனுப்பி வைக்காது, எந்தத் தகவலும் இல்லாது தன்னைத் தவிக்கவிட்டு இருக்கிறார்கள் என்கின்ற கோபம் வந்தது.

"உங்கட மகள் இப்படியாற்ரையும் வீட்டில போய் இருந்தா எப்பிடி இருக்கும்? நீங்கள் கொஞ்சம் எங்கட நிலைமையில இருந்து யோசிக்க வேணும். சிறுவயது. யோசிக்காமல் செய்வினம் எண்டதை புரிஞ்சு கொண்டு எங்களுக்குத் தகவலாவது சொல்லி இருக்கோணும். நீங்கள் செய்யிறது நல்லாயில்லை." பாலன் முன்பின் தெரியாத அவர்கள் மீது கோபமாகப் பாய்ந்தான்.

"என்ன நீங்கள் எங்களைக் குற்றம் சொல்லுறியள்? முதல்ல நாங்கள் உங்கட மகள தெருவில விட்டிருந்தா உங்கட மகளின்ர நிலைமை என்ன எண்டு யோசியுங்க.

ரெண்டாவதா ஒண்டை ஞாபகம் வைச்சிருங்க. இங்க எதை யும் திணிக்கேலாது. அவங்களுக்கு பதினாறு வயது ஆகுது. நாங்கள் இனி அவங்களைக் கட்டுப்படுத்தேலாது. இப்பவும் நாங்கள் தடுக்கேல்ல. சுருதி வந்தால் கூட்டிக் கொண்டு போங்க. தேவையில்லாமல் எங்களைக் குறை சொல்லத் தேவையில்லை.''

பாலனுக்கு தான் அப்படி கதைத்தது மடமையாகத் தோன்றியது. கண்டவன் வீடுகளில் வந்து பல்லிளிக்க வேண்டி இருக்கிறதே என்பதாக மனதிற்குள் புழுங்கினான். அதேவேளை இங்கு பிள்ளைகளின் விருப்பிற்கு மாறாக எதையும் செய்ய முடியாது என்கின்ற உண்மை அவனுக்கு நன்கு விளங்கியது. சுமியின் முரட்டுத்தனம் வெறுப்பையும் கோபத்தையும் தந்தது.

“சுருதி வீட்டுக்கு வாறியா? நீ என்ன செய்தாய், செய்யப் போகிறாய் எண்டு நான் கேட்கமாட்டன். தயவு செய்து வீட்ட வாறியா? உனக்குத் தெரியும்தானே? வாறவையெல்லாம் அப்பாவை எங்க சுருதி எண்டு கேட்பினம். அப்பா என்ன சொல்லுறது? தயவு செய்து வீட்ட வா அம்மா.''

“நீங்கள் தனிய வீட்டில இருந்தா நான் இப்பவே வந்திடுவன் அப்பா. அங்க அம்மா இருக்கிறா. இத்தனை வருசம் இங்க இருந்தாலும் யாழ்ப்பாணத்து மனுஷியள விட மோசமா இருக்கிறா எண்டு நீங்களே சொல்லுவியள். நீங்கள் சொல்லுறதையே அவ மதிக்கமாட்டா. என்னையும் நிம்மதியா இருக்க விடமாட்டா. என்னைக் கட்டாயப் படுத்தாதேங்க அப்பா'' என்றாள்.

பாலன் பேசாது இருந்தான்.

கோபமாய் இருந்த அந்த மனிதர் கனைத்துக் கொண்டு, “உங்கட சொந்தக்காரரை எனக்குத் தெரியும். அவை எங்களுக்கும் ஒருவகையில சொந்தம்தான். நான் சொல்றது உங்களுக்கு விளங்குந்தானே? என்னதான் உலகம் மாறி னாலும் நாங்கள் எதுக்குப் பயப்பிடுறம் எண்டது எனக்கும் தெரியும். அவை காதலிச்சாலும் யாருக்கும் எந்தப் பாதிப்பும்

இல்ல. பயப்பிடாமல் வீட்ட போங்க. நடக்கிறது எல்லாம் நல்லதுக்குத்தான். சுருதியும் எங்களுக்கு ஒரு மகள் மாதிரி. நான் சமாதானப்படுத்திறன்.''

"நீங்கள் யாருக்குச் சொந்தம்?'' இவ்வாறு தொடங்கிய உரையாடலின் பின்னர் பாலன் அன்று வீட்டிற்குச் சென்ற பொழுது இரவு பன்னிரெண்டு மணியாவிட்டது. அடுத்த சனிக்கிழமை பாலன் குடும்பமாக அவர்கள் வீட்டிற்கு விருந்திற்குச் சென்றான். அன்றுதான் சுருதி வீட்டிற்கு திரும்பி வந்தாள்.

அதன் பின்பு அவள் அந்த வீட்டிலும் நிற்பாள் இந்த வீட்டிலும் நிற்பாள். யாரும் அவளை எதுவும் கேட்பதில்லை.

23

அன்று சனிக்கிழமை. மாலைச் செய்தி முடிந்தபின்பு தமிழ்ப்படம் பார்க்கப் பாலன் சோபாவில் குந்திய நேரம். அதைப் பொறுக்கமுடியாத அவனது கைத்தொலைபேசி அரியண்டமாகச் சிணுங்கியது. பாலன் அதை எடுத்துப் பார்த்தான். மேகலனிடம் இருந்து அழைப்பு. அவனோடு பாலன் கடைசியாக ஒஸ்லோசிற்றிக்குள் இருக்கும் உணவகத்தில் இருந்து கதைத்ததுதான். அந்தச் சந்திப்பு நடந்து இரண்டு மாதங்கள் சென்றிருக்கும். அதன்பின்பு பாலன் அவனைக் காணவில்லை. பாலனுக்கு இருந்த தலை யிடிகளில் அவனை முற்றாக மறந்து போயிருந்தான். யாரை யும் தேடிப்போய்க் கொண்டாடுவதற்கு ஒஸ்லோவில் நேரம் இருப்பதில்லை. இப்பொழுது திடீரென அவனிடம் இருந்து அழைப்பு வருகிறது. "என்னவாக இருக்கும்?'' என்கின்ற யோசனையோடே கைத்தொலைபேசியை எடுத்து காதில் பொருத்தினான் பாலன்.

"ஹலோ மேகலன், எப்பிடி இருக்கிறியள்? கனகாலம் கதைக்கேல்ல. என்ன விஷயம்?''

"பாலன்... பாலன்.... எனக்கு பசிக்குது பாலன்?" அவனது குரல் அனுங்கியது. நடுங்கியது. "நல்ல வெறியில் இருப்பான்" எனப் பாலன் எண்ணிக் கொண்டான்.

பாலன் குழப்பத்தோடு, "என்ன?" என்றான்.

"எனக்குப் பசிக்குது பாலன்" அவனிடம் இருந்து அதே விடை திரும்பவும் வந்தது.

"எனக்கு விளங்கேல்ல மேகலன்."

"எனக்குப் பசிக்குது பாலன்" கிளிப்பிள்ளைபோல மீண்டும் அதையே சொன்னான்.

"அதுதான் விளங்கேல்ல. பசிச்சாச் சாப்பிடுகிறது தானே?"

"சாப்பிடச் சாப்பாடு இல்ல பாலன்!"

"என்ன?" பாலன் அதிர்ந்து போனான். அவன் அந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை. நம்பமுடியாத திகைப்பு அவனைத் தாக்கியது. நோர்வேயில் இப்படியொரு பதிலைக் கேட்பது அபூர்வம். அந்நியம். பசிப்பது வழமை. வீட்டிலே சாப்பாடு இல்லாது சாப்பிடாமல் இருப்பது அபூர்வம். அதற்காக மற்றவருக்கு போன் செய்வது அதைவிட அதிசயம். பாலன் திகைத்துப்போய் யோசனையோடு இருக்க மேகலன், தொடர்ந்தும் கெஞ்சுவது போலக் கதைத்தான்.

"சாப்பாடு இல்ல பாலன்; எனக்குப் பசிக்குது பாலன்."

"எங்க இருந்து இப்ப கதைக்கிறியள்? உங்களுக்கு என்ன நடந்தது?" பாலன் நம்ப முடியாது மீண்டும் கேட்டான்.

"வீட்டில இருந்து கதைக்கிறன் பாலன். சாப்பாடு கொண்டு வாறீரா பாலன்? எனக்குப் பசிக்குது பாலன்."

"போதை அவன் மூளையைத் தின்று இருக்க வேண்டும்" எனப் பாலன் எண்ணிக் கொண்டான்.

"வீட்டில சாப்பாடு இல்லையா?"

"இல்ல பாலன். ஒண்டும் இல்ல."

"ஏன் வேண்டேல்ல. வருத்தமா இருந்தியளா?"

"இல்ல. காசு இல்ல."

"என்ன?"

"காசு இல்ல."

பாலனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. "எதற்கு இவன் சாப்பாடு இல்லை என்கிறான்? ஏன் காசு இல்லாது போயிற்று? சுய நினைவோடுதான் இருக்கிறானா?" அவன் மனைவியோடு பிரச்சினைப்பட்ட பின்பு வீடு மாறி எங்கோ சென்றுவிட்டான் என்பது பாலனுக்குத் தெரியும். எங்கு சென்றான்? என்பது அவனுக்குத் தெரியாது. பாலனுக்கு என்ன செய்ய வேண்டும், மேகலனுக்கு என்ன பதில் கூறுவது என்பதில் குழப்பமாகிற்று. பின்பு அவனைச் சென்று பார்த்துவிட்டு வருவோம் என்கின்ற எண்ணத்தோடு, "உங்கட அட்ரெஸ் என்ன?" என்றான்.

மேகலன் முகவரியைக் கூறப் பாலன் அதை மனதில் பதிய வைத்துக்கொண்டான். பின்பு தனது கணினியில் அதைச் சரிபார்த்துக் கொண்டு மேகலனைப் பார்ப்பதற்குப் புறப்பட்டுச் சென்றான்.

போகும் வழியில் பாலன் "மெக்டொனால்ஸ்"க்குச் சென்று சாப்பாடு வேண்டிக் கொண்டு மேகலன் குடியிருக்கும் வீட்டிற்குச் சென்றான். அந்த வீட்டைப் பார்த்த பொழுது பேய்வீடு போல இருந்தது. அதற்குள் மனிதர்கள் குடியிருக்கிறார்களா என்கின்ற கேள்வி தன்னிச்சையாக எழுந்தது. "இந்தப் பேய் வீட்டிற்கு இவன் ஏன் குடிவந்தான்?" என்பது பாலனுக்குப் புரியவில்லை. அதன் மேற்றளத்தில் அந்த வீட்டு உரிமைக்காரும் அவரது மனைவியும் குடியிருந்தனர். அவர்களும் தண்ணியில் மிதப்பவர்களாக இருக்கலாம் என்பது பாலனின் ஊகம். வீட்டின் உக்கிப் போகும் மேனியில் வெடித்துக் கிளம்பிச் சரிந்து விழுகின்ற பெயின்ரின் எச்சங்கள். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்றால் இந்த வீட்டின் உள்ளழகு எப்படி இருக்கும் என்கின்ற கற்பனையோடு மேகலன் கூறியபடி கீழ்தளக் கதவின் முன்பு போய் நின்றான். பின்பு மெதுவாகக் கதவில் தட்டினான். மனதிற்குள் இனம் புரியாத திக் திக்.

ஏதோ போத்தல் ஒன்று உள்ளே விழும் சத்தம் கேட்டது. கணங்கள் யுகங்கள் ஆகின. பாலனின் அவஸ்தையான நீண்ட காத்திருப்பிற்குப்பின் மேகலன் மெதுவாகக் கதவைத் திறந்தான். வெளியே பார்ப்பதற்கு அவனுக்கு கண்கள் கூசுவது போல அவதிப்பட்டான். பாலன் அவனைப் பார்த்து அதிர்ந்து போய்விட்டான். அவன் நம்பமுடியாதவனாய் இரண்டடி பின்னே எடுத்து வைத்தான். இது மேகலன் தானா என்கின்ற தவிப்புச் சிலகணங்கள் நீடித்தன. வீட்டிற்குள் இருந்து ஒருவித மணம் தள்ளிக் கொண்டு வந்து. பாலனுக்கு அந்த மணம் வயிற்றைப் பிரட்டும் போல இருந்தது. அவன் பாடுபட்டு தன்னைச் சமாளித்துக்கொண்டான்.

"உள்ள வா பாலன்" என்றான் மேகலன். உள்ளே போவதா விடுவதா என்கின்ற தயக்கம் முதலில் இருந்தாலும், அதைப் புறம்தள்ளிப் பாலன் உள்ளே சென்றான். வெளியே குளிர்வதுபோலவே உள்ளேயும் குளிர்ந்தது. கீற்றர் எதுவும் இருக்கிறதா என்று பார்த்தான். எங்கும் குப்பை. எல்லாமே அதற்குள் மூழ்கிப்போன கோலம். வெளிச்சம் தருகின்ற பாவனையில் ஒற்றை லையிற் மங்கிக் கொண்டு இருந்தது. "மேகலன் குளித்து எத்தனை நாட்கள் இருக்கும்? சீ எத்தனை மாதம் இருக்கும்? என்ன அசிங்கமான மணம் இது?" என்கின்ற தனது எண்ணங்களுக்குச் சொற்கொடுக்க முடியாத அவஸ்தையில் நெளிந்தான்.

மேகலனின் தலைமயிர் ஊத்தை பிடித்து கம்பிகளாகி நாலு திசையையும் நோக்கின. கைவைத்தால் முள்ளாகத் தைக்கும் கூர்மை அதற்கு இருப்பதாகப் பாலனுக்குத் தோன்றியது. தன்னை "ஒஸ்லோசிற்றியில்" பார்த்த பின்பு அவன் குளித்தே இருக்க மாட்டான் எனப் பாலன் எண்ணிக் கொண்டான். அவனது உடலில் இப்பொழுது எலும்புகள் மட்டுமே இருப்பதான தோற்றம். குளிர் தாங்க முடியாது காலையில் அணிந்து இருக்கும் மொத்தமான அங்கியை அணிந்திருந்தான். வீடு முழுவதும் பியர் போத்தல்களும், வொட்காப் போத்தல்களுமாய்க் கிடந்தன. குப்பைகளும், சொப்பிங் பாய்க்குகளும் குவிந்து கிடந்தன. சில பசை

டப்பாக்கள் காலியாகக் கிடந்தன. "பசை பாவித்தால் மூளை குழம்பி இருக்கும். இவனுக்கும் மூளை குழம்பியிருக்குமா?" என்கின்ற ஐயம் பாலனிடம் எழுந்தது.

'மேகலன் தன்னைப்பற்றி எந்த அக்கறையும் இல்லாது இருக்கிறான். சாப்பிடாது குடித்து இருக்கிறான். பசையை சுவாசித்து போதை ஏற்றி இருக்கிறான். வறியவனின் போதைப் பொருள் பசை. எமலோகம் போவதற்கான மருந்து அது. மேகலன் உலகை மறந்து எங்கோ சஞ்சரிக்கிறான். இந்த உலகில் வாழ்ந்தது போதும் என்கின்ற வரம்பை எட்டிவிட்டான். முடிவைத் தேடி முழங்காலில் நின்று பிரார்த்திக்கிறான். என்ன கொடுமை இது?'

'மூளை கலங்கியது போல ஈரல் எரிந்து போயிருக்க வேண்டும். இப்படிக் குடிப்பவனுக்கு இன்று மட்டும் ஏன் பசித்தது? உண்மையில் பசியா அல்லது என்னைப் பார்க்க வேண்டும் என்று பசி என்றானா? என்னை எதற்காகப் பார்க்க வேண்டும்' பாலன் விடையில்லாது மேலும் குழம்பினான்.

"பாலன் கால் நகம் எல்லாம் நோகுது" கூறியவண்ணம் தனது சொக்ஸை மேகலன் கழற்றினான். பாலனுக்கு மீண்டும் அதிர்ச்சி. அவன் தாதியாக வேலை செய்தும் அப்படிப்பட்ட மனித நகங்களை எங்கும் கண்டதில்லை. எவ்வளவு காலம் இவன் நகம் வெட்டவில்லை. கால் நகங்கள் வளர்ந்து, மிருகங்களின் பராமரிக்கப்படாத நகங்கள் போலச் சுருண்டு போய் இருந்தன. அவை ரோஜா நிறம் துறந்து சாம்பல் நிறத்திற்கு மாறி செத்துப் போய் விட்டன. அழுகல் மணம் அவன் காலில் இருந்து குப்பென வந்தது. வெள்ளை வெள்ளையான பட்டைகள் அடிக்காலில் கிளம்பி இருந்தன. காளான் பிடித்து இருப்பதாகப் பாலன் ஊகித்துக் கொண்டான்.

பாலன் முள்ளில் இருக்கும் அவஸ்தையோடு அங்கு இருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்து கொண்டான். கையில் இருந்த மக்டொனால்ஸ் பையை அவனிடம் கொடுத்தான். அவன் அதை நடுங்கும் கையோடு வேண்டிக்கொண்டான். "நரம்புகள் போதை குறைந்து விட்டால் தந்தியடிக்கும்

அளவிற்கு அவன் போதைக்கு அடிமையாகிவிட்டான்'' எனப் பாலன் எண்ணிக் கொண்டான்.

ஆசையோடு இரண்டு உருளைக்கிளங்குப் பொரியலை அவசரமாக வாய்குள் திணித்தவன் எழுந்து சென்றான். சோபாவிற்கு பின்னால் ஒரு கானில் நீர் போன்று நிறமற்ற திரவம் இருந்தது. அதைக் கையில் எடுத்தான். அது ஒரு ஆறு லீற்றர் கான். அதில் அரைவாசி மீதம் இருந்தது. ஒரு கண்ணாடிக் குவளை நிறைய அதை ஊற்றி எடுத்துக் கொண்டான்.

பின்பு பாலனைப் பார்த்து, "என்ன பாலன் அப்பிடிப் பாக்கிறாய்? இது எண்பது வீதம். கொஞ்சம் குடிச்சுப் பாக்கிறியா?'' என்று கேட்டான்.

"ஐயோ என்ன விடுங்க சாமி. ஏன் மேகலன் தெரிஞ்சுகொண்டும் அழிஞ்சு போறியள்?''

"உண்மை பாலன். நான் அழிஞ்சு போகோணும் எண்டுதான் குடிக்கிறன். புரிஞ்சு கொள்ளாத மனிதருக்கு மத்தியில இருக்கிறதிலும் அழிஞ்சு போறது மேல் எண்டு முடிவு பண்ணிட்டன். நான் எப்ப சாகப்போறன் எண்டுறது தெரியாமல் வாழ்றதிலையும், சாவுக்கு நாள் குறிச்சு வாழ்றதுக்கு தைரியமா இருக்கிறன். உலகம் குரூரமானது பாலன். உலகத்தில வாழ்றது கொடுமையான பரீட்சை பாலன். ஒரு மனிசன்ர வாழ்க்கை நரகமாக மாறின பிறகு அவனுடைய ஆயுளைப் பற்றி அவன் கவலைப்பட முடியுமா? என்னால முடியேல்ல பாலன். நான் போராளியாகிட்டன். சாவை எதிர்கொள்ளத் தயாராகிட்டன்.''

நிறுத்திவிட்டு அந்தத் திரவத்தில் ஒருமிடறு குடித்தான். எரிவுக்கு மீண்டும் சில உருளைக்கிழங்குப் பொரியலை அவசரமாகச் சாப்பிட்டான். வயிற்றின் சள்ளைப்பக்கம் கையை வைத்துத் தடவியவண்ணம் முகத்தைச் சுளித்தான்.

"யாருக்குப் பிரச்சனையில்லை மேகலன்? எல்லாருக் கும் பிரச்சனை இருக்குது. அதுக்காக எல்லாரும் குடிச்சுச்

சாகோணும் எண்டா நினைக்கினம்? வாழ்க்கை எண்டுறதே போரட்டம் தானே? எனக்கே எவ்வளவு பிரச்சனை இருக்குது. அதுக்காக நான் சாகோணும் எண்டு நினைக்கேல்ல மேகலன். ஒரு வழி இல்லாட்டி இன்னொருவழி திறக்கும். திறக்க வேணும் மேகலன். அதை விட்டிட்டு கசிப்பும், பசையும்...''

''எல்லாம் சொல்லுற மாதிரியில்லப் பாலன். தனக்கு வந்தால்தான் தெரியும் தலையிடியும் காச்சலும் என்பினம்...''

''சும்மா இருங்க மேகலன். உங்கள மாதிரி நானும் நிறைய இக்கட்டிலதான் இருக்கிறன். அதுக்காகப் போத்திலும் கையுமா அலையேல்ல. அது முடிவும் இல்ல.''

பாலனை மேகலன் உற்றுப் பார்த்தான். பின்பு ''சும்மா சமதானத்துக்காகச் சொல்லக்கூடாது. அது நல்லதில்லை. புலிவருகுது புலிவருகுது எண்டு புலியே வந்திடும் ஒருநாள்'' என்றான்.

''இல்ல மேகலன் புலியே வந்திட்டுது. அதுக்காகப் புலம்பிக் கொண்டு திரியறது வடிவாக இல்ல.''

மேகலன் அதைக் கேட்டுவிட்டு, ''ம்........'' என்றான். சிறிது நேரம் கடுமையாக யோசித்துக் கொண்டு இருந்தான். பின்பும் அந்தத் திரவத்தைக் குடித்துக் குடித்துச் சாப்பிட்டான். அவன் சாப்பிடும் சத்தத்தைத் தவிர வெறு எந்தச் சத்தமும் இல்லாத கணங்கள் பாலனைப் பயமுறுத்தின. பாலன் எதுவும் செய்ய முடியாதவனாய்ப் பொறுமையாக இருந்தான்.

சாப்பிட்டு முடித்த பின்பு பாலனைப் பார்த்த மேகலன் ''ரொம்பத் தாங்ஸ் பாலன். நீ இப்பிடி சாப்பாடோட ஓடி வருவாயெண்டு நான் எதிர்பார்க்கேல்ல. நீ செய்தது மெத்தப் பெரிய உபகாரம்.''

பின்பு 'ம்....' என்றவன் முகத்தைச் சுளித்தவண்ணம் சள்ளையைப் பிடித்துக் கொண்டான். அவன் கடுமையான வேதனையை சமாளிக்க முயல்வதைப் பாலனால் ஊகிக்க முடிந்தது.

"என்ன மேகலன். நோகுதா?"

"ஓ வயித்துக்க, சள்ளைப்பக்கம் நோகிறமாதிரி இருக்குது. கொஞ்சநாளாக அந்தப் பக்கமாக குத்துது பாலன். இண்டைக்கு கடுமையா இருக்குது."

மேகலன் கதிரையில் இருந்து இறங்கி நிலத்தில் இருந்தவண்ணம் வயிற்றை அழுத்திப் பிடித்துக் கொண்டான். முழங்காலுக்குள் முகத்தைப் புதைத்தான். கால்களை கைகளால் சுற்றி இறுக்கினான்.

"ஐயோ பாலன் நோகுது. எனக்கு ஏதாவது நஞ்சு வேணும் பாலன். நான் ஒவ்வொரு நாளும் இந்த வேதனையை அநுபவிக்கேலாது. செத்துப் போயிடோணும் பாலன். ஆ..... நோகுது பாலன்." அவன் வேதனையில் புழுவாய்த் துடித்தான்.

அவன் வேதனை வரவரக் கூடிச் சென்றது. பாலன் இதை எதிர்பார்த்து வரவில்லை. அவன் துடிப்பைப் பார்த்த பொழுது பாலனுக்கு பயம் கவ்வியது. பயத்தில் அந்தக் குளிர் வீட்டிலும் பாலனுக்கு வியர்த்தது. நெஞ்சுக்குள் இருந்த இதயம் வெடிகுண்டாக மீண்டும் மீண்டும் வெடித்தது. என்ன செய்வது என்பது புரியாது பாலன் சில கணங்கள் விறைத்துப் போய் இருந்தான்.

பின்பு சுயவுணர்வு வந்தவனாக தனது கைத்தொலைபேசியை எடுத்து அம்புலன்ஸுடன் தொடர்பு கொண்டான். அவர்கள் மேகலனின் விபரங்கள் அவனது நிலைமை என்பனவற்றைக் கேட்ட பின்பு, வருவதற்கு சிறிது தாமதமாகும் என்றார்கள். பாலன் தனது தொழிலைச் சொல்லி, உண்மையிலேயே அவன் வலியில் மிகவும் துடிப்பதாயும், விரைவாக வருமாறும் வேண்டிக் கொண்டான்.

மேகலன் தொடர்ந்தும் வலியால் துடித்தான். பாலன் அதைப் பொறுக்க முடியாதவனாய் வாடகைக்காரை அழைத்துவிட்டு, மேகலனைப் புறப்படச் செய்யப் போராடினான். அவனின் மணம் தற்பொழுது தன்னிலும் மணப்பதான

உணர்வு வயிற்றைப் பிரட்டியது. தேடிப்பிடித்து மேகலனின் சென்றபோத்தலில் பாதியை முடித்து, மேகலனை அதில் குளிக்க வைத்துத் தயார் செய்தான். அப்படியும் மணப்பதான அருவெருப்பு அவனை அலமலக்கப் பண்ணியது.

அவன் நினைத்தது போலவே வாடகைக்காரே முதலில் வந்தது. பொறுத்திருக்கப் பொறுமை இல்லாதவனாய் மேகலனை இழுத்துக் கொண்டு வாடகைக்காருக்குச் சென்றான். வாடகைக் காருக்குள் ஏறிய பொழுது அதன் சாரதி பாலனையும், மேகலனையும் ஒரு மாதிரியாகப் பார்த்தான். பின்பு தனது உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாதவனாய் முகத்தைச் சுளித்துக் கொண்டான். மேகலன் தொடர்ந்தும் துடிப்பதைப் பார்த்துவிட்டு, “லெகவாக்தா?” (லெகவக்த் என்பது அவசரமான சிகிச்சைக்காக செல்லும் இடம். சனி ஞாயிற்றுக்கிழமைகளில் இங்கு மாத்திரந்தான் வைத்திய உதவிக்காகச் செல்லலாம்.) எண்டு கேட்டான். பாலன் அவசரம் என்றான். வாடகைக் கார் புறப்பட்டது.

லெகவக்தில் கண்ணாடிக் கூட்டிற்குள் இருந்த தாதி இருவரையும் ஒருமாதிரிப் பார்த்தாள். அவள் முகத்தைச் சுளிக்காதவரையில் பாலனுக்கு நிம்மதியாயிற்று. பாலன் கூறியவற்றை எல்லாம் கேட்ட பின்பு, போய் ஆசனத்தில் இருக்குமாறு பணித்தாள்.

மேகலன் வேதனையால் தொடர்ந்தும் துடித்தான். பாலனும், மேகலனும் ஓர் இருக்கையில் போய் இருந்தார்கள். பக்கத்து இருக்கையில் இருந்தவர்கள் அவசரமாக எழுந்து வெளியே சென்றார்கள். மேகலன் வேதனையோடு ஒன்றரை மணித்தியாலம் காத்திருக்க வேண்டி வந்தது அப்படிக் காக்க வைப்பது பாலனுக்கு கோபத்தை உண்டு பண்ணியது. லெகவக்தில் ஏழு அல்லது எட்டு மணித்தியாலங்களும் காத்திருக்க வேண்டி வரும் என்பது பாலனுக்கு தெரிந்திருந்ததால் அமைதி காத்தான்.

உள்ளே கூட்டிச் சென்றவர்கள் அங்கு எக்ஸ்றே எடுக்கும் இடத்தில் காத்திருக்கவிட்டார்கள். மேகலன் தொடர்ந்தும்

வேதனையால் துடித்தான். கணங்கள் யுகங்களாயின. ஒருவாறு மேகலனின் முறை வந்தது. எக்ஸ்றே அறைக்குள் நோயாளியை மாத்திரமே அனுமதிப்பார்கள். அவன் அவசரமாக வெளியே வந்தான். மரியாதையாகச் சனங்கள் விலகி அவனுக்கு வழிவிட்டார்கள். வீட்டிற்குப் போன் செய்து தகவல் கூறிவிட்டு மீண்டும் உள்ளே வந்தான்.

மேகலனைப் பரிசோதித்த மருத்துவர் சில மருந்துகளை கொடுத்து அதை விழுங்குமாறு கூறிவிட்டுக் கதைக்கத் துவங்கினார்.

அவர் இது குடிப்பதால் உண்டான வில்லங்கம் என்றும், மேகலனுடைய நிரந்தர மருத்துவரிடம் சென்று சிபாரிசுக் கடிதம் பெற்று, குடிப்பிரச்சனையால் அவதிப்படுபவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் "புளுகுறோஸ்" என்னும் மருத்துவ மனைக்குச் செல்லுமாறு அறிவுரை கூறினார்.

சிபாரிசுக் கடிதம் தருமாறு பாலன் மருத்துவரிடம் கேட்டான். அவர் அதைத் தர மறுத்துவிட்டார். பாலனுக்கு அது கோபத்தை உண்டு பண்ணியது. அவன் அவரோடு வாதாடினான். மேகலனுக்கு மருந்து வேலை செய்யத் தொடங்கியதில் சிறிது அமைதியாகினான்.

சிறிது நேரம் வாதாடிய அந்தப் பெண்மருத்துவர் கடைசியாக அரைமனதோடு ஒருவாறு அந்தச் சிபார்சுக் கடிதத்தை எழுதிக் கொடுத்தார்.

பாலன் வீட்டுக்கு வந்தபொழுது சரியாகப் பன்னிரெண்டு மணி இருக்கும். கதவு திறக்கவந்த சுமி மணம் தாங்காமல் முகத்தைச் சுளித்தாள்.

"போய் முதல்ல குளிச்சிட்டு வாங்க. இப்பிடியும் மனிசரில மணக்குமே?" என்றாள்.

பாலன் எதுவும் பேசவில்லை. உடுப்புகளைக் கழற்றி ஒரு சொப்பிங் பையிலே போட்டுக் கட்டி வைத்துவிட்டு, நிர்வாணமாக நின்று குளித்தான். வெப்பமான நீர் இதமாக உடலில் வழிந்தோடியது. மனசு இழகிப் போயிற்று. ஆத்ம

திருப்தி இப்படித்தான் இருக்குமா என்கின்ற கேள்வி அவனிலே உரசிச் சென்றது.

24

வேலையின் உக்கிரத்தில் கதிரவனைக் கண்ட கானல்நீராக நேரம் பறந்திட, மதிய இடைவேளை அவசரமாக வந்து வயிற்றில் பசியாக இறங்கியது. பாலன் வயிற்றின் கட்டளைக்குப் பணிந்தான். வழமையாகச் சிம்மி குறுஞ்செய்தி போட்டு மதியச் சாப்பாட்டிற்கான நேரம் கேட்பாள். இன்று அவள் அப்படிச் செய்யவில்லை. அவளுக்கு என்ன நடந்தது என்கின்ற வினா பாலனைப் பந்தாடியது. பாலன் ஆவலாக தாங்கள் இருந்து சாப்பிடும் இடத்தைத் திரும்பித் திரும்பிப் பார்த்தான். அங்கு அவளையோ அல்லது விக்கியையோ காணவில்லை. "இருவருக்கும் என்ன ஆகியிருக்கும்?" மீண்டும் கேள்விகள் எட்டிப் பார்க்கச் சிந்தனையோடு ஓர் இடத்தில் சாப்பாட்டுடன் போய் இருந்தான். தனிமையாக இருந்து சாப்பிடுவது மனதிற்கும் நாவிற்கும் சுவைக்கவில்லை.

பாலனின் எண்ணங்கள் மலரைக் கண்ட தேனீயாக இன்று சிம்மியைச் சுற்றியது. அவள் இல்லாதது பாலனுக்கு அவள் எண்ணங்களை வலுவுக்கு இழுத்துக் கொண்டு வந்தது. சிம்மி சுதந்திரத்தை எல்லாவற்றிலும் சுகிக்கத் துடிப்பவள். சுதந்திரமான கலாசாரம் இந்த நாட்டின் கொடை. இந்த நாட்டுக் கலாசாரத்தின் நல்ல கூறுகளை வரித்துக் கொள்வதில் பின் நிற்பது அவளைப் பொறுத்தமட்டில் மடமையின் உச்சம். எமது வாழ்க்கையின் ஒவ்வொரு முடிவும் எம்மிடம் இருக்க வேண்டும் என்று துடிப்பவள் அவள். நோர்வே மக்கள் அப்படித்தான் வாழ்கிறார்கள். தங்கள் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்தையும் தாங்கள்தான் முடிவு செய்கிறார்கள்.

தியாகிகள் என்கின்ற வேஷம் போட்டுக்கொண்டு... எமது சுய சுதந்திரத்தையும் வாழ்வையும் யாருக்கும் தாரை

வார்த்துக்கொடுப்பது அவளுக்குச் சற்றும் பிடிக்காது. அவள் இங்கு பிறந்து, இங்கு வாழ்ந்திருக்க வேண்டும். அவள் எண்ணங்கள் எல்லையற்றுப் பாய்பவை. எல்லைகள் என்பதை இல்லாதொழிக்கத் துடிப்பவள். தமிழ் வரம்புகளுக்குள் தவறுதலாக வந்து விட்ட ஏக்கம் அவளிடம் இருக்கிறது. ஜனனம் என்பது எங்கள் கையில் இல்லை. ஜனனம் தந்த தளைகளை அறுத்து வெளியேறும் வாய்ப்பு எங்கள் கையில் இருக்கிறது. நாங்கள் சுதந்திரமான மனிதராய் வாழ்வது எங்கள் தெரிவைப் பொறுத்தது. சிம்மி தனது சுதந்திரத்தை யாரிடமும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. அவளைப் பொறுத்தவரையும் எல்லாக் கலாசாரமும் மேன்மையானவையே! எங்கள் கலாசாரம் மட்டுமே மேன்மையானது என்று தூக்கிப் பிடிப்பவர்கள் அறிவிலிகள். அவரவர்களுக்கு அவரவர்களின் கலாசாரம் மேன்மையானது. அது உண்மையும். பிறரின் கலாசாரத்தை மதிக்கப் பழகவேண்டும். அப்பொழுதுதான் எங்கள் கலாசாரத்தின் மேன்மையும் புரியும் என்பது அவள் கருத்து.

எல்லாக் கலாசாரமும் மேன்மையாக இருந்தாலும் எது மனிதனுக்கு அதிக சுதந்திரம் தருகிறது என்பது அவளின் தெரிவாயிற்று. மனித தெரிவு அதுதானே? சுதந்திரத்திற்காக அலையும் மிருகந்தானே மனிதன்? மாற்று மனிதனுக்கு அஞ்சி தனது சொந்தத் தெரிவுகளை மாற்றிக்கொள்ளும் மனிதர்கள் நிறைந்த உலகு இது. அவளைப் பொறுத்த வரை அப்படிப்பட்டவர்கள் முதுகெலும்பில்லாதவர்கள். சமுதாயத் தளைகளில் மூழ்கிவிட்ட கோழைகள்.

அவள் அப்படித்தான் கேட்பாள். சுதந்திரத்தை அநுபவிக்க விரும்பாதவன் அடிமைதானே? அவள் கேள்வி நியாயமானது. சமூகம் என்பது மனிதனை அடிமையாக்கும் தளையென்பது அவள் எண்ணம். கலாசாரம் எங்களுக்கு அடிமை விலங்கு பூட்டுகிறது என்றால் அது எதற்கு? எல்லாக் கலாசாரங்களும் பெண்களையும், பெண்களோடான உறவையும் மையமாக வைத்து ஆண்களால் வரையப் பட்டவையே என்பது அவள் கருத்து. அதற்கு

மதத்தைப் பக்கபலமாக வைத்துக் கொள்ளுகிறார்கள். சுதந்திரத்தைப் பறித்து, பயத்தை ஊட்டி மனிதனை அடிமைப்படுத்துவதுதான் கலாசாரம் என்றால், அந்தத் தளையை அறுத்துக் கொண்டு வெளியே வரவேண்டும் என்பது அவள் கருத்து. அதைப் பாலன் ஒரு நாளும் மறுத்தது இல்லை.

இலங்கையில் அவள் பிறந்தது தப்பில்லை. இலங்கையில் பிறந்தாலும் தளைகளில் இருந்து விடுதலை அடையலாம். தமிழன் ஒருவனோடு வாழ்ந்து கொண்டு, இங்குள்ள கலாசார சுதந்திரத்தை வரித்துக் கொள்ள நினைப்பது அணுகுண்டை மடியில் சுமப்பது போன்றது.

சிம்மி கோபம் வந்தாலும் பண்பு மாறாது, மென்மை சிதையாது கதைக்கக்கூடியவள். சில சொற்கள் கூர்மையாக வரும். உணர்ச்சி தீயாக எரியும். அவள் எண்ணுவதை பிறருக்கு வெளிப்படுத்த அவை தேவைப்படுகிறன. அவள் பண்பு பிறப்போடு சேர்ந்த வளர்ப்பாக இருக்க வேண்டும். கோபம் வரும்போது சில தமிழ்ப் பெண்களின் திருவாயில் அதி அநாகரிகமான வார்த்தைகள் சரளமாக வரும். அவர்கள் கலாசாரம் என்பதிற்குள் அசிங்கத்தை ஒளித்து வைத்திருப்பார்கள். எது கலாசாரம்? எது எங்களுக்கு வேண்டிய கலாசாரம்? நல்ல பண்பு இல்லாத மனிதனிடம் எந்தக் கலாசரம் இருந்து என்ன பயன்? மொழியில் பண்பில்லாதவன் வாழ்வில் பண்பு இருக்க முடியுமா? பாலன் குழம்பினான்.

“இன்று ஏன் இருவரும் வரவில்லை?” போன் செய்து கேட்க வேண்டும் போல் இருந்தது. அவசரப்படுகிறேனோ என்று எண்ணியவன் நாளைக்கும் அவர்கள் வராவிட்டால் நிச்சயம் போன் செய்து கேட்கலாம் எனத் தனது முடிவை மாற்றிக் கொண்டான்.

இருவரும் ஒரே நேரத்தில் வராமல் இருந்தமை தொடர்ந்தும் மனதை வாட்டியது. பாலன் அதற்கு மேல் சிந்திக்க விரும்பாதவனாய் அலுப்போடு எழுந்து சென்றான்.

அன்று ஏதோ இனம் புரியாத சோகம் பாலன் மனதில் அப்பிக் கிடந்தது. சிம்மியோடும் விக்கியோடும் அன்று கதைக்க முடியவில்லை. அது தனது மனதைப் பாதிக்கிறது என்கின்ற உண்மை புரிந்தது. நட்புகள் சிலவேளை இதயம்வரை பாய்ந்துவிடும் எனப் பாலன் எண்ணிக் கொண்டான்.

வேலை முடிந்ததும் பாலன் வீடு நோக்கிப் பயணமானான். இனப்புரியாத சோகம் மனதில் ஏறியிருந்து அழுத்தும் அவஸ்தையைப் போக்க அவன் சுரங்கரதத்தில் இருந்த வண்ணம் கண்ணை மூடித் தியானித்தான். தியானம் கைகூடவில்லை. திடீரென அவனது கைத்தொலைபேசி உயிர்த்தது. அது உயிர் பெற்றுவிட்டால் எப்பொழுதும் அவசரம்தான். பாலன் அவசரத்தோடு அதையெடுத்து யாரிடம் இருந்து அழைப்பு வருகிறது என்று பார்த்தான். அது சிம்மியிடம் இருந்து வந்தது. பாலனின் மனதில் சுமையாக அழுத்திக் கொண்டு இருந்த சோகம் பனியாக நீங்கிய உணர்வு.

அவசரமாகக் கைத்தொலைபேசியை காதோடு பொருத்திக் “ஹலோ” என்றான்.

“பாலன் அண்ணன் பின்னேரம் ஐஞ்சு மணிபோல உங்களுக்கு நேரமிருக்குமா?” அவள் குரலில் கரகரப்பும் சோகமும் கலந்து வந்ததான உணர்வு. ஏன் என்பது பாலனுக்குப் புரியவில்லை. ‘துள்ளலான அவள் குரலின் சுருதி தொலைந்து போனது ஏன்?’ என்பது விடையில்லாத கேள்வியாக அவன் மனதில் சிக்கிக் கொண்டது.

“ம்... அலுவல் ஒண்டும் இல்லைத்தான்” பாலன் பதிலளித்தான்.

“அப்ப எங்கட வீட்ட வாறியளா?”

“என்ன விஷயம்?”

“அதைப்பற்றி நேர மட்டுந்தான் கதைக்கலாம். போன்ல கதைக்க விரும்பேல்ல. சொறி பாலன் அண்ணா.”

"நான் ஒருத்தருக்கும் சொல்ல மாட்டன் சிம்மி."

"அதுக்கில்ல அண்ணா. நீங்க நேரில வாங்க. நான் சொல்லுறன்."

அவள் நிலை புரிந்தும் புரியாததுமான அந்தரம் பாலனுக்கு.

"சரி முகவரியைத் தாரும் வாறன்" என்றான்.

முகவரியைக் கூறிய சிம்மி "கட்டாயம் வாங்க பாலன் அண்ணா" என்று மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டாள்.

"ஓ வாறன்" என்று கைத்தொலைபேசியைத் துண்டித்துக் கொண்டான்.

பாலனுக்கு அவள் கதை மர்மமாக இருந்தது. "முதல்முறை சிம்மி தனது வீட்டிற்கு அழைத்து இருக்கிறாள். அதுவும் மர்மமான முறையில் அழைத்து இருக்கிறாள். எதற்காக அழைக்கிறாள்? என்ன கதைக்கப் போகிறாள்? மின்னோட்டத்தின் அதிகரிப்பில் மூளைக்கோளாறு வந்து விடக்கூடாது" எனப் பாலன் நினைத்துக் கொண்டான்.

சிம்மியின் வீட்டிற்குச் சென்ற பொழுது ஆறுமணி ஆகிவிட்டது. காரை விடுவதற்கு இடம் கிடையாது பாலன் சிறிது நேரம் காரில் சுற்ற வேண்டியதாகிற்று. வேலை இல்லாத நேரத்தில் குடியிருப்புப் பகுதிகளில் வாகனங்கள் தரிப்பதற்கு இடம் எடுப்பது பெரும்பாடு. பாலன் ஒருவாறு இடம் பிடித்துக் காரை அதில் நிறுத்தினான். பின்பு அவசரமாக சிம்மி வீட்டிற்குச் சென்றான்.

சிம்மி ஒரு அடுக்குமாடிக்கட்டடத்தில் குடியிருந்தாள். அந்த அடுக்கு மாடிக்கட்டடத்திலும் வந்தேறு குடிகளே அதிகமாகக் குடியிருக்கலாம் எனப் பாலன் எண்ணிக் கொண்டான். வந்தேறு குடிகளின் வாரிசுகள் வெளியே நின்று விளையாடினார்கள். பாலனை மறித்துக் கொண்டு ஒரு

சோமாலியநாட்டுச் சிறுமி நின்றாள். பாலன் அவளைப் பார்த்துச் சிரித்தான். பின்பு "எனக்கு வழிவிட முடியுமா?" என்று அவளைப் பார்த்துக் கேட்டான். தனக்குப் பத்துகுரோன்கள் தரும்படி அவள் பாலனிடம் லஞ்சம் கேட்டாள். தந்தால் மட்டும்தான் வழிவிடுவேன் என்றாள். பாலன் தன்னிடம் தற்போது பணம் இல்லை என்றான். அவள் சிறிது நேரம் சிந்தித்து விட்டு மறுமுறை வரும் பொழுது பணம் தரவேண்டும் என்றாள். பின்பு அவள் பாலனுக்கு வழிவிட்டாள். கப்பம் கேட்கும் காவாலிக் குட்டியெனப் பாலன் எண்ணிச் சிரித்துக் கொண்டு சிம்மியின் வீட்டிற்குச் செல்வதற்காக லிப்ற் எடுக்கச் சென்றான்.

விக்கி ஏற்கனவே தனது பெண்குட்டியோடு அங்கு வந்துவிட்டான். விக்கியின் பெண்குட்டி சிம்மியின் இரண்டு புத்திரரையும் மேய்த்துக்கொண்டு திரிந்தாள். அழைப்பு மணி அடித்ததும் அவளே ஓடிவந்து கதவைத் திறந்தாள். பெரிய மனுஷியின் தோறணையில் "உள்ள வாங்க மாமா" என்றாள்.

அந்த வரவேற்பைக் கேட்டதும் விக்கி வந்து பார்த்தான். பாலனைக் கண்டவுடன், "வாரும் பாலன். உம்ம எதிர் பார்த்துக்கொண்டு இருந்தம்" என்றான்.

"என்னை எதுக்காக எதிர்பார்க்கிறியள்? நான் என்ன அவ்வளவு முக்கியமான ஆளா என்ன?" என்றான் பாலன்.

"அப்பிடி இல்லப் பாலன். ஒரு ஃப்ரண்டா உம்மோட கதைக்க வேணும் எண்டு சிம்மி ஆசைப்படுறா?"

"அப்ப நான் முக்கியம் இல்லை என்கிறியள்? நீங்கள் இரண்டு பேரும் வேலைக்கு வராதது ஏதோ மாதிரி இருந்திச்சுது. ஒரு பிரச்சனையும் இல்லைத்தானே?" என விக்கியைப் பார்த்துக் கேட்டான். விக்கி அதற்குப் பதில் சொல்லவில்லை. "வாரும் உள்ளுக்கு" என்று கூறிவிட்டு, உள்ளே சென்றான். அவனது முகத்தின் வாட்டம் ஏதோ பிரச்சினை இருப்பதாகப் பாலனுக்கு ஆரூடம் சொல்லிற்று.

ஹோலில் இருந்த சோபாவில் பாலன் அமர்ந்து கொண்டான். சிம்மி சமையல் அறையில் பிள்ளைகளுக்குச் சாப்பாடு செய்யும் அலுவலில் வெளியே வரவில்லை. சிறிது நேரத்தின் பின்பு சாப்பாடு செய்து கொண்டு வெளியே வந்தாள். அவளைப் பார்த்த பாலன் அதிர்ந்து போய்விட்டான்.

"என்ன நடந்தது சிம்மி?" பொறுக்க முடியாதவனாய் அவளைப் பார்த்துக் கேட்டான்.

"பொறுங்கண்ணா நான் சாப்பாடு குடுத்துட்டு இப்ப வாறன்?" என்றாள்.

பாலன் விக்கியைப் பார்த்தான்.

"நாங்கள் காட்டுமிராண்டி இனம் பாலன். ஐரோப்பா வந்தாலும் சரி அமெரிக்கா போனாலும் சரி, மேட் இன் சிறீலாங்கா தானே? அந்தக் குணம் மாறாது. பெம்பிளையளுக்கு அடிக்கிறதும் எங்கட கலாசாரம்தானே? எல்லா மனித இனத்திலும் அசிங்கமான குணம் இருக்கத்தான் செய்யுது? எங்கட சனத்தில தூக்கலா இருக்குது. சரி சிம்மியே என்ன நடந்தது எண்டு உனக்குச் சொல்லட்டும்" என்றான். பின்பு வேலைத்தளத்தைப் பற்றிக் கதைக்கத் தொடங்கினான். மனிதனின் பிரதான கதைப்பொருளாக வேலைத்தளம்தான் இருக்கிறது. தாதிமார்கள் முதியோர் பராமரிப்பு பற்றிக் கதைப்பார்கள். குழந்தைகள் காப்பகத்தில் வேலை செய்பவர்கள் குழந்தைகள் பற்றிப் பேசுவார்கள். கணினி வேலை செய்பவன் கணினித்துறை பற்றிக் கதைத்துக்கொண்டு இருப்பார்கள். விக்கியும் தங்கள் முதியோர் இல்லம் பற்றிய குறைகளைப் பிரஸ்தாபிக்கத் தொடங்கினான்.

சிம்மி பிள்ளைகளுக்குச் சாப்பாடு கொடுத்துவிட்டு தேநீருடன் ஹோலுக்கு வந்தாள்.

"என்ன நடந்தது சிம்மி? இப்பிடிப் பாக்கச் சகிக்க முடியேல்ல. யார் இப்பிடிச் செய்தது? விக்கி தன்னால சொல்ல முடியாது எண்டுறார். சொல்லும் என்ன நடந்தது எண்டு?" என்று பாலன் கேட்டான்.

தேநீரை சோபா மேசையில் வைத்த சிம்மியின் கண்களில் கண்ணீர் இமைகள் என்னும் கரைகள் தாண்டி புவியின் விசைக்கு இசைந்து சென்றது. பாலனுக்கு அது மேலும் அதிர்ச்சியைத் தந்தது. எரியும் பெண்ணான இவள் அபலைப் பெண்ணானது எப்போது என்பது போல இருந்தது அவனுக்கு. "தயவு செய்து என்ன நடந்தது எண்டு சொல்லுங்க" என்றான்.

"சொல்லுறன் அண்ணா. இரண்டுபேர் வீட்டில இருக்கிறது எண்டா ஆகக்குறைஞ்சது ஒருத்தர் கதைக்கிறது மற்றவருக்கு விளங்கோணும். ஒருவர் கதைக்கிறதை மற்றவர் காது குடுத்துக் கேட்கவேணும். அதுக்குக் கதைக்கிற இரண்டு பேருடைய உலகமும் ஓரளவுக்கு நெருக்கமாக இருக்கோணும். சக மனிதனுடைய உணர்வுகள் பற்றி அக்கறையில்லாத மனிதனால மற்றைய மனிதனின் மனது கோணாமல் கதைக்க முடியாது. வாழ்க்கை எண்டுறது இருட்டுக்க நடக்கிற காமம் தணிக்கிற உறவு மட்டும் இல்லை. இரண்டு பேர் சேர்ந்திருந்து ஒருவரை ஒருவர் புரிஞ்சுகொண்டு, ஒவ்வொரு கணமும் மனதை வருடிக் கொடுக்கிறதுதான் வாழ்க்கை. மனதைப் புரிஞ்சு கொள்ளுற ஞானம் இல்லாதவர்களால எப்பிடி மனதை வருடிக் கொடுக்க முடியும்? மனதை வருடிக் கொடுக்காமல், மனதைச் புரிஞ்சு கொள்ளாமல், உடலோடு உரசிறதே கருக்கு மட்டையில தேய்க்கிற மாதிரி இல்லையா? எனக்கு அப்பிடித்தான் இருக்கும். மொழி சொல்லும் தகவலைப் புரிஞ்சு கொள்ள முடியாதவை உடல் சொல்லும் தகவலையாவது புரிஞ்சு கொள்ளவேணும். அதுவும் புரியாட்டி? பிணத்தோடு புணரும் வாழ்க்கை எண்டு ஒன்று இருந்தா எப்பிடி இருக்கும்? அப்பிடித்தான் என்ர வாழ்க்கை இருந்திச்சுது.

"கலாசாரம் எண்டதுக்காக நித்தம் காயங்களுடன் வாழோணும் எண்ட விதிய என்னால ஏற்றுக்கொள்ள முடியேல்ல. அதுவும் எங்கட சுதந்திரத்தை நாங்கள் கையில எடுத்துக் கொள்ளக்கூடிய ஒரு நாட்டில இருந்துகொண்டு பயந்து பயந்து வாழ்றதுக்கு நான் தயாராக இல்ல. ஜடமாகப் படுத்து, யந்திரமாய் நடமாட எனக்கு விருப்பமில்லை.

"அவருடைய ஞானசூனிய உலகத்தை என்னால புரிஞ்சுக்க முடியேல்ல. அவராலும் என்னுடைய மனதைப் புரிஞ்சு கொள்ளமுடியாது. அவருடைய உலகம் வேறு. என்னுடைய உலகம் வேறு. என்னுடைய உலகத்துக்கு அவரால வரமுடியாது. அவருடைய உலகத்தின்ர ஞான சூனியத்தை என்னால தாங்க முடியாது. அவர் தன்னுடைய ஞானசூனிய உலகத்தை விட்டு வெளிய வரமாட்டார். நான் நானாகவே இருக்க விரும்புறன். எனது வாழ்க்கைய நான் யாருக்காகவும் பாழாக்கி கொள்ள விரும்பேல்ல.

"அவர் என்னைப் புரிஞ்சு கொள்ளாமல் இருந்ததில் இருந்து நான் அவரிட்ட இருந்து விலகி விலகிப் போய்க் கொண்டே இருந்தேன். உங்களுக்குத் தெரியும் என்மனசு யாரோட சஞ்சரிக்கிறது எண்டு. இதுக்கு மேல என்னால இரட்டை வேஷம் போட முடியேல்ல. எதையும் நேர்மையாகச் செய்யவேணும். என்னால இனிச் சேர்ந்து இருக்க முடியாது எண்டால் சொல்லிப் போட்டு விலகவேணும். விலாங்கு மீன்மாதிரி விபசாரம் செய்யிற வாழ்க்கை எனக்குப் பிடிக்கேல்லப் பாலன் அண்ணா.

"நான் கனகாலமா இதைப்பற்றி யோசிச்சுக் கொண்டே இருந்தன். உங்களோடை வெளியில சிரிச்சு சிரிச்சு கதைக் கேக்கையும் உள்மனதில இடைவிடாமல் ஆயிரம் போராட்டமாய் இருக்கும். தற்கொலை செய்து கொள்ளுற கோழையல்ல நான். என் பிள்ளைகளைத் தவிக்கவிடும் எண்ணமும் எனக்குக் கிடையாது. அவரிட்ட இருந்து விலகி எனக்குப் பிடிச்சவரோட வாழ்றதுதான் சரியெண்டு எனக்குப் பட்டிச்சு. அதுதான் பிள்ளையளையும் காப்பாற்றி என்னுடைய வாழ்வை நான் அநுபவிக்கிறதுக்கு வழிவகை செய்யும் எண்டு நம்பினன்.

"இந்த முடிவை அவரிட்டச் சொல்லுறதுக்கு வாயத் திறக்க எனக்குப் பயமாய் இருந்திச்சு. நான் வாய் திறந்தால் அதைப் புரிஞ்சு கொள்ளுற ஞானம் அவருக்குக் கிடையாது. அது எனக்குத் தெரியும். அதுக்காகச் சொல்லாமல் கொள்ளாமல்

வீட்ட விட்டுப் போகிற கீழ் நிலைக்கும் என்னால இறங்க முடியாது. நான் எப்பிடி எண்டாலும் அவரிட்டை அண்டைக்குச் சொல்லுறது எண்டு முடிவெடுத்தன்.

“இரவு எட்டு மணியிருக்கும். பெடியள் நித்திரை யாயிட்டாங்கள். மெதுவா விஷயத்தை அவருக்குச் சொன்னன். நான் விலகப் போறன் எண்டது விளங்கின பாதியிலேயே பற்களை நெருமிக் கொண்டு மூக்கில குத்தின குத்தில...”

சிம்மி அழுகையைக் கட்டுப்படுத்த முடியாது குமுறினாள். பாலன் எதுவும் செய்ய முடியாது சங்கடத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான். பிள்ளைகள் சிம்மியைத் திரும்பிப் பரிதாபமாய்ப் பார்த்துவிட்டு அமைதியாகச் சாப்பிட்டார்கள். சோகம் சொற்களைப் பறித்துவிட அமைதி அரக்கனாய் அங்கு அட்டகாசம் செய்தது. சிம்மி தொடர்ந்து பேசத் தொடங்கினாள்.

“மூக்கால ஒரே இரத்தமாய் ஓடிச்சுது. அதோடையும் என்னை விடல்ல. என்ர கையை மடக்கிப் பிடிச்சுக் கொண்டு முகத்திலேயே குத்தினார். ஒரு குத்துக் கண்ணில பட்டிட்டுது. இப்பிடியே வீட்டுக்க நிண்டா அடிச்சே கொலை செய்வார் எண்டது எனக்கு விளங்கிச்சுது. ஒருமாதிரி கதவைத் திறந்து கொண்டு வெளிய வந்தன். அப்பிடியும் விடேல்ல அவர். வெளியில வந்தும் என்ர முகத்தில குத்தினார். எதிர் வீட்டில இருக்கிற நோர்வேக்காரர் சத்தத்தில வெளிய வந்திட்டார். நான் அவருக்குப் பின்னாலப் போய் நிண்டிட்டன். அவர் பொடிபில்டர். அவரோட இவரை ஒப்பிட்டால் எறும்பும் யானையும் மாதிரி. அவருடைய மனுஷி உடனேயே பொலிஸுக்கு போன் பண்ணிட்டா. கொஞ்ச நேரத்தில அவங்கள் வந்தாங்கள். ஆளை மடக்கிப் பிடிச்சுக்கொண்டு போயிட்டாங்கள். மிச்சக் கதை இனித்தான் இருக்குது.”

சிறிது நேரம் மீண்டும் அமைதியாகியவள்.

“எனக்குப் போன் பண்ணி இருக்கலாம் தானே?” என்றான் பாலன்.

"உங்களத் தொந்தரவு பண்ணவேண்டாம் எண்டு யோசிச்சன். நான் செய்தது தப்பு எண்டு நினைக்கிறீங்களா பாலன் அண்ணா?"

"நாங்கள் எது செய்தாலும், தப்பெண்டும் சரியெண்டும் சொல்லுறத்துக்கு உலகத்தில ஆள்கள் இருப்பினம். அவைக்காக நாங்கள் வாழமுடியுமோ? உலகம் சொல்லுறதை சொல்லட்டும். புதிசா இருக்கும் வரைக்கும் இது அவைக்கு கதையா இருக்கும். இதைவிட வேற ஒரு கதை வந்தா இந்தக் கதை மறந்து போயிடும். இதுதான் உலகம். உங்களுக்கு வாழ்க்கையா இருக்கிறது ஊருக்கு புதினமா இருக்கும். உமக்குச் சரியாகப் பட்டதைத்தானே செய்தனீர். பிறகு எதுக்கும் கவலைப் படக்கூடாது. உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டா என்னைக் கேளுங்க."

"நிச்சயம் பாலன் அண்ணா. இது தொடக்கந்தானே? அவருடைய அறிவு யாழ்ப்பாணத்து கதியால் சண்டைய விட மோசமான நினைப்பைக் கொடுக்கிற ஞானம். குண்டுசிக்குக் கணக்குப் பார்க்கிறதில வரும் எங்கட பிரச்சினை. எனக்கு நிச்சயம் அப்ப உங்கட உதவி தேவைப்படும். ஏன் பாலன் அண்ணா இவங்கள மாதிரி பிடிக்காட்டி விலகிப் போறதுக்கு எங்கட சனத்துக்கு மனது வாறேல்ல? பிடிக்காட்டியும் அதைப் பிடிச்சு வைச்சுக்கொண்டு நரக வேதனைப்படுகிறது பெரு மையா இருக்குது. குழந்தைப் பிள்ளையளுக்கு முன்னாலே ஒவ்வொரு நாளும் அடிபட்டு அதுகளின்ர வாழ்க்கையை சீரழிக்கிறதிலும் பிரிஞ்சு அமைதியா இருந்தால் அதுகளுக்கு நிம்மதியா இருக்கும் எண்டுறதை ஏன் ஒருத்தரும் சிந்திச்சுப் பார்க்கிறேல்ல? குழந்தப் பிள்ளையளுக்கு அமைதியக் குடுத்து வாழோணும் எண்ட நல்ல மனசு ஏன் வாறேல்ல எங்களுக்கு? மனிசனும் மனுஷியும் பிரியிறது எண்டா பிள்ளையளக் கணக்கெடுக்காமல் கத்தறது நாங்கள்தான் பாலன் அண்ணா."

"பிரச்சினை வந்தா பலரும் பலவிதம். அந்த விஷயத்தில கலாநிதிக்கும் கழுவுறவனுக்கும் அதிகம் வித்தியாசம்

இருக்காது. ஒவ்வொருத்தரும் யோசிக்கிறதைப் பொறுத்தது. நொஸ்குகளும் சின்ன விஷயத்துக்கு கூடப் பிரச்சினைப்படுறது உண்டு. எல்லாரும் மனிசர்தானே?"

"உண்மைதான் பாலன் அண்ணா. ஆனால் தமிழர் மிகவும் மோசம்."

பாலன் சிரித்தான்.

பின்பு சிறிது நேரம் இருந்து கதைத்து விட்டு பாலன் வீட்டிற்குச் சென்றான். அவன் நினைவெல்லாம் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை என்பதாக எதிரொலித்தது.

25

வெண் வைரங்களை வானம் தூவ ஊசிக்குளிர் உரத்துப் பேச, வெள்ளைப் பூமியின் விருந்தாளியாகப் பனிகாலம் வந்திருந்தது. பருவகாலங்கள் சுழலும். பகலும் இரவும் சுழலும். வேலை நாள்கள் இடைவிடாது வந்து போகும். பாலன் காலையில் எழுந்து ஓடுவதும் தொடரும். இன்றும் பாலன் காலையில் எழுந்து வேலைக்கு ஓடினான்.

பனியில் நடப்பது போலத்தான் மனித வாழ்க்கை. மனித வாழ்வின் நடப்பும் அதுபோல, இரண்டிலும் எப்போது வழுக்கும் என்பதுதான் புரியாத திகைப்பாகும். புரிந்தால் வாழ்வின் சுவாரசியம் இல்லாது போய்விடும். பகலில் கரையும் பனி இரவில் கண்ணாடியாக இறுகிக்கிடக்க, அதன்மேல் போர்வையாகப் புதுப்பனி பூக்களாக விழுந்து படரும். எப்போதும் ஆபத்துக்கள் மறைந்திருந்து சிரிக்கின்றன. வழுக்குமிடம் கண்டுபிடித்து வழுக்காது நடப்பது வாழ்க்கைப் போராட்டம் போலாகிறது. பாலன் வழுக்காது நடப்பதற்குப் போராடினான். காலும் வாழ்க்கையும் வழுக்கிக் கொண்டே இருந்தன.

மனித வாழ்க்கை மரணப் போராட்டமாய் தொடர்கிறது. பலர் மரணத்துக்காகப் பரிதவிக்கிறார்கள். பலரை மரணம்

பரிதவிக்கவிடுகிறது. முதியோர் இல்லத்தில் சாவதற்காக வந்து இருக்கும் மனிதர்களின் நினைவு பாலனை நோண்டியது. முன்பு மந்திரிகளாக இருந்தவர்கள்கூட சாவதற்காக முதியோர் இல்லத்திற்கு வருவது தவிர்க்க முடியாது போய்விடுகிறது. வெட்டுவதற்குக் கொண்டுவரப்பட்ட கால்நடைகள் போல அவர்கள் முறைக்காக, மரணம் என்னும் விடுதலைக்காகக் காத்து இருக்கிறார்கள். மந்திரிக்கும் சாதாரண மனிதனுக்கும், மரணம் என்பது மாற்றிவிடமுடியாத இயற்கையின் நியதி. அதற்காகக் காத்திருக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவஸ்தையும் துன்பமும் சர்வநிச்சயம்.

பாலன் நினைவுகளை ஒதுக்கி விட்டு வழுக்கல் தவிர்த்து நடக்கத் துவங்கினான். கெபாப் கடையடிக்கு வந்தபொழுது துர்நாற்றம் ஒன்று அவன் மூக்கைத் துளைத்துச் சென்றது. ஏதோ இறைச்சி அழுகிய மணம்போல அதன் நாற்றம் வயிற்றைப் பிரட்டியது. ஏதாவது இறைச்சியைக் குப்பைக்குள் போட்டு வைத்து இருக்கிறார்களா? அப்படிப் போட்டிருந்தாலும் இந்தக் குளிருக்கு உறைந்து மணக்க மாட்டாதே? ஏன் இப்படி மணக்கிறது? பாலன் மணம் சகிக்க முடியாதவனாய் அவசரமாக அந்த இடத்தைவிட்டு நடந்து சென்றான்.

மேகலன் இருந்த கட்டடம் அவன் கண்ணை இன்றும் உறுத்தியது. மேகலன் போன பின்பு அந்தக் கட்டடத்திற்குள் பாலன் சென்றதில்லை. எஸ்பன் அப்சராவோடு நடந்துகொண்ட முறை அவன்மீது கொலைவெறியை ஏற்படுத்தி என்ன மனிதன் என்கின்ற வெறுப்பில் பாலனின் மனதெல்லாம் கசந்து கிடந்தது. மேகலனோடு இருக்கும் பொழுது பாலனோடு பானு கதைப்பாள். இப்பொழுது பாலனைக் கண்டால் காணாத வள் போலச் செல்கிறாள். பாலனே அவர்களைப் பிரித்து வைத்ததான பந்தா அவளிடம். அவள் அறியாமை பாலனுக்கு வருத்தமாக இருக்கும். தன்னால் தான் கெட்டதுக்கு நான் என்ன செய்ய முடியும் எனப் பாலன் எண்ணிக் கொள்வான்.

அந்தத் துர்நாற்றம் மேகலனின் அடுக்குமாடிக் கட்டடம் தாண்டும் வரையும் தொடர்ந்தே வந்தது. பாலனுக்கு அந்த

நாற்றத்தை விட்டு ஓடவேண்டும் போல் ஒருவித உணர்வு. கெபாப்கடை மணமாயிருந்தால் இவ்வளவு தூரம் மணக்குமா என்கின்ற கேள்வி பாலனின் மனதில் முளைவிட்டது.

நாய் மூக்கு இல்லாதவரைக்கும் மணம் வரும் இடத்தை கண்டுபிடிப்பது நம்மால் ஆகாத விடயம் என பாலனுக்குத் தோன்றியது. பாலன் அதற்குமேல் அதைச் சிந்திக்க விரும்பாது சுரங்கரத நிலையத்தை நோக்கிச் சென்றான். சுரங்கரத வாசலில் இருந்த நார்வேசன் திறந்து இருந்தது. பிச்சைக்காரியும் தனது கடையைத் திறந்திருந்தாள். அதைக் கண்டபின்புதான் பாலனுக்கு எல்லாம் ஒழுங்காக நடக்கிறது என்கின்ற திருப்தி ஏற்பட்டது. அவன் தனது சுரங்கரதத்திற்காய் ஓடிச் சென்றான்.

மனிதனுக்குத் துர்நாற்றமாய் அருவெருப்பை உண்டு பண்ணும் இந்த மணமே பல விலங்குகளுக்கு அவர்களது உணவை அடையாளப்படுத்தும் மணமாகும். மனித இனம் அனைத்துண்ணியாக இருந்தும் அழுகும் மாமிசத்தின் மணத்தைத் தாங்க முடியாது தவிப்பது ஏன் என்பது பாலனுக்குப் புரியவில்லை. துர்நாற்றம் என்பது இறந்த விலங்குகளின் சிதைவை பக்றீரியாக்கள் ஊக்குவிக்கும் பொழுது அவற்றின் பெருக்கத்தால் உண்டாகும் பக்க விளைவு அல்லவா? மற்றைய விலங்குகள் தங்கள் உணவை அடையாளப்படுத்தும் பொழுது மனிதன் அதை உண்ணத்தகாது என்பதாகக் கணிப்பதற்கான காரணம் என்ன? மனிதனும் ஒரு விலங்காக இருந்தும் மனிதனுக்கும் மற்றைய விலங்குகளுக்கும் உணவில் விழுந்த கோட்டிற்கு காரணம் என்ன? மனித மூளையும் அதன் விசித்திர மின்னோட்டமும் பாலனை மீண்டும் வியப்பில் ஆழ்த்தியது. தன்னிடம் இருக்கும் ஒரு உறுப்பையே புரிந்துகொள்ள முடியாத மனிதர்கள் நாங்கள் என எண்ணிக் கொண்டான்.

பாலன் வேலை முடிந்து விக்கியோடு சுரங்கரதத்தில் வந்தான். வழமைபோல வயிறு குமுறியது. ஆவேசமாகச் சாப்பாடு கொண்டாவென ஆர்ப்பரித்தது. இயற்கைதான்

எவ்வளவு நுட்பமாகப் படைக்கப்பட்டு இருக்கிறது? இது மில்லியன் வருடங்களாகத் திருத்தியெழுதப்பட்ட படைப்பு என்பது பாலனுக்குப் புரிந்தது.

விக்கி ஏதோ சிந்தித்துக் கொண்டு இருந்துவிட்டு பாலனைப் பார்த்து இப்படிக் கேட்டான்.

"நேற்றுப் பேப்பர் பார்த்தீரே? காணி, பொலீஸ் அதிகாரம் ஒண்டும் தரேலாது எண்டு ஜனாதிபதி சொல்லி இருக்கிறார்" என்றான்.

"ம்... என்ன செய்வம் நாங்கள் விக்கி? எங்கட பிரச்சினைக்கும், கோசவோப் பிரச்சனைக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. ஆனா எங்களுக்கு ஒரு தீர்ப்பு அவங்களுக்கு ஒரு தீர்ப்பு. இதுதான் உலகம் வழங்கின நீதி. எங்கட நியாயங்களை இந்த உலகு ஏற்றுக் கொள்ளேல்ல? அதற்குப் பதிலாக அவங்கட அரசியலில நாங்கள் பலியாடுகள் ஆக்கப்பட்டதே வரலாறாப் போயிட்டுது. சேர்பியாக்காரர்களால் கொசோவாகாரர்களைப் புரிஞ்சு கொண்டாலும் பெரும்பான்மை சிங்கள மக்களால தமிழரைப் புரிஞ்சு கொள்ள முடியுமா எண்டது கேள்வியே! ஒரு இராணுவ பலம் இல்லாமல் எங்களுக்கு விடிவு வராது என்பது சர்வநிச்சயம். அதையே ஜனாதிபதி திரும்பத் திரும்ப உறுதிப்படுத்துறார். அதுதான் எங்களுக்குச் சிங்கள அரசுகள் சுதந்திரத்திற்குப் பின்பு கற்பித்த வரலாறு. இந்திய இராணுவம் இறங்கிக் கிடைச்ச ஒரு அரிய சந்தர்ப்பத்தையும் வீணடிச்சிட்டாங்கள். நல்ல அரசியல் ஞானம் இருந்திருந்தா இந்திய இராணுவத்தை ஆப்பிழுத்த குரங்காக வைச்சிருக்க வேணும். இனி என்ன செய்ய முடியும்? பிச்சை தரவேண்டியவனோடையே பிரச்சினைப் பட்டாச்சு."

"உண்மை பாலன். எவ்வளவு காலம் இங்க இருந்தாலும், இனி நாட்டுக்குத் திரும்பிப் போவோமா எண்டது கேள்வி ஆகலாம், அங்க இருக்கிற எங்கட இனம் சுதந்திரமா இருக்கோணும் எண்ட தவிப்பு கட்டையில போறவரையும் ஒவ்வொரு தமிழனுக்கும் மாறாது. வன்முறை பாவிக்கக்கூடாது எண்டதிலதான் கருத்து வேற்றுமையே தவிர தமிழருக்கு

உரிமை கிடைக்க வேணும் எண்டதில யாருக்கும் மாற்றுக் கருத்து கிடையாது. தமிழர்களிள் சுதந்திர வேட்கை அந்த இனம் இலங்கையில் இருக்கும் வரை தணியாது."

"எங்கட ஆயுட்காலத்திற்குள் எதாவது முடிவு வருமா என்பதே சந்தேகம்தான். இந்தியாவையும் அதைச்சுற்றியுள்ள நாடுகளினதும் மனோபாவத்தைப் புரிஞ்சு கொள்ள முடியாது. அதைவிட அந்த நாடுகளின் ஆட்சியில் இருக்கிறவங்களுடைய சுயநலத்திற்கு அளவு கிடையாது. ஜனநாயகம் என்பது ஏடுகளில மட்டும் வாழ்கிற நாடுகள் அவை. எங்கள் இனத்தின் விடிவா! அழிவா! என்கின்ற போராட்டம் எவ்வளவு காலம் தொடருமோ தெரியாது."

"உண்மைதான். உதைக் கதைச்சா வயித்தெரிச்ச லாகத்தான் இருக்கும். முடிவு வராது."

பாலன் சுரங்கரத்திலிருந்து இறங்கினான். வயிற்றில் பசி விழுந்த கடுப்பில் நடையில் சற்று வேகம் காட்டி நடந்தான். சிறிது தூரம் நடந்து வந்ததும் காலையில் முகர்ந்த அதே துர்நாற்றம் மீண்டும் வீசுவதான உணர்வு அவனுக்கு உண்டாயிற்று. உண்மையில் மணக்கிறதா அல்லது மணப்பதான மனப் பிரம்மையா என்கினற சந்தேகத்தோடு தொடர்ந்தும் நடந்தான்.

வரவர மணப்பது அதிகரித்தது. உண்மையாகவே மணக்கிறது என்பதைப் பாலன் உணர்ந்து கொண்டான். எங்கிருந்து வருகிறது என்கின்ற கேள்வியோடு பாலன் வீட்டைநோக்கி நடந்தான்.

பாலன் மேகலன் வீட்டிற்குச் கிட்டவாகச் சென்ற பொழுது அதிர்ச்சியாக இருந்தது. மணம் தாங்கமுடியாது வயிற்றைப் பிரட்டியது. மேகலன் வீட்டிற்கு முன்பு பொலீஸ் வாகனங்கள் நின்றன. மக்கள் கூடிநின்று விடுப்புப்பார்த்தனர். பொலிஸ் மற்றவர்கள் அண்மிக்காதபடிக்குத் தடுப்பு நாடாக்கள் இழுத்து இருந்தது. பொலிஸ் தடயங்கள் தேடும் பணியில் ஈடுபட்டிருப்பது தெரிந்தது. அம்புலன்ஸ் ஒன்று வந்து காத்து நின்றது. பாலன் மணத்தாலும் பரவாயில்லை என்கின்ற

வைராக்கியத்தோடு அங்கு சென்றான். அவனாலும் அருகே செல்ல முடியவில்லை. யாராக இருக்கும்? இது என்ன அநியாயம் என்கின்ற எண்ணம் அவனை மேலும் குடைந்தது.

பாலன் அங்கே நின்று விடுப்பு பார்த்த பொழுது பானு அந்தக் கட்டடத்திற்குள் இருந்து வெளியே வந்தாள். பாலன் அவளை நோக்கிச் சென்றான். ஆபத்திற்குப் பாவம் இல்லை. இன்று அவளுடன் கதைத்து என்ன நடந்தது என்பதை அறிய வேண்டும் என முடிவுசெய்தான்.

பாலனைக் கண்டதும் வழமையாக முகத்தை திருப்பிக் கொண்டு சென்றுவிடுவாள். இன்று பாலன் சிரிக்க அவளும் சிரித்தாள். பாலனுக்கு அது போதுமாக இருந்தது,

“என்ன நடந்தது அக்கா? பொலிஸைப் பார்க்க ஏதோ கொலை நடந்து இருக்கும் போல இருக்குது?”

“ஓம் பாலன். ஒரே நாத்தம். தாங்க முடியேல்ல. பொலிஸுக்கு சனங்கள் அடிச்சுச் சொல்லி அவங்கள் வந்து எஸ்பன்ர வீட்டைத் திறந்து விசாரணை நடத்துறாங்கள். அவனை யாரோ கொலை செய்து போட்டாங்கள் போல இருக்குது. நிறைய நாளா ஒருத்தரும் பார்க்காமல் இருந்து இருக்கோணும். அதுவும் “வாடகார்“ (குளியல் தொட்டி)க்காயாம். அதுதான் தண்ணிக்க கிடந்து நாறி ஒரே மணம். ஒவ்வொரு வீடா யாரும் சந்தேகமான ஆட்களைக் கண்டனீங்களா எண்டு விசாரிக்கிறாங்கள். நாயெல்லாம் கொண்டு திரிஞ்சாங்கள். உமக்குத் தெரியும் எல்லா எஸ்பனை?”

“ஓமக்கா. அவனை யார் கொலை செய்து இருப் பாங்கள்?”

“இப்ப அந்த ஆளுக்கு அஸ்மா மோசம். அப்பிடி இருந்தும் கிவியில இருந்து பியர் போத்தில் இழுக்கிறதில குறையில்லை. கட்டடத்திற்குள்ள தெரியாத ஆட்கள் உள்ளே வர ஏலாது. ஆனா கீழ நிண்டு விளையாடுற பிள்ளையள் யார் வந்தாலும் கதவைத் திறந்து விடுகுதுகள். யார் வந்தாங்கள்,

என்ன செய்தாங்களோ யாருக்குத் தெரியும்? என்ன எண்டாலும் பாவம் தானே?"

"ம்... அது சரி உங்கட வாழ்க்கை எப்பிடிப் போகுது?"

"ஏதோ போகுது. உமக்கு அவரைப்பற்றி எதுவும் தெரியுமே?"

"ஏன் உங்களோட கதைக்கிறேல்லையே?"

"இல்ல பாலன். அவர் கனகாலமாக் கதைக்காமல் விட்டிட்டார். எல்லாம் தப்போ எண்டு இப்ப பீல் பண்ணுறன் பாலன்." அதைச் சொல்லும்போது அவள் கண்கள் கலங்கிவிட்டன. சிறிது நேரம் பாலனைப் பார்க்க முடியாது நிலத்தைப் பார்த்தவண்ணம் நின்றாள்.

"ஒண்டா இருக்கேக்க சிலவேளை அருமை புரியிறேல்ல. நீங்கள் அவரைப் பார்க்கிறது உண்டோ?"

"ஒருக்கா புளொகுறோசில அவரைக் கொண்டு போய்விட்டனான். அதுக்குப்பிறகு நான் சந்திக்கேல்ல.

"ரெலிபோன் பண்ணிப் பாக்கிறதுதானே?"

"அந்த நம்பர் இப்ப வேலை செய்யுது இல்ல."

"அவரைக் கண்டா நான் கதைக்கிறன் அக்கா. ஏலுமெண்டா கூட்டிக் கொண்டு வாறன். உங்கட நம்பரைத் தாங்க." பாலன் சொல்லப்பட்ட எண்ணைத் தனது கைத் தொலைபேசியில் பதிந்து கொண்டான்.

சிலவேளை பிரிவுகள் உறவுக்கு வழி சமைக்கின்றன என எண்ணிய வண்ணம் பாலன் வீட்டை நோக்கி நடக்கத் துவங்கினான்.

இரண்டு கிழமைக்குப் பின்பு எஸ்பனின் அடக்கம் பற்றிய செய்தி பத்திரிக்கையில் வந்தது. பாலனுக்கு அந்த நிகழ்வுக்குப் போவதா விடுவதா என்பது போராட்டமாகியது. அவனது அடக்க நாளில் வேலை வேறு. வேலையில் விடுப்பு

கேட்க வேண்டும். வேலையில் விடுப்பு கேட்டுப் போகுமளவிற்கு எஸ்பன் ஒரு நல்ல மனிதனா என்கின்ற கேள்வி அவன் மனதைத் துருவியது.

அப்சராவை கூட்டிவந்து அவன் நடத்தியமுறை பாலனுக்கு அவன்மீது இப்பொழுதும் ஆத்திரத்தைப் பொங்க வைத்தது. தாயிலாந்து சென்று குக்கிராமங்களில் இருக்கும் பெண்களை நல்ல வாழ்வு தருவோம் என்கின்ற நம்பிக்கையில் இங்கு கூட்டிவந்து சீரழிக்கும் சிலரில் இவனும் ஒருவன். அவன் செய்த அந்தக் கொடுமையை அப்சரா கூறிய பின்பும் அவனது இறப்பிற்கு அஞ்சலி செலுத்த வேண்டுமா? நல்ல மனிதனாக வாழாதவனுக்கு நான் எதற்காக வேலையில் இருந்து விடுப்பெடுத்து வந்து அஞ்சலி செய்ய வேண்டும்?

பாலன் நெடு நேரமாகப் போராடிய பின்பு அந்த நிகழ்வுக்குப் போவதில்லை என்று முடிவு செய்து கொண்டான். அவன் மனது எஸ்பனைவிட அப்சராவுக்காக இரங்கியது.

அன்று அலுவலகத்தில் இருந்த பத்திரிக்கையைப் பார்த்த பாலன் அதிர்ந்து போனான். அவன் அப்படி இருப்பதைப் பார்த்த சேர்பியாக்காரி தானும் அந்தப் பேப்பரை எட்டிப் பார்த்துவிட்டு, "உனக்கு இவங்களைத் தெரியுமா?" என்று கேட்டாள்.

பாலன் அப்பொழுதுதான் சுயநினைவு பெற்றான். பின்பு சேர்பியாக்காரியைப் பார்த்து, "அந்தப் பெண்ணைத் தெரியும். அவளுக்குத்தான் பார்ட்டி நடந்த அன்று உதவி செய்யப் போயிருந்தேன். அவளுக்கும் இந்தக் கொலைக்கும் சம்பந்தம் இருக்கும் என்பதை என்னால் நம்ப முடியவில்லை" என்றான்.

"அவள்தான் வியட்னாம்காரனுக்கு காசுகொடுத்து செய்திருக்கிறாள் எண்டு பொலீஸ் சொல்கிறது."

"அதைத்தான் என்னால நம்ப முடியேல்ல. ஆனா அதுக்கு நியாயமான காரணம் அவளிட்ட இருக்கிறது.

என்றாலும் கொலை செய்வதால் இழந்ததை திரும்பிப் பெற முடியுமா என்ன?"

"நிச்சயமா பெறமுடியாது. இதுவும் ஒரு வகையில மனித கடத்தல்தான். இதை மாத்திரம் நோர்வே பார்த்தும், பாராமலும் விட்டிருக்கிறது. இதற்கு எதிராக அரசு ஏதாவது செய்யவேண்டும்."

"ம்.... அரசு என்ன செய்தாலும் அப்சராவின் விடயத்தில் அது பிந்திப் போய்விட்ட பரிகாரம். அவள் அநுபவித்த வேதனைகள் அவளைக் கொலை செய்யத் தூண்டும் அளவிற்கு துரத்தும் என்பது உண்மைதான். என்னால்தான் அதைக் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. என்ன தான் அநியாயத்திற்காகக் கொலை செய்தாலும் குற்றம் குற்றம்தானே? ஏற்கனவே அநுபவித்த தண்டனையோடு இதைவேறு அவள் அநுபவிக்கப் போகிறாள்.

"விதி பாலன். வேற என்ன சொல்ல முடியும்?"

பாலன் மௌனமாக இருந்தான். மனசு வலித்தது. சக மனிதனின் அவலம் அவன் நெஞ்சைப் பிழிந்தது.

"பாலன் எழும்பு. போய் வேலையைப் பார். நாங்கள் என்ன செய்ய முடியும்? அது விதி பாலன். நானோ நீயோ மாற்ற முடியாது."

சேர்பியாக்காரி பாலனை ஏவினாள். பாலன் எழுந்து சென்றான். அந்த அபலைப் பெண்ணின் நினைவு அவனை இடைவிடாது துரத்தியது.

26

அன்று பாலன் வேலைக்கு முழுக்குப் போட்டிருந்தான். வீட்டில் அதிர்ச்சியில் மூழ்கித் தத்தளிக்கும் வெளிறிய முகங்களின் விகாரமான பார்வை. வசனங்கள் தொலைந்து போன இடைவெளியில் அழுகுரல்களின் சஞ்சாரம். பேச

ஆயிரம் விடயங்கள் இருந்தாலும் பேசமுடியாது துடிக்கும் இதழ்கள். பேசத்திறந்தால் அழுகையாக வெடித்துவிடும் இயலாமை.

இந்தப் பிரச்சினை மூக்கில் இருக்கும் சளிபோல இப்படித் தொடரும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. மனித எதிர்பார்ப்புகளை மீறித்தான் வாழ்வின் ஓட்டம் இருக்கிறது. அந்த விதி இந்த விடயத்திலும் தன்னைத் தீவிரமாக நிரூபித்துச் சென்றிருந்தது. தீராத பிரச்சினையாக... நிம்மதி தொலைந்த வாழ்வாக... நான்கு ஜீவன்கள் அலைய வேண்டியதாக உள்ளது. சித்தப்பா, சித்தி, வீமன், சாமிகா ஆகியவர்கள் நிம்மதி தேடி உலகத்தின் எந்த மூலைக்கும் ஓடத் தயாராக இருந்தார்கள். என்றாலும் பிரச்சினை அவர்களை ஓயாது விட்டுக் கலைக்கிறது. பாலனுக்கு அவர்களைப் பார்க்கப் பார்க்க வேதனை எரிகுழம்பாகப் பொங்கியது. அது காயப்பட்ட நெஞ்சை கொடூரமாக அரித்தது. அவன் இனம் புரியாத கோபத்திலும் பரிதாபத்திலும் அல்லாடினான்.

நாடியில் கை கொடுத்தவண்ணம் சித்தப்பாவும் சித்தியும் உலகை வெறுத்த உணர்வோடு சிலையாக இருந்தார்கள். வீமன் கடுமையான யோசனையில் ஒழுங்கில்லாது சோபாவில் கிடந்தான். சாமீகா சுபனியின் அறைக்குள் இருந்தாள். அவள் அழுது அழுது வதனம், மூக்கு என்பன தக்காளிப் பழமாய்ச் சிவந்து போயிற்று. கோபம் – கவலை என்பன அவளது வதனத்தைத் தக்காளி நிறத்திற்கு மாற்றிவிடுகிறது. அவள் கண்ணீரையும் சளியையும் துடைப்பதற்குப் கடுதாசியைக் கற்றையாகக் கையில் வைத்திருந்தாள்.

காதலிப்பது தனக்கு இவ்வளவு பிரச்சினையைக் கொண்டு வரும் என வீமன் எண்ணியிருக்கமாட்டான். இப் பொழுது கதாயுதம் இழந்த வீமனின் தவிப்பைவிட மேலான தவிப்பில் நெளிகிறான். அமைதி இன்றி அலைகிறான். ஒற்றை வழிப் பாதைக்குள் புக முதல் சிந்திக்க வேண்டியதை இனிச் சிந்தித்து எந்தப் பிரயோசனமும் இல்லை என்பது அவனுக்குப் புரிகிறது. வாழ்வதென்றால் அது சாமீகா

வோடுதான் என்பதில் அவன் அசையாத உறுதி பூண்டுள்ளான். எங்கு போனாலும் தங்களைத் துரத்தித்திரியும் சனி பகவான் போன்ற சாமீகாவின் அப்பாமீது அவனுக்கு அளவில்லாத வெறுப்பு. அந்த வன்முறையில் இருந்து தப்பித்துக் கொள்ள வழி புரியாது தொடரும் திகைப்பு.

முதல் நடந்த பிரச்சினையில் டென்மார்க் கார் ஒன்றின் எண்கள் நோர்வே எல்லையைக் கண்காணிக்கும் கமராவில் சிக்கியது. அதன்மூலம் நோர்வேப் பொலிஸார் டென்மார்க்கில் இருக்கும் சில பாகிஸ்தானியரை மோப்பம் பிடித்துக் கொண்டனர். அந்தப் பாகிஸ்தானியர் உடனேயே சாமீகாவின் அப்பாவுக்கு தகவல் கொடுக்க அவர் பாகிஸ்தான் பயணமாகிவிட்டார். தப்பியோடிவிட்டார் என்பது வீமனின் வாதம். முக்கியமான குற்றவாளி இல்லாத காரணத்தால் அந்த விசாரணை உறக்கத்திற்குப் போயிருந்தது.

அவர் நோர்வேக்கு திரும்பி வராது சிறிது காலம் பாகிஸ்தானில் தங்கி விட்டார். அலுத்துப் போன நோர்வேப் பொலீஸ் அந்த வழக்கைக் கிடப்பில் போட்டு விட்டார்கள். வழக்கைக் கிடப்பில் போட்டுவிட்டார்கள் என்பது தெரிந்ததும் மீண்டும் சாமீகாவின் அப்பா நோர்வே வந்துவிட்டார். இங்கு வந்ததும் மசூதிக்குச் சென்று பழைய நண்பர்களைச் சந்தித்துக் கொண்டார். அவர்களிடம் அபிப்பிராயம் கேட்டு இருப்பார். நோர்வேயில் வாழும் வெளிநாட்டினர் தாங்கள் வந்த காலத்தில் தாய்நாடு இருந்த நிலையிலே உறைந்து போனவர்கள். அதையே இன்றைய நடப்பாக ஆழமாய் நம்புகின்றார்கள். தாய் நாடுகள் இவர்கள் வந்த காலத்திலேயே உறைந்து கிடக்கவில்லை. அங்கு புயலாக மாற்றங்கள் புரட்யடித்துச் செல்கிறது. சாமீகாவின் அப்பா இங்குள்ள நண்பர்களிடம் புத்திமதி கேட்டதால் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறியது.

சாமீகாவுக்கு தனது அப்பாவினால் உண்டாகும் தொல்லையை எண்ணி பெரும் கவலை. அந்த வேதனை தாங்கமுடியாது அவள் நித்திரைக் குளிசைகளைப் ஒருமுறை

போட்டுத் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டாள். அவளை ரூசோன் ஆஸ்பத்திரியில் உயிர்ப்பித்து விட்டார்கள். தலையைப் தொங்கப்போட்ட வண்ணம் வீமனிடம் மன்னிப்பு கேட்டு நின்றாள். காதல் மன்னிப்பும் கொடுக்கும், மரணமும் கொடுக்கும். வீமன் மன்னிப்புக் கொடுத்தான். அதற்குப் பின்பு தான் எக்காரணத்திற்காகவும் தற்கொலை செய்ய முயலுவதில்லை என்று சத்தியம் பண்ணிக் கொண்டாள் சாமீகா.

மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய வேதாளம் எவரையோ தொடர்பு கொண்டிருக்கிறது. அவர்கள் தங்கள் இனத்தின் கௌரவத்திற்காகப் போருக்குப் புறப்பட்டு விட்டார்கள்.

பழைய பிரச்சினைக்குப் பின்பு கடைசியாகச் சித்தப்பா ஒஸ்லோவில் இருந்த வீட்டை விற்றுவிட்டு "ரூசோன்" என்னும் இடத்தில் வீடு வாங்கிக்கொண்டார். அங்கு சாமீகாவும் வீமனும் தொடர்ந்து படித்தார்கள். சாமீகாவின் அப்பாவும் பாகிஸ்தான் போய்விட அவர்கள் வாழ்க்கை அமைதியாகக் கழிந்தது. சாமீகாவின் அப்பா பாகிஸ்தானில் இருந்து வந்ததும் சாமீகாவுக்கு கெட்டகாலம் தொடங்கியது. அவளுக்கு அப்பாவின் குணம் தெரியும். அவர் தன்னைப் பழி வாங்காது ஓயமாட்டார் என்கின்ற உண்மை அவளை நிம்மதி இல்லாது துரத்தியது. தன்னால் அநியாயமாக வீமனும் அவனது குடும்பமும் மாட்டிக் கொண்ட குற்ற உணர்வு மேலும் அவளைச் சித்திரவதை செய்தது. அந்தக் கவலை அவள் மனதை அரித்தது.

அன்று இரவு "ரூசோன்" வீட்டில் எல்லோரும் நித்திரைக்குப் போய்விட்டார்கள். அதன் பின்பு யாரோ பேஸ்மன்ற் கதவை உடைக்கும் சத்தம் கேட்டது. வீமன் உடனடியாகப் பொலீஸுக்குப் போன் செய்தான். பின்பு நல்லதொரு யோசனைவர பக்கத்தில் உள்ள நோர்வே நண்பர்களுக்கும் போன் செய்து அழைத்தான். அவர்கள் சில நிமிடத்தில் கார்களில் வர உடைத்தவர்கள் தங்கள் காரில் தப்பி ஓடிவிட்டார்கள்.

பின்பு எல்லோருமாகச் சென்று பேஸ்மன்ற் கதவைப் பார்த்தார்கள். வந்தவர்கள் அதை உடைத்து உள்ளேவர முயன்றமை அப்பட்டமாய் அடையாளங்களாய்ப் பதிவாகி இருந்தது. அது கண்ணாடி அற்ற கதவு. அதனால் அவர்களால் இலகுவாக உடைக்க முடியவில்லை. கண்ணாடி உள்ள கதவு என்றால் உடைத்து உள்ளே வந்திருப்பார்கள். அப்படி வந்திருந்தால் என்ன முடிவு ஏற்பட்டிருக்கும் என்பது வீமனை நடுக்கம் கொள்ளவைத்தது. சித்தப்பாவும் சித்தியும் கதிகலங்கிப் போனார்கள். உடனடியாக அங்கிருந்து புறப்படுவதாக முடிவு செய்தார்கள்.

பொலீஸார் அதன் பின்பு பிரசன்னம் ஆயினர். புதிதாக ஒரு விசாரணையைத் துவங்கினர். சித்தப்பாவிற்கு இந்த நரகவேதனை போதும் என்றாகிவிட்டது. பொலீஸ் விசாரணை யின் பொழுதும் தங்கள் வீட்டைச் சிலர் கண்காணிப்பதை சாமீகா கண்டாள். அதுவும் அப்பாவுக்கு தெரிந்த சிலராக இருக்க வேண்டும் என்பது அவளுடைய ஊகம்.

அந்த தகவலுக்குப் பின்பு சித்தப்பாவால் அந்த வீட்டில் நிம்மதியாக இருக்க முடியவில்லை. சித்தப்பாவுக்கு வீமனையும், சாமீகாவையும் நோர்வேயில் வைத்திருப்பது பாதுகாப்பாய்ப் படவில்லை. அவர்களைக் கனடாவிற்கு அனுப்பி அங்கு கல்லூரிக்குப் பணம் கட்டிப் படிப்பிப்பதற்குத் திட்டம் போட்டார். அவரிடம் அதற்குப் பணம் இருக்கிறது. அவர் தனது பிள்ளையின், மருமகளின் பாதுகாப்பிற்காக அந்தப் பணத்தைச் செலவழிக்கச் சித்தங் கொண்டார்.

பாலனுக்கு அவர் திட்டம் சரியாகவே தோன்றியது. அவர்கள் கனடாவில் கல்லூரியில் படித்தால் அங்கேயே வேலைவாய்ப்பும் பெற்றுக் கொள்வார்கள். நோர்வேயைப் போலச் செறிவாக பாகிஸ்தான் நாட்டுக்காரர்கள் அங்கு இல்லாதது அவர்களுக்கு மிகவும் பாதுகாப்பாயும் இருக்கும். இன்னும் சில வருடங்கள் சென்றுவிட்டால் இப்படி மூர்க்கமாகத் தேடுவதை சாமீகாவின் அப்பாவும் கைவிட்டு விடுவார் எனவும் எண்ணிக் கொண்டான்.

நேற்றுப் பிற்பகல் விமானத்தில் சித்தப்பா குடும்பம் ஒஸ்லோவிற்கு வந்து சேர்ந்தார்கள். பாலன் விமான நிலையத் திற்குச் சென்று அழைத்து வந்தான். வீட்டிற்கு வரும் வரைக்கும் பாலன் தனது காரை யாரும் பின்தொடர்கிறார் களோ என்று அடிக்கடி பார்த்துக் கொண்டான். பயந்தது போல் எதுவும் நடக்கவில்லை. அவன் வீட்டிற்கு வந்து சேரும் வரைக்கும் யாரும் அவனைப் பின்தொடரவில்லை. வீட்டிற்கு வந்த பின்பு சித்தப்பா குடும்பத்திற்கு மட்டும் ஊரடங்குச் சட்டம் அமுலாகியது.

சாமீகாவைப் பார்க்கப் பாலனுக்கும் கவலை நிரம்பியது. அவள் அடிக்கடி எதையோ நினைத்து நினைத்து அழுதாள். அவளுக்கு இது எல்லாம் தன்னால் வந்தவினை என்கிற குற்ற உணர்வு. பாலன் அவளைச் சிறிது சமாதானப்படுத்தினான். அவள் அதன்பின்பு சற்று ஆறுதலாய் இருந்தாள். பின்பு மீண்டும் அழத்தெடங்கிவிட்டாள்.

சாமீகா காலை எழுந்ததில் இருந்து சுபனியின் அறைக் குள் அடைந்து கிடக்கிறாள். இடையறாது அழுது வடிக்கிறாள். அவளைப் புறப்பட வைப்பது சுமியின் பொறுப்பாகும்.

பாலன் தனது காரைத் தயார் செய்து வைத்திருந்தான். இன்று ஒன்பது மணிபோல அவர்களை அர்லாண்டா விமான நிலையத்திற்கு கூட்டிச் சென்று ரொரன்ரோவுக்கு அனுப்பிவிட்டு வருவது அவனுடைய பொறுப்பு. வீமன் இந்த நாட்டை விட்டுப் புறப்பட்டுச் சென்றால் சித்தப்பாவுக்கு நிம்மதி வந்துவிடும். பாலனுக்குத் தான் நாட்டை விட்டு வெளியேறிய பொழுது அம்மாவிற்கு ஏற்பட்ட நிம்மதியான உணர்வு ஞாபகத்திற்கு மீண்டும் வந்து போயிற்று. அது அரச பயங்கரவாதம், இயக்கப் பயங்கரவாதம் ஆகியவற்றில் இருந்து பெற்ற விடுதலை. பச்சையாகச் சொன்னால் தப்பியோட்டம். இது தனிமனித பயங்கரவாதம். மதம், இனம், சாதி, நிறம் என்கின்ற விறகில் எரியும் வெறுப்பு என்னும் நெருப்பில் விளைந்த தனிமனித பயங்கரவாதம். இதில் இருந்து தப்பியோடுதல,, கதாயுதம் இல்லாத வீமனின் தலைவிதி. பிரச்சினைகளில் இருந்து

தப்பியோடுவதே எங்கள் வழியாக அமைந்து விட்டது. உயிரா? போராட்டமா என்கின்றபொழுது சாதரண மனிதனின் தெரிவு எதுவாக இருக்கும்? அதுதான் எங்கள் தெரிவும். இலக்கணமும் இலட்சியமும் சிலவேளை ஏட்டுச்சுரக்காயாகத்தான் இருக்க முடியும். இவ்வாறு பாலன் எண்ணிக் கொண்டான்.

சுமி ஒருவாறு சாமீகாவைக் குளியல் அறைக்கு அனுப்பி இருந்தாள். அதற்கு முன்பே வீமன் முழுகிவிட்டான். பின்பு சோபாவில் இருந்து தேநீர் அருந்தினான். சித்தப்பாவும் சித்தியும் விமான நிலையத்திற்கு வருவதில்லை என முடிவு செய்துவிட்டார்கள். யாராவது சாமீகாவின் உறவினர்கள் அடையாளம் கண்டு விடுவார்களோ என்கின்ற பயம் அவர்களை வாட்டுகிறது. பாலனுக்கும் அது சரியாகவே தோன்றியது.

ஒஸ்லோ நகரத்தைவிட்டு விலகும் வரைக்கும் ஆபத்துக்கள் அதிகமாக இருக்கும் என்கின்ற உண்மை பாலனுக்கு சிறிது நடுக்கத்தைத் தந்தது. ஒஸ்லோவை விட்டு வெளியேறிவிட்டால் அவர்களைக் காண்பதற்குச் சந்தர்ப்பம் குறைவு. அப்படிக் கண்டாலும் பின்தொடர்வதற்கான சந்தர்ப்பம் மிகவும் குறைவாகவே இருக்கும் என்பதில் அவனுக்கு ஒருவகைத் திருப்தி.

பயணம் போகின்றவர்கள் கட்டயமாகக் காலைச்சாப்பாடு சாப்பிட வேண்டுமெனச் சுமிதா அடம்பிடித்தாள். அவளின் வற்புறுத்தலில் அன்று பாலனும் காலையிற் சாப்பிட்டான். சாமீகா வெறுப்போடு சுமியின் கட்டாயத்திற்காக ஒருவாறு விழுங்கித் தள்ளினாள். சுமிதா பயணம் செய்யும்போது சாப்பிடுவதற்கு சாமீகாவுக்குப் பிடித்த மிளகாய், வெங்காயம் போட்டுச் செய்யப்பட்ட கோதுமைமா ரொட்டியும், சம்பலும் பார்சலாகக் கட்டித்தந்தாள். பாலனுக்கும் அது மிகவும் பிடிக்கும். இப்பொழுது சுமிதா அதற்கு லின்புரோ எனப்படும் ஒரு வகைத் தானியத்தையும் முழுசாகப் போட்டிருப்பாள். அது சமிபாட்டிற்கு உதவுவதோடு ஒருவித சுவையையும் சேர்த்துவிடும். இந்தப் பாகமுறையால் பாலனுக்கு அந்தக் கோதுமைமா ரொட்டியில் ஒரு காதலும் உண்டு.

ஒன்பது மணிக்குப் பாலன் வெளியே வந்தபோதிலும் சித்தப்பாவிடமிருந்தும் சித்தியிடமும் இருந்து வீமனும் சாமீகாவும் விடை பெறுவதற்கு நீண்ட நேரமாகிற்று. அவர்கள் ஒப்பாரிகள் தணியாத கடுப்பில் "இண்டைக்கு பிளைற்றில அவையள அனுப்புற ஐடியா உங்களுக்கு இல்லையே?" என்று பாலன் கடுப்புடன் கேட்டான். அதன் பின்புதான் அவர்கள் தங்கள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்கள்.

வீமன் பிரிய மனது இல்லாது பிரிந்து, சோகம் தாளாத வனாய் முன்னிருக்கையில் அமர்ந்து கொண்டான். சாமீகா தொடர்ந்தும் அழுதவண்ணம் பின்னாசனத்தில் அமர்ந்தாள். வெளியே வாயைப் பொத்தியவண்ணம் சித்தப்பாவும், சித்தியும் நின்றார்கள்.

பாலன் அதற்கு மேலும் தாமதிப்பது உசிதம் இல்லை என்பதை உணர்ந்தவனாக காரை நகர்த்தத் தொடங்கினான். கார் முன்னகர்ந்து செல்ல சித்தப்பாவும், சித்தியும் நடுத் தெருவில் குந்தியிருந்து அழுவதை அவன் கண்ணாடியில் பார்க்க முடிந்தது. வீமனும், சாமீகாவும் திரும்பிப் பார்த்துக் கதறினார்கள்.

பாலன் மனதைக் கல்லாக்கினான். காருக்கு வேகமேற்றி னான். சிறிது நேரம் அழுதுகொண்டு இருந்த வீமனும் சாமீகாவும் ஒருவாறு ஓய்ந்தனர். அது பாலனுக்கு நிம்மதியைத் தந்தாலும் அடிக்கடி கண்ணாடியை உற்று உற்றுப் பார்த்தான். யாரும் பின் தொடர்கிறார்களா என்கின்ற சந்தேகம் அவனை விரட்டி யடித்தது. கார் நெடுஞ்சாலையில் இறங்கி வேகமெடுத்தது. "றியன்" தாண்டியதும் திடீரென ஒரு சம்பல் நிறப் பென்ஸ்காரில் பாகிஸ்தானியார்கள் சிலர் பின் தொடர்வதைப் பாலன் கண்டான்.

பாலன் அதைப் பார்த்த பின்பும் பதட்டத்தை மற்றவர் களுக்கு காட்டாது காரைச் செலுத்த பெரும் பாடு பட்டான். வீமனிடம் தான் பிடிபடக்கூடாது என்பது அவன் கவலையாகியது. பாலன் அந்த பென்ஸ் காரின் பின்தொடரலில் இருந்து விடுபடவேண்டும் என்பதற்காய் வாகனத்தை வேகமாக

ஓட்டினான். அவர்களும் இடைவிடாது வேகமாகப் பாலனின் காரைத் தொடர்ந்தார்கள். பாலனுக்கு வரவர நடுக்கம் கூடியது.

“ஒஸ்” என்னும் இடம் வரையும் அவர்கள் பின் தொடர்ந்து வந்தார்கள். பின்பு திடீரெனப் பிரிந்து செல்லும் பாதையொன்றிற்குள் காரை இறக்கி விட்டார்கள். அப்பொழுது தான் தேவையில்லாது சந்தேகப்பட்டதாகப் பாலன் புரிந்து கொண்டான். அதன் பின்பு பாலன் நிதானமாக வாகனத்தைச் செலுத்திச் சென்றான்.

ஆர்லாண்டா விமான நிலையத் தெர்மினல் ஐந்தில் நிறுத்தும் பொழுதுதான் பின்னால் அதே பென்ஸ் அவசரமாக வந்து நிற்பதை பாலன் அவதானித்தான். அவனுக்கு மயக்கமே வந்து விட்டது. ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டான். சமயோசிதமாக நடந்துகொள்ள அவன் மூளை சுறுசுறுப்பாகியது.

இரண்டு கார்களுக்கும் இடையில் ஒரு பேருந்து நந்தியாக வந்து நின்றது அவனுக்கு வாய்த்து விட்டது. பாலன் அவசரமாக இருவரையும் முன்னே போகுமாறு சைகை செய்தான். அவர்கள் புரிந்து கொண்டு அவசரமாக விமான நிலையத்திற்குள் ஓடினார்கள். பாலன் பெட்டிகளை இழுத்துக் கொண்டு அவர்களுக்குப் பின்னே ஓடினான். அப்பொழுது அந்தக் காரில் வந்த இரண்டு பாகிஸ்தானிய ஆண்கள் இவர் களை நோக்கி ஓடிவந்தார்கள். பாலன் தான் இழுத்துவந்த பெட்டிகளை வீமனை நோக்கித் தள்ளிவிட்டான். வீமன் அவற்றைப் பிடித்துக் கொண்டு சனங்களுக்குள் மறைந்து மேற்கொண்டு ஓடினான்.

பாலன் பாய்ந்து பெட்டிகள் வைத்து தள்ளும் வண்டிலைக் கொண்டு வாயிலை மறித்து தள்ளினான். அது பலருக்கு இடையூறு உண்டு பண்ண, அங்கு சன நெரிசல் உண்டாகியது.

இந்தப் பரபரப்பைக் கண்ட விமானநிலையக் காவலர்கள் அங்கு ஓடிவந்தார்கள். அவர்கள் முதலில் பாலனைப் பிடித்துக்

கொண்டார்கள். பின்பு பாலன் பாகிஸ்தானியர்களை நோக்கி கைகாட்ட அவர்களைப் பிடிக்கச் சில பாதுகாப்பு அதிகாரிகள் ஓடினார்கள். இதைப் பார்த்த பாகிஸ்தானியர்கள் வேகமாகக் காரைப் பார்த்து ஓடினார்கள். பாலன் நிம்மதியாக மூச்சுவிட்டான். ஒரு ஆபத்தில் இருந்து தப்பித்துக் கொண்ட உணர்வு அவனுக்குச் சுகம் தந்தது.

27

அரணால் அன்றிரவு தூங்க முடியவில்லை. அவனோடு ஒரு குரல் பேச முயன்றது. தேவதையையே ஏமாற்றிய தன்னிடம் அந்தக் குரல் பேசுவது அரணுக்கு மகிழ்வைத் தந்தது. வாழ்வில் முன்னெப்பொழுதும் காணாத ஆறுதலோடு போதையும் மயக்கமும் ஞானமும் தந்தது. அறியாத புதிர்களை அவிழ்த்துக் காட்டியது. மனதின் அசரீரியாக, மயங்கிய அவனுக்கு வழிகாட்டியது. அது தன்னுடன் கடைசிவரையும் இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்டான். அதைத் தக்க வைத்துக்கொள்ள அந்தக் குரலோடு அவன் இரகசியம் பேசத் தொடங்கினான். யாருக்கும் கேட்டுவிடக்கூடாது; மற்றைய மனிதனின் மனதைப் புரிந்து கொள்ளாத மனித மிருகங்களுக்கு கேட்டுவிடக்கூடாது என்பதும் அவன் அக்கறையாக இருந்தது.

“என்னைத் தேவதையே ஏமாற்றி இருக்கிறாள். உன்னை நான் எப்படி நம்புவது குரலே?” என்றான்.

“உனக்கு என்னைவிட வேறு யாராவது நண்பர்கள் இருக்கிறார்களா?”

“இல்லையே. என்னைச் சுற்றி எதிரிகள் மட்டுந்தானே இருக்கிறார்கள்? என் மனதைப் புரிந்து கொள்ளமுடியாத எதிரி கள் மட்டும் இருக்கிறார்கள். அவர்கள் என்னை நித்தமும் சித்திரவதை செய்கிறார்கள். நான் அவர்களிடமிருந்து

விடுதலை பெறவேண்டும். இந்த உலகே ஒரு சித்திரவதைக் கூடம். அதில் வாழ்வது எனக்கு பிடிக்கவில்லை.''

"அதெல்லாம் இருக்கட்டும். இருக்கும் ஒரு நண்பனையும் நீ நம்பாவிட்டால் உன்னால் யாரை நம்பமுடியும்? என்ன செய்ய முடியும்?''

"சரி... உன்னைக் கேள்வி கேட்காமலே நம்ப வேண்டும் என்கிறாயா?

"உனக்கு வேறு தேர்வுகள் உண்டா?''

"இல்லை.''

"அப்பொழுது நீ என்னை நம்பித்தான் ஆகவேண்டும்.''

"சரி நான் உன்னை நம்புகிறேன். கேள்விகளைத் தூக்கி கிடப்பில் போடுகிறேன்.''

"உன் சொற்கள் உதடுகளில் இருந்து மட்டும் வரக் கூடாது. அடிமனதின் சம்மதத்தோடு வரவேண்டும். என் ஏவலுக்கு எதிர்க்கேள்வி கேட்கக்கூடாது.''

"என்னை நீ நம்பு. என் சொற்கள் அடி மனசைத் தழுவியே வருகிறது. எனது வாக்கைச் சத்திய வாக்காய் எடுத்துக் கொள்ளலாம். உன் ஏவலை நான் எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்கிறேன்.''

"சரி. உன்னை நான் இப்பொழுது நம்புகிறேன். உனது வாக்குகளை சத்திய வாக்காய் எடுத்துக் கொள்கிறேன். என் நட்பு வேண்டும் என்றால் நான் சொல்கின்றபடி நீ நடக்க வேண்டும்.''

"எனக்கு இப்பபொழுது நீதான் நண்பன், இறைவன், குரு. நீ எது சொன்னாலும் அது எனக்கு தேவவாக்கு. நீ எதைச் சொல்கிறாயோ அதை நான் நிறைவேற்றுவேன். எனக்கு வேண்டியது நிம்மதி. விடுதலை.''

"சரி உனக்கு நான் நிம்மதி தருகிறேன். முதலில் என்னுடன் பேசு. எனது கேள்விகளுக்குப் பதில் சொல்லு?''

“எது வேண்டும் என்றாலும் கேள். நான் உனக்குப் பதில் சொல்கிறேன்.”

“உனக்கு ஏன் நண்பாகள் இல்லை? மனிதர்கள் மத்தியில் வாழ்ந்தும் மனிதனான உனக்கு எதற்காக நட்புகள் வாய்க்காது போயிற்று?”

“மனிதர்கள் பொய்யர்கள். பொய்யானவற்றை நம்பிப் பெருமைப்படுகின்றவர்கள். விருப்பம் இல்லதவற்றையும் விளம்பரத்திற்காய்ச் செய்யக் கூடியவர்கள். அவர்கள் நட்பு என்பது வெறும் வேஷம் மட்டுமே. நான் அதை வெறுக்கிறேன்.”

“சரி, மற்றை மனிதர்களை விடுவோம். உன்னுடைய சொந்தத் தாய் தந்தையரை ஏன் நீ வெறுக்கிறாய்?”

“அவர்களும் மனிதர்கள்தான். அதுவும் விளம்பரத்திற் காய் விருப்பம் இல்லாதவற்றைச் செய்யச் சொல்லி நிர்ப் பந்திக்கும் மனிதர்கள். என் வெறுப்பின் விளைநிலங்களே அவர்கள்தான்.”

“புரிகிறது. நீ என்ன செய்யப் போகிறாய்?”

“அதுதான் எனக்குப் புரியவில்லை. அதைத்தான் நீ எனக்குச் சொல்ல வேண்டும்.”

“முதலில் உன்னைத் திருத்தப்பார். மனிதரில் நல்ல மனிதர்களைக் கண்டு கொள். அவர்களின் நட்பை நாடிச் செல். சாதகமானவற்றை மட்டும் உன் எண்ணங்களின் சத்தாக எடுத்துக்கொள். மற்றையவற்றைக் காணாதவன் போல் புறக்கணி.”

“நிறுத்து குரலே. நிறுத்து. நீயும் எல்லோரையும் போல எனக்கு உபதேசிக்காதே. நான் இந்த மனிதர்களுடனே வாழ்ந்து பார்த்துவிட்டேன். என்னால் இதற்குமேல் இம்மியள வும் மாறமுடியாது. என்னைச் சுற்றி எங்கும் சுவர்கள் கட்டப்பட்டிருக்கின்றன. நான் சிறையில் வாழ்வதைவிட சிதையில் எரிவதையே விரும்புகிறேன். நான் விடுதலையை யாசித்து, உலகை வெறுத்துப் போயுள்ளேன்.”

“பொறுமையாக யோசி. உயிரும் உலக வாழ்க்கையும் ஒருதரமே தரப்படும் வரம். தூக்கி எறிந்தபின்பு மீண்டும் எடுத்துக் கொள்ளமுடியாத ஆண்டவனின் கொடை. வாழ்வின் அருமை, வாழ்ந்தவனுக்கு கடைசிக் காலங்களிலேதான் புரிகிறது. நீ வாழ முதலே வாழ்வை வெறுத்ததாக வாதம் பண்ணுகிறாய்.”

“நான் வாழ்ந்து விட்டேன். எனது வாழ்நாள் என் பொறு மையை மீறி நீண்டு செல்கிறது. என்வாழ்வு சுவைக்கவில்லை. அதைச் சபித்தவண்ணம் சஞ்சரிக்கிறேன். நான் ஏற்கனவே கூறியது போல் சிதையில் எரிந்தாலும் சிறையில் வாழ விரும்பாதவன். என் வாழ்வு ஒரு சிறை.”

“ஞானிகள், முனிவர்கள் என வாழ்வை வெறுத்தவர்களே அதே வாழ்வை எண்ணி ஏங்கிய காலமும் உண்டு. நீ சத்தான வாழ்க்கையை அநுபவிக்காதவன். அவசரப்படுகிறாய் ஆவியாக அலையப்போகிறாய்.”

“நிறுத்து. உன்னை நம்பியே உன்னுடன் பேசத் துவங்கினேன். அதைத் தகர்த்துவிடாதே. மீண்டும் சொல்கிறேன். எனக்கு நீ ஞானம் போதிக்காதே. என் முடிவு என்றும் அசைக்க முடியாத இமயம் போன்றது.”

“இமயமும் பூமியில் தான் இருக்கிறது. பூமி அதிர்ந்தால் அதுவும் சேர்ந்து அதிரத்தான் செய்யும்.”

“என் நேரத்தை விரயமாக்காதே குரலே. உன்னால் என் துன்பவாழ்விற்கு விடுதலை தரமுடியுமா? இல்லையா?”

“நீ இந்தப் பூலோக வாழ்வைத் துன்பவாழ்வு என்று முடிவு செய்துவிட்டால் என்னால் உனக்கு முடிவு தர முடியும். பின்பு அதை மாற்றிக் கொள்ள முடியாது. அதற்கு நீ தயாரா?”

“எத்தனை தரம் அதையே சொல்லிவிட்டாய்? நான் தயாராக உள்ளேன். என்ன செய்யவேண்டும் என்பதை மட்டும் சொல். நான் அதை நடைமுறைப்படுத்துகிறேன்.”

“சரி உனக்கு இரண்டு வழிகள் உண்டு. நீ அதில் ஏதாவது ஒன்றை தெரிவு செய்து கொள்.”

“விரைவாக அந்த வழிகளைச் சொல்.”

“முதலாவதாக நீ நிரந்தரமாக ஓர் இடத்தில் தங்காது, ஊரூராக அலைந்து திரிந்து அவலப்படும் மனிதரைச் சந்தித்து, அவர்களிடம் இருந்து வாழ்வைக் கற்றுக் கொள்ளுதல். அவர்களில் மனிதர்கள் உள்ளார்களா என்று தேடு. கண்டு பிடித்தால் அவர்களோடு சேர்ந்து வாழப் பழகிக்கொள். இது எனது பரிந்துரை. எனக்கு உன்மேல் இன்னும் இரக்கம் உண்டு. இதை மறுப்பாயானால் இரண்டாவதாக சோம்பேறிகளின் முடிவு ஒன்று உண்டு. இன்று பிற்பகல் நீ தற்கொலை செய்து கொள். எப்படிச் செய்து கொள்ளப்போகிறாய் என்பது உன் தெரிவு. ஞாபகம் வைத்துக்கொள். ஆவியாகி அலைந்து திரிந்தாலும் இழந்த வாழ்வை மீண்டும் அடையமுடியாது. மீண்டும் எனது அபிப்பிராயத்தைக் கூறுகிறேன். முதலாவது தெரிவு உனக்கு மேன்மையானது. உன் பெற்றோரைப் போன்று எதையும் நான் திணிக்கப் போவதில்லை.”

“எனக்கு இந்த உலகு வெறுத்துவிட்டது. வாழ வேண்டும் என்பதான ஆசை துளியளவும் என்னிடம் இல்லை. நான் உனது இரண்டாவது தெரிவை எனது முதலாவது தெரிவாக்கிக் கொள்ளுகிறேன்.”

“சரி. உன் முடிவு உன்கையில் இருக்கிறது. நீ ஆசைப்படுவதை நிறைவேற்றிக் கொள். உயிரை விடுவது ஒன்றும் இலகு காரியம் இல்லை. என்ன செய்யப் போகிறாய்?”

“நீ என்னோடு இரு. இன்று மதியம் நான் என்ன செய்யப் போகிறேன் என்று பார். அப்பொழுது நீ என்னைப் பற்றிப் புரிந்து கொள்வாய். என் வாக்குப் பற்றிப் புரிந்து கொள்வாய். என் உலக வெறுப்பு பற்றிப் புரிந்து கொள்வாய்.”

பாலனின் மனதில் அன்று ஏதோ இனம்புரியாத சோகம் அடைப்பெடுத்த ஊற்றாக மனதில் சுரந்தது. அன்று காலை வேலைக்கு எழும்புவதற்கே அவனுக்குப் பிடிக்கவில்லை. வேலைக்குப் போகாது உண்மைக்குப் புறம்பான சாட்டுச்

சொல்வதில் அவனுக்கு நம்பிக்கை கிடையாது. அப்படிச் செய்தால் மனிதர்களைச் சமாளித்தாலும் மனச்சாட்சியைச் சமாளிப்பது அவனுக்குப் பெரும்பாடாகப் போய்விடும். பிழைக்கத் தெரியாதவன் என்பது சிலரின் கருத்து. உழைப்பும், பிழைப்பும் உள்ளத்திற்கு ஆறுதல் தரவேண்டும் என்பது அவனது நம்பிக்கை.

அலுப்போடு எழுந்து சுரங்கரதத்திற்காகப் பாலன் குளிரை ஊடறுத்து ஓடினான். சுரங்கரதத்தின் கதவு மூடச் சிலகணங்கள் இருக்கும் பொழுது உள்ளே பாய்ந்தான். கதவு சட்டென்று மூடியது. சுரங்கரதம் சீறிக்கொண்டு முன்னே பாய்ந்தது. பாலன் இருப்பதற்கு இடம் கிடைக்குமா என்று பார்த்தான். இடம் ஒன்றும் காலியாக இருக்கவில்லை.

பாலன் அந்தப் பெட்டியின் சுவருடன் சாய்ந்த வண்ணம் ஒரு கதவுக்கு அருகே நின்றான். அவன் நிற்பதற்கு அருகே ஒரு அறிவித்தல் ஒட்டப்பட்டு இருந்தது. அதில் சைபர் காயம்... சைபர் உயிரிழப்பு... அதற்கு உங்கள் ஒத்தாசை எங்களுக்கு வேண்டும் என்கின்ற தகவல் எழுதப்பட்டிருந்தது. கார் அல்லது பேருந்துகள் போலச் சுரங்கரதம் திறந்த பாதையால் அதிகம் செல்லத் தேவையில்லை. சுரங்கத்திற்குள்ளால் அது பயணிக்கும் பொழுது அது தனிக்காட்டு இராஜா. நிச்சயம் மற்றைய சுரங்கரதங்களைக் கருத்தில் கொள்ளவேண்டும். விபத்துக்கள் வரையறுக்கப்பட்ட நிலத்தின் கீழே சுரங்கம் தோண்டி அமைக்கப்பட்ட பாதையே உலகம். சில இடங்களில் மாத்திரம் சுரங்கத்திற்கு வெளியேயும் ஓடும் வகையில் பாதை அமைந்திருக்கலாம்.

சுரங்கரதம் திடீரென நிறுத்த வேண்டி வரும்பொழுது சிலர் அவதானம் இல்லாது நிற்பதால் எப்போதாவது காயப் படுவது உண்டு. அதைவிட தடுப்புகளைத் தாண்டி சிவப்பு விளக்கு எரியும் பொழுது சென்று ஒருசிலர் ஆபத்தில் மாட்டிக் கொள்வார்கள். சிலர் தற்கொலைக்காகச் சுரங்கரதத்திற்கு முன்பு பாய்ந்து விடுவார்கள். இப்படியான ஆபத்துக்களில் இருந்து மக்களையும் பாதுகாத்து தங்கள்

நிறுவனத்தையும் பாதுகாக்கும் நோக்கோடு அந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

பாலனால் தன்னால் இதற்கு என்ன உதவி செய்ய முடியும் என்பது புரியவில்லை. பிளாட்பாரத்தில் போடப்பட்டிருக்கும் மஞ்சள் கோட்டில் இருந்து சிறிது தள்ளி நிற்க வேண்டும். அதுதான் தன்னால் செய்யக் கூடியது. அல்லது சுரங்கரதத்தில் நிற்க வேண்டி வந்தால் அவதானமாக எதையாவது பிடித்துக்கொண்டு நிற்க வேண்டும் என எண்ணிக் கொண்டான்.

நினைவுகளில் சிறைப்பட்ட பாலன் தனது தரிப்பு வந்துவிட்டதை உணர்ந்து அவசரமாக கதவின் முன்பு சென்று நின்றான். பின்பு கதவின் மத்தியில் இருந்த குமிழை அழுத்தினான். அது பச்சையாக மின்னியது.

வேலையின் பளுவில் நேரம் பஞ்சாகப் பறந்தது. வேலைக்கு வந்ததும் அன்று வீட்டிற்கு திரும்பிச்செல்வதான பிரமை பாலனுக்கு. அவன் முதியோர் இல்லத்தைவிட்டு வெளியே வந்தான்.

பனி கொட்டியபின்பு பாலைவனக்காற்றின் உறவால் உருகிப்போகும் வைரத்துளிகளின் வளைந்துபோன சதசதப்பு. பனி வைரங்கள் சகதியாகலாம். சகதியும் சுழற்சியில் பனி வைரங்கள் ஆகலாம். மனிதனும் பிறக்கிறான் இறக்கிறான். இறந்தபின்பு மறுபிறப்பு எடுக்கிறான். பனியென்னும் வைரம் நீராவியாகி, மீண்டும் வெண் வைரமாகி... இது விஞ்ஞான ரீதியாக நிருபிக்கப்பட்ட உண்மை. மனிதன் இறந்த பின்பு பிறக்கிறான் என்பதை யாரும் நிருபிக்கவில்லை. மனிதன் இறந்துவிட்டால் அவன் சரித்திரம் அத்தோடு மூடப்படுகிறது. சடங்குகளும் கிரியைகளும் அவன் பற்றிய நினைவை மெதுவாகச் சுருக்கி விடுகின்றன. அவன் எங்கே பிறக்கிறர்; யாராகப் பிறக்கிறான் என்று யாரும் தேடுவதில்லை. தேடு வதற்கு மனிதனுக்கு நேரம் இல்லை. வேகமாக நகரும் உலகத்தை வெல்ல அவன் இன்னும் வேகமாக ஓடவேண்டி

இருக்கிறது. கண்டுபிடிக்க முடியாததை ஏன் தேடவேண்டும் என்கின்ற உலக ஞானத்தில் அவன் மூழ்கிப் போகிறான்.

பாலன் சிந்தனையில் மூழ்கக் கால்கள் பிளாட்பாரத்தை நோக்கி முன்னேறின. நித்தமும் செய்து பழகிப்போனதிற்கு ஏற்ப கால்கள் நடக்கின்றன. மனம் ஞானம் தேடி, உண்மை தேடி நித்தம் எங்கோ அலைகின்றது. பாலன் பிளாட்பாரத்தில் நின்றான். தனது சுரங்கரதம் வருவதைக் கண்டுகொண்டான். நினைவுகளுக்கு நிறுத்தப்புள்ளி வைத்து விட்டு சுரங்கரதத்தில் ஏறிக்கொண்டான்.

சுரங்கரதம் பாராளுமன்ற நிலையத்தை வந்தடைந்ததும் நகரமறுத்து நின்றது. மத்திய சுரங்கநிலையத்தில் ஏற்பட்ட விபத்தால் தாமதமாகுமென ஒரு குரல் அறிவிக்கத் தொடங்கியது. பாலனின் ஞானமும் பொறுமையும் பசியின் சுவாலையில் உருகிப் போயின. பலர் பேருந்து பிடிப்பதற்காகச் சுரங்கரதத்தை விட்டு வெளியேறினர். பாலனுக்கும் அதுவே நல்ல யோசனையாகப்பட்டது. பாலன் இறங்கினான்.

சுரங்கரதத்தில் வீட்டிற்கு வருவதற்கு எடுக்கும் நேரத்தைவிட இரண்டு மடங்கு நேரத்தை பேருந்து தின்று ஏப்பம் விட்டது. பாலன் அலுப்போடு வீட்டிற்குச் சென்றான்.

சாப்பிட தொடங்கும் பொழுது வனொலியில் செய்தி ஒலிபரப்பானது. அதில் மத்திய சுரங்கரதநிலையத்தில் ஒரு விபத்து ஏற்பட்டதையும், அதால் பயணிகளும் ஓட்டுனரும் அதிர்ச்சி அடைந்ததையும் பற்றிச் சொல்லியது. பாலனை மீண்டும் அந்தக் கவலை அழுத்திற்று.

அவனுக்கு அப்பொழுதுதான் என்ன விபத்து மத்தியசுரங்கரத நிலையத்தில் நடந்தது என்பது புரிந்தது. உலகத்தில் நடக்கும் விபத்துகள் எல்லாவற்றுக்குமாக உண்ணாமல் இருக்க முடியுமா? பாலன் சாப்பிட்டான். சாப்பிட்டு முடிந்த பின்பு சோபாவில் வந்து அமர்ந்தான்.

பாலனுக்கு சாப்பிட்டபின்பு தேநீர் அருந்தினால்தான் சாப்பிட்ட திருப்தி உண்டாகும். சுமி தேநீர் தயாரித்தாள். பாலன் அதற்காகக் காத்திருந்தான். அப்பொழுதுதான்

அவன் கைத்தொலைபேசி 'உன் நிம்மதியைக் குலைப்பேன்' என்பதாகச் சிணுங்கியது. பாலன் கைத்தொலைபேசியை எடுத்து யார் தொடர்பு கொள்கிறார்கள் என்று பார்த்தான். அது குணேஸிடம் இருந்து வந்தது. பாலன் அவசரமாக அதைக் காதில் பொருத்திக்கொண்டான். குணேஸ் மறுகரையில் அழுதான். பாலன் அதிர்ந்து போனான்.

பாலனுக்கு விடயம் என்ன என்பது குணேஸ் கூறாமலே புரிந்தது. பாலன் கவலையில் இடிந்து போனான். அவனுக்குத் தானும் அழுதுவிடுவேன் என்பதான அந்தரம். 'பட்டகாலே படும் கெட்ட குடியே கெடும்' என்பது மாமாவின் குடும்ப விடயத்தில் சரியாக அமைந்தது. குணேஸின் மாமா மாமியை நினைக்கப் பாவமாக இருந்தது. தான் தானே அவர்களைக் காரில் அழைத்து வந்தேன் என்பது குற்ற உணர்வாய் அசுர வடிவம் பெற்று மனதைக் கிழித்தது. குணேஸ் அழுவதை நிறுத்தவில்லை. பாலன் அவனைச் சமாளிக்க நினைத்தான்.

"அழாதே குணேஸ். இனி என்ன செய்ய வேணும் எண்டு பார்ப்பம். நடந்தது நடந்ததுதானே? இனி யாரால அதை மாற்ற முடியும்? தயவு செய்து அழாதையும். அழுதுகொண்டு இருந்தால் ஒரு அலுவலும் செய்ய ஏலாது."

"தெரியும் பாலன். என்னால தாங்க முடியேல்ல. அவையக் கண்கொண்டு பாக்க முடியாமல் இருக்குது. எனக்கே விசர் பிடிச்சிடும் போல இருக்குது."

"சரி குணேஸ். அழாதையும் நான் உங்க வாறன். என்ன செய்ய வேணும் எண்டு வந்தபிறகு கதைப்பம்."

"சரி வாரும்."

அவன் அத்தோடு தொடர்பைத் துண்டித்தான்.

பக்கத்தில் நின்று பாலனின் சம்பாஷனையைக் கேட்ட சுமிதா வெளிக்கிடுவதற்காகப் படுக்கையறைக்குச் சென்றாள். மாமிக்கான தேநீரைத் தயாரித்தாள். யாரும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை.

28

"விட்டுக் கொடுப்பில்லாது வரும் தோல்விகளும், நிபந்தனையற்ற விட்டுக் கொடுப்பால் வரும் ஏமாற்றங்களும் தடைக்கற்களாக எதிர்கொண்டு நிற்கும் வாழ்வைப் புரிந்து கொள்ளப் பொறுமையில்லாதவர்கள் வாழ்வில் தோற்றுப் போய்விடுகிறார்கள்" என்பது பாலனின் நம்பிக்கை. தன்னால் ஒரு குடும்பத்திற்கு நன்மை வந்தாலும் இன்னொரு பெண்ணிண் நம்பிக்கைகளை இடை நடுவில் இடித்துக் கொட்டிய குற்ற உணர்வு அவன் அடிமனதில் நிரந்தரமாகச் சுருண்டே கிடக்கிறது. அது அவனோடு வழக்காடும் பொழுது அவன் நியாயங்களிடம் தோற்று நிம்மதி தேடி ஓடுவதாக உணரு கிறான். நல்ல தோழியின் நட்பு இருந்தாலும், உள்ளம் தனி யுலகாகவே இயங்குவதாகப் பாலன் உணருகிறான். சோகம் அடிமனதைச் சுரண்டாது இருப்பதற்கு அவனிடம் எந்த மருந்தும் கைவசம் இல்லை என்பது அம்மணமான உண்மை.

நியாயத்திற்கும் அநியாயத்திற்கும் நிரந்தர வடிவம் கிடையாது. வடிவமே இல்லாத தடைகளே மனித வாழ்க்கையின் பெரும் இடராகிறது. துரோகங்களும் தியாகங்களும் அவரவர் சிந்தனை விம்பத்தைப் பிரதிபலிக்கின்றன. பாலன் துரோகி யாகவும் தியாகியாகவும் தன்னை உணர்ந்து கொள்கிறான்.

காலத்தின் இழுப்பிலே பாலன் செல்வியோடு வாழ்கிறான். சுமிதா பாலனைத் தொலைத்துவிட்டு அவன் நினைவோடு தனியே வாழ்கிறாள்.